# இந்து தருமம் 2000



முருகா

இந்து மாணவர் சங்கம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக்களின் இருகண்கள், தமிழும், சைவமும்
இவையிரண்டும் ஒளி பெற, காலச்சக்கரத்தின்
எத்தனையோ அயராது மனந்தளராது
உழைக்கும் "இந்து தருமம்" நீடுழி வாழ
வாழ்த்துகின்றோம்.

நடராஜா, பத்மசிறி,
இல. 33 பண்டாரி குளம்,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Sharmiladevi
21/02/2001

உ

ஓம் முருகா

" மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்"

# இந்து தருமம் - 2000

(இரண்டாயிரமாம் ஆண்டு)

வெளியீடு

இந்து மாணவர் சங்கம் (2000/2001)

பேராதனைப் பல்கலைக்கழகம்

பேராதனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து தருமம் 2000

இதழாசிரியர்கள் : செல்வன் ந. பாலமுரளி (கலைப்பீடம்)
செல்வன் சி. அஜந்தன் (பொறியியற்பீடம்)

வெளியீடு : இந்து மாணவர் சங்கம் 2000 / 2001
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை.

பிரதிகள் : 500

அட்டைப்படம் : செல்வன் இ. ஜனந்தன் (பொறியியற்பீடம்)

புகைப்படங்கள் : செல்வன் அ. அலங்கேஸ்வரன் (பொறியியற்பீடம்)

அச்சும் பதிப்பு : "கிறபிக் லாண்ட்", கண்டி

**Hindu Dharman** : 2000

**Editors** : Mr. N. Balamurali (Faculty of Arts)
Mr. S. Ajanthan (Faculty of Engineering)

**Published by** : Hindu Students' Union 2000/2001
University of Peradeniya
Peradeniya

**Copies** : 500


**Cover Design** : Mr. E. Jananthan (Faculty of Engineering)

**Printed by** : Graphic Land, Kandy

**Photographs** : Mr. A. Alangeswaran (Faculty of Engineering)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பு



கலைமாதும் திருமாதும் களித்தே வாழும்
கவின் பேராதனை நகரிற் கோயில் கொண்டு
நிலையான நற்கல்வி கலையின் ஞானம்
நெஞ்சுருகும் பக்தருக்கே யருளுஞ் சேந்தன்
தலையான தண்டமிழின் ஊஞ்சலேறித்
தமிழ் குறிஞ்சிக் குமரனவன் கனிந்தே யருள
மலை மீதில் பாரத்தை எழுதும் ஞான
மதகரியின் செஞ்சரணம் காப்பதாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அட்டைப்படக் கவிதை

" மங்கலம் பொலிக"

**கந்தகப் புகையினாற் காயமுற்ற நாசிகளுக்குச்**
**சந்தனச் சுவையைச் சாற்றிய தேவ!**
**'வந்தனை' செய்து வழிபடுவோரின்,**
**" செம்" மண்தனை மாற்று.**
**மங்கல நிறந்தனைச் சூட்டு.**

வ. ஜெயரூபன்
நிறைவு வருடம், கலைப்பீடம்.
பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நூன் முகம்

"அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே"
- நன்னூல் -

மனித சமுதாயம் அறத்தின் வழியில் செல்லவேண்டும் என்பதற்காகவே மதக்கோட்பாடுகள் தோன்றின அவ்வம் மதங்கள், ஒவ்வோர் ஆலயத்தை அடிப்படையாகக் கொண்டே சிறு சிறு குழுமங்களாக மக்களை இயங்கச் செய்தன. ஒரு சமுதாயவட்டத்தின் மையமாய் ஓராலயம் விளங்குவதாயிற்று.

அவ்வகையில், எங்கள் பேராதனை ஆலய இந்துச் சமூகத்துக்கு குறிஞ்சிக் குமரன் கோயிலே மைய விசையாயிற்று. அவ்வாலயத்தைச் செயல்புரி தளமாகக் கொண்டு பற்பல அறப்பணிகள் தழைக்கலாயின.

அவற்றுள் ஒன்று நூல் வெளியீட்டுப் பணி. "சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞானத்தின் தோற்றம் என நிற்கின்ற" பரம்பொருளைப் பாடியும், பெருமைகளை உணர்த்தியும், அதன் வழி இயங்கும் உலக இயல்பை எழுதியும், அவ்வியல்பு தவறுதலால் ஏற்படும் தீமைகளை விளக்கியும், அதர்மப் பக்கம் சாய்ந்துவிடக் கூடிய துடிப்பான பருவமும் உடைய இளந்தலை முறையினரை அறநெறி நிறுத்துவதே இந்நூல் வெளியீட்டுப் பணியின் பிரதான நோக்கம். அந்நோக்கத்தோடெழுந்து, இந்துக்களின் தருமம் உணர்த்தி மலர்வது இந்து தருமம் ஆயிற்று.

இந்த இந்து தருமத்தைப் பழைய நூற்றாண்டின் படிகள் கடந்து புத்தாயிரமாண்டின் வாசலுக்கு அழைத்து வர வேண்டிய பொறுப்பு எங்களுக்கு வாய்த்தது, குமரனருளாலே வந்ததேயாம். சிறிய தலைகளிற் பெரிய பாரம். முதலிற் திகைத்தோம். எனினும், இணங்கியிருக்கத்தக்க நல்லாரைக் காணும் பாக்கியமும் நல்லார் சொற் கேட்கும் பாக்கியமும் கிடைத்ததனால் இப்பணி தலைமேற்கொண்டோம்.

"அனைத்தும் அவனருளாலேயே ஆயிற்று. ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரோ"

பிறர் வாக்கால், மனதால், காயத்தால் என்று இன்னோரன்ன முயற்சிகளால் வழிபாடியற்ற, கடந்த ஒரு வருடமாக எமக்கோ இம்மலரை ஆக்கிப் படைப்பதே வழிபாடாயிற்று. எச்சில் நீரையும் தீர்த்தமென ஏற்கும் பரம்பொருள் இச்சிறுநூலிற் பிழைகளிருந்தால் பொருட்படுத்தமாட்டாதெனுந் துணிவோடும், ஆராத அன்போடும் இப்படையலை அர்ப்பணிக்கின்றோம்.

" உங்கையிற் பிள்ளைகள் உமக்கே அடைக்கலம்"

நிற்றவாக இம்மலர் அமைப்புப் பற்றித் தெரிவித்தல் கடன். மலர் ஐந்து இதழ்கள் போல ஐந்து இயல்களாக உள்ளது. அவை வாழ்த்தியல், குறிஞ்சியியல், சிறப்பியல், பொதுவியல், ஆக்கவியல் என்பன.

பெரியோர்தம் ஆசிகள் வாழ்த்தியலாயிற்று. எமது குன்றினில் கோலோஞ்சும் குமரன் கோயில் பற்றிய ஆக்கங்களைக் குறிஞ்சியியல் எனத் தந்துள்ளோம்.

மதம் பற்றிய பொதுவான கட்டுரைகளனைத்தும் பொதுவியலாயின. அவற்றுள் அடக்காமல் சிலவற்றை வகுத்து, சான்றோரும் சமயமும், நூல்களும் சமயமும், வரலாறும் சமயமும், இசையும் சமயமும், எனும் தலைப்புக்களில் சிறப்பியலுள் அடக்கியுள்ளோம்.

கவிதைகளும், புனைக்கதையும் ஆக்கவியலுள் அடங்கின. இதுவே, மலரின் அமைப்பு. இதன் சிறப்பு பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், சான்றோர்கள், மாணவ நண்பர்கள் முதலியவர்களால் அமைந்தது. அனைவர்க்கும் எமது நன்றிகள்.

"அறிவொன்றற நின்று அறிவார் அறிவில்
பிறிவொன்றற நின்றது பிரான் அலையோ?"

இதழாசிரியர்கள்-
செல்வன். ந. பாலமுரளி (கலைப்பீடம்)
செல்வன். சி. அஜந்தன் ( பொறியியல் பீடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

**வாழ்த்தியல்**

1. சிவஸ்ரீ பா. நித்தியானந்தக்குருக்கள் 8
2. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாசார்ய ஸ்வாமிகள் 9
3. சுவாமி ஆத்மகனந்தா 10
4. கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 11
5. பெருந்தலைவர் வாழ்த்துரை 12
6. பெரும்பொருளாளர் செ. சிவராஜசிங்கம் 13
7. வைத்தியகலாநிதி சி. ச. பாலசந்திரன் 14

**குறிஞ்சியியல்**

1. தலைவரின் உரை 16
2. உபதலைவராக உங்களுடன் சில நிமிடங்கள்... 17
3. செயலாளர்களின் சிந்தைகளிலிருந்து... 18
4. மாணவர் எடுத்த ஆலயம் 19
5. குறிஞ்சிக்குமரனே குறைகளெல்லாம் தீர்த்திடுவாய் 23
6. குறிஞ்சிக் குமரனுக்கோர் ஆராதனை 24

**சிறப்பியல்**

சான்றோர்களும், சமயமும்

1. இணுவை சி. சின்னத்தம்பிப்புலவர் 26
2. ஈழத்துக் கல்விப் பாரம்பரியத்தில் பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள் 32

**நூல்களும், சமயமும்**

3. சங்க இலக்கியங்களில் சிவன் பற்றிய குறிப்புகள் 35
4. வெருகல் சித்திரவேலாயுதர் பற்றிய பதினேழாம் நூற்றாண்டு இலக்கியம் 37
5. கீதை காட்டும் ஆன்மநெறி 41
6. வள்ளுவர் காட்டிய நெறி 43
7. மாணிக்கவாசகர் புகன்ற மதுரவாசகம் 45

**வரலாறும், சமயமும்**

8. மத்திய காலப்பதவியாவில் வணிக நகரம் பேரிளமையாரின் தமிழ்ச்சாசனம் - பேராசிரியர் 48
9. கல்வெட்டுக்களில் காணப்படும் இந்துசமயச் செய்திகள் 54
10. சைவசமய வளர்ச்சியில் ஆதீனங்களின் பங்களிப்பு 56

**இசையும், சமயமும்**

11. பண் கனிந்த திருமுறை 60
12. அர்ச்சனை பாட்டேயாகும் 64

**பொதுவியல்**

1. இளந்தலைமுறையினரும் ஆத்மீகச்சிந்தனைகளும் 67
2. நெஞ்சக்கனகல்லு நெகிழ்ந்துருக 70
3. மதங்களும் மறுபிறப்புக் கோட்பாடும் 76
4. மனிதன் புனிதனாக வாழ வழிகாட்டும் சமயம் இந்து சமயம் 80
5. மதங்களின் ஒருமைப்பாடு 84
6. அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே 87
7. இன்றைய இலங்கைத் தமிழ் சமூககட்டமைப்பும் அதன் சமய நிலைப்பாடும் 90
8. இந்துமதமும் பெண்களும் 92
9. இறைவனின் வடிவமும் வழிபாடும் 94
10. இந்து மதமும் விஞ்ஞானமும் குறியீட்டு ஒழுங்கும் 96
11. முடிவைத் தேடும் முடிவிலி 100
12. இந்து இளைஞர்களுடன் ஒரு நிமிடம் 102

**ஆக்கவியல்**

1. பள்ளிவிட்டெழாத பரந்தாமனுக்கு 105
2. போதிக்கவா போதிசத்வா 106
3. நாட்பொழுதைநற்பொழுதாய் விதிசெய்வாய் 107
4. சிதைந்து போன 108
5. கடவுளே! உன்னைக் காப்பார் யார்? 109

**பிற விடயங்கள்**

1. சித்தாந்த தபோவனமும், திருவருளின் வேண்டுனலும் 112



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்தியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு குறிஞ்சிக்குமரன் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ பா. நித்தியானந்தக் குருக்கள் அவர்கள் வழங்கிய செய்தி

" சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலினுள் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே"

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவ சங்கத்தினரின் சமயத் தொண்டுகளும் சமூகப் பணிகளும் அனைவருக்கும் பயனுள்ளதாகவும் முன்னோடியானதாகவும் வளர்ச்சி பெற்று வருவது பெருமகிழ்ச்சிக்குரியதாகும்.

எல்லாம் இறைவன் திருவிளையாடல் என்றுணர்ந்து எத்தனை இடர்கள் வந்தாலும் தளராது உளத்தூய்மையோடும் அர்ப்பணிப்போடும் எடுத்த பணிகளை நிறைவேற்றி வருகின்றனர்.

இச்சங்கத்தின் ஆண்டு மலராக வெளிவரும் " இந்து தருமம்" ஆன்மீகத் தெளிவுகளை வெளிக்கொணரும் நூலாக விளங்கி வருகிறது.

இவ்வாறான இவர்களது ஆக்கங்கள் மேன்மையுற எல்லாம் வல்ல குறிஞ்சிக்குமரன் திருவருள் பாலிப்பாராக.

**சுபமஸ்து**

பா. நித்தியானந்த குருக்கள்
குறிஞ்சிக்குமரன் கோவில்,
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாசிச் செய்தி

அன்புசார் பெருந்தகையீர்

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தினால் வெளியிட்டுவரும் "இந்து தருமம்" சஞ்சிகை இவ்வருடமும் வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். வாழ்வின் இலட்சியத்தை அடையும் பொருட்டு உயர் கல்விக்காக பல்கலைக்கழகம் புகுந்திருக்கும் மாணவர் சமூகத்தினுடைய வளர்ச்சியே இந்நாட்டை வளப்படுத்துகின்றது. அரிய பிறவியாகிய மானிடப்பிறவி எப்பிறவியிலும் மேலானதொன்று. இப்பிறவிக்கு அடித்தளமாக உள்ளது ஆன்மீகம். இவ் ஆன்மீகத்தை பெற்றுத் தருவது சமயங்களாகும். சமயங்கள் ஒவ்வொன்றும் மனிதனை மனித நேயத்துடன் வாழ வழி சமைத்துள்ளது. பரந்துபட்டுள்ள இவ் உலகில் இந்து சமயம் எல்லா மனிதர்களும் வாழ்வதற்குரிய வழிகளை இலகுவாக கொண்டுள்ளது. தர்மத்தை அடிப்படையாக கொண்டது இந்து சமயம் இதற்கு வழிகாட்டிகளாக உள்ளவை ஆலயங்களும் விழாக்களும், விஞ்ஞானம் வளர்ச்சி அடையும் இக்காலத்தில் சமயக் கருத்துக்கள் சிதைவடையாமல் மேலெடுத்து செல்ல வேண்டிய பொறுப்பு இளைய தலைமுறையினருக்கு உண்டு. இதை மையமாகக் கொண்டே பேராதனை பல்கலைக்கழகம் குறிஞ்சிக் குமரன் ஆலயத்தில் பல சமய நிகழ்வுகளை நடாத்தி ஆன்மீகச் சிந்தனையை மாணவர் மத்தியில் ஊட்டி வருவது வரவேற்கத்தக்கது. ஆன்மீகத்தோடு சேர்ந்த கல்வியே எத்துறையிலும் மேலெடுத்து செல்லக்கூடிய வழித்துணையாகும். இதன் அடிப்படையில் இந்து மாணவர் சங்கம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டு செயல் வடிவம் பெற்றுக் கொண்டு இருக்கின்றது. இச் சங்கத்தின் பணிகளை தளர்ச்சியுற விடாது செயற்படுத்திக் கொண்டிருக்கும் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றோம். மாணவர் சமூகம் கல்வியிலும் ஏனைய துறைகளிலும் வளர்ச்சியடைந்து நாட்டுக்கும் சமூகத்திற்கும் நற்பணியாற்ற இறைவனை வேண்டுகின்றோம். வெளிவரும் சஞ்சிகை அனைவருக்கும் அறிவு சிந்தனையை தூண்டுவதாக அமைய இறைவனை வேண்டுகிறோம்.

"வாழ்க இந்து மாணவர் சங்கம் வளர்க அதன் பணிகள்"
" என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
நல்லூர், யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

பேராதனைப்பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் வெளியிடும் "இந்து தருமம்" சிறப்பிதழுக்கு இந்த வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

இந்து சமயத்தில் இறைநம்பிக்கை (பக்தி) மற்றும் விசாரம் (பகுத்தறியும் முறை) இரண்டிற்குமே முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. விசாரம், மூட நம்பிக்கைகளைத் தகர்த்தெறிகிறது. பக்தி இறையுணர்வை, அன்பை பலப்படுத்துகின்றது. பக்தியில்லாத விசாரம், வெற்றறிவாக அமைந்து விடும். விசாரம் இல்லாத பக்தி, வெறும் உணர்ச்சிக் குவியலாகி விடும். எனவே இவையிரண்டும் ஒன்றையொன்று வளம்படுத்தும் காரணிகளாம். ஆனால் இவையிரண்டிற்கும், ஒழுக்கம் அல்லது நன்னடத்தை அத்திவாரமாக அமைதல் அவசியம். இல்லையெனில் , சமய நாட்டம் சமய வெறியாக மாறிவிடும் அபாயம் ஏற்படும். இன்று, சமயத்தின் பெயரில் நடைபெறும் அனைத்துக் குழப்பங்களுக்கும் காரணம் ஒழுக்கமின்மையே. எனவேதான் சுவாமி விவேகானந்தரும் ஒழுக்கத்தை வளர்ப்பதே சமயத்தின் நோக்கம் என்றார். இன்று சமுதாயத்திலே, சுயநலப்போக்கும், சிற்றின்ப நாட்டமும் மலிந்து காணப்படுகின்றன. இதன் காரணத்தினாலேயே, சமய விழாக்களும், சடங்குகளும் மனித சமூகத்திலே நல்ல மாற்றங்களைக் கொண்டு வர இயலாது செயலற்று உள்ளன. எனவே முதலில் நம்மிடையே ஒழுக்கத்தை வளர்ப்போம். அதற்காக பாடுபட மாணவர் சமுதாயம் முன்வரவேண்டும்.

"இந்து தருமம்" இதழ் ஒவ்வொரு ஆண்டும் சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகளைத் தாங்கி வருவது பாராட்டத்தக்கது.

பேராதனைப்பல்கலைக்கழ இந்து மாணவ மன்றத்தின் பணி சிறக்க இறையருளைப் பிரார்த்திக்கிறோம்.

சுவாமி ஆத்மகனாந்தா
இராமகிருஷ்ண மிஷன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் வாழ்த்துச் செய்தி

குறிஞ்சிக் குமரனின் அருட்பிரவாகத்தினால் ஆண்டுதோறும் "இந்து தருமம்" என்ற சஞ்சிகை வெளியிடப்படுவதை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தினால் குறிஞ்சிக் குமரன் ஆலயப் பணிகள் ஓங்கி உயர்ந்து நிற்கின்றது.

"சேலார் வயற் பொழில் செங்கோடனைச் சென்று கண்டுதொழ
நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே"

என்று ஏங்கிப் பாடுகின்றார் அருணகிரிநாதர். நிலங்களில் உயர்ந்து விளங்கும் குறிஞ்சி நிலத்துக்குக் கடவுள் குமரப் பெருமானே. பெருமான் குறிஞ்சியில் உயர்ந்து நிற்பது போல் வழிபடும் அடியவர்களின் உள்ளக் குகையிலும் ஓங்கி நிற்கின்றான். பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாவணர்கள் இந்த அற்புதங்களை எல்லாம் நன்கு உணர்வர். எனவேதான் " இந்து தருமம்" என்ற சஞ்சிகை வருடந்தோறும் நல்லபடி வெளியிடப்படுகிறது. அடுத்துவரும் தைப்பூசதினத்தில் குறிப்பிட்ட இந்த ஏடு வெளியிடப்படுவது குறித்து சங்கத்தினருக்கு எமது பாராட்டைத் தெரிவிக்கிறோம். இந்து மாணவர் மத்தியில் கல்வி உயர்வையும், கடமை உயர்வையும், கொள்கை உயர்வையும் இவ்வெளியீடு ஏற்படுத்த வேண்டும் என்று திருவருளைப் பிரார்த்திக்கிறேன்.

கலாநிதி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, ஸ்ரீ லங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து தருமம் 44வது இதழ்

## பெரும் தலைவர் வாழ்த்துரை

இந்து மாணவர் சங்கம் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுடன் பின்னிப்பிணைந்து சமய உணர்வுகளை மாணவர் சமுதாயத்தில் பரப்பி, தம் உயர்ந்த இலட்சியத்தை வெளிப்படுத்தி நிறைவேற்றி வருவது பெரிதும் பாராட்டத்தக்கது.

தமது கல்விப் பணியுடன் முருகனின் தொண்டில் ஆர்வம் காட்டிவரும் எம்மாணவர்களின் தூய முயற்சிகள் பல்வேறு தடைகள் வரினும் இனிதே நிறைவேறுவது குறிஞ்சிக் குமரனின் திருவருளேயாகும்.

குறிஞ்சிக் குமரன் கோவிலின் நித்திய நைமித்திய கடமைகளை தாமே முழுமையாகச் செய்வதும் குமரவேளின் எல்லாத் திருவிழாக்களும் சிறப்பாக நடக்கும் கோவிலாகத் திகழவும், கோவிலின் நிர்வாகத்தில் பொறுப்பாண்மைக் குழுவிற்கு முதுகெலும்பாக விளங்குவதும், நிதி நெருக்கடியான இந்து மாணவர்களுக்கு நிதியுதவி செய்தலை விரிவுபடுத்துதல் போன்ற சமயப் பணிகளை, அவர்கள் பொதுச் சிந்தனையுடன் ஆற்றுவதை நாம் மதிப்பிட முடியாது.

தம்பணிகளில் தலையானதொன்றாக அமையும் "இந்து தருமம்" மலர் வெளியீட்டை இம்முறை 44வது மலராக வெளியிடும் ஆசிரியருக்கும், ஆக்கங்களை அளித்தவர்களுக்கும், அனுசரணையாளர்களுக்கும் எனது பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்து மாணவர் சங்கத்தினரின் சீரிய பணிகள் சிறப்புற நாம் யாவரும் முன்னின்று உதவிட வேண்டும். எல்லாம் வல்ல குறிஞ்சிக் குமரன் யாவருக்கும் சுபீட்சமான எதிர்காலத்தைத் தர பிராத்தித்து வாழ்த்துகிறேன்.

**நன்றி**

இவ்வண்ணம்
கலாநிதி செ. திருச்செல்வம்
பெரும் தலைவர்/ இ. மா.ச
பொதுச்செயலாளர்
பொறுப்பாண்மைக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவ சங்கத்தினுடைய 44 ஆவது இந்து தரும இதழுக்குப் பெரும் பொருளாளர் என்ற வகையில் வாழ்த்துரை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு இந்து சமுதாயம், ஆலயமொன்றை அடிப்படையாகக் கொண்டே சிறந்து விளங்குவதை எங்கணுமே காணமுடியும். அவ்வடிப்படையில் பேராதனைப் பல்கலைக்கழக இந்து சமூகத்தின் மையத்தளம் அருள்மிகு ஸ்ரீ குறிஞ்சிக்குமரன் ஆலயம் என்பதை அனைவரும் அறிவர்.

அவ்வாலயத்தில், சலம் பூவொடு தூபம் மறந்தறியாது, தமிழோடிசை பாடிப் பரவும் இந்து மாணவர் சங்கம் எடுக்கும் பல முயற்சிகளில் ஒன்றே இந்து தரும வெளியீடு. இது, குமரன் புகழ் குறிப்பதோடு மட்டும் நின்று விடாமல், எதிர்கால ஆளுமைகளை இனங்காட்டுவதாகவும் இருக்கின்றது.

இதற்காகப் பாடுபட்டுழைத்த இதழாசிரியர்களையும், அவர்கட்கு ஒத்துழைத்த இந்து மாணவர் சங்கத்தினரையும் வாழ்த்துகின்றேன். இறைவனைப் பணிந்து வணங்குகின்றேன்.

*நன்றி*

செ. சிவராஜசிங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்
பெரும்பொருளாளர் - இ. மா. ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

குறிஞ்சிக் குமரனின் திருவருளினால் இன்று தனது 31வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் பட்டதாரிகள் மன்றத்தின் சார்பில் இந்து மாணவர் சங்கத்தின் 44வது இந்து தருமம் வெளியீட்டை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறோம்.

இவ் இதழ் ஆண்டுதோறும் அனைவரிடத்திலும் பக்தியையும் ஆன்மீக உணர்வுகளையும் இறை வழிபாட்டுடன் எமது கலாசார விழுமியங்களை காத்து வளர்க்கும் பொருட்டும் ஆக்கங்களை தாங்கி வருவதால், ஆலய மேம்பாட்டுக்கும் இந்து கலாசார சமூக விழுமியங்களை பேணிக்காக்கும் வகையிலும் செயற்பட்டு வருகின்ற எமது இந்து பட்டதாரிகள் மன்றம் பெரிதும் வரவேற்பதுடன் பெருமகிழ்ச்சியடைகிறது.

குறிஞ்சிக்குமரன் ஆலயத்தைப் பொறுத்தவரையில் சரியை, கிரியை என்னும் இரு தொண்டுகளையுமே தமது கல்விச் சுமையுடன் பிரதான கடமையாக ஏற்று செவ்வனே செய்து முடிப்பவர்கள் இந்து மாணவர்கள். அவர்களின் செயற்பாட்டிலே ஆலயம் மெருகேறுவதுடன் ஆன்மீகச் செயற்பாட்டிலும் சளைக்காமல் தமது கடமைகளைச் செய்து வருவது பெரிதும் வரவேற்கத்தக்கது.

அவர்களது ஆன்மீகச் செயற்பாட்டின் ஒரு அங்கமாக இந்து தருமம் நூல் வெளியிடுவது நாமும் மாணவராக இருந்து இச்செயற்பாடுகளை செய்ததை நினைவு கூர்வதுடன் எமக்கெல்லாம் பெருமையளிக்கிறது.

நன்றி

வைத்திய கலாநிதி சி. சி. பாலசந்திரன்
தலைவர்
பேராதனைப் பல்கலைக்கழக இந்து பட்டதாரிகள் மன்றம்
பேராதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சியியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் உள்ளத்திலிருந்து.....

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பசுமை நிறைந்த குன்றாம் குறிஞ்சியிலே குடியிருக்கும், முக்கண்ணனாம் ஆனைமுகவனுடன் உடனுறையும் முருகவேள் தன்னை நாடி வரும் அடியவர்களின் இடர்களைக் களைந்து அருள் புரிகின்றார். காலம் தவறாத பூசைமுறை கோயிலின் சுற்றாடலில் பேணப்படும் புனிதத்தன்மை, பூசையின் போது பேணப்படும் அமைதி என்பன இங்கு தொழ வரும் அடியவர்களின் நெஞ்சை தொட்டு நிற்கும் காட்சிகளாக இருக்கின்றன.

இந்து மாணவர் சங்கம் தமது செயற்பாடுகளில் பெரும்பகுதியை ஆலய திருப்பணிக்கும், திருவிழாக்களுக்கும் அர்ப்பணிப்பதையிட்டு புளகாங்கிதமடைகிறது. மேலும் தருமப்பணிகள், தலயாத்திரை உட்பட பல செயற்பாடுகளையும் செய்து வருகிறது. " இந்து தருமம்" என்னும் ஆன்மீக அறிவியல் நூலை வெளியிடுவதன் மூலம் இந்து சமயத்திற்கு உரம் சேர்ப்பதிலும், மாணவர்களின் எழுத்து வன்மையை மேம்படுத்துவதிலும் அக்கறை காட்டுகிறது.

கடந்த காலத்தில் குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்ட திருப்பணிகளான கோவிலின் வெளிமண்டபத்திற்கு பளிங்குக்கல் பதித்தல், கலியாண மண்டபத்திற்கு பளிங்குக்கல் பதித்தல், குளியலறை, மலசலகூட மீள்நிர்மாணம் உட்பட்ட பல செயற்பாடுகளுக்கு நிதியுதவி செய்து எமக்கு ஊக்கமளித்த அன்பர்களுக்கும் திருப்பணி வேலைகளை திறம்பட செய்து முடிப்பதற்கு தம் உடலுழைப்பால் வழிசமைத்து கொடுத்த எம் மாணவர்களுக்கும் எமது ஒவ்வொரு வேலைத்திட்டங்களையும் செயல்வடிவமாக மாற்றுவதற்கு அனுமதியளித்த பொறுப்பாண்மைக் குழுவினருக்கும் நன்றியைத் தெரிவிப்பதில் மனநிறைவடைகின்றேன். மற்றும் தேவையான உதவிகள் புரிந்த இந்து பட்டதாரிகள் சங்கத்தினருக்கும், ஆலயத்தின் எமது அன்புக்குரிய பூசகர் சிவஸ்ரீ. பா. நித்தியானந்தக்குருக்கள் அவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக எனது ஓராண்டு கால செயற்குழுவின் செயற்பாடுகளை செவ்வனே செய்து முடிப்பதற்கு என்னோடு தோள்நின்று உழைத்த எல்லா செயற்குழு உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதில் பெருமிதமடைகின்றேன்.

நன்றி

*தலைவர்*
*செல்வன் க. கருணாநிதி*
*பொறியியற் பீடம்*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*
*பேராதனை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளர்களின் சிந்தைகளிலிருந்து....

" அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பது போல உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. எனவே இவ்வுலகில் பிறந்த நாம் எமது வாழ்நாளிலும் எம்மால் இயன்ற இறைபணியைச் செய்வது இன்றிய மையததாகின்றது.

இயற்கையின் எழில்மிகு வனப்புக்களை தன்னகத்தே கொண்ட பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கார்முகில் தழுவும் குன்றில் குடியிருக்கும் குறிஞ்சிக் குமரனின் பாதங்களுக்கு பணி செய்யும் பாக்கியத்தை இவ்வருடம் எமக்களித்துள்ளமை எமக்கு கிடைத்த வரமென்றே கருதுகிறோம்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இந்து மாணவர் சங்கமானது சிறப்பாக இயங்குவதற்கு காரணம் " மாணவர் சக்தி மாபெரும் சக்தி" என்று கூறினால் மிகையாகாது. மேலும் ஆலயத்தில் நாம் ஒன்று கூடி வழிபடும் போதும் பிற கருமங்களில் ஈடுபடும் போதும் எம்மத்தியில் ஒற்றுமையுணர்வு வலுக்கிறது. ஆணவம் இல்லாது பொதுப் பணியிற் பங்கு கொள்ளும் சுகானுபவம் பணிவுடைமையும், பொறுப்புணர்வும் வளர்கிறது என்பதில் ஐயமில்லை.

இந்நூலை சிறப்புற அமைக்கப் பலவழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய சக மாணவர்கள், கண்டி, கொழும்பு வர்த்தகர்கள், அச்சகத்தினர் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக. அது மட்டுமின்றி ஆலய அலங்கார உற்சவ காலத்திலும் விசேட உற்சவங்களிலும், பளிங்குகல் பதித்தல், குளியலறை கட்டிட பணிகளில் எம்மோடு தோளோடு தோள் நின்று உழைத்தவர்களுக்கும், எமக்கு சகல விதத்திலும் உதவிய பழைய இந்து மாணவ சங்க உறுப்பினர்களுக்கும், தாமாகவே வந்து கரம் கொடுத்த சக மாணவ சகோதர, சகோதரிகளுக்கும், எமக்குத் துணையாக நின்று ஊக்கமும் உற்சாகமும் தந்த பொறுப்பாண்மைக் குழுவுக்கும், மற்றும் தேவையான உதவிகள் புரிந்த இந்து பட்டதாரிகள் சங்கத்தினருக்கும் ஆலயத்தின் அன்புக்குரிய பூசகர் சிவஸ்ரீ பா. நித்தியானந்தக் குருக்கள் அவர்களிற்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவிக்கிறோம்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் குறிஞ்சிக் குமரன் ஆலயத்தின் முக்கியத்துவம் சகலருமறிந்த ஒன்று இவ்வாலய பரிபாலனத்தில் இந்து மாணவர் சங்கமும், மாணவர்களும் ஆற்றும் பணி அளப்பரியது. தொடாந்து வரும் காலங்களில் இந்து மாணவர் சங்கம் சிறப்பாக பணியாற்றவும் " இந்து தருமம்" சிறப்புற வெளிவரவும், உங்கள் அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

புதிய செயற்குழுவினரை வரவேற்று குறிஞ்சிக்குமரன் ஆலயம் மேலும் பொலிவுறவும் இந்து மாணவர் சங்கத்தின் செயற்பாடுகள் இனிதே நிறைவேறவும் குறிஞ்சிக்குமரனின் அருளை வேண்டி விடை பெறுகின்றோம்.

" மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"

நன்றி

செல்வன் ஈ. தவீசன்
மூன்றாம் ஆண்டு/ பொறியியல் பீடம்
செல்வி அ. சுகந்தா
விலங்கு மருத்துவ பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபதலைவராக உங்களுடன் சில நிமிடங்கள்...

பேராதனைப் பல்கலைக்கழக குன்றுகளில் ஒன்றில் வீற்றிருந்து குமரன் எமக்கெல்லாம் இன்னல் தீர்த்து வருவது இந்துக்களாகிய நாம் செய்த புண்ணியமே. அப்படிப்பட்ட கந்தனுக்கு இந்து மாணவர் சங்க உபதலைவராக சரியை, கிரியைத் தொண்டு செய்யக் கிடைத்தது என் பாக்கியமே.

எந்தவொரு சங்கத்தின் வளர்ச்சியும், அந்த சங்கம் சார்ந்த சமூகத்தில் தான் தங்கியுள்ளது. அந்த வகையில் எமது சங்க வளர்ச்சியும் இந்து மாணவர்களாகிய எங்களின் முழுப்பங்களிப்பில் தான் தங்கியுள்ளது. இவ்வருடம் குறிஞ்சிக் குமரனின் நித்திய பூஜை நடத்துவதிலும் சமய சம்பந்தமான விழாக்கள் நடாத்துவதிலும், மற்றும் அனைத்து நிகழ்வுகளிலும் எம்முடன் தோளோடு தோள் கொடுத்து நின்று முருகனின் திருப்பணிகளைச் செவ்வனே செய்து முடிக்க உதவிய அனைத்து மாணவ, மாணவியர்கும் மற்றும் அனைத்து விதத்திலும் ஆதரவளித்தோருக்கும் எனது சிரம் தாழ்ந்த நன்றிகள்.

மேலும் ஒரு சிறு குறை சுட்டிக் காட்டுவது காலத்தின் கட்டாயம். தற்போது சங்கத்தின் பொது நிகழ்வுகளில் மாணவர்களின் பங்களிப்பு, ஒத்துழைப்பு சற்றுக் குறைந்து காணப்படுகிறது. இதை இனிவரும் மாணவர் குழாம் நிவர்த்தி செய்ய வேண்டும். நிவர்த்தி செய்யும் என்ற நம்பிக்கையுடன் எல்லாம் வல்ல கந்தனின் அருள் வேண்டி விடை பெறுகிறேன்.

நன்றி

"என் கடன் கந்தன் பணி செய்து கிடப்பதே."

த. சரவணபவன்
மூன்றாம் வருடம்
விஞ்ஞான பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் எடுத்த ஆலயம்

பேராசிரியர் சி. தில்லைநாதன்
தலைவர்
தமிழ்த்துறை.

**குறிஞ்சிக் குமரன் கோயில் குறித்த சில நினைவுகள்**

மன்னர்களும் மாபெரும் செல்வந்தர்களும் பலவிடங்களில் ஏராளமான கோயில்களை எடுத்திருக்கிறார்கள். ஆனால், மாணவர்கள் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக எழுந்த ஆலயம் என்ற பெருமைக்குரியதாய் மிளிர்வது, யாம் அறிந்த வரைக்கும், பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள குறிஞ்சிக் குமரன் கோயிலே ஆகும். சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் அக்கோயிலுக்கு வந்து அதன் சிறப்பினைக் கண்டு வியந்த சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் சி. பாலசுப்பிரமணியம், உலகின் வேறெந்தப் புறத்திலும் பல்கலைக்கழக மாணவர்கள் இத்தகையதோர் ஆலயம் அமைத்த செய்தியை யாம் கேட்டதில்லை என்று பாராட்டினார்.

இன்று இலங்கையில் உள்ள முருகன் கோயில்களுள் முக்கியத்துவம் மிகுந்த ஒன்றாகக் குறிஞ்சிக்குமரன் கோயில் திகழ்கிறது. அதன் கருமங்களிலே தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் மாணவர்கள் ஆறுதலும் உற்சாகமும் தன்னம்பிக்கையும் பெறுகிறார்கள். அக்கோயில் உள்ள ஊரிலும் அதனைச் சுற்றியும் குடியிருக்கும் இந்துக்கள் குமரன் அருள்வேண்டி வழிபாடுகளும் விழாக்களும் நடத்துகிறார்கள்.

1952ம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகம் கொழும்பிலிருந்து பேராதனைக்கு மாற்றப்பட்டபோது, அப்பல்கலைக்கழக வளாகத்தில் எல்லாச் சமயங்களுக்குமுரிய வழிபாட்டுத் தலங்களை அமைப்பதற்கு இடமளிப்பதென முடிவு செய்யப்பட்டது. இந்துப் பெரியார்கள் சிலர் கூடி ஓர் ஆலயத்தைக் கட்டுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. பேராதனையில் பல்கலைக்கழகம் அமைவதற்கு ஓராண்டுக்கு முன்னரே பேராசிரியர் த. நடராசா தமது தாயாராகிய திருமதி சிவானந்தம் தம்பையாவிடமிருந்து பெற்ற ரூபா. 25,000தைக் கோயில் அமைப்பதற்கென்று பல்கலைக்கழக நிர்வாகத்திடம் வழங்கினாராயினும், அது சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இலங்கைப் பல்கலைக்கழக ஆட்சிச் சபையின் 1952ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் இந்து ஆலயத்துக்கான திட்டங்கள் ஒன்றும் சமர்ப்பிக்கப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது. 1954 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் இந்து ஆலய நம்பிக்கைப் பொறுப்புறுதிகள் மீளாய்வு செய்யப்பட்டு, கோயிலும் பிரார்த்தனை மண்டபமும் கட்டுவதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதற்காக 1955ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் இந்துக் கோயில் விடயத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது. எல்லாவற்றையும் நோக்கும்போது, ஆலயம் அமைப்பது குறித்த பல்கலைக்கழக இந்து சமூகத்தின் அசமந்தப் போக்குப் புலனாகும்.

இந்து மாணவர் சங்கம் 1954 இல் முதன் முதலாக வெளியிட்ட இந்து தர்மம் என்ற சஞ்சிகைக்கு வழங்கிய வாழ்த்துரையில் சங்கப் பெருந்தலைவராக விளங்கிய பேராசிரியர் எச். சி. ராய், இந்து ஆலயமொன்று அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி அதற்குச் சேர். கந்தையா வைத்தியநாதனுக்கு மாணவர்கள் உதவ வேண்டும் என்று குறிப்பிட்டார். தொடர்ந்து வெளியான இந்து தர்மம் இதழ்களில் இந்து மாணவர்களின் கல்வி பற்றியும் அவர்களுக்குச் சமய அறிவு புகட்டப்பட வேண்டிய தேவை குறித்தும் இந்து நாகரிகத்தை ஒரு பாடமாகப் போதிப்பது பற்றியும் பேசப்பட்டதேயன்றிக் கோவில் பற்றி ஒன்றும் கூறப்படவில்லை.

இந்து தர்மம் 1962-63 இதழில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஒரு இந்துக்கோவில் அவசியமா என்ற வினா எழுப்பப்பட்டு ஒருசில மாணவர்களுக்காகப் பெருமளவு பணத்தைச் செலவிடாது இந்து மாணவர்களின் கல்வி வளர்ச்சி கருதி முயல்வதே பொருத்தமானதாகும் என்று பதில் கூறப்பட்டது. 1964ல் பொறியியல் பீடமும் பேராதனைக்கு மாற்றப்பட்டு இந்து மாணவர் தொகை அதிகரித்த நிலையில் பஜனைகளையும் சமய விழாக்களையும் அறைகளில் நடாத்துவது சிரமமானபோது, கோயில் பற்றிய சிந்தனை மாணவரிடை வலுப்பெற்றது. 1964 - 65 இந்து தர்மம் இதழின் ஆசிரியர் தலையங்கம் ஆலயம் அமைக்கும் உறுதி தளர்ந்து விட்டமை பற்றியும், ஓர் ஆலயமோ அன்றேல் தியான மண்டபமோ கட்டப்பட வேண்டிய அவசியம் பற்றியும் குறிப்பிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியாவது கோயிலொன்று கட்ட வேண்டுமென்ற உத்வேகம் மாணவரிடைப் பிறந்ததையும், அது இயலுமா என்ற ஐயப்பாடு ஆசிரியர் பலரிடம் மேலோங்கியமையையும் 1965 ஆம் ஆண்டில் காணக்கூடியதாகவிருந்தது. மாணவர் மத்தியில் தோன்றிய உத்வேகம் மளமளவென வளர்ந்தது. பொறியியற் பீட மாணவனான து. அப்புலிங்கத்திடம் அது ஒரு சன்னதமாகவே தோன்றியது. கோயில் கட்ட ஒதுக்கப்பட்ட நிலம் கண்டாரை அஞ்சவைக்கும் காடாக இருந்தபோது அதனை எப்படியாவது துப்புரவுபடுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் உருக்கொண்டு நின்ற அப்புலிங்கத்தைப் பார்த்து ஒரு பேராசிரியர் கிண்டலாக "அப்ப நீர் எங்கையாவது போய் இரண்டு மண்வெட்டிகள் எடுத்துக் கொண்டு நாளைக்கு விடியவெள்ளண வாரும். நீரும் நானுமாய்ப் போய்க் கொத்துவம்" என்றபோது அருகில் நின்றேன்.

மாணவர்களிடைத் தோன்றிய உத்வேகத்துக்கு ஈடுகொடுக்கமாட்டாதவர்கள் ஒதுங்க நேர்ந்தது. 1966ல் த. சிவப்பிரகாசப்பிள்ளையைப் புரவலராகவும், பே. கனகசபாபதியைப் பெருந்தலைவராகவும், கோ. சுந்தரமூர்த்தியைப் பெரும் பொருளாளராகவும், து. அப்புலிங்கத்தைத் தலைவராகவும், கு. சண்முகநாதனைச் செயலாளராகவும் கொண்டு உருவான இந்து மாணவர் சங்கப் புதிய செயற்குழுவே கோயிலமைக்கும் பணியில் திடசங்கற்பத்துடன் இறங்கியது. நாட்டின் பலபகுதிகளில் படக்காட்சிகள், நடனநிகழ்ச்சிகள், இசைக்கச்சேரிகள், நாடகங்கள் முதலானவை பணம் சேகரிக்கும் பொருட்டு ஒழுங்கு செய்யப்பட்டன. மாணவர் முயற்சி பலனளிக்கும் அறிகுறிகள் நம்பிக்கையூட்டும் வகையில் தென்பட்டபோது பல்வேறு பிரதேசங்களையும் இனங்களையும் சேர்ந்தவர்கள் உதவ முன்வந்தனர்.

அவ்வேளையில் சிவன் கோயிலா பிள்ளையார் கோயிலா குமரன் கோயிலா கட்டுவதென்ற சர்ச்சையும் எழுந்தது. இறுதியில் குறிஞ்சி மலையில் குமரனுக்கே கோயிலெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. மாணவர்கள் சிரமதான அடிப்படையில் மேற்கொண்ட முயற்சியால் பற்றையும் புதரும் மிகுந்த காடாய்க் கிடந்த இடம் குமரன் கோயில்கொள்வதற்குகந்த நன்னிலமாக்கப்பட்டது. உலகம் உய்யும் பொருட்டு,

"கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்துதித்த"

திருக்கார்த்திகைத் திருநாளில் (27.11.1966) காலை 6. 15 மணிக்கு குறிஞ்சிக் குமரன் கோயிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. பணிகள் துரிதகதியில் நடைபெற்றன. யாரும் எதிர்பார்த்திராத அளவுக்கு மகோன்னதமான கோயில் உருவாயிற்று. பிரதிஷ்டைக்குரிய முருகன், தெய்வயானை, விநாயகர் திருவுருவங்கள் இலங்கையில் மிகப் பிரசித்திபெற்று விளங்கிய மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலிருந்து திருவுலாவாகக் கொண்டுவரப்பட்டன. 06. 06. 1968 அன்று காலை பதினொரு மணியளவில் கும்பாபிஷேகம் வெகுவிமரிசையாக நடைபெற்றது. சங்கத்தின் அங்கத்தவர்கள் காட்டிய உள்வலியினாலும் உற்சாகத்தினாலும் இந்துப் பொது மக்களின் ஆதரவுடன் இரண்டுவருட காலத்தில் இக்கோயிலை இந்து மாணவர் சங்கம் கட்டிமுடிக்கக் கூடியதாயிற்று. பல்கலைக்கழக வளாகத்திலுள்ள இந்துக்களின் நெடுநாளைய விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் வகையிற் பெறுமதிமிக்க இப்பணியினை நிறைவேற்றிய இந்துமாணவர் சங்கம் அடைந்துள்ள வெற்றி மிகுந்த பாராட்டுக்குரியது என்று இலங்கைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சேர். நிக்கலஸ் அட்டிக்கல இந்து தருமம் கும்பாபிஷேக மலருக்கு வழங்கிய செய்தியிற் போற்றினார்.

இந்து மாணவர்களின் இதயத் துடிப்பினை பே. கனகசபாபதி அம்மாணவர்களுடைய ஆற்றலைத் தக்கவகையில் ஆற்றுப்படுத்தினார். அவர்களுடன் தோளொடு தோள்நின்று செயற்பட்டார். கலாநிதி கா. கைலாசநாதக்குருக்கள், சி. முருகவேள், சோ. செல்வநாயகம், கலாநிதி த. யோகரத்தினம், கலாநிதி சு. சோதீஸ்வரன், கலாநிதி ஆ. துரைராசா, கலாநிதி இரா. நாராயணசுவாமி, கே. ஞானலிங்கம் முதலான பல்கலைக்கழக கல்விசார் சமூகத்தினர் கோயில் கட்டப்பட்ட காலத்தில் இந்து மாணவர் சங்கத்துக்குப் பலவகைகளில் கைகொடுத்தனர். கல்விசாரா ஊழியர்களுட் குறிப்பிடத்தக்கவர்கள் சி. இந்திரராசாவும் பொ. அரியரத்தினமும் ஆவர். து. அப்புலிங்கம், கு. சண்முகநாதன், க. கிருஷ்ணானந்தசிவம் முதலான மாணவர்கள் பேரூக்கத்துடன் செயற்பட்டனர்.

எவ்வாறாயினும், பல்கலைக்கழகத்துக்கு வெளியேயிருந்த பல பெருமக்களின் ஆதரவு கைகூடியிராவிட்டால் இத்தகையதொரு கோயிலைக் கண்டிருக்க முடியாது. அந்தவகையில் அ. துரைசாமிப்பிள்ளை, யூ. ஈ. ராமேஜ் சுவாமிகள், மா. கனகராசநாயகம், தி. த. சிவலிங்கம், டாக்டர் கே. சி. துரைராஜா எம். எஸ். செல்லத்துரை, சிறாப்பர் சு. கனகசபை, பொ. வ. பொன்னம்பலம், சீதாலக்சுமி, பி. இராஜன், எஸ். சோமாஸ்கந்தன், சி. கிருஷ்ணபிள்ளை, அ. நல்லதம்பி , எஸ். ஆறுமுகம் முதலான பலரும் காட்டிய ஆர்வம் போற்றுதலுக்குரியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சிக் குமரன் கோயில் கட்டும் திருப்பணியில் தன்னை இணைத்துக் கொண்ட ஓர் இயக்கம் மத்திய மாகாண இந்து மாமன்றமாகும். அ. துரைசாமிப்பிள்ளையைத் தலைவராகவும் கே. செல்லமுத்துபிள்ளையைச் செயலாளராகவும்,, சி. இராமானுஜத்தைப் பொருளாளராகவும் கொண்ட அம்மன்றம் கோயில் அமைப்பதற்குப் பலவழிகளில் உதவியது. கோயில் மகாமண்டபமும், ஆறுமுகசுவாமி கோயிலும் அம்மன்றத்தின் திருப்பணிகளாகும். அவர்களின் ஆதரவை அங்கீகரிக்கும் வகையில் இந்துதருமம் கும்பாபிஷேக மலரில் இந்து மாமன்றச் செயற்குழுவினர் புகைப்படம் வெளியிடப்பட்டது.

நீண்டகாலமாக இந்து மாணவர் சங்கச் செயற்பாடுகளுக்கு உதவியவரும், கோயில் எடுக்க மாணவர்கள் சங்கற்பம்பூண்ட காலமுதல் அப்பணியில் உற்சாகமாக ஈடுபட்டவரும் பல திருப்பணிகளுக்கு வள்ளல்களைத் தேடித் தந்தவருமான மா. கனகராசநாயகத்தைக் கௌரவிக்குமுகமாக இந்துமாணவர் சங்கம் 03. 12. 1968 அன்று அவருக்குப் பாமாலை சூட்டிச் சிவமணி என்ற பட்டத்தையும் வழங்கியது.

கோயில் நித்திய பூசைகள் ஒழுங்காக நடைபெற்றன. ஆயினும், நிருத்த மண்டபத்தில் நடராஜர் பிரதிஷ்டை செய்யப்படவில்லை என்ற குறை சிலவாண்டுகளாகத் தொடர்ந்தது. அதற்கு வேண்டிய பணம் சேர்த்தற் பொருட்டு நந்தி (பேராசிரி சி. சிவஞானசுந்தரம்) தயாரித்த ஒரு நாடகமும் யான் தயாரித்த ஒரு நாடகமும் அரங்கேற்றப்பட்டன. போதிய பணம் சேர்ந்ததாயினும் அது வேறு கோயில் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டது. நடராஜர் விக்கிரகத்தை இந்திய உயர் ஸ்தானிகராலய மூலமாகப் பெறலாம் என்று சிலர் கூறிக் கொண்டிருந்தனர். காலம்தான் போய்க்கொண்டிருந்தது.

மாணவர்கள் பொறுமை இழந்தனர். 1976ல் பதவியேற்ற இந்து மாணவர் சங்கச் செயற்குழு அப்பணியைத் தங்களிடம் விடுமாறு கோரியது. ஓரளவு தயக்கத்துக்குப் பின் பொறுப்பாண்மைக்குழு அதற்கு ஒப்புதலளித்தது. சங்கச் செயலாளர் ச. ஏ. பிரதாபர் என்னிடம் வந்ததும், அவரோடு மா. கனகராசநாயகத்திடம் சென்றதும், அவர் எங்களைக் க. ஆனந்தராஜாவிடம் அழைத்துச் சென்றதும், ஆனந்தராஜா மனமுவந்து நடராஜர் திருவுருவம் அமைக்கப் பணம் தருவதாக ஒப்புக் கொண்டதும், மறுநாள் கண்டி நகர் சென்ற நாங்கள் கைமாற்றாகக் கேட்ட ஆயிரம் ரூபாவை அ. துரைசாமிப்பிள்ளை உடனடியாகத் தூக்கித் தந்ததும், நாடார் கடையில் வெண்கலம் வாங்கியதும், பிள்ளையார் கோவிலடியில் நின்ற சங்கானை லொறியொன்றின் உரிமையாளர் வெண்கல மூட்டையை யாழ்ப்பாணத்தில் நாங்கள் சொன்னவிடத்திற் சேர்க்க முகமலர்ச்சியோடு முன்வந்ததும், இப்படியும் காரியங்கள் நடக்குமா? என்று எங்களை அதிசயிக்க வைப்பனவாய் அமைந்தன.

நடராஜர், சிவகாமியம்மன், மாணிக்கவாசகர் திருவுருவங்களைச் செய்யும் செலவை முறையே க. ஆனந்தராஜாவும், சி. கிருஷ்ணபிள்ளையும் பட்டயக கணக்காளர் அ. அரியரத்தினமும் பொறுப்பேற்றனர். கோயிலிலுள்ள ஆறுமுகசுவாமி விக்கிரகத்தை வார்த்த ச. நா. சோமசுந்தர ஸ்தபதியாயிடம் விக்கிரங்களை அமைக்கும் வேலை ஒப்படைக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் அவ்வேலைகளை மேற்பார்வை செய்யும் பொறுப்பினை பேராசிரியர் கனகசபாபதியும் அவருக்குப் பின் பேராசிரியர் கைலாசநாதக் குருக்களும் ஏற்றுக் கொண்டனர்.

திருவுருவங்களை வவுனியா வரை கொண்டு வந்து தருவீர்களா என்று தொழிலதிபர் சிவநெறிப்புரவலர் க. கனகராஜாவைக் கேட்டோம். அவர் பேராதனைக்கே கொண்டு வருகிறோம் என்றார். தன் பொறுப்பில் சகல ஏற்பாடுகளையும் செய்த கனகராஜா யாழ்ப்பாண வீதிகளில் திருவுலா நடத்தியோடு திருமேனிகளைக் கோலாகலமாகப் பேராதனைக்கு அனுப்பி வைத்தார். திருவுலாவின் போது சேர்ந்த பணம் முழுவதும் கோயிலுக்குச் சேர்க்கப்பட்டது. ஓவசியர் அ. நல்லதம்பி கண்டியில் ஊர்வலத்துக்கான ஏற்பாடுகளைச் செய்தார். மா. கனகராசநாயகம் யானை ஒன்றினையும் காவடியாட்டக்காரர்களையும் கொண்டு வந்தார். பேராதனை நகரில் டாக்டர் நா. மயில்வாகனம் தன் வீட்டின் முன் பந்தல் தோரணங்கள் கட்டி வைத்திருந்தார். அங்கிருந்து ஊர்வலம் புறப்பட்ட நடேசரைப் பல்கலைக்கழகச் சந்தியில் பல்கலைக்கழக வளாகத் தலைவர் கலாநிதி கே. எச். ஜயசிங்க வரவேற்றார். குறிஞ்சிக் குமரன் கோயிலில் சிவகாமியம்மன், மாணிக்கவாசகர் சமேதரராய் நடராசர் எழுந்தருள 04. 04. 1977 அன்று குடமுழுக்குவிழா சிறப்பாக நடைபெற்றது.

1977ல் நடந்த ஆவணிக் கலவரத்தின் போது குமரன் கோயில் மோசமாகத் தாக்கப்பட்டது. வீட்டை விட்டு வெளியே செல்ல முடியாத நிலை, கல்வி, உயர்கல்வி அமைச்சர் நிசங்க விஜயரத்தின கைப்பட எழுதிய ஒரு கடிதத்துடன் மா. கனகராசநாயகம் பொலிஸ் ஜீப்பொன்றில் திடீரெனத் தோன்றினார். அவ்வாகனத்தில் போய்ப் பொறுப்பாண்மைக்குழுத் தலைவராக இருந்த பேராசிரியர் சு. வித்தியானந்தனையும் ரோணி எஸ். இராஜரத்தினத்தின் வீட்டில் உயர்தப்பியோடிச் சரண்புகுந்த சாம் சண்முகநாதக் குருக்களையும் அழைத்துக் கொண்டு கோயிலுக்குச் சென்று பார்வையிட்ட பின் பேராதனைப் பொலிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்துக்குப் போய்க் கோயிலுக்கு ஏற்பட்ட நஷ்டங்கள் பற்றி முறைப்பாடு செய்தோம். அவ்வாறு செய்ததால் அரசிடம் நஷ்டஈடு கோரக்கூடியதாக இருந்தது.

அரசிடம் நஷ்டஈடு கோருவதென்ற கருத்தினையும் பலர் எள்ளி நகையாடினர். அந்த விஷயத்தில் உறுதியோடு உதவியவர் த. சிவப்பிரகாசபிள்ளை அவர்களாவர். கோவில் கட்டிய காலத்தில் காரியங்களை ஒழுங்காகத் திட்டமிடுவதற்கும் கட்டட வேலைகளை மேற்பார்வை செய்வதற்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் அவர். கோயில் கட்டப்பட்ட பின் அதன் நிர்வாகம் முறையாக நடைபெறுவதற்கேற்ற வகையில் ஓர் ஆட்சித் திட்டம் வகுக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தியவர். கோயில் பெரிதாக எழுந்த எக்களிப்பில் சிலர் நடந்து கொண்ட விதம் பிடிக்காத காரணத்தால் அவரும். கா. கைலாசநாதக் குருக்களும், ராமேஷ் சுவாமிகளும், மா. கனகராசநாயகமும் விலகிச் செல்ல நேர்ந்தது. ஆயினும், கோயில் தாக்கப்பட்டது கேட்ட த. சிவப்பிரகாசபிள்ளை கொதிப்படைந்தார். அவரது மாணவரான பொறியியல் விரிவுரையாளர் வி. சண்முகநாயகம் கோயிலுக்கேற்பட்ட நஷ்டங்கள் பற்றிய விரிவான அறிக்கை தயாரிக்க உதவினார்.

கோயில் பொறுப்பாண்மைக் குழு செயலாளர் என்ற முறையில் நஷ்டஈடு கோரி யான் சமர்ப்பித்த விண்ணப்பம் அன்று பிரதமராக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம் நேரடியாகக் கையளிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்த த. சிவப்பிரகாசப்பிள்ளை, ஒன்றேகால் இலட்சம் ரூபா நஷ்டஈடாக 1979ல் கிடைக்கும் வரை பல தடைகளை எதிர்த்து உறுதியோடு போராடினார். அதற்கிடையில் இந்து மாணவர் சங்கம் மேற்கொண்ட முயற்சியால் 14. 12. 1977 புனராவர்த்தன கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. இந்து மாணவர் சங்கம் 1978 ஜுனில் தன் வெள்ளி விழாவினையும் விமரிசையாகக் கொண்டாடியது. அவ்விழாவின் போது எதிர்பாராத விதமாக 09. 06. 1978 கோவிலுக்கு வருகை தந்த சீர்காழி கோவிந்தராஜன் மாணவர்களின் கோரிக்கைக்கு இணங்கி அங்கே அமர்ந்து திருப்புகழ்ப் பாடல் ஒன்றினையும் குறிஞ்சிக் குமரனைப் போற்றியும் இந்து மாணவர் சங்கத்தை வாழ்த்தியும் தாமே உடனடியாகப் புனைந்ததொரு பாடலையும் பாடியமை எல்லோரையும் பூரிப்பிலாழ்த்தியது.

1983 ஆடிக் கலவரத்தின் போது கோயில் உக்கிரமாகத் தாக்கப்பட்டுக் கடுஞ்சேதத்துக்குள்ளாக்கப்பட்டது. வளாகத்து இந்து சமூகத்தினருள் பெரும்பாலானவர்கள் மனமுடைந்து போயினர். பலர் யாழ்ப்பாணத்துக்கும் வெளிநாடுகளுக்கும் செல்லும் எத்தனங்களில் இறங்கினர்.கோயிலைத் திருத்தியமைப்பது அவசியமா என்ற வினாவும் எழுந்தது. விக்கிரகங்களையும் ஏனைய பொருட்களையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கோயிலுக்கு அனுப்பி விடலாம் என்ற எண்ணமும் சிலரிடத்துத் தோன்றியது. மாணவர்கள் வளாகத்தில் இருக்கவில்லை. அந்த வேளையில் கோயிலைப் புனருத்தாரணம் செய்யும் எண்ணம் அன்றைய பிரதேச அபிவிருத்தி அமைச்சர் செ. இராசதுரையிடம் உதயமானது. இந்துசமய கலாசார திணைக்களப் பணிப்பாளர் ஆலாய்ப் பறந்தும் பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர்களைக் கூட்ட முயடிவில்லை. கோயில் புனருத்தாரணத்துக்கான சகல ஏற்பாடுகளையும் " ரெப்பியா" மூலம் நாங்கள் செய்து தருகிறோம். நீங்கள் ஒரு குழுவை அமைத்து அதன் மூலம் அங்கீகாரம் மட்டும் அளியுங்கள் என்பதுவே அவரது வேண்டுகோளாக இருந்தது. அதற்கே ஆசிரியர்களைப் பிடிப்பது பெரும்பாடாய் இருந்தது.

இக்கட்டான அந்த நேரத்தில், உறுதி தளர்ந்த நிலையில் உருவான ஒரு குழுவுக்கு உறுதியோடு தலைமைதாங்க ஒப்புக் கொண்டவர் பேராசிரியர் த. யோகரத்தினம். பிரதேச அபிவிருத்தி அமைச்சோடும் இந்து சமய கலாசாரத் திணைக்களத்தோடும் " ரெப்பியா" வோடும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு அவர் கோயில் புனருத்தாரணப் பணிகளை முடுக்கி விட்டார். அக்காலப் பகுதியில் கோயில் கருமங்களில் செயலாற்றலுடன் உதவிய ஒருவர் பேராசிரியர் வை. நந்தகுமார் ஆவார். அவரிடத்துக் காணப்படும் வேகம் வரம்புமீறும் சந்தர்ப்பங்களில் அவரைக் கட்டுப்படுத்துவது சுவாரஸ்யமான அனுபவமாகும்.

கோயில் புனருத்தாரணப் பணிகள் தொடங்கியிருந்த வேளையில் மாணவர்களும் வளாகத்துக்குத் திரும்பி அப்பணிகளில் மும்முரமாக ஈடுபட்டனர். பேராசிரியர் யோகரத்தினம் வெளிநாடு செல்லவிருந்த வேளையில் தெரிந்தெடுக்கப்பட்ட பொறுப்பாண்மைக் குழுவின் தலைவனாகி, பிரதேச அபிவிருத்தி அமைச்சின் மூலம் புனருத்தாரணம் செய்து கையளிக்கப்பட்ட குறிஞ்சிக் குமரன் எனக்கு நல்கினான். ஜுலை ஒன்பதாம் நாள் கிரியைகள் ஆரம்பமாகின. 13. 07. 1886ல் கும்பாபிஷேகம் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகமும் நடைபெற்றன. அனைத்துக் கருமங்களுக்கும் அழகுசேர்த்த மாணவர்கள் மீண்டும் மிடுக்குடன் குமரன் பணியிற் களிப்பராயினர்.

குறிஞ்சிக் குமரன் கோயில் வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும் போது மூன்று விடயங்கள் மனதில் தோன்றுகின்றன. ஒன்று வேண்டிய காரியங்களை அதிக பிரயத்தனமின்றிக் கைகூடவைக்கும் ஆற்றலும் அருள்மிகுதியும் உடையவன் குறிஞ்சிக்குமரன். இரண்டு, கோயிற் பணிகளுக்கு வேண்டிய போதெல்லாம் உதவப் பெருமக்கள் பலர் காத்திருக்கின்றனர். மூன்று இது எங்களுடைய கோயில் என்ற உணர்வுடன் குமரன் பணியில் காற்றிலே விண்ணையும் சாட வல்ல ஒரு மாணவர் கூட்டம் தொடர்ந்து குறிஞ்சிக் குமரன் கோயிலுக்குக் கிடைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சிக் குமரனே குறைகளெல்லாம் தீர்த்திடுவாய்

செல்வி வே. வல்லிபுரம்
விவசாய பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

பஞ்சுமுகில் வந்துநிதம்
கொஞ்சிவிளை யாடிடும்
குறிஞ்சிக் குன்றதனில்
வீற்றிருக்கும் வேலவனே.

அஞ்சேலென வேல்தாங்கி
பஞ்செனவே துயர்நீக்கி
வஞ்சமெலாம் துடைத்திடவே
மஞ்ஞையேறி வந்திடுவாய்.

தந்தைக்கேஞானத்தை
தத்துவமாய் உரைத்தவனே
எந்தையே நீயாகி
எமையெல்லாம் காத்திடப்பா

சாலங்கள் ஏதுமின்றி
ஞாலத்தில் எமைக்காக்க
நீலமயில் தன்னில்
நீயேறி வந்திடையா

தென்றல்தான் ஆடிவந்து
தாலாட்டுப் பாடிநிற்கும்
குன்றதனில் உறைபவனே
குறிஞ்சிக் குமாரனே.

துன்பந்தனை நீக்கிட
இன்பங்கள் பெருக்கிட
மாயோனின் மருமகனே
நீயோடி வந்திடுவாய்.

நறுந்துகள் சுமந்துநிற்கும்
குன்றதனில் இருப்பவனே
குறிஞ்சிக் குமரனேயெம்
குறைகளெல்லாம் தீர்த்திடப்பா.

நல்லவராய் வாழ்ந்திடவே
வல்லமை தனைவேண்டி
கல்விகற்க வந்தஎமக்கு
நல்வித்தை தந்திடையா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சிக் குமரனுக்கோர் ஆராதனை...

கு. லோகதர்ஷினி
விலங்கு மருத்துவ பீடம்
முதலாம் வருடம் (98/99)
பேராதனைப் பல்கலைக்கழகம்

தந்தைக்கு உபதேசித்த
எந்தை தனயனவன்
விந்தை கூறவென்றோ - இங்கே
விரைந்தோடும் வீரநதி

துள்ளி வந்திங்கு
வள்ளி சமேதனுக்கு - நீயும்
பண்ணிசைக்க அந்தோ
பறந்தோடும் துன்பவிதி

குன்றத்துறை குறிஞ்சி குமரன்
நெஞ்சத் துறைந்துருகும் அடியவர்க்கு
பஞ்சமில்லாது - பல
விஞ்சும் வளம் தருவான்

பார்க்கும் அதி பதி - சமயத்தில்
படைக்கோ சேனாதிபதி -என
அபயம் தரும் அப்பனுக்கு
உபயமாய் உருகிப்பாடு

கலியுக வரதனிவன்
காலடியை பற்றி நின்றால்
நலிவுறும் நம்மவர்க்கும்
வலிதீர்ப்பான் வாழ்வளிப்பான்

கடம்பன் கதிர்வேலன் எம்
இடுக்கண் களைத்திங்கு
இன்பம் பயந்திடவோ -இவ்
இமயத்தில் பள்ளி கொண்டான்

ஆண்டுக்கு ஒரு முறை
ஓடி வரும் தையினிலே
ஆடுமயில் வேலவனுக்கு
அலங்காரத் திருவிழா எடுத்து
அத்தனை பீடங்களும் அணிவகுப்போம்
எத்தனை கேளிக்கைகள் செய்வோம்

தீராத துயர்தீர்த்து - தினம்
சோராது உழைத்திடவே
ஆராதனை புரிவோம்
பேராதனை உறை குறிஞ்சிக் குமரனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவை சி. சின்னத்தம்பி புலவர் பற்றிய ஓர் குறிப்பு

பேராசிரியர் இரா. வைகனகரத்தினம்
தமிழ்த் துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

இணுவை என்னும் ஊர் யாழ்ப்பாணம் காங்கேசன்துறைப் பெருவீதியில் நாலுமைல் தொலைவில் உள்ளது. இன்று இதன் எல்லைப் பகுதிகளாகக் கிழக்கே மருதனார் மடம், உரும்பிராய் - கருணாகரப் பிள்ளையார் கோவில், கல்லாக்கட்டுவன் என்னும் பகுதிகளையும் தெற்கே கோண்டாவில் தாவடி முதலான பகுதிகளையும் மேற்கே சுதுமலை உடுவில் முதலான பகுதிகளையும் வடக்கே சுன்னாகத்தையும் எல்லையாகக் கொண்டுள்ளது.

இவ்வூருக்கு யாழ்ப்பாணத்திலுள்ள பிறவூருகளுக்கு இல்லாத சிறப்பு உண்டென்பர். இவ்வூரை யாழ்ப்பாண மன்னர்கள் தலைநகராகக் கொண்டு ஆண்டனர் என்றும் பின்னர் குறுநில மன்னர்கள் தமது தலைநகராகக் கொண்டு ஆண்டனர் என்றும் வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. கோவலூர் வேளாளனும் கோழிக்கொடியை உடையவனும் குவளை மாலை அணிந்தவனும் பெரும் பராக்கிரமமும் கட்டழகு உடையவனுமாகிய பேராயிரவன் இருந்து ஆட்சி செய்தான். அவன் காலத்தில் கரும்பும் கமுகும் வாழையும் நெல்லும் செழித்து ஓங்கும் இடமாக இணுவில் விளங்கிற்று. இதனை கைலாயமாலை பின்வருமாறு குறிப்பிடும் [1]

" கோட்டு மேழித் துவசன் கோவற்பதி வாசன்
சூட்டு மலர்க் காவிற் றொடை வாசன் - நாட்டமுறு
ஆதிக்க வேளாளன் ஆயுங்காலை அனைத்தும்
சாதித்த ரூபா செனந் தரியன் ஆதித்தன்
ஆறாயிரங் கதிரோடொத்த மேனிப் பிரகாசன்
பேராயிர வானனும் பேரரசைச் சீராரும்
கன்னல் செறி வாழை கமுகுபுடைசூழக் கழனி
துன்னும் இணுவிலிற் துளங்க வைத்து "

யாழ்ப்பாணத்து பரராசசேகரன் என்னும் மன்னன் இணுவையூரில் இருந்து ஆண்டான் என்பதைப் புலவர்

" யாழ்ப்பாணப்
பட்டினந் தன்னிற் பரராச சேகரன்
என்னுமாரிய குலத் திறைஅர சிருந்த
தென்னிணு வையென்னும் திருநக குறைவோன் [2]

என்னும் அடிகளால் வெளிப்படுத்துவார். பிறிதோரிடத்தில் கங்காகுல திலகமும் தமிழ்நாட்டிலுள்ள காரைக்காலைச் சேர்ந்தவனுமாகிய காலிங்கராசன் என்பவன் பாண்டியனின் மந்திரியாகவும் இலங்கை ஆண்ட குறுநில மன்னனாகவும் இருந்தான். அவன் மகன் கைலாயன் என்பவன் ஆவான் எனப் பல இடங்களில் குறிப்பிட்டுச் செல்வார். எடுத்துக்காட்டாக

தென்பாண்டி மாறனுக்கு மந்திரியாய்
இலங்கையை ஆண்ட காலிங்கராசன்
மகன் கைலாயன் [3]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் அடிகளைக் குறிப்பிடலாம். பொதுவாகச் சின்னத்தம்பிப் புலவர் பற்றி ஆய்வு செய்தோர் இணுவில் யாழ்ப்பாண இராச்சியத்தில் ஒரு தலைநகரகமாக இருந்ததென்றும் அதனை ஆண்டவர்கள் மன்னராகவோ குறுநில மன்னர்களாகவோ இருந்தனர் என்றும் அவர்கள் கோவலூர், காரைக்கால் முதலான இடங்களில் இருந்து வந்தவர்கள் என்றும் அவர்களுள் களங்கராசன், கையலாயநாதன் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள் என்றும் [4] கைலாயநாதன் காலம் 1ஆம் பரராசசேகரன் அல்லது 2ஆம் பரராசசேகன் காலமாக இருக்க வேண்டுமெனக் குறிப்பிடுவர்.[5] பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் காலிங்கராசன் வரலாறு பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் [6]

*கயிலாயநாதன் அரசனாகவும் ஞானியாகவும் சித்தனாகவும் தெய்வமாகவும் காணப்படுகின்றான். கயிலாய-நாதனுடைய தந்தை காலிங்கராயன் எனப் படுகின்றான். காலிங்கராயனென்னும் பெயர் இரண்டாவது பாண்டியப் பேரரசு காலத்திலே பரக்க வழங்குகின்றது. யாழ்ப்பாணத்தின் தொடக்க கால மன்னர்கள் கலிங்கத் தொடர்புள்ளவர்களென யாழ்ப்பாண வைபவமாலை முதலியன கூறும் கலிங்கத் தொடர்பு பாராட்டும் மன்னர்கள் சிலர் தென்னிலங்கையையும் ஆண்டுள்ளனர். சின்னத்தம்பிப் புலவரின் ஆக்கங்களில் இடம்பெறும் காலிங்கராயன் வரலாற்றுப் பேர்வழியா என்பதை நிச்சயிக்க முடியவில்லை*

எனக் குறிப்பிடுவது இங்கு மனங்கொள்ளப்படவேண்டிய தொன்றாகும். இக்கூற்றின் உட்பொருள் காலிங்கராகன் என்னும் பாத்திரம் புலவரின் கற்பனையை அல்லது மீட்டுருவாகத்தின் அவசியத்தை வற்புறுத்துவதாக அமையும்.

இணுவிலைச் சுற்றி பல ஆலயங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் காரைக்கால் சிவன் கோவில், இளந்தாரி கோயில், சிவகாமியம்மன் கோயில், பரராசசேகரப் பிள்ளையார் கோயில், மாணிக்க வைரவர் கோயில், செகராசசேகரப் பிள்ளையார், பரமானந்த வல்லி அம்மன் கோயில், அம்பலவாணர் கந்தர் கோயில், வட்டு வினிப் கண்ணகி அம்மன் கோயில், ஆலடி அண்ணமார் கோயில் என்பன பல்லவ வைரவக் கோயில் இன்று முக்கியத்துவம் உடைய கோயில்களாக காணப்படுகின்றன. இவற்றுள் சிவகாமியம்மன் கோயில், பரராசசேகரப் பிள்ளையார் கோயில், செகராசசேகரப் பிள்ளையார் கோயில், காரைக்கால் சிவன் கோயில் ஆகிய கோயில்கள் காலத்தால் முற்பட்டவையாகவும் வரலாற்றுப் புகழ் மிக்கவையாகவும் காணப்படுகின்றன. இத்தகைய ஆலயங்கள் மீது சின்னத்தம்பிப் புலவர் தனிப்பாடல்களையும் பிரபந்தங்களையும் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலும் கிறிஸ்தவ மதம் பரப்பப்பட்டது. பல சைவ ஆலயங்கள் இடிக்கப்பட்டன. ஆயினும் சின்னத்தம்பிப் புலவர் காலம் வரையும் இணுவை இத்தாக்கதலுக்குட்படவில்லை போலும் இவ்வாலயங்களின் வழிபாட்டுமுறை சிறப்பாகவே நடைபெற்று வந்தன எனச் சின்னத்தம்பிப் புலவரின் பிரபந்தங்களில் இருந்து தெரிய வருகின்றது.[8]

"காலிங்க ராச கருணையந் திருமால்
எவ்வெலாத் திசையும் இனிதுவந் தேத்தச்
சைவநூல் நெறிமுறை தவறிடா தொழுகி
சுத்தமோர் பால்தயிர் தொகுவன சூழ
நித்தமா யிராக்கன நியமமோடளித்துக்
கன்னலின மொழிச்சிவ நாமசுந் தரிதிருப்
பொன்னடி யனுதினம் பூசனை புரிந்து"

என்ற புலவரின் பாடல் இங்கு நினைவு கூரத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய ஆலயங்களுள் இளந்தாரி ஆலயத்திற்கும் புலவருக்கும் மிகுந்த தொடர்புண்டு என்பது அவ்வகையில் கயிலாயநாதன் வரலாற்றோடு சின்னத்தம்பிப் புலவர் பிரிக்க முடியாத ஒருவராகக் காணப்படுகின்றார். கயிலாயநாதன் காலிங்கநாதன் வழிவந்த குறுநில மன்னராகக் கருதப்பட்டவர். ஆயினும் அவர் இல்வாழ்க்கையில் புகவில்லை. தன்னை இறை தொண்டிற்கு அர்ப்பணித்தவர். அவர் பக்தவராகவும் சித்தராகவும் வாழ்ந்து இளமையில் இறைவனை அடைந்தவர். இதனால் இளந்தாரி என்னும் தெய்வமாகப் போற்றப்பட்டார். அவரது பரிபக்கப் பேற்றைச் சின்னத்தம்பிப் புலவர்

" அக்கினி சடைமுடி அண்ணறன் னருளால்
திதெலாம் வியக்கத் தேவுரு வாகி
கிழந்தானோர் போதினுங் கிட்டுறா மையினால்
இளந்தாரி யென்னு டியற்பெயர் தாங்கி"

ஆனைவா கனத்தெம் மரிகர புத்திரன்
தானையங் கடற்குத் தனகர்த்த னானான்
பூரண வாழ்வு பொருந்தி யெவ்வுலக
காரண னான கயிலாய நாதன்[9]

எனப் போற்றப்படுவது இங்கு மனங் கொள்ளத்தக்கது.

இத்தகைய கயிலாயநாதனை வழிபடும் தெய்வமாகக் கொண்டெழுந்த ஆலயமே இளந்தாரி கோயில் ஆகும். இவ்வாலய வழிபாட்டுச் சடங்குகள் கயிலாயநாதன் சிவப்பேறு பெற்ற தினத்தை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகின்றது. அப்பொழுது காய்மடை, பூமடை, பொங்கல் பூசை இளந்தாரி மீது புலவர் பாடிய தோத்திரப் பாடல்கள் பாடல் முதலான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இதே சமயம் இவ்வாலயத்தின் அருகாமையில் அண்ணமார் வழிபாட்டிற்குரிய ஆலயமும் உண்டு. இவ்வண்ணமார் பற்றி கருத்துத் தெரிவிக்கும் ஆய்வாளர் இளந்தாரியாகிய கயிலாயநாதனுக்கு அணுக்கத் தொண்டர்களாக விளங்கியவர்களே இவ்வண்ணமார் என்பர்.[10] இவர்கள் தெய்வமாக வழிபடும் இடம் ஆலடி என்று அழைக்கப்படுகின்றது. ஆலடி அண்ணமார் ஆலயம் என்பது இக்கோயிலின் பெயர், இவ்வாயலச் சடங்குகள், காய்மடை, கறிமடை, பொங்கல், பூசை என்னும் அடிப்படையில் நடைபெறுகின்றது. இளந்தாரியாகிய கயிலாயநாதனுக்கும் அண்ணமார்களுக்கும் இடையேயுள்ள தொடர்பினை உற்று நோக்கும் பொழுது கயிலாயநாதன் ஒரு நிலப்புத்துவ வம்சத்தில் உதித்த நிலக்கிளாவாகவும் அவரது கூலித் தொழிலாளர் தலைவர்களே இவ்வண்ணமார் எனவும் கருத இடமுண்டு. இவ்வகையில் கயிலாயநாதன் அரசுரிமைக்கு வாரிசு என்பதைவிட, நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் ஒரு நிலக்கிளாராகவும் உதித்து, அவற்றைத் துறந்து சமாதி அடைந்த ஒரு பத்தராகவோ சித்தராகவோ இவர் விளங்கி இருக்க வேண்டும்

சின்னத்தம்பிப் புலவர் கையிலாயநாதனைப் போற்றுதற்கு அடிப்படைக் காரணம் அவர் பரம்பரையில் வந்தமையேயாகும். " கோவலூர் காரைக் குடிகுவல்ந் தழுவிய, நாவலர் புகழும் நம்மர புதித்தோன்" என்னும் புலவரின் கூற்று இதனை உறுதிப்படுத்துவதாக அமைகின்றது எனலாம்.

பொதுவாக இணுவையூரின் வரலாற்றை நோக்கும் பொழுது யாழ்ப்பாண வரலாற்றின் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக இணுவையூர் அமைவதாய், இது வரலாற்று முக்கியமுடைய பிரதேசமாக விளங்குகின்றது எனலாம்.

சின்னத்தம்பிப் புலவர் யாழ்ப்பாணத்தில் உள்ள இணுவையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது மூதாதையர் தமிழ் நாட்டில் உள்ள தொண்டை மண்டலத்திலுள்ள திருக்கோவலூர் பேராயிரர் வழிவந்தவர்களாகவும் கருதப்படுகின்றனர். இவர் தந்தையார் பெயர் சிதம்பிரநாதன் ஆகும். ஆயினும் இவருக்கு முதலித்தம்பி என்ற பெயரும் வழக்கில் இருந்து வந்துள்ளது. சின்னத்தம்பிப் புலவர் தமது நூலொன்றில் தம்மை அறிமுகப்படுத்தும் பொழுது வித்தகனாம் முதலித்தம்பி சேயனாய், விளங்கும் சின்னத்தம்பி நாவலன் எனக் குறிப்பிட்டுள்ளமை இங்கு மனங் கொள்ளத்தக்கது. சின்னத்தம்பிப் புலவரின் இயற்பெயர் கதிர்காமசேகரமானா முதலியார் என்பதாகும். ஆனால் கதிர்காமசேகரமானா முதலியாருக்குச் சின்னத்தம்பி என்னும் பெயர் எவ்வாறு உண்டாயிற்று என்பதை பாவலர் சரித்திர தீபகம் முதல் வெளிவந்த நூல்கள் எவற்றிலும் கூறப்பட்டவில்லை. தமிழ்ப்புலவர் சரித்திரம் எழுதிய குமாரசுவாமிப் புலவர் தனது அயலூரான தலைமைத் தமிழ்ப் புலவோரில் ஒருவரான இணுவில் சின்னத்தம்பிப் புலவரை நினைத்துக் கூடப் பார்க்கவில்லை என்பது கவலைக்குரிய விடயம்.

சின்னத்தம்பிப் புலவர் செல்வாக்கும் செல்வ வளமும் உள்ள குடும்பத்தில் பிறந்தவர். திண்ணைப் பளளியில் கற்றவர். இலக்கிய இலக்கண அறிவினைப் பெற்றவர். ஆனால் இலக்கண இலக்கிய வித்தகரல்லர். கவிபாடும் ஆற்றலை இயல்பாக பெற்றவர். வரகவியினர் நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் இளமைப்ப பருவம் தொடக்கம் கவிபாடும் சக்தியை எப்படிப் பெற்றிருந்தாரோ அவ்வாறு இணுவை சின்னத்தம்பிப் புலவரும் பெற்றிருந்தார். இவரின் கவிபாடும் சக்தியினை எடுத்துக் கூறவந்த பாவலர் சரித்திர தீபகத்தின் ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுவது அவதானிக்கத்தக்கது.

" சின்னத் தம்பிப் புலவர் சிறுபராயத்திற்றானே
கவிபாடும் வரம் இவரிற் கண்டிருந்து மற்றைய
பையன்களோடு இவர் கம்பங் கூத்துப் பார்க்கப்
புறப்பட்ட ஓர் தருணம் இவரது தந்தையார்
தடை செய்ய இவர் அத்தடையில் நில்லாது ஓட
அரிவாள் ஒன்று காலை அறுக்க அதனாலாய
நோவையுங் காயத்தையும் பார்த்தவுடன்

ஆரை நாணோக
அரிவாளை நோகட்டோ
காலை நோவேனோ
கம்பத்தை நோவேனா "

எனப் பாவினத்திற் நம் நோவைக் கூறினார். இத்தகைய சம்பவத்தை நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் இளமையிற் பாடிய பொன்பூச்சொரியும் பொலிந்த செழுந்தாதிறையும் என்னும் சம்பவத்தோடு ஒப்பிட்டு நோக்குக

சின்னத்தம்பிப் புலவர் ஆரம்பத்தில் அரசாங்கத்தில் கோயிற் (பற்று) சட்டம்பி உத்தியோகத்தராகப் பணி புரிந்தார் என்பார் அல்றோலட் சதாசிவம்பிள்ளை. இவர் ஒல்லாந்து அரசிடம் சாசனம் எழுதும் உத்தியோகத்தராக இருந்தனர் என்பர்.

தாசிவம்பிள்ளை தரும் குறிப்பிலும் பார்க்கப் பின்னைய குறிப்பு சற்று வலுவுடையது எனலாம். புலவர் யாதோ ஒரு காரணத்துக்காக சிறை சென்றவர் என்பது வரலாறு. இங்கு குறிப்பிடப்படும் சாசனம் எழுதும் உத்தியோகம் என்பது ஒல்லாந்தர் காலத்தில் அரச காணிகள் பொதுமக்கள் காணிகள் எழுதும் உத்தியோகம் எனலாம். இந்த அரச உத்தியோகத்தில் தனிமனிதன் பிழை விடுவதற்கும் பிறர் பல குற்றங்களை ஏற்றுக் கொள்வதற்கும் பல வாய்ப்புக்கள் உண்டு. அந்த வகையில் அவர் மீது பிழையான குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருககலாம். அக்குற்றச்சாட்டுக்கள் மூலம் புலவர் சிறை வைக்கப்பட்டிருந்தார் என்பதை உறுதிப்படுத்தும். சின்னத்தம்பிப் புலவர் இறைபக்தி மிக்கவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளந்தாரி மீதும் சிவகாமியம்மை மீதும் அளவு கடந்த பக்திமிக்கவர். அவர்களது அருள் பெற்று பல பிரபந்தங்களைப் பாடினர். கயிலாயநாதன் தோத்திரம். சிவகாமியம்மன் ஊஞ்சல், துதி, மறியற்-கொச்சகம் முதலான பிரபந்தங்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. புலவர் ஒரு அருளாளர் என்பதை சிவகாமியம்மை மறியற் கொச்சகம் பாடி சிறை மீண்டமை என்னும் நிகழ்வு எடுத்துக் காட்டும். புலவர் சிறை வைக்கப்பட்ட பொழுது சிவகாமியம்மையிடம் தன்னை சிறை மீட்டருளும்படி வேண்டுவதாக பின்வரும் பாடல் காட்டும்.

" துப்பூட்டு மென்றது துன்னார் சிறைப்படுத்தும்
அப்பூட்டுத் தீய அரிய சிறை யிட்டிருக்கும்
இப்பூட்டு நீர்ப்பூட்டா யென்சிறையை நீக்கியருள்
செப்பூட்டும் பெற்றாட் சிவகாம சுந்தரியே "

இப்பாடலை பாடியவுடன் சிறைக்கதவு தாமாகவே திறந்தது. புலவரன் அறிவாற்றலை அறிந்த அதிகாரிகள் அவரைச் சிறையில் நின்றும் விடுவித்ததுடன் இவர் மீது பொய்க் குற்றம் சுமத்தியவர் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார்.

"என்னைச் சிறையில் வைத்து பின்ழவந்த என்பகைவர்
தன்னைச் சிறைவைத்துத் தாரணியெல் லாம்புகழ்
சென்னிச் சுடரே சுடரே சிவக்கொழுந்தே
துன்னிச் சிறை தீர்த்த சிவகாம சுந்தரியே "

என்னும் புலவரின் பாடல் இதனை உறுதிப்படுத்தும்.

சின்னத்தம்பிப் புலவர் செல்வ வளமுள்ள குடும்பத்தில் பிறந்த பொழுதும் அவரது வாழ்க்கையின் பிற்பகுதியில் மிகுந்த துன்பங்களுக்கு ஆளானார். வறுமை அவரை வாட்டியது. கொடுப்பாரில்லை. எனவே சிவகாமியம்மையிடம்

" பொன்னை யுந்திருத் தன்னையும் நல்கியே
வரந்த ரத்தகு நீயிங் கிருக்களான்
வறுமை யாகித் துயர்பட நீதியோ "

என தனது வறுமையின் ஆற்றாமையால் நொந்து பாடுவதை அவதானிக்கலாம்.

புலவர் தம்மேல் சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்களையும் தன்னைப்பிடித்துள்ள வறுமை என்னும் நோயினையும் பிற இடர்களையும் தன்குல தெய்வங்களின் மீது சுமத்திவிட்டு தம் கலை இலக்கிய முயற்சிகளை சிறப்புடன் ஆற்றிவந்தார்.

புலவர் பஞ்சவன்னத்தூது, கயிலாயநாதன் தோத்திரம், சிவகாமியம்மன் துதி, சிவகாமியம்மன் திருவூஞ்சல், சுப்பிரமணியர் திருவூஞ்சல், கயிலாயநாதன் திருவூஞ்சல், மறியற் கொச்சம் முதலான பிரபந்தங்களையும் தனிநிலைச் செய்யுட்களையும் பாடியுள்ளார். இளந்தாரி புராணம் என்னும் புராணத்தையும் அனுவுருத்திர நாடகம், வசந்தன் நாடகம், நொண்டி நாடகம் முதலான நாடக நூல்ளையும் எழுதியுள்ளார்.

**பஞ்சவன்னத்தூது**

பாட்டுடைத் தலைவனாகிய இளந்தாரி கையலாயநாதன் மீது மையல் கொண்டு அவனை அடைவதற்காக வெண்ணிலா தென்றல் கிளி அன்னம் முதலானவற்றையும் தோழியையும் தூது விடும் நிகழ்ச்சியைக் கூறுவது இந்நூல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதிகம்**

அ. சிவகாமியம்மன் பிள்ளைத் தமிழ்
இது இணுவில் சிவகாமியம்மன் மேல் பாடப் பட்டது. இதனை சிவகாமியம்மன் துதி ஒன்றும் கூறுவர்.

ஆ. கையிலாயநாதன் தோத்திரம் இது இளந்தாரி கயிலாயநாதன் மீது பாடப்பட்டது.
ஊஞ்சல்

அ. சிவகாமியம்மன் திருவூஞ்சல் இது இணுவில் சிவகாமியம்மன் மீது பாடப்பட்டது.
ஆ. கயிலாயநாதன் திருவூஞ்சல் இது இளந்தாரி கயிலாயநாதன் மிது பாடப்பட்டது
இ. சுப்பிரமணி திருவூஞ்சல். இவ்வூஞ்சல் இணுவையில் குடிகொண்டுள்ள சுப்பிரமணியக் கடவுளின் மீது பாடப்பட்டது. ஆனால் அக்கோயில் இனங்காணப்படவில்லை.

**கொச்சகம்**

மாறியற் கொச்சகம். இது புலவர் சிறையில் இருக்கும் பொழுது தன்னை சிறைமீட்டருளும்படி சிவகாமியம்மன் மீது பாடப்பட்டது.

புராணம்: இவர் இளந்தாரி புராணம் பாடினர் என்பர்.

நாடகம் : அனுவுருத்திர நாடகம், நொட்டி நாடகம் வசந்தன் நாடகம், கோவலன் நாடகம் ஆகிய நாடங்களைப் பாடினார்.

பள்ளு: பள்ளு என்னும் இலக்கிய வடிவினைப் பாடமுனைந்தார் என்பதை அறிய முடிகின்றது.

**தனிநிலைச் செய்யுட்கள்.**

புலவர் பாடிய சரஸ்வதி துதி, கணபதி துணை முதலான பாடல்களைத் தனிநிலைச் செய்யுட்களாகவே கொள்ளல் வேண்டும்.

இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் கால் நூற்றாண்டுப் பகுதியில் தான் இசைட் சின்னத் தம்பிப் புலவர் இலக்கிய வரலாற்று ஆசிரியர்களால் அதற்கு முன்பாக சின்னத்தம்பிப் புலவர் என்பது நல்லூர் சின்னத்தம்பிப் புலவரை குறித்து நின்றது. இணுவை சின்னத்தம்பிப் புலவரின் ஆளுமைக்கும் பதிவுக்கும் அவரது படைப்பான பஞ்சவர்ணத்தூது சிறந்த எடுத்துக் காட்டாக அமைகின்றது. அவரது படைப்புகள் யாவும் சரிவர இனங்காணப்பட்டு இணுவை சின்னத்தம்பிப் புலவர் பற்றி தக்கதோர் ஆய்வு வெளிப்பட வேண்டியது தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்களின் கடமையாகும்.

**உசாத்துணை நூல்கள்**


1. ஜம்புலிங்கம், சே. வே 1939 (பதிப்பு)
2. கார்த்தியாயினி. ந 1988 இணுவையூர் சின்னத்தம்பிப் புலவர், நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ், யாழ்ப்பாணம்
3. மேலது நூல்
4. மேலது நூல்
5. மேலது நூல்
6. மேலது நூல்
7. மேலது நூல்
8. கார்த்தியாயின் 1988, இணுவையூர் சின்னததம்பிப் புலவர் ப. 53
9. மேலது நூல் ப. 53
10. மேலது நூல் ப. 11
11. மேலது நூல் ப. 53





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துக் கல்விப் பாரம்பரியத்தில் பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள்

க. ஆனந்தகுமார்
தமிழ்த்துறை, கலைப்பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

ஈழத்துக்கல்விப் பாரம்பரியம் புகழ்பூத்தபேராசிரியர்கள் பலரை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. அவர்களுள் ஒருவராக குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர் பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்களாவார். இவர் 1921ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பதினைந்தாம் திகதி நல்லூரில் சிவஸ்ரீ கார்த்திகேயக் குருக்கள் தம்பதியினருக்கு மூத்த புதல்வராகப் பிறந்தார். இவருடைய ஆரம்பக்கல்வி நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலையில் ஆரம்பமானது. யாழ்ப்பாணப் புலவர்களில் ஒருவரான சிவஸ்ரீ நா. சிவசுப்பிரமணிய சிவாச்சாரியாரிடத்தும், தந்தையாரிடத்தும் தமிழ்க்கல்வியையும், ஆரம்ப சமஸ்கிருதக்கல்வியையும் கற்றார்.

பேராசிரியர் பிற்காலத்தில் சமஸ்கிருதமொழியில் சிறந்த ஆளுமை உடையவராக விளங்க அடிப்படையாக அமைந்தது அவருடைய ஆரம்ப வேதாத்யயனமாகும். (வேதமோதும் பயிற்சி) குருகுலவாசம் செய்து வேதத்தைக் கற்றவராக பேராசிரியர் விளங்கினார். ஈழத்தில் சமஸ்க்ருதக் கல்வி அக்காலத்தில் மிகவும் முக்கிய இடம்பெற்றது. பல்கலைக்கழக புகுமுகத்தேர்வுக்கான பரீட்சையில் சமஸ்க்ருதத்தை ஒரு பாடமாகத் தேர்ந்தெடுத்து சித்தி எய்தினார். பல்கலைக்கழகத்தில் பேராசிரியை பெற்றிஹைமன் தலைமையின் கீழ் சமஸ்க்ருதத்தை சிறப்புப்பாடமாகக் கற்றுத் தேறினார். தொடர்ந்து சமஸ்க்ருதத்தில் முதுகலைமாணிப்பட்டத்தையும் பெற்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே விரிவுரையாளராகவும் நியமனம் பெற்றார்.

பேராசிரியரது கலாநிதிப்பட்ட ஆய்வேடு இராமாயணம், பாரதம் ஆகிய இதிகாசங்கள் இரண்டிலும், பதினெண் புராணங்களிலும் காணப்படும் சைவமதம் பற்றியதாக விளங்கியது. இவ்வாய்வு தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் காணப்படும் கோயில்களில் நிகழும் ஆகமரீதியான வழிபாட்டு முறைகளுடன் தொடர்புபடுத்தப்பட்டது. இதனைப் பேராசிரியர் இந்தியாவில் பூனே பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்திருந்தார்.

பேராசிரியரது இவ்வாய்வானது, இதிகாசங்களில் காணப்படும் சைவசமயக் கருத்துக்களையும், ஆலயங்களிலே (இலங்கை, இந்தியா) நிகழ்த்தப்பட்டுவரும் கிரியைகளின் உள்ளார்ந்த உண்மைகளையும் விளக்கும் ஒரு முயற்சியாக விளங்குவதோடு, அந்தணர்கள் மத்தியிலும், ஏனையோர் மத்தியிலும் ஆலயக்கிரியைகள் தொடர்பாக ஏற்படும் சந்தேகங்களுக்கு விளக்கங்களை தருவனவாகவும் அமைந்து உள்ளதெனலாம். இதற்காக 1960இல் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

இவ்வாய்வின் தொடர்ச்சியாக விளைந்ததே " சைவத்திருக்கோயிற்கிரியை நெறி" எனும் நூலாகும். இது 1963இல் முதற்பதிப்பாக வெளிவந்தது. ஈழத்தைப் பொறுத்தவரையில், ஆலயக்கிரியைகளையும், அவற்றின் விளக்கங்களையும் வெளிக் கொணர்ந்த முதல்நூலாக சைவத்திருக்கோயிற்கிரியை நெறியைக் குறிப்பிடலாம்." தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற்கிணங்க சமஸ்க்ருதமொழியினை எல்லோரும் கற்கவேண்டும் எனும் நோக்கில் சமஸ்க்ருத இலகு போதம்I, சமஸ்க்ருத இலகு போதம்II. கிரந்தாட்சரலகுபோதம் எனும் நூல்களையும், இந்துப்பண்பாடு பற்றிய சிலசிந்தனைகளை தொகுத்து " இந்துப்பண்பாடு சிலசிந்தனைகள்" எனும் நூலையும் வெளியிட்டார். இவற்றைவிட, பேராசிரியரது இன்னொருநூல் வடமொழி இலக்கிய வரலாறாகும். இந்நூலில் நால்வகை வேதங்கள், சங்கீதை, பிராமணம், ஆரணியகம், உபநிடதம் போன்றவை பற்றிய விளக்கங்கள் வரலாற்று ரீதியாக ஆராயப்பட்டுள்ளன. இந்நூல் சாகித்திய அக்கடமி விருதையும் பெற்றது. மேலும், தமிழ்மொழி மூலமான சமஸ்க்ருதமொழியின் பொதுமாணி, சிறப்புமாணி பட்டங்களுக்கான கற்கை நெறிகளை ஒழுங்கமைப்பவராகவும் விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியரது சமூகவாழ்வு இருநிலைப்பட்டதாக விளங்கியது. ஒன்று இந்து சமயம் பற்றியதான கல்வியியல் சார்ந்தது. மற்றையது, கிரியைகளை ஆற்றுவது. பேராசிரியர் ஒரு புறத்தில் இந்துசமயம், ஆலயம், கிரியை முதலானவை பற்றிய ஆக்கங்களை எழுதிய வேளை மறுபுறத்தில் அக்கிரியைகளை முறைமையாக ஆற்றும் திறமையையும் பெற்றிருந்தார். ஈழத்து ஈஸ்வரங்களுள் ஒன்றான முன்னேஸ்வரத்தில் 1963'ல் நடைபெற்ற கும்பாபிஷேகத்தை பிரதமகுருவாக இருந்து நடாத்தி வைத்தார். மேலும் 1968இல் பேராதனைப் பல்கலைக்கழக குறிஞ்சிக்குமரன் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னின்று நடாத்தி வைத்ததுடன் ஆலய வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் இருந்தார். இதைவிட, வேறுபல ஆலயங்களில் நடைபெற்ற கும்பாபிஷேகங்களிலும் கலந்து கொண்டார். முன்னேஸ்வரம் வடிவாம்பிகை அம்மனுக்கு சதசண்டீஹோமத்தையும் நெறிப்படுத்தி ஆரம்பித்து வைத்தார்.

பேராசிரியர் சமஸ்க்ருத புலமையுடையவராகவும் விளங்கினார். ஸ்ரீவடிவாம்பிகா பஞ்சரத்தினம், ஆச்சார்யசுவாமிகள் பஞ்சரத்தினம் (காஞ்சிகாமகோடி சுவாமிகள் மீது பாடப்பெற்றது), கன்யாகுமரி பஞ்சரத்தினம், குருஸ்தோத்திரம் போன்ற சமஸ்க்ருத இலக்கியங்களை இயற்றினார்.

முதன்முதலாக யாழ்ப்பாண வளாகத்தில் உருவாக்கப்பட்ட இந்து நாகரிகத்துறையின் முதற்தலைவராக விளங்கி இந்து நாகரிகம் பொதுக்கலைமாணி, சிறப்புக்கலைமாணி, டிப்ளோமா கற்கை நெறிகளை விரிவுபடுத்தி நெறிப்படுத்தினார். இதன் மூலம் ஏராளமான மாணவர்கள் இந்து நாகரிகத்தை ஒரு பாடமாகக் கற்று பயனடைந்து வருகிறார்கள்.

பேராசிரியர் பல்வேறு இந்துசமய நிறுவனங்களில் அங்கத்தவராக இருந்து பல்வேறு பணிகளை ஆற்றினார். இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிறப்பாகக் காணப்படும் இந்து நாகரிகத்துறை, சமஸ்க்ருதத்துறை ஆகிய துறைகள் சிறப்பாக இயங்க காரணமாக இருந்தவர் பேராசிரியரே எனில் அது மிகையாகாது.

ஈழத்து குருகுலக் கல்விமுறை சிதைவடைந்து விடக்கூடாது என்பதைக் கருத்திற் கொண்டு ஸ்ரீவித்யா குருகுலம் என்பதை நல்லூரில் நிறுவி அந்தணச் சிறார்களுக்கு வேதத்தைக் கற்பித்து வந்தார். சமஸ்கிருதமொழி பயிலவிரும்பிய ஏனையோருக்கும் அதைப்பயிற்றுவித்தார்.

இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் தலைவராக விளங்கிய போது வீணை, வயலின், வாய்ப்பாட்டு, மிருதங்கம், பரதநாட்டியம் ஆகிய கலைப்பாடங்களில் டிப்ளோமா கற்கை நெறிகளை அறிமுகம் செய்து அக்கலைகள் ஈழத்தில் வளர துணை புரிந்தார்.

இவற்றைவிட ஏராளமான ஆலய கும்பாபிஷேக மலர்கள், விழாமலர்கள், மற்றவர் வெளியீடுகளுக்கு வழங்கும் அணிந்துரை, முகவுரை, ஆசியுரை, கட்டுரை போன்றவைகளில் அத்தலைப்புக்களின் தகுதியோடு நின்றுவிடாது இந்து சமயம் சார்ந்தபல்வேறு சிந்தனைகளை எழுதினார். அவ்வகையில் அவைகளையும் அவரின் தரமான ஆக்கங்களாகக் கருதலாம்.

பேராசிரியரின் இத்தகுதிகளைக் கண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முதன் முதலாக "வாழ்நாட் பேராசிரியர்" (Emiritus Professor) எனும் கௌரவத்தையும், கௌரவ இலக்கிய கலாநிதிப்பட்டத்தையும் வழங்கியது.

இவ்வாறாக ஈழத்தின் சமயம், கலை, கலாசாரம், பண்பாடு போன்ற துறைகளில் அளப்பரிய பணிகளை ஆற்றிய பேராசிரியர் கடந்தவருடம் ஆகஸ்டுமாதம் ஏழாம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார்.

ஈழத்துக்கல்விப் பாரம்பரியத்தில் பேராசிரியரும் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துக் கொண்டார். தலை சிறந்தகல்வியாளர்களைப் போற்றி ஏற்றிடும் ஈழத்துச் சமூகம் பேராசிரியர் பணிகளையும் நினைவு கூர்ந்து கொள்கிறது.

**தகவல்கள்**
" கைலாசநாதாஞ்சலி"
"நியந்த்ரீ" சிவன் கோவில், நல்லூர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்களும் சமயமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க இலக்கியங்களில் சிவன் பற்றிய குறிப்புகள்

து. விஜயரேணுகா
உதவி விரிவுரையாளர்
தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

ஒருவரது வாழ்வில் சிறப்பானதொரு பங்கினை வகிப்பது சமயம் என்று சொல்லலாம். ஒருவரின் வாழ்விற்கும் சமூக மேம்பாட்டிற்கும் சமயம் ஒரு சாதனமாக விளங்கி வருகின்றது. மனிதன் பிறந்தது முதல் சமயத்தின் ஓர் அங்கமாக வளர்ந்து வருகின்றான். இதன் காரணத்தால் சமயம் ஒவ்வொருவரது உள்ளத்திலும் ஆழந்த பாதிப்பினை ஏற்படுத்துவதோடு அவர்களது பழக்க வழக்க முறைகளையும் கட்டுப்படுத்துகின்றது. ஆனால் சமயத்தை ஒவ்வொருவரும் தாமாகவே உணர்ந்து அங்கீகரித்துக் கொள்ள வேண்டும். அதனை வலுக்கட்டாயமாக ஒருவர் மீது திணிப்பதற்கு முயற்சி செய்யக்கூடாது.

சமயம் என்பது தேவையற்றது என்றும் அது மக்களிடையேவேறுபாட்டினை ஏற்படுத்துகின்றது என்றும் சிலர் கூறுகின்றனர். ஆனால் மக்களின் ஆளுமையைச் சீர்திருத்தவும் பண்பாடு, கலாச்சாரம் முதலானவற்றைப் பேணவும் வாழ்வில் ஒரு பற்றும் குறிக்கோளும் ஏற்படவும் சமதருமம் உருவாகும் சமயம் தேவைப்படுகின்றது.

சமயங்கள் பல இருந்தாலும் ஒவ்வொரு சமயமும் பல்வேறுபட்ட கொள்கைகளை வற்புறுத்திச் செல்கின்றன. அவற்றுள் சைவசமயமானது சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுகின்றது. இவ்வழிபாடானது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே நிலவி வந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

சிவ வழிபாடு, அல்லது சைவசமயமானது தமிழகத்தில் தொன்று தொட்டு பேணப்பட்டு வருகின்றது. பண்டைய காலப்பகுதியில் சைவசமயமானது எந்நிலையில் இருந்துள்ளது என்பதைப் பார்ப்போம்.

தமிழ் நாட்டில் சிவனைப் பற்றியோ அல்லது சைவசமயம் பற்றியோ அறிந்து கொள்வதற்கு எமக்கு உதவுபவையாக தொல்காப்பியம், எட்டுத்தொகை பத்துப்பாட்டில் அடங்கிய நூல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் காரைக்கால் அம்மையாரின் பதிகங்கள் முதலியன உதவுகின்றன. இவ் இலக்கிய நூல்களிலே ஆங்காங்கே சிற்சில இடங்களில் சிவனது பெயர், அல்லது அடை மொழிகள் இருப்பதை அறிய முடிகின்றது.

கி. பி. முதலாம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் எழுந்த இலக்கிய நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டில் சிவன் என்னும் பெயர் கூறப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. ஆனால் அந்நூல்களில் தாழ்சடை பொலிந்த அருந்துவத்தேன், முக்கட் செல்வன், கறைமிடற்று அண்ணல், நீலமணிமிடற்று அண்ணல், முதுமுதல்வன், நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன், மழையை தலையில் வைத்தவன், காய்கடவுள் பைங்கட் பார்ப்பான், புங்கன் ஊர்பவன், மறுமிடற்று. அண்ணல், சலதாரி முக்கண்ணன், ஈர்ஞ்சடை அந்தணன், ஆலமலர் செல்வன், கணிச்சியோன் முதலான பல அடைமொழிகள் இலக்கியங்களில் குறிக்கப்பட்டுள்ளன.

இப்பெயர்கள் அனைத்துமே சிவனின் பண்புகளைக் கொண்டே அமைந்துள்ளன. ஆகவே சிவன் என்ற பெயர் இலக்கியங்களில் கூறாவிட்டாலும் அப்பெயரைக் கொண்ட இறைவனின் தோற்றப் பொலிவு அணிந்திருக்கும் ஆடை, அணிகலன்கள் முதலியன அவ்விலக்கியங்களில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

இலக்கியங்களில் ஆலமலர் கடவுள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது சிவபெருமானையே குறிக்கும் என்று உரையாசிரியர்கள் கூறுவர். ஆனால் அவ்வாறு சொல்வது எந்தளவிற்குப் பொருத்தம் என்று தெரியவில்லை. ஆலம் இலையின் மேல் உறங்கும் கடவுள் என்று எடுத்துக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியுண்டிக் கடவுள் .... (மலைபடு - 83)
நீலமணி மிடற்றொருவர் ... (புறநா - 91)
மணிமிடற்று மான்மலர்க் கொன்றையவன் ... (கலித் 142)
மறுமிடற்றண்ணக்கு ..... (பரிபா 8. 12)
முதலாக நூல்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

சிவன் தலையில் கங்கையைத் தரித்திருக்கின்ற விடயம் கலித் தொகையில் உள்ள சில செய்யுட்களில் காணப்படுகின்றது.

ஈர்ஞ்சடை யந்தனன் ... (கலித் 38)
பிறங்கு நீர் சடைக் கரந்தான்.... (கலித் 150)

மேலும் கலித்தொகையில் கொலைவன் சூடிய காவித் திங்கள் போல் .... (கலித் 103) என ஒரு அடி வருகின்றது. சிவபெருமான் தமது சடையில் பிறைச் சந்திரனைச் சூடியுள்ளார் என்ற தன்மையே இதில் விளக்கப்பட்டுள்ளது.

மூன்று கண்களை உடையவர் என்று சில நூல்களில் குறிக்கப்பட்டுள்ளது. இப்பண்பும் சிவனையே குறிக்கின்றது என அறியலாம். புறநானூறு, கலித்தொகை நூல்களில் உள்ள சில செய்யுட்களில் காண முடிகின்றது.

முக்கட் செல்வர்... (புறநா - 6, 18)
முக்கண்ணான் ..... (கலித் - 2, 4)
பால் புரை பிறைநுதற் பொலிந்த சென்னி .... (புறநா- 91, 5)

அகநானூறு, புறநானூறு போன்ற நூல்களில் சில செய்யுட்களில் கையில் மழுவை ஏந்தியிருக்கும் சிவனின் தன்மையும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

மழுவர் தெடி யோன்... அகநா... 220)
மாற்றருங் கணிச்சி மணி மிடற்றேனும்... (புறநா 56)

சிவபெருமானின் வாகனம் இடபமாகும். அவ்வாகனத்தைக் கொண்டவர் என்பது பற்றிப் பரிபாடலில் கூறப்பட்டுள்ளது.

புங்கவமூர்வோன்.... (பரிபா 8)

சிவபெருமான் ஐந்தொழில்களையும் செய்பவர். அதில் அழித்தல் தொழிலைச் செய்கிறார் எனப் பரிபாடலில், கலித்தொகை போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளது.

காய் கடவுள் .... (பரிபா - 5 , 13)
கொலைவன்..... (கலித் - 103, 15)

சிவபெருமானும் திருமாலும் இருபெருந்தெய்வம் என அறநானூறு நூலில் கூறப்பட்டுள்ளது.

" வெருவரு கருத்திற லிரு பெருந் தெய்வத்து..." என அடியே அடிமூலம் அறிய முடிகின்றது. சிவனையும் திருமாலையும் அக்கால மக்கள் வழிபட்டு வந்தனர் என்பது புலனாகின்றது.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய நூல்களில் சடையிலும் மார்பிலும் கொன்றைமாலை அணிந்தவன், நீண்ட சடையுடையவன் தலையில் பிறைச் சந்திரனை அணிந்தவன், முடிமேல் கங்கையைக் கொண்டவன், மூன்று கண்களை உடையவன், வேதத்தை வாயில் உடையவன் அதனை அந்தணர்க்குச் சொன்னவன் கழுத்தில் விஷக்கறையை உடையவன், கையில் மழுப்படை உடையவன், கையில் கபாலம் ஏந்தியவன் , புலித்தோலை ஆடையாகக் கொண்டவன், உமாதேவியை ஒரு பாகத்தில் உடையவள், இரிஷபத்தை வாகனமாகக் கொண்டவன், ஆலமரத்தின் அடியில் இருந்து தவம் புரிபவன், அழித்தல் கடவுள், முப்புரங்களை எரித்தவர் முதலான பெயர்களையும் பண்புகளையும் கொண்டிருப்பவர் எனக் கூறப்பட்டுள்ளது. இவையனைத்தையும் நோக்கும்போது சிவபெருமானையே அவ்வாறு கூறியுள்ளார்கள் எனத் தெரிய வருகின்றது.

எட்டுத் தொகை, பத்துப் பாட்டு நூல்களில் சிவனின் குறிப்புக்கள் பல காணப்படுகின்றன. புராண இதிகாசங்களிலும் வேதப்பாடல்களிலும் சிவனைப் பற்றிச் சொல்லப்படுகின்ற பிரதானமான கோட்பாடுகளையும் தத்துவங்ளையும் மக்கள் நன்கு அறிந்திருந்தனர் என்பதை இக்குறிப்புக்கள் உணர்த்துகின்றன.

சிவனைப் பற்றிய பிரதிமாலட்சணங்களில் பிரதிபலிக்கின்ற பல கருத்துக்கள் இவற்றில் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெருகல் சித்திரவேலாயுதர் பற்றிய பதினேழாம் நூற்றாண்டு இலக்கியம்

*கலாநிதி துரை மனோகரன்*
*தமிழ்த்துறை*
*பேராதனை பல்கலைக்கழகம்*

இலங்கையிலே கடந்த ஏழு நூற்றாண்டுகளாகத் தொடர்ச்சியான தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்கினைக் காணலாம். ஒவ்வொரு காலகட்டத்திலும் பல்வேறு புதிய முயற்சிகள் இடம்பெற்றுவந்துள்ளன. ஒல்லாந்தர் காலத்தைப் பொறுத்தவரை இலங்கையில் பன்முகப்பட்ட தமிழ் இலக்கிய முயற்சிகள் நடைபெற்றுள்ளன. அத்தகைய இலக்கிய முயற்சிகளில் ஒன்றாக காதல் என்னும் இலக்கியத்தின் தோற்றம் அமைகிறது. இலங்கையில் தோன்றிய ஒரேயொரு காதல் இலக்கியமாக வெருகல் சித்திரவேலாயுதர் காதல் விளங்குகின்றது.

தமிழில் உள்ள இலக்கிய வகைகளுள் ஒன்றாக விளங்கும் உலா என்ற இலக்கியம், உலா வரும் தலைவனை ஏழு பருவ மகளிர் கண்டு மயங்குவதாக அமைந்துள்ளது. உலாப் போகும் பாட்டுடைத் தலைவனைக் கண்டு பெண்ணொருத்தி காதல் வயப்பட்டு வருந்துவதாகப் பவனிக் காதல் என்ற இலக்கியம் அமையும். பவனிக்காதல் என்ற இலக்கியத்தின் அடுத்தகட்டப் பரிமாணமாக விளங்கும் இலக்கியமாகக் காதல் என்பது அமைந்துள்ளது. காதல் என்ற இலக்கியத்தில் உலா, பவனிக்காதல் ஆகிய இலக்கியங்களிற் கூறப்படும் விடயங்களுக்கும் மேலதிகமாக மலர்வனத்தில் தலைவன் தலைவி சந்திப்பு, தலைவன் தலைவியை விட்டுப் பிரிதல், தலைவியின் ஏக்கம், தோழிகள் தலைவியின் அன்னையிடம் நிகழ்ந்தவை கூறல், அன்னை மகிழ்தல், தலைவனின் இருப்பிடத்திற்குத் தலைவியை அனுப்பி வைத்தல் முதலானவை இடம்பெறுகின்றன. ஆனால் வெருகல் சித்திரவேலாயுதர் காதலில் தமிழகத்தில் தோன்றிய காதல் இலக்கியங்களிற் காணப்படும் அம்சங்களுக்கு மேலதிகமாக குறத்தி குறி சொல்லல், கிளி தூது செல்லல், சித்திரவேலாயுதர் தம் மாலையைக் கொடுத்தனுப்பல் முதலான புதிய அம்சங்களும் இடம்பெற்றுள்ளன. இந்நூலில் உலா, தூது, குறவஞ்சி ஆகிய சிற்றிலக்கியங்களுக்குரிய அம்சங்களும் இணைந்துள்ளன.

வெருகல் சித்திரவேலாயுதர் காதல் திருகோணமலைக்குத் தெற்கேயுள்ள வெருகலிற் கோயில் கொண்டிருக்கும் சித்திரவேலாயுதர் மீது பாடப்பட்ட இலக்கியமாகும். இந்நூல் தம்பலகாமத்தைச் சேர்ந்த வீரக்கோன் முதலியால் இயற்றப்பட்டது. இலங்கையில் தோன்றிய பழைய நூல்களுக்குள்ளே திட்டவட்டமாகக் காலநிர்ணயம் செய்யக்கூடிய மிகச்சில நூல்களுள் ஒன்றாக வெருகல் சித்திரவேலாயுதர் காதல் என்ற நூல் விளங்குகிறது. நூலாசிரியரான வீரக்கோன் முதலி நூலில் தம்மைப் பற்றித் தன்னம்பிக்கையுடன் குறிப்பிடும்போது,

" பம்பிநிதங் கண்டவுளநீர் பாயும் வளமிகுந்த
தம்பல காமத்திற் றகையுறு வேளாண் மரபில்
ஐம்பெருமா னருந்தலத்தில் வந்துதித் தோன்
செய்யசித்திர வேலன்பொற் சீரடியை யேத்திடுவோன்
செப்பரிய வாய்மைசெறி வீரக்கோன் முதலி"

என்றும் " கோதில் புகழ்சேர் வீரக்கோன் முதலி" எனவும் கூறுகின்றார். வீரக்கோன் முதலி பற்றிப் பேராசிரியர் சி. பத்மநாதன் குறிப்பிடுகையில் " நூலாசிரியர் முதலிப் பட்டம் பெற்றிருந்தமையால் அவர் தலைமைக்காரர் பரம்பரை ஒன்றைச் சேர்ந்தவரென்று கொள்ளலாம். அவர் தேசத்தில் பரிபாலனத்திலே உயர் பதவியைப் பெற்றிருந்தவராதலால் கூடும்" என்று தெரிவிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெருகல் சித்திரவேலாயுதர் காதலில் கண்டியை ஆண்ட இராசசிங்கன் என்னும் மன்னன் பற்றி நூலாசிரியர் குறிப்பிடுகின்றார். அம்மன் பற்றிப் பின்வருமாறு நூலிற் குறிப்பிடப்படுகின்றது.

"எண்டிசையு மேத்து மிரவி குலத்துதித்தோன்
கண்டி நகராளுங் கவினுலவு ராசசிங்கன்"

" மெத்தபுகழ் வாய்ந்த வெருகற் பதியுறையுஞ்
சித்திரவே லாயுதரின் சீரடியி லன்புகொண்டு

மானமுடன் மிக்க வயனிலமுந் தோப்புகளும்
மானியமா வீந்த புகழ்படைத்த பூபாலன்

மாணிக்கம் வைத்திழைத்த வன்னப் பதக்கமுடன்
பூணணிக ளீநது புகழ்படைத்த பூபாலன்

கண்டிநக ராளுங் கனகமுடி ராசசிங்கன்"

நூலாசிரியராற் குறிப்பிடப்படும் இக்கண்டி மன்னன் இரண்டாம் இராசசிங்கன் எனப் பேராசிரியர் பத்மநாதன் கருதுகின்றார். இதுபற்றி அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

"கண்டி நகரினை இராசதானியாகக் கொண்டு ஆட்சி புரிந்த அரசருள் இரண்டாம் இராசசிங்கனே அதிக பிரசித்தி பெற்றவன். சேனரதனின் மகனாகிய அவனுடைய ஆட்சி 17 ஆம் நூற்றாண்டிலே அறுபது வருடங்கள் நிலைபெற்றது. (1628-1687) இலங்கை வரலாற்றிலே அதிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் அக்காலப்பகுதியில் நடைபெற்றன. போர்த்துக்கேயரின் ஆதிக்கம் அவன் மேற்கொண்ட இராஜதந்திர நடவடிக்கைகளின் பயனாக இலங்கையில் ஒழிந்தது. இராசசிங்கன் அவர்களை நாட்டிலிருந்து அகற்றுவதற்கென்று உலாந்தாக்காரரின் உதவியை நாடிப் பெற்றான். போர்த்துக்கேயருக்கு எதிரான போர்களில் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிராந்தியங்களிலுள்ள வன்னியர்கள் கணிசமான அளவிலே பங்குகொண்டமையுங் குறிப்பிடற்குரியதாகும். இரண்டாம் இராசசிங்கனின் ஆட்சியில் இப்பிராந்தியங்களிலுள்ள வன்னி கண்டி இராசதானிகளோடு மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தனர். நாயக்க மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் அத்தகைய நெருங்கிய உணர்ச்சிபூர்வமான உறவு இருந்தமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. எனவே, ஸ்ரீ சித்திவேலாயுதர் காதலிற் புகழ்ந்துரைக்கப்படும் அரசனைக் கண்டி மன்னனாகிய பிரபலம் மிக்க இரண்டாம் இராசசிங்கன் என்று அடையாளம் காண்பதே பொருத்தமாகும். என்று குறிப்பிடுகின்றார்." இவ்வகையில் இந்நூல் கி. பி. 17ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது எனக் கொள்ளமுடிகின்றது.

வெருகல் சித்திரவேலாயுதர் கோயிலை நிறுவியவராக நல்லநாதச் செட்டியார் என்பவர் நூலிற் குறிப்பிடப்படுகின்றார்.

" சித்திவே லாயுதவேள் சேர்ந்துமகிழ் வாயுறையுஞ்
சித்திரஞ்சே ராலயமும் செம்பொற் சினகரமும்

திட்டமுடன் முன்னாளிற் செய்தநல்ல நாதனெனுஞ்
செட்டிவம் மிசத்திலுள்ள செய்யபிர தானிகள் "

என்று நூலாசிரியர் குறிப்பிட்டுச் சொல்வதைக் காணலாம்.

நானூற்று இருபது கண்ணிகளைக் கொண்ட இந்நூலில் நூலாசிரியர் அவையடக்கம் கூறும்பொழுது, குளிர்ந்த மதிக்குப் பதிலாக மின்மினிகள் வெளிவந்து உலாவுதல் போல, அழகுமிக்க சேவல் தனது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறகையடித்துக் கூவுதலைப் பார்த்து மாடப்புறா கூவுதல் போல், அன்னநடை இப்படித் தான் இருக்கும் என்று காட்டக் காகம் நடந்து காட்டுதல் போல் முத்தமிழை நன்குணர்ந்த மூதறிஞர் தங்கள் முன்பு சிற்றறிவால் இக்காதல் இலக்கியத்தைத் தாம் செப்பத் துணிந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

சித்திரவேலாயுதர் காதல் பல அம்சங்களைத் தன்னகத்தே கொண்டதாக விளங்குகின்றது. சித்திரவேலாயுதர் உலாப் போதல், அவ்வுலாவின் போது மாதர் அவரைக் கண்டு மயங்குதல், முத்து மோகனப் பெண் அவர்மீது காதல் கொள்ளுதல், மலர் வனத்திலே சித்திரவேலாயுதரும் முத்து மோகனப்பெண்ணும் சந்தித்தல், கூடி மகிழ்தல், சித்திரவேலாயுதர் அவளை விட்டுப் பிரிதல், அவள் துன்பமுறல், தோழியர் அவளது அன்னைக்கு உரைத்தல், அன்னை அவளை ஏசித் துரத்தல், அவள் மலர்வனத்தில் இருந்து வேதனைப்படல், குறத்தி குறி சொல்லல், கிளியைத் தூதனுப்பல், கிளி சித்திரவேலாயுதரிடம் தூது சொல்லி அவரிடமிருந்து மாலை பெற்று மகிழ்தல் ஆகியவை இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

நூலாசிரியரான வீரக்கோன் முதலி தமது முருகபக்தியையும் நூலிற் பல இடங்களில் இழையோட விட்டுள்ளார். சித்திரவேலாயுதர் திருவுலாச் சென்றபோது, திருகோணேஸ்வரத்துக்குச் சென்று, தந்தையாகிய கோணேசப் பெருமானையும், அன்னையாகிய மாதுமையம்மையையும் வணங்கியதாக நூலிற் கூறப்படுகின்றது. அப்போது கோணேசப் பெருமான் சித்திரவேலாயுதரின் கரங்களைப் பற்றிப் புகழ்ந்துரைப்பதாக ஒரு சந்தர்ப்பத்தை நூலில் ஏற்படுத்தி முருகனின் பெருமைகளைக் கூறுகின்றார். அதுபோன்று மாதுமையம்மையை முருகன் வணங்கியபோது அவள் சித்திரவேலாயுதரை மடிமீது இருத்தி, அவரின் திருப்பாதங்களைத் தமது கைகளினால் தூக்கிப் புகழ்ந்துரைப்பதாகவும் ஒரு வாய்ப்பினைக் கவிஞர் உருவாக்கி, முருகனின் சிறப்புகளை எடுத்துரைக்கின்றார்.

சித்திரவேலாயுதரின் உலா அழகாக இந்நூலில் வர்ணிக்கப்பட்டுள்ளது. அவரின் திருவுலாச் சிறப்பைக் காணவந்த பெண்களின் நிலையும் சுவாரசியமாகக் கூறப்பட்டுள்ளது. சித்திரவேலாயுதர் மீது காதல் கொண்ட முத்துமோகனப் பெண் மன்மதனையும், மதியையும், குயிலையும், தென்றலையும் பழிப்பதைச் சுவைபட நூலாசிரியர் விபரித்துள்ளார். சித்திரவேலாயுதனுடனான சந்திப்பினால் தன்னினைவிழந்த முத்துமோகனப் பெண்ணின் மயக்கம் தீர்ப்பதற்கு பல வழிமுறைகளைத் தேடும் அவளது தோழியர் மூலமாகத் தமது காலத்தில் திருகோணமலைப் பிரதேசத்தில் இருந்த வழிபாட்டு முறைகளையும் நூலாசிரியர் தெரிவிக்கின்றார்.

" ஐங்கரற்குத் தேங்கா யறுநூறு தானுடைத்து
இங்கிதப்பொற் பொங்க லிடுவமென நேர்ந்திடுவார்

வன்னமிகு கோணமலை வாசகருக்கும் வாமமுறும்
அன்னநடை யாட்கு மபிஷேகம் செய்வமன்றார்

நீருலவு வாவிதிகழ் நீலாப்பளை உறையும்
பாருலவு பத்தினிக்கும் பண்பாக நேருமென்பார்

செய்யசம்பூர் மேவுகின்ற தேவிபத்திர காளிதனக்
கையமற நேர்ந்திழையை யாயிழைகைக் கட்டுமென்பார்

தென்வெருகல் மீதுறையுஞ் சித்திர வேலாயுதர்
பொன்படியி லைஞ்நூறு பொன்வைப் போ மென்றுரைப்பார்

மூர்க்கமாதாவினுக்கு மூவுலகி லுள்ளவர்கள்
ஆர்க்கு மரிதான அரும்பூசை செய்வமென்பார்

காட்டிலுறு மாடனோடு காடன்கறுப்பன் முன்னோர்க்கு
காட்டுக் கிடாயறுநூ றன்பாக வெட்டுமென்பார்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு விநாயகர், கோணேஸ்வரர், கண்ணகையம்மன், பத்தரகாளி, சித்திரவேலாயுதர், துட்டத்தன்மையுள்ள பெண் தெய்வம், மாடன், காடன், கறுப்பன் முதலான தெய்வங்களை வழிபடும் வழக்கம் தமது காலத்தில் இருந்தமையை நூலாசிரியர் காட்டுகின்றார்.

முத்துமோகனப் பெண் தனது காதலைச் சித்திரவேலாயுதரிடத்தில் தெரிவிப்பதற்குக் கிளியைத் தூதாக அனுப்பும் உத்தியைக் கையாண்டு நூலாசிரியர் தாம் தெரிவிக்க விரும்பும் பல செய்திகளையும் தெரிவிக்கின்றார். இன்ன இன்ன வேளைகளைத் தவிர்த்து கிளி தன் காதலைச் சித்திரவேலாயுதரிடத்தில் தெரிவிக்க வேண்டும் என்று முத்துமோகனப் பெண் கூறும் பாங்கு சுவைக்கத்தக்கது.

" வேலரிடற் நூதாய் விரைந்தேறி யென்றுயரை
காலமுடன் சொல்லுஞ் சமயமதைக் கூறுவன்கேள்
என்போலும் பெண்க ளிசைந்தனுப்பும் தூதுவர்கள்
அன்புடனே பேசு மமையமதிற் சொல்லாதை
இந்திரனுஞ் சந்திரனு மெண்ணரிய விண்ணவரும்
வந்துதொழும் போதெனது மையறனைச் சொல்லாததை
வீரவா கோடுமற்றும் வீரர்தொழு தேத்துகின்ற
நேரமதி லென்மயலை நீயெடுத்துச் சொல்லாதை"

" கண்டிநக ராளுங் கனகமுடி ராசசிங்கன்
தெண்டனிடும் போதெனது சேதியைச் சொல்லாதை

............ நல்ல நாதனெனுஞ்
செட்டிவம் மிசத்திலுள்ள செய்யபிர தானிகள் போய்

பன்னரிய பாதம் பணிந்துதொழு தேத்துகையில்
என்னுடைய சங்கத்தியை எள்ளளவுஞ் சொல்லாதை

துன்னுமிகு மரபுஞ் துய்யவிளஞ் சிங்கமெனும்
வன்னிமைபொற் பாதம் வணங்கையின் சொல்லாதை

காற்று நிலைமை தலைமையுடன் மற்றுனார்
போற்றுகையி யென்மயலைப் பூங்கிளியே சொல்லாதை

வித்வசனர் பாமாலை மெல்லடியிற் சூட்டுகையிற்
சத்தியமாக யென்மயலைச் சற்றுநீ சொல்லாதை

எண்டிசையிற் பாலகரு மிப்புவியி லுள்ளவருந்
தெண்டனிடும் வேளையிலென் சேதிதனைச் சொல்லாதை

வன்னிமை தேசத்தார் மகாநாடு நான்கூடி
மின்னுமெழின் மண்டபத்தில் வீற்றிருக்கும் வேளையிலே

கோதில் புகழ்சேர் வீரக்கோன்முதலி தானியற்றுங்
காதலரங் கேற்றுகையிற் காதறனைச் சொல்லாதை"

கவிஞரின் மொழிநடை, எளிமை வாய்ந்ததும், அழகு செறிந்ததுமாக விளங்குகின்றது. அவரது கவித்துவ ஆற்றலும், கற்பனைத் திறனும் விதந்து குறிப்பிடத்தக்கவை. ஈழத்தின் சிறந்த பழந்தமிழ் இலக்கியங்களுள் ஒன்றாக வெருகல் சித்திரவேலாயுதர் காதல் விளங்குகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதை காட்டும் ஆன்ம நெறி

நா. மணிமேகலா
நான்காம் வருடம்
விவசாயபீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

மனித வாழ்க்கையைப் பற்றி எத்தனையோ நூல்கள். எத்தனையோ கோணங்களில் ஆராய்ந்திருக்கின்றன. மனித வாழ்க்கையைப் போர்க்களமாகக் கண்டதும் ஒரு போர்க்களத்திலேயே உருவானதுமான ஒரே நூல் கீதைதான். சாவை நினைத்து ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்த மனித குலத்தைப் பார்த்து உடம்பு அழியும் ஏனென்றால் அது அழியும் பொருட்களால் ஆனது. நீ உடலல்ல ஆன்மா. ஆன்மாவாகிய நீ ஒரு போதும் பிறப்பதில்லை. இறப்பதுமில்லை. ஆன்மாவை ஆயுதங்களால் வெட்டவோ, தீயால் எரிக்கவோ, நீரால் நனைக்கவோ, காற்றால் உலர்த்தவோ முடியாது என்று கூறி மனிதனை உலக ஆற்றல் அனைத்தையும் அடக்குபவை ஆள்பவனாகச் செய்வது கீதைதான். பகவத் கீதை ஒரு வகையில் வேதங்களை விடப் புனிதமானது. ஏனென்றால் வேதங்கள் பிரம்மனின் தொப்புளிலிருந்து தோன்றின. கீதையோ கிருஷ்ணரின் உதடுகளிலிருந்து தோன்றியது. தமிழன்னை சூட்டிக் கொள்வதற்கான பெருமையும், பயனும் நிறைந்த அணிகலன்களில் இதுவும் ஒன்று.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத மகத்தான உண்மைகளை அர்ச்சுனனை ஒரு கருவியாக வைத்துக் கொண்டு கிருஷ்ணர் உலகம் முழுவதற்கும் கூறுகிறார். இது 18 அத்தியாயங்களையும் 700 சுலோகங்களையும் தன்னகத்தே கொண்டது. ஒவ்வொரு அத்தியாயமும் யோகம் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. யோகம் என்பதற்குச் சேர்ப்பது என்பது பொருள் அதாவது கடவுளிடம் சேர்க்கும் வழி என்று பொருள்படும். விதி விசித்திரமானது. அந்த விதியை விவேகத்தால் சமாளிக்கக் கற்றுத் தருவது கீதை. இந்தக் கீதை குருசேத்திரப் போரில் துவங்குவதாகவே எல்லோருக்குந் தெரிகிறது. ஆனால் அது உண்மையில் துவங்குவது வாழ்க்கையின் சோகத்திலாகும். அதன் முதல் அத்தியாயம் குருசேத்திரப் போர் என்பதல்ல. அர்ச்சுனனின் சோகம் என்பதாகும். பொதுவாக ஒரு மனிதன் துயரத்திற்கு ஆளாகும் போது அவனது வலிமை, செல்வம், செல்வாக்கு முதலிய எல்லாமே வெறும் பொய். கடவுளின் புனிதமான திருவடிகளில் தன்னை முழுமையாக ஒப்படைத்து விடுவது மட்டுமே தன்னை உலகத் துன்பங்களிலிருந்து காப்பாற்ற வல்லது என்பதை அறிகிறான். அதன் பிறகே அவனுக்கு உண்மையான ஞானம் பிறக்கிறது. ஆன்மீக வாழ்வை நோக்கித் திரும்புகிறான். ஆகவே அர்ச்சுனன் மட்டுமல்லாது மனித இனமே அன்றாடம் ஏதோ காரணத்தால் மிகுந்த துயரமடைந்து வருகிறது. இந்தத் துயரம் நீங்குவதற்கான வழியைப் பகவான், அர்ச்சுனன் மூலம் கீதையாகத் தந்திருக்கிறான்.

சமயத் துறையில் எந்தப் பக்கம் திரும்பினாலும் நாம் அடிக்கடி கேட்கும் சொல் ஆத்மா என்பதாகும். நாம் அழியாத ஆத்மா அழிகின்ற ஆத்மாவென்பதை உணர்ந்து கொண்டால் துக்கம் என்பது சிறிதும் ஏற்படாது என்று கூறுகிறார். ஆத்மா என்பது என்ன? மனிதன் உடம்பல்ல. ஆத்மா என்று சொல்லப்படுகின்றதே! ஆனால் நமக்குத் தெரிவது உடம்பு தானே ! நாம் ஆத்மா என்றால் நம் உடம்பில் ஆத்மா எங்கே இருக்கிறது? எந்த வடிவத்தில் இருக்கிறது? இந்த ஆன்மா புலன்களுக்கு எட்டாதது மனதுக்கும் எட்டாதது மாறுபாடு இல்லாதது என்று சொல்லப்படுகின்றதே! இது இல்லாத ஊருக்குப் போகத் தெரியாத ஒருவன் போக மாட்டாத வழியைச் சொல்வது போலல்லவா ? இத்தகைய கேள்விகள் ஆன்மாவைப் பற்றிச் சொல்லபபடும் போது ஆன்மீகத்தில் ஆர்வமும் கூரிய விவேகமும் செயல்திறனும் படைத்துள்ள அனைவர் மனத்திலும் இயல்பாக எழுகின்றன. ஏனெனில் இந்தக் கேள்விகளுக்கு அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்தும் வகையில் பதில்களை யாரும் தரவில்லை.

கீதையில் கிருஷ்ணரின் ஆத்மா பற்றிய உபதேசங்கள் மட்டுமே நமக்குக் கிடைத்துள்ளன. ஆன்மீகத்தை நடைமுறையில் பின்பற்றும் போது ஏற்பட்ட விளைவுகள் விளைந்த தடைகள் அவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணர் விலக்கி வழிகாட்டி முறைகள் ஆகியன வரலாற்று பூர்வமாகவோ அல்லது கதை நிலையிலும் கூட நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் சுவாமி விவேகானந்தர் பகவான் ரமண மகரிஷி போன்றோரின் வழிகாட்டலில் கிருஷ்ணர் ஆன்மா பற்றிக் கூறியுள்ள கருத்துக்களைத் தெள்ளத் தெளிவாக அறிய முடிகிறது.

ஆன்மாவை அறிவதற்கு முதற் படியாக நான் யார்? என்ற கேள்விக்குப் பதில் தருவது அவசியமாகிறது. இந்த நான் என்பதற்குப்பொருள் என்ன? நான் என்பது எதைக் குறிக்கிறது. இலட்சத்தில் ஒருவராவது இதற்குச் சரியான பதிலைத் தரமாட்டார்கள். பெரும்பாலானவர்கள் நான் என்றதும் உடம்பையே கருதுகிறார்கள். ஆனால் இந்த உடம்பு என்னுடைய சொத்து உடம்பு நானல்ல.... அப்போது நான் யார்? இதற்கு நான் மனம் என்று கூறி விடலாம். ஆனால் இங்கும் குழப்பம் என்னுடைய மனம் குழம்பி விட்டது என்கிறோம். அதாவது என்னுடைய மனம்... ஆகவே மனமும் என்னுடைய சொத்து. மனம் நானல்ல. மனிதனுக்கு மிகவும் அருகில் இருப்பவன் அவன்தான். ஆனால் அவனுக்குத் தன்னைப்பற்றி உறுதியாகத் தான் யார் என்பது தெரிவதில்லை. எவ்வளவு பரிதாபம்! உண்மையில் நாம் யார் என்ற கேள்விக்கு பகவான் நாம் ஆத்மா என்கிறார்.

உடம்பு என்று எதுவுமே இல்லை. இருப்பது மனம் ஒன்றே அந்த மனத்தின் 3 வகையான வடிவங்களே 3 வகையான உடம்புகள் அதாவது தூலம், சூக்குமம், கரணம் என்பனவாகும்.

கண்ணுக்குத் தெரிகின்ற எலும்பு, தசை, தோல் முதலியனவைகளால் ஆன உடம்பு தூல உடம்பு. நினைக்கின்ற நினைப்பும், அந்த நினைப்பை இதுதான் என்று தெளிவும் உறுதிப்படுத்துகின்ற புத்தி சூட்சும உடம்பு. ஆழ்ந்த உறக்கத்தில் மனம் ஒடுங்கி ஒன்றுமறியாத இருள் நிலையில் ஓய்ந்து கிடக்கும் நிலையே கரண உடம்பாகும். இந்த மூன்று நிலைகளையும் நானல்ல என்று ஆழ்ந்த அறிவால் சிந்தனையால் உறுதியாக உணர்ந்து அவற்றைத் திடமாக ஒதுக்கி வைத்த பிறகு எது மிஞ்சுகிறதோ; அந்த இருப்பே ஆன்மாவாகும். இதை அடைவது அவ்வளவு எளிதான காரியமல்ல. இந்த ஆன்ம நிலையை அடைந்தவன் துக்கங்களால் பாதிக்கப்படுவதில்லை. (ஏனெனில் சுகதுக்கங்கள் மனிதனை என்ன) வடிவில் தாக்குகின்றன. ஆத்ம உணர்வு நிலையை அடையும் போது எண்ணங்களாலான சூட்சும உடல் விலக்கப்பட்டு விடுகிறது.

மனம் என்பதே நினைவு. இந்த நினைவுகளின் அடிப்படையன நினைவு நாளம் உடம்பு என்ற நினைப்பாகும். இந்த நினைப்பு நீங்கும்போதுதான் விருப்பு வெறுப்பு ஆகியன நீங்கும். நம் வாழ்க்கையின் துன்பங்களுக்கெல்லாம் அடிப்படையான காரணம் நாம் உடம்பு என்ற நினைவேயாகும். இதனால் இன்பத்தை விரும்பிக் கோடிக் கணக்கான நினைப்புகள் மனதில் எழுந்து அலையும். ஒரு விருப்பம் தீர்ந்ததும் மற்றொரு விருப்பம் ஆசையாக எழும். இப்படி எழுந்து எழுந்து பேயாட்டம் ஆடி மனிதனைப் பேயாக அலைக்கழித்து நாசப்படுத்தி துயரத்தில் துடிக்க வைக்கும். ஆகவே மனம், இல்லாமல் போக, அது தோன்றும் இடமாகிய ஆன்மாவை மனம் சென்றடைய வேண்டும். இதற்கு உறுதியான மனம் வேண்டும். மனத்தை உறுதியிலிருந்து தள்ளிச் சிதைப்பது ஆசை. ஆசை மனத்தை நொய்மையடையச் செய்கிறது. ஆசை என்பது நம் உடலிலுள்ள ஐந்து புலன்களின் வழியாக மனம் வெளியே சென்று உலகம் என்ற பெயரில் உள்ள பொருட்களோடு சேர்ந்து அவைகளையெல்லாம் பற்றிக் கொண்டு, அவைகளோடு விடாது தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்று கொள்ளும் எழுச்சியாகும்.

இந்த எழுச்சியே துன்பங்கள் யாவற்றிகும் காரணமாகும். ஆகவே துன்பங்களிலிருந்து விடுபட வேண்டுமாயின் ஆசைகளிடமிருந்து விடை பெற வேண்டும். ஆகவே நாம் ஒவ்வொருவரும் மனதை ஆத்மாவில் நிறுத்தி ஆனந்தம் அடைய வேண்டும். இதுவே கடவுள் நிலை! இதுவே சாந்தி நிலை! இதுவே பேரின்பப் பெருநிலை! இத்தகைய பெருநிலையை அடைவதே மனித வாழ்வின் இலட்சியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் காட்டிய நெறி

செல்வி ச. கவிதாஞ்சலி
இறுதி வருடம் தமிழ் சிறப்பு
கலைப்பீடம்

மூவடியால் உலகளந்தான் கண்ணன். உலக மக்களின் உள்ளங்களையெல்லாம் இரண்டு அடிகளால் அளந்தார் வள்ளுவர். அவர் உலக மக்களுக்காக உவந்தளித்த நூல் திருக்குறள். " அணுவைத் துளைத்து அதனுள் ஏழ் கடலைப் புகுத்தி குறுகத் தறித்த குறள் என்று புகழ்பட்டது திருக்குறள். இன்னும், தமிழிலிருந்து ஆகக் கூடிய உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட முதல் நூல் என்ற பெருமையும் உண்டு. சாதி, மத, இன, மொழி பேதங்களைக் கடந்து எக்காலத்துக்கும், எத்தரத்தினருக்கும் இசைவான உறுதியான நிலையான கருத்துக்களைக் கொண்டு நிலைபெற்று விளங்குவது திருக்குறள். இனிய சொற்களால் எளிய நடையில் ஆக்கப்பட்டு சிறு பிள்ளைகளும் கூட கற்கத்தக்கதாகவும் அரிய பொருளை உள்ளடக்கி இருப்பதால் அறிவை நாடும் எத்தரத்தினருக்கும், முதியோரும் கற்கும் தேவை உடையதாய் விளங்குவது திருக்குறள். "சான்றாக எல்லாப் பொருளும் இதன் பாலுள இதன் பால் இல்லாத எப்பொருளும் இல" என்றும் வள்ளுவர் " சுரந்த பாவையத் துணை" என்றும் விதந்துரைக்கப்பட்டுள்ளமையால் அறியலாம்.

இங்கு நாற்பயனாக அமைய வேண்டிய புருடார்த்தங்கள் நான்கிலும் அறம், பொருள், இன்பம், வீடு பேற்றைக் கூறலாம். முப்பால் நான் ஆகவே விட்டு விடாமை, உய்த்து உணரத்தக்கது. ஏனைய சமய நெறிகளும், இவ்வாறே மக்கள் வாழும் வழிகளை கூறியுள்ளனவேயன்றி வீடு பேற்றை விபரிக்கவில்லை. ஏனெனில் நெறிப்படி நடந்து இம்மூன்றையும் அடைபவர்கள் வீடுபேற்றையும் இயல்பாகவே அடைவார்கள் என்பது உறுதிப்பாட்டினாலாகும்.

துர் அதிஸ்டவசமாக தற்கால மக்களில் பெரும்பாலானோர் நெறிகளையும் வீடுபேற்றையும் மறந்து விட்டு விலக்கப்பட்ட நெறிகளையே பெரிதும் விரும்புகின்றனர் என்பது கண்கூடு. இந்த நிலையை இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே உணர்ந்தவர் வள்ளுவப் பெருந்தகை. இதற்காகவே அவர் நூற்று முப்பத்து மூன்று துறைகளில் நின்று ஆயிரத்து முன்னூற்று முப்பது அருங்குறட் பாக்களை மக்களுக்குத் தந்துள்ளார். அவற்றுள் எது எது வாழ்க்கைக்கு ஏற்றவை எவை எவை தகாதவை என்று அறுதியிட்டுக் கூறியுள்ளார். அவற்றுள்ளும் இக்கால மாந்தர்க்கு அவசியமான சில உதாரணங்களை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

கற்றதனால் ஆயபயன் கடவுளை வணங்குதல் என்று கூறி உள்ளத்தில் கடவுள் உண்டு என்பதும் கடவுளை வணங்க வேண்டும் என்பதும் அறிவுறுத்தப்படுகின்றது.

அறஞ்செய்க ஏனெனில் அது உயிர் பிரியும் காலத்தில் மறுமைக்கு உற்ற துணையாகும் என்று கூறவந்தவர். மரணகாலத்துக்கு அண்மையில் அறஞ்செய்தால் போதும் என்று எண்ணாமல் அன்றன்றே அறஞ் செய்க என்று வலியுறுத்தியுள்ளார்.

பழி பாவங்களுக்கு பயந்து நல்வழியில் பணம் தேடி செலவிடும் போது மற்றவர்கட்கும் பகிர்ந்து உண்பதாயின் அது நிறைவான ஓர் இல் வாழ்க்கை என்று, இல்-வாழ்க்கையின் சிறப்பு அம்சம் விளக்கப்பட்டுள்ளது. வாழ்க்கைத் துணை நலம் பற்றி விளக்க வந்த வள்ளுவர் இல்லாள் நற்பண்புகள் உடையவர்களானால் அவர்கள் வாழ்க்கைக்கு இல்லாதது என்ன? என்று வள்ளுவர் கேட்கிறார். அவர்களுக்கு எல்லாம் இருக்கும். ஆனால் இல்லவள் நற்பண்புகள் அற்றவளானால் அவர்களிடம் என்ன இருக்கப் போகின்றது. எதுவும் இருக்காது என்கிறார். இதனால் பெண்கள் நற்பண்பு உடையவர்களாய் இருக்க வேண்டியதன் அவசியம் அறிவுறுத்தப்படுகின்றது.

இல்வாழ்வான் விருந்தினரை உபசரிக்க வேண்டிய கடப்பாடு உடையவன் விருந்தினரை மலர்ந்த மனம், வேறுபட்டு அதனால் மலர்ச்சியற்ற முகத்துடன் விருந்தினரைப் பார்த்தால் விருந்தினர் மனம் வெதும்பி ஏன் வந்தோம் என்ற நிலைக்கு வந்துவிடுவர். இதற்கு அனிச்சம்பூ முகந்தவுடன் வாடி விடுவதை உதாரணம் காட்டி உள்ளார் வள்ளுவர். பேசும் போது இனிய நன்மை பயக்கத்தக்க வார்த்தைகளையே பேச வேண்டும். அப்படியிருக்க துன்பம் விளைவிக்கும் கடின வார்த்தைகளைப் பேசுவதனால் பயன் என்ன? இது கனிந்த நல்ல கனி இருக்க காயைப் பறித்து உண்பது போல என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டிக் காட்டுகின்றார். எந்த பாவத்தையும் செய்தவர்கட்கு விமோசனம் உண்டு. ஆனால் செய்நன்றி மறந்தவர்கட்கு (உய்வேயில்லை) விமோசனமே கிடையாது என்று அடித்துக் கூறியுள்ளார்.
செல்வம் சேர்க்கும் அவா உடையவர்கட்கு ஓர் அச்சுறுத்தல் விடுகின்றார் வள்ளுவப் பெருந்தகை. பெரிய செல்வம் வந்து சேர்வதும் அது பிழை நீங்கிச் செல்வதும் நாடகக் கொட்டகையில் ரசிகர்கள் வநது சேர்வது போல் செல்வம் சேரும். நாடக முடிவில் ரசிகர்கள் அனைவரும் கலைந்து சென்று விடுவது போல் எல்லாம் போய் விடும் என்று கூறுகின்றார். இது எவ்வளவு நல்ல உவமை. மேலும் நிலையில்லாதது அழியும் தன்மையுள்ள பொருள் மீது ஆசை வைத்தல் அறிவு அற்ற இழிந்த நிலையாகும் என்கிறார்.

ஒழுக்கம் உயிரினும் மேலான சிறப்பைத் தரும். ஆதலினால் ஒழுக்கத்தை உயிரை விட மேலாக மதித்து நட என்கிறார்.

பொருள் வரும் வழி சிறியதாக இருந்தாலும் செலவு செய்யும் வழிகள் விரிவடையாதிருந்தால் அதனால் தீங்கில்லை என்கிறார். பொய் மொழி அதாவது வருவாய் குறையும் போது செலவையும் குறைத்துக் கொள். பகட்டுக்காக போலிக் கௌரவத்திற்காக செலவு செய்யும் இக்கால மக்களுக்கு வள்ளுவர் தரும் அறிவுரை இது.

" மன்னரை சேர்ந் தொழுகல்" என்றும் துறையில் "எல்லோரும் இன்னாட்டு மன்னர்" என்று இறுமாந்து கொடுக்கும் எல்லோருக்கும் ஒரு நல்வழி காட்டுகின்றார். அவர்கள் மன்னரும், மந்திரியுமாகவோ, குருவும் சீடனுமாகவோ, அதிபதியும் பணியாளுமாகவோ இருந்தாலும் எல்லோருக்கும் இது பொருந்தும். மிக நெருங்காமலும் மிக நீங்காமலும் குளிர் காய்பவன் போல் இருக்க வேண்டும் என்று கூறுகின்றார். இது எவ்வளவு பொருத்தமான உவமை. நெருங்கினால் நெருப்புச் சுடும். நீங்கினால் குளிர் வருத்தும் அல்லவா?

பெற்றோர் பிள்ளைகளை பேண, அதிகாரி பணியாளையோ, ஆசிரியர் மாணவரையோ எவ்வாறு திருத்த வேண்டும். இந்தக் காலத்தில் பிள்ளைகளோ, பணியாட்களோ, மாணவர்களோ பெரும்பாலும் தவறாகவே செயல்படுகின்றார்கள். அதற்காக அவர்களை தொலைத்து விடலாமா? எப்படித் திருத்த வேண்டும் என்று வள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார். தவறு செய்பவர்களைக் கூப்பிடு, காரணங்கேள், கண்டித்துப் பேசு, தொலைத்துப் போடுவேன், ஜாக்கிரதை என்று அதட்டு கையை ஓங்கு, பலமாக ஓங்கு ஆனால் அடி விழுவது மட்டும் மெதுவாக இருக்கட்டும் என்கிறார் ஏன்? நெடுங்காலம் நீங்காமல் இருக்க வேண்டுமல்லவா?

பல வகையான சூதாட்டங்களில் ஈடுபடுபவர்களுக்காக வள்ளுவர் கூறும் ஒரு வார்த்தை " ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கு" நன்மை பெற்று வாழும் ஒரு வழியுண்டா " என்று கேட்கிறார். வழியே இல்லை என்கிறார். நூறை இழந்து ஒன்றைப் பெறுகிறானாம் அவனுக்கு வாழும் வழி இல்லாமையாம். மானம், குலம், கல்வி, முதல் காணி, பூமி, வீடு, சாவல், மாடு, கன்று, மனைவி, மக்கள் ஆகிய எல்லாவற்றையும் இழக்கிறான்.

பசு ஒன்று நீர் இன்றித் தவிக்கிறது. அதற்கு நீர் கொடுத்தல் தருமம், அதற்காகக் கூட அடுத்த வீட்டிற்குப் போய் நீரை இரந்து கேட்டல் கூடாது. அது நாவிற்கு இழிவு என்கிறார். இரப்பது கொடுமை இரப்பதற்கு அஞ்ச வேண்டும் என்கிறார்.

கடைசியாக தேவர் குறளும், திருநான்மறை முடிவும் மூவர் தமிழும், முனி மொழியும் கோவை திருவாசகமும் திருமூலர் சொல்லும் ஒரு வாசகம் என்று உணர் என்று ஒரு பாடல் உண்டு. இதில் முன்னுரிமை பெறத்தகுதி பெற்றது. தேவர் குறள் என்றால் அதன் பெருமை நாம் எடுத்துக் கூறும் தரமல்ல.

இத்தகைய சிறப்புப் பொருந்திய அற நூலாகிய திருக்குறளைத் தமிழராகிய நாம் ஒவ்வொருவரும் கற்று உணர்ந்து கடைப்பிடித்தல் நமது கடமையாகும்.

" தேவர் குறளும் திருநான் மறை முடிவும்
மூவர் தமிழும் முனியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசக மென் றுணர்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசகர் புகன்ற மதுரவாசகம்

*கணேசதுரைக் குருக்கள் விக்னராஜா*
*பொறியியற் பீடம்*
*இறுதியாண்டு*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*

மாணிக்கவாசகர் புகன்ற திருவாசகம் நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமல் மேலாய் பரகதிக்கு ஆளாக்கவல்ல நெறியைக் காட்டுவன. நாம் பாசம் தீர இறைவனை இடையறாது பணிந்தால் அவன் சேவடிகள் நம் சென்னி மன்னித் திகழும் என்ற கருத்தை உள்ளீடாக உடையது திருவாசகம் ஆகும். இத் திருவாசகம் உபநிடத சாரமாக அமைந்துள்ளது. இங்கு பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் பற்றியும், கன்மம், மறுபிறப்புப் பற்றியும் முந்திக் கொள்கை பற்றியும் மணிவாசகர் விளக்குகிறார்.

மணிவாசகர் புகன்ற திருவாசகம் அழகிய வாசகம், மதுரவாசகம் என்றும் அழைக்கப்படும். தித்திக்கும் தேன்கலந்த வீடுபேற்றை விரும்புவோரது உளத்தைக் கவரும் அருட்பாக்களால் ஆகிய நூல் என்பது பொருள்படும். இத் திருவாசகம் படிப்பார் மனத்தை பரவசப்படுத்தும். ஒருமுறை ஓதினாலும் உயிர் சிவத்தன்மை எய்தும். எளிய சொற்களால் உயர்ந்த பொருட்களால் நிறைந்த இசையால் எல்லோரையும் தன் வயப்படுத்தும் தனிப்பெருந்தகவுடையது. வேதத்திலும் உயர்ந்தது. வேதத்தை மட்கலம் என்றால் திருவாசகம் பொற்கலம் எனத்தக்கதென்று ஆன்றோர் கூறுவர். திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது உலக மொழியாகும். இவ்வாறான அருட்பாவான மதுரவாசகத்தை இயற்றிய மணிவாசகர் காலம் கி. பி. 3ம் நூற்றாண்டென்று தமிழ்ப் பேரறிஞர்கள் கூறுகின்றனர். ஏனைய நாயன்மார் மூவரிற்கும் பிந்தியவர் என்றும் கூறுவாரும் உளர். இவரியற்றிய திருவாசகம் எட்டாம் திருமுறையைச் சேர்ந்தது.

மாணிக்கவாசக சுவாமிகள் சைவசமயிகட்கு ஒரு பெரிய சமயசாரியாய் உள்ளார். அவரைத் தேவாரமாகிய தமிழ் வேதம் செய்தருளிய சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் இம் மூவரோடு சேர்த்துத் துதி செய்து வருகின்றனர். மணிவாசகரால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட இத் திருவாசகமானது அநேகருக்குப் பத்தி ஞானங்களை உண்டாக்குகின்றது.

திருவாசகமானது பதிபற்றிக் கூறும் போது உதாரணமாக "தாயினும் நல்ல தலைவர்," ஆதியும் அந்தமும் இல்லாதவர் என்றும் மலங்களைப் பற்றிக் கூறும் போது சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட என்றும் கூறுகின்றார். கன்மம் மறுபிறப்புப் பற்றிக் கூறும் போது புல்லாகிப் பூடாய் எனும் பாடலில் கூறுகிறார். சைவசித்தாந்த தத்துவங்கள் மணிவாசகர் பாடலில் காணப்படுகிறது. வேத உபநிடதக் கருதுக்களைக் கூட தெளிவுபடுத்தும் பாடல்களையும் திருவாசகம் உள்ளடக்கியுள்ளது.

திருவாசகத்தின் சிறப்புப் பற்றி பல பாடல்களில் தேன் சொட்டச் சொட்டக் கூறியுள்ளார்.

"திருவாசகம் என்னும் தேன் பருகித் தேசமெல்லாம்
கருவேரறுத்துத் தருளிக் கருங்கடலை வேர்துளைத்திட்டு
உருவாச மென்னுய் உண்மையுணர்துத்தமனார் "

திருவாசகமென்னும் தேனினருட் காரணமே எனக் கூறியுள்ளார். கருங்கடலை வேரானது துளைத்தது போல திருவாசகம் எனும் தேனில் கலந்து உண்மைக் கருத்தை எடுத்தியம்புகிறது. கருவேரறுப்பவர் அம்பலவாணர் எனும் பாடலில் திருவாகனத்தை ஓதாத நாவும் செவியுறக் கேட்டு உருகாத நெஞ்சமும் ஏன்படைத்தார் இவ்வுலகரே என இறைவனை வேண்டிப் பாடியுள்ளார்.

மணிவாசகர் சிவபெருமானிடத்தில் இடையறாப் பேரன்பு பூண்டு அல்லும் பகலும் அவரை நினைந்துருகி வழிபட்டு வந்தார். இருவினையொப்பால் தம்மையடையத் தகுதியுடையவர் என்பதை உணர்ந்த இறைவன் தானே பரமாசிரியராய் வந்து திருப்பெருந்துறையில் வைத்து நற்போதனைகளைக் கூறி ஆட்கொண்டார். ஆனால் மணிவாசகருடன் இருந்து உபதேசம் பெற்ற சிவனடியார்கள் மட்டும் திருவருட் சோதியுடன் கலந்துவிட மணிவாசகரை மட்டும் இன்னும் சிலநாள் இருந்து எம்மையடைவாயாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறி மறைந்தருளினார். இதனால் மனமுடைந்த மணிவாசகர் இறைவனை விட்டுப் பிரிந்திருக்க முடியாமல் தன்னை ஆட்கொள்ளுமாறு தலங்கள் தோறும் பாடிப் பரவிக் கொண்டு திரிந்தார். என்னைக் கருணையால் ஆட்கொண்ட இறைவா என்னைக் கைவிட்டு விட்டாயா? உலக வாழ்வில் உழல்கின்றேனே, நான் உன்பாதம் அடையத் தகுதியற்றவன் என்று முடிவு செய்தமை சரியா? என்று பலவாறு புலம்பித் திரிந்து தற்செயலாக ஒருநாள் ஏற்பட்ட நிகழ்ச்சியில் தன் மனம் வேறுபட்டதை உணர்ந்து இறைவன் தன்னைத் தள்ளி வைத்தது சரியான தீர்ப்பே என்ற முடிவுக்கு வந்தார்.

மணிவாசகர் ஒருநாள் இறைவனை நினைத்துக் கொண்டிருக்கும் போது அவருடைய பார்வையில் ஒரு அழகான பெண் காணப்படுகின்றாள். அவளுடைய இதழ்கள் காமச் செயலால் துடித்துக் கொண்டு இருந்ததையும் அவளுடைய ஆடை சிறிது விலகிச் சோர்ந்து காணப்பட்டதையும் அவளுடைய முகத்தில் விரகதாபத்தால் சிறுவியர்வை அரும்பியதையும் அவதானித்தார். இதனால் மனம் குலைந்ததை உணர்ந்த மணிவாசகர் ஐயோ! எனக்கு யானே கேடு தேடிக் கொண்டேனே இறைவா, இந்த ஊனுடலைத் தாங்கி இங்கு இருக்கும்படி நீ செய்தது முற்றிலும் பொருத்துமானதே. முன்னர் மெய்யன்பாளர்களின் தகுதிகண்டு அவர்களை அணைத்துக் கொண்டதும் பொருத்தமானதே. கள்வனாகிய நான் உன்னையடையப் பொருத்தமற்றவன் என்ற முடிவுக்கு வருகிறார். இதனை முடித்தவாறும் என்றனுக்கே... எனும் திருவாசப் பாடலில் சுவையாகவும் சிந்தனையைத் தொடக்கூடியதுமான அழகை எடுத்துக் கூறியுள்ளார்.

மேற்கூறிய சந்தர்ப்பத்தில் நாம் சிந்தனையைச் செலுத்தி உண்மை நிலையை உணர வேண்டும். இறைவனே பரமாசிரியராக இருந்து நயன தீட்சை உபதேச தீட்சை, திருவடித் தீட்சை முன்றிலும் வினையெல்லாம் நீங்கப் பெற்ற மணிவாசகர் இப்படியான ஆபாசநிலைக்கு இறங்குவாரா என்பது முற்றிலும் பொருந்தாத விடயமாகும். உலகியலில் நடக்கும் எத்தனையோ குறைகளை எல்லாம் தன்னையே முன்னிலைப்படுத்தி தன்னையே கொடியனாகக் காட்டும் பேருண்மையை அவருடைய திருப்பாடல்களில் நாம் காண்கிறோம். இதன்படியே ஒரு கற்பனைப் பெண்ணைச் சிருஷ்டித்துக் காட்டுகின்றார். மேலும் இந்த ஊனுடம்பில் என்னைத் தொடர்ந்தும் இருக்கச் செய்தால் இத்தகைய காமம் முதலிய குற்றங்களுக்கு மென்மேலும் நான் ஆளாகவே வேண்டும் எனக் கற்பனை செய்து அப்படி நேராதபடி இந்த உடலை ஒழித்து என்னை ஏற்றுக் கொள்ள வேண்டுமெனத் திருப்பாடலில் வாசகர் கூறும் கருத்தாகும்.

மக்கட் பிறவி அரியது. தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாவது அதனிலும் அரியது. மக்கள் யாவரும் வீட்டின்பம் பெற விரும்பின் சிவனை முதற் கடவுளாகக் கொண்டு வழிபாடாற்றல் வேண்டும். இறைவனிடத்து அன்பும் அடியார்கள் கூட்டுறவும் அவன்பால் அழுகையும் கொள்பவர் அனைவருளாலே அவனே அருட்குரவனாக வந்துணர்ந்த அவன் உண்மை இயல்பைத் தெளிவாய் உணர்வர். இடையில் அவன் செய்யும் சோதனைகட்குத் தளராமல் அவனைப்பற்றி நிற்பின் அவன் பல அற்புதங்களைக் காட்டி ஆட்கொள்வான். இறுதியில் அவனோடு இரண்டறக் கலந்து பேரின்பப் பெருவாழ்வு பெறலாம் என்ற உண்மைகளைக் உணர்த்துவது திருவாசகமாகும்.

இத்திருவாசகத்தை சிவன் எல்லோரிற்கும் அறிவித்தருள வேண்டும் எனும் பெருங்கருணையால் ஒரு நாள் பிராமண வேடத்தோடு சென்று அவரிடம் திருவாசகத்தைச் சொல்ல ஏட்டிலே எழுதி தமது கைச்சாத்திட்டு அவ்வேட்டுப் பிரதியை கனகசபையின் பஞ்சாங்கப் படியில் வைத்திருளினார். மறுநாள் பூசை செய்ய வந்த அந்தணர் அவ் ஏட்டுப் பிரதியைக் கண்டு வியந்து அடியார் எல்லோருக்கும் சொல்லி அவர்களையும் அழைத்துக் கொண்டு மணிவாசகரிடம் சென்று அவர்களைப் பொன்னம்பலத்துக்கு அழைத்துச் போய் தம் நூலுக்குப் பொருள் இவரே என்று நடராசப் பெருமானைச் சுட்டிக் காட்டி அவர்களெல்லோரும் காணச் சோதியிட் கலந்தார். அந்நாளே ஆனிமகமாகும்.

எனவே திருவாசகப் பாடல்கள் எல்லாம் தித்திக்கும் தேன் சுவையிலும் மிக்கதாக ஆழ்ந்த கருத்துக்களை இலகுவான சொற்களில் அழகாகவும், தெளிவாகவும் எடுத்தியம்பியுள்ளார் மணிவாசகர் என்றால் மிகையாகாது. திருவாசகப் பாடல் முப்பொருள் பற்றி மட்டுமல்லாது கன்மம், மறுபிறப்பு, முத்திக் கொள்கை பற்றியும் இலகுவாகப் பாடல்கள் மூலம் சிறப்பாக விளக்குகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறும், சமயமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய காலப் பதவியாவில் வணிக நகரம் பேரிளமையாரின் தமிழ்ச் சாசனம்

பேராசிரியர் சி. பத்மநாதன்
வரலாற்றுத்துறை
கலைப்பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

இலங்கையிலே பொலநறுவைக் காலத்தில் அமைந்திருந்த பிரதானமான நகரங்களிற் பதவியாவும் ஒன்றாகும். இராசதானிகளல்லாத நகரங்களில் அதுவே முதன்மையானது என்பதைத் தொல்பொருட் சான்றுகளின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. சிவாலயங்கள் யாவற்றினதும் பௌத்தப் பெரும் பள்ளிகளினதும் அழிபாடுகள் அங்கு காணப்படுகின்றன. அவற்றிடையே வழிபாட்டுச் சின்னங்களான மூலவர் படிமங்களும் கட்டடங்களின் அங்கமான சிற்பத் தொகுதிகளுங் கிடைத்துள்ளன. சாசனங்களும் சாசனத் துண்டங்களும் பல அங்கிருந்து கிடைத்துள்ளன.

அது ஆரம்பத்திலே விவசாயிகள் குடியிருப்புகளின் மத்திய நிலையமாகவும், பொருட் பரிவர்த்தனை நிலையமாகவும் விளங்கியது. வடமாகாணம், வடமத்திய மாகாணம், கிழக்கு மாகாணம் ஆகியவற்றின் எல்லைகளின் சங்கமத்தில் அமைந்துள்ள பெருங்குளமொன்றின் சமீபத்திலே நகரம் அமைந்திருந்தது. அதன் சுற்றுப் புறங்களில் ஏற்பட்ட விவசாய அபிவிருத்திகள், குடிசனப் பெருக்கம், வாணிப அபிவிருத்திகள் என்பவற்றின் காரணமாகப் பதவியா நகரம் பத்தாம் நூற்றாண்டு முதலாகப் பெருவளர்ச்சி அடைந்தது. அதுவரை காலமும் சுற்றாடல்களிலுள்ள குடியானவர்களின் பரிவர்த்தனை நிலையமாக விளங்கிய தானம் பன்னாட்டு வாணிபத்தோடு இணைந்த ஒன்றாக 11ம் நூற்றாண்டில் அபிவிருத்தியடைந்தது. தரை வழியாகவும் கடல் வழியாகவும் நெடுந்தூரப் பிரயாணங்களை மேற்கொண்டு வியாபாரஞ் செய்யுந் நானாதேசிகளான திசையாயிரத்து ஐந்நூற்றுவர் போன்ற பிரபலமான வணிக கணங்கள் பதவியாவிற்குச் சென்றனர். அவர்கள் அங்கு விற்பனை நிலையங்களை அமைத்துக் கொண்டனர். அவர்களைச் சார்ந்த வணிகரும், கம்மாளர் முதலாயினோரான உற்பத்தியாளரும், காவலரான படைவீரரும் அங்கு நிலை கொண்டனர். சோழராட்சி ஏற்பட்ட காலத்திலே பதவியாவில் அத்தகையவொரு மாற்றம் ஏற்பட்டது.[1]

நானாதேசி வணிகரின் நடவடிக்கைகளின் விளைவாக ஏற்பட்ட குடியிருப்புகளும் பொருட் பரிவர்த்தனை நிலையங்களும் காலப்போக்கிலே வணிக நகரமாக விருத்தி பெற்றன. அது ஐயப்பொழில் புரம் என்னும் பெயரால் வழங்கியது. வணிக நகரத்து ஆளுங்கணமான பெருமக்கள் நிறுவிய சிலாசனங்கள் இரண்டு கிடைத்துள்ளன. அவை பதவியாவிலுள்ள முதலாம் சிவாலயத்தின் இடிபாடுகளிடையே காணப்பட்டன.[2] அவற்றில் ஒன்றிலே திசையாயிரத்துஐந்நூற்றவரின் மெய்க்கீர்த்தி காணப்படுகின்றது. அவற்றிலொன்றிலே வணிகரதும் அவர்களோடு கூடியவர்களதும் பெயர்களும், விருதுப் பெயர்களுங் குறிப்பிடப்படுகின்றன. மேல்வரும் பெயர்கள் அதில் உள்ளன.

1. காறநாட்டுச் செட்டி அனந்தன் அரங்கன்
2. கொற்றி காளிகண வலங்கைப் பெரும்படை பிள்ளை நாட்டுச் செட்டியான சக்கரம்
3. செட்டி உத்தம சோழனாய மண்டலத்துச் செட்டி விருத்தியாபரண வலங்கைமார்
4. சிவசரணசேகர நாட்டுச் செட்டி,
5. ஆதிபயிரன் நிறையான முரகன் சோறுடைநாட்டு (ச்) செட்டி,
6. சங்கரமனுதன் தேசியான தேசிச் சக்கரமான மதவாரணம்,
7. நக்கன் பெருமாள்
8. தேசி அங்கக்காறன்[3]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சாசனம் அமைப்பிலே தனிப்பண்புகள் கொண்டதாகும். அதிலே மெய்க்கீர்த்தியைத் தொடாந்து வரும் பகுதி முற்றுப் பெறாதவொரு வசனம் போல் அமைந்துள்ளது. அதிற் செயற்படுபொருளும் வினைமுற்றுங் காணப்படவில்லை. வணிகரின் மெய்க்கீர்த்தியோடு எண்மரின் பெயர்களும் அவர்களுட் சிலரைப் பற்றிய அடைமொழிகளுமே உள்ளன. அவர்களிற் சிலர் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த செட்டிகளாவர். சங்கரமனுதன் என்று சொல்லப்படும் தேசிச் சக்கரமான மதவாரணம் எண்ணெய் வாணிபரான சங்கரபாடியார் வகுப்பைச் சேர்ந்தவனாதல் கூடும். நக்கன் பெருமானைப் பற்றிய விபரங்கள் குறிக்கப்படவில்லை. தேசி அங்கக்காறன் என்பவன் நானாதேசி வணிகருக்கு இராணுவ சேவை புரிந்த குழுவொன்றைச் சேர்ந்தவனாவான். வணிக நகரத்து வாசிகளுக்கு இவ்வெண்மரின் பெயர்களையும் பிரகடனப்படுத்தும் வண்ணமாக இச்சாசனம் நிறுவப்பெற்றதென்று கருதலாம். அவர்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திலே பதவியாவிலமைந்த வணிக நகரின் ஆளுங்கணமாய் அமைந்திருந்தனர் எனக் கொள்ளலாம்.[4]

இரண்டாவது சாசனத்தின் மூலமாகப் பதவியாவில் அமைந்திருந்த வணிக நகரமானது ஐயம்பொழில் பட்டினம் என்னும் பெயருடன் விளங்கியது என்பதை அறிகின்றோம்.[5] வணிக நகரத்திற்கு உரியதான விக்கிரமகடிகைத் தாவனம் என்னும் நிலையம் பற்றியும் இச்சாசனம் குறிப்பிடுகின்றது. பட்டினத்தின் காவலரான வீரக்கொடி என்போர் சாசனத்தைத் சிலாலேகஞ் செய்தனர்.

வாணிப விருத்திகளின் காரணமாகப் பதவியாவிற் செல்வவளம் பெருகியிருந்தது. அங்கு குடியிருந்தவர்கள் கோயில்களையும் பௌத்தப் பள்ளிகளையும் அமைத்து அவற்றிலே வழிபாடுகள் நடைபெறுவதற்கு நன்கொடைகளை வழங்கியிருந்தனர். பதவியாவில் எல்லாமாக ஐந்து சிவாலயங்கள் இருந்தன. அவற்றிலே இரவிகுலமாணிக்க ஈஸ்வரம் என்னும் கோயில் பழமையானதும் பெரியதுமாகும். அது முதலாம் இராஜராஜனது ஆட்சிக் காலத்திலே கட்டி முடிக்கப்பெற்றது. அதற்கு அத்திவாரமிட்டவர்களிற் பலர் வணிகர். அவர்களிற் சிலர் திசையாயிரத்து ஐந்நூற்றுவர் கணத்தைச் சேர்ந்தவர்கள்.[6] அதற்கு நன்கொடை வழங்கியவர்களில் ஒருவன் நானாதேசி வணிகனாவான்.[7] வணிக நகரத்தைச் சேர்ந்த வடதனி, தென்தனி என்னும் கோயில்களைப் பற்றியும் அவற்றிலே பணி புரிந்த தனிநங்கைமாரைப் பற்றியுஞ் சாசனக் குறிப்புண்டு.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் வேளைக்காறப் படையினர் வணிக நகரத்தின் காவலராகப் பதவியாவிலே பணிபுரிந்தனர் போலத் தெரிகின்றது. அப்படையின் நாயகனான லோகநாததண்டநாயகன் என்னும் பிரதானி ஒருவன் பிரமாண்டமான விகாரமொன்றினை அமைத்து அதற்கு வேளைக்கார விகாரமென்று பெயரிட்டு, அதனை வேளக்காறரின் பொறுப்பில் விட்டான் என்பதைப் பதவியாவிலுள்ள சமஸ்கிருத மொழிச் சாசனமொன்றின் மூலம் அறிய முடிகின்றது.

மூன்றாம் சிவாலயத்தின் இடிபாடுகளிடையே சாசனம் எழுதப்பட்ட கற்றூண் ஒன்று 1961ம் ஆண்டு கண்டெடுக்கப்பட்டது. புதைபொருள் திணைக்களத்தினராலே தயாரிக்கப்பெற்ற அதன் படிவமொன்றை வாசித்துச் சாசனத்தின் வாசகத்தையும் அதனைப் பற்றிய குறிப்புகளையும் ஆ. வேலுப்பிள்ளை வெளியிட்டார். அச்சாசனம் எழுதப்பட்டுள்ள தூண் 3" 8" நீளமும் 1' அகலமும் கொண்டதாகும். சாசனம் 47 வரிகளில் எழுதப்பட்டுள்ளது. வரி ஒவ்வொன்றிலும் சராசரி 6 எழுத்துக்கள் உள்ளன.

காலம் பற்றிய குறிப்பெதுவும் சாசனத்தில் எழுதப்படவில்லை. அரசனின் பெயருங் கூறப்படவில்லை. எனவே வரிவடிவங்களின் அடிப்படையில் மட்டுமே சாசனம் எழுதப்பட்ட காலத்தை அனுமானித்து அறிந்து கொள்ளலாம். எழுத்துக்கள் 12 ம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குரிய வரிவடிவ வளர்ச்சியின் அம்சங்களைக் கொண்டுள்ளன. அவை பாண்டுவாச நுவரவிலுள்ள நிசங்கமன்னனது காலத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1187 - 1196) ச் சாசனத்து எழுத்துக்களை ஒத்திருக்கின்றன. எனவே இச்சாசனத்தைப் 12ம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குரிய தொல்பொருட் சின்னமாக கொள்ளலாம்.

ஆ. வேலுப்பிள்ளை வெளியிட்டுள்ள இச்சாசனத்தின் வாசகம் கீழ்வருமாறுள்ளது.

"ஸ்வஸ்தி ஸ்ரீ
உத்தமர் தங்கோயில் வலகழி எனலும்
நித்த நியமம் நெறிவளர் சித்தமுடன்
சீரிளமை சேர்ந்த பதியில் விளை-
ஆரம்பப் பேரிளமையார்த் -துகள்
போதாவாயிரங் கொண்டுரைய்ய திரு " [9]
சூத்தமாக முயன்றான் முயன்ற திரு.

சாசனத்தின் பொருளை அவர் கீழ்வருமாறு விளக்குவார்

"உத்தமராகிய பரமேஸ்வரரின் கோயிலான வலகழியின் பெயரை உச்சரிப்பவன் என்றும் சீருடனும் இளமையோடும் விளங்கும் பதியிலே பள்ளி கொண்டுள்ளவரும் எல்லாவற்றின் தோற்றத்திற்குங் காரணமானவரும் என்றும் இளமையானவருமாகிய பெருமானை நாள் தோறும் சமயாசாரப்படி ஆயிரம் மலர் சாத்தி வழிபடுபவன் பெரும் பலன்களை அடைவான்." [10]

இந்த வர்ணனையில் அடங்கிய சிந்தனைகள் கவர்ச்சியானவை. மரபுவழியான சமயச் சிந்தனைகளுக்கு இசைவானவை. ஆயினும், சாசனத்திலுள்ள வாசகத்துடன் அவை பொருந்துவனவாகத் தெரியவில்லை. வேலுப்பிள்ளை அவர்கள் வெளியிட்டுள்ள சாசன வாசகத்தின் சில பகுதிகள் சிலாசானப் பிரதியிலிருந்தும் வேறுபட்டனவாகவே காணப்படுகின்றன. சாசனத்தின் வாசகம் மீளாய்விற்குரிய ஒன்றாகும். அதன் முதல் ஒன்பது வரிகளைப் பொறுத்த மட்டில் அவருடைய வாசகம் வரிக்கு வரியும், சொல்லுக்குச் சொல்லாகவும் சரியாகவே காணப்படுகின்றது. பிரச்சினை பத்தாவது வரியில் ஆரம்பமாகின்றது.

ஒன்பதாவது வரியின் ஈற்றெழுத்தான " வி" முதலாக 11 ம் வரியின் கடைசி எழுத்து வரியான சாசனத் தொடரை **விளையாரம்பப் பேரிளமையார்** என்று அவர் கொண்டார். பத்தாவது வரியிலுள்ள முதலாவது எழுத்தினை "ளை" என்று கொண்டதால் இந்தச் சொற்றொடர் உருவாக்கப்பட்டது. ஆனாற் சாசனத்தில் "ள" என்ற எழுத்துக் காணப்படவில்லை. அங்கு காணப்படும் அஷரம் "ச" என்று கொள்ளத்தக்கதாகும். அந்த எழுத்தைச் "ச" எனச் சரியாக அடையாளங் காணுமிடத்துக் குறிப்பிட்ட சாசனத் தொடர் விசயராமய் பேரிளமையார் என்றாகி விடுகின்றது. அது இலகுவிலே புரிந்து கொள்ளக் கூடியதாகும். விசையராமன் என்னும் பெயருடைய பேரிளமையார் ஒருவனைச் சாசனங் குறிப்பிடுகின்றது.

விசையராமப் பேரிளமையார் என்பதனைத் தொடர்ந்து வரும் எழுத்துக்களை "**த்துகள் போதாவாயிரங் கொண்டுரைப்பர் திரு**" என வேலுப்பிள்ளை அடையாளங் கண்டுள்ளார். துகள், போதாவாயிரம் என்னுஞ் சொற்கள் சாசனத்தில் இருப்பதாகத் தெரியவில்லை "ங" என்னும் எழுத்தை " து " என்று கொண்டதனால் துகள் என்னுஞ் சொல் அவருடைய வாசகத்தில் இடம்பெறலாயிற்று. பேர் என்ற சொல்லை போ என்ற எழுத்தாகக் கருதி அதற்குப் பின்னுள்ள எழுத்துக்களோடு சேர்த்துப் போதாவாயிரம் என அவர் கொண்டார். "நா" என்ற எழுத்தே கல்வெட்டிலே காணப்படுகின்றது. அதைத் தா என்னும் அஷரமாகக் கருதியதால் போதாவாயிரம் என்ற மொழித் தொடர் வாசகத்தில் இருப்பதாக அவர் கருதினார். குறிப்பிட்ட மொழித் தொடரின் முடிவில் உரைப்பின் என்னுஞ் சொல் உள்ளதால் நாவாயிரங்கொண்டுரைப்பின் என்னும் வாசகமே சரியானதென்பது உறுதியாகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாசனத்தின் இறுதியில் வரும் சொற்களை திரு சூத்தமாக முயன்றான் முயன்ற திரு என வேலுப்பிள்ளை அடையாளங் கண்டுள்ளனர். ஆனால் சாசனத்தின் படிவத்தை மிகக் கவனமாக ஆராயுமிடத்து **திக்கந்தமாக முயன்றான் முயன்ற திரு** என்ற தொடரே அதில் எழுதப்பெற்றுள்ளது என்பது தெளிவாகின்றது.[11] இதுவரை கவனித்தவற்றின் அடிப்படையிலே சாசனத்தின் பிற்பகுதியை மேல் வருமாறு திருத்தி அமைத்துக் கொள்ள வேண்டும்.

விசையராமப் பேரிளமையார் தங்கள் பேர் நாவாயிரங் கொண்டுரைப்பின் திக்கந்தமாக முயன்றான் முயன்றான் முயன்ற திரு

இதுவரை கூறியவற்றின் அடிப்படையிலே சாசனத்தின் திருத்திய வாசகம் மேல் வருமாறு அமையும்.

" ஸ்வஸ்தி ஸ்ரீ உத்தமர் தங்கோயில் வலகழி எனும் நித்த நியமம் நெறிவளர் சித்தமுடன் சீரிளமை சேர்ந்த பதியில் விசையராமப் பேரிளமையார் தங்கள் பேர் நாவாயிரங் கொண்டுரைப்பின் திக்கந்தமாக முயன்றான் முயன்ற திரு "

செய்யுள் வடிவான இச் சாசனத்தின் பொருள் மேல்வருமாறு அமையும். உத்தமனாகிய (எம்) பெருமானுடைய ( இந்தக் ) கோயிலை வலகழி என்று சொல்வீர்களாக. நாள்தோறும் ஆலய தர்மங்களைச் சமயாசாரப்படி இப் புதிய பதியில் நடத்தும் உணர்வோடு விசையாரமப் பேரிளமையாரின் நாமத்தை நாவினால் ஆயிரம் தடவை போற்றினால் திக்கனைத்துஞ் சென்று தேடுபவனுக்குக் கிடைக்கின்றதற்கு நிகரான செல்வம் கிடைக்கும்.

இச்சாசனம் கோயிலின் பெயரைக் குறிப்பிடுகின்றது. அது வலகழி என்பதாகும். சாசனம் பதவியாவிலுள்ள மூன்றாம் சிவாலயத்தின் இடுபாடுகளிடையிற் காணப்பெற்றதால் வலகழி என்பது அக்கோயிலுக்குரியதாதல் வேண்டும். அக்கோயில் தொடர்பாக விசையராமப் பேரிளமையாரின் பெயர் சொல்லப்படுவதால் வலகழி என்னுங் கோயிலை அவனே அமைத்தானென்று கருதலாம். வணிகத் தொழில் பற்றிச் சாசனங் குறிப்பிடுகின்றது போலத் தெரிகின்றது. திக்கனைத்துஞ் சென்று தேடுஞ் செல்வம் என்பது வாணிபத்தையன்றி வேறெத் தொழிலினையும் அக்காலத்திலே குறித்திருக்குமென்று கருத முடியாது. விசையராமன் பெருவணிகனானதல் கூடும். பதவியாவில் ஐயம்பொழில் பட்டினம் என்னும் வணிக நகரம் அமைந்திருந்தமையும் கவனத்திற்குரியதாகும். அங்கே திசையாயிரத்து ஐந்நூற்றுவர் என்னும் வணிக கணத்தவரின் முகவர் நிலையங்கள் இருந்தன.

விசையராமன் பேரிளமையார் என்னும் சமுதாயப் பிரிவைச் சேர்ந்தவன் என்பதால் அவனைச் சாசனம் விசையராமய் பேரிளமையார் என வர்ணிக்கின்றது. பேரிளமையார் என்போர் பதவியாவிலே 11ம், 12ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தமைக்கு ஆதாரமுண்டு. பதவியாவிற் கண்டெடுக்கப் பெற்ற சாசனத்துண்டமொன்றிலே **கீழைச்சேரிப் பேரிளமையார்** செய்தார் என்னுந் தொடர் காணப்படுகின்றது.

பேரிளமையார் என்பது சமுதாயப் பிரிவொன்றின் பெய்ரென்பது தென்னிந்திய சாசனக் குறிப்புகளினாலே தெளிவாகின்றது. உத்தரமேரூரிலும் மாமல்லபுரத்திலும் முதலாம் இராஜராஜன் காலத்தில் (985 – 1016) எழுதப்பெற்ற சாசனங்கள் சிலவற்றிலே பேரிளமையார் பற்றிய குறிப்புகள் உண்டு. உத்தரரூரிலே பெருமாள் கோயிலொன்றில் விளக்கெரிப்பதற்கு வழங்கப்பெற்ற நன்கொடைகளைப் பேரிளமையார் பொறுப்பேற்றனர்.[12] மாமல்லபுரத்திலே பேரிளமையார் உயர்குடி மக்களாக விளங்கினர் என்பதை சாசனச் சான்றினால் உணர்ந்து கொள்ள முடிகின்றது. அங்கு நகரம் மாமல்லமரத்துப் பெருமக்களுக்குச் சமமானவர்களாகப் பேரிளமையார் கருதப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவியாவிலுள்ள மூன்றாம் சிவாலயத்துச் சாசனத்திலே பல முக்கியமான அம்சங்கள் உள்ளன. அது கோயிலொன்றின் பெயரைக் குறிப்பிடுகின்றது.

விசையராமப் பேரிளமையாரை அது புகழ்ந்துரைக்கின்றது. 'உண்மையில் இச்சாசனச் செய்யுள் விசையராமப் பேரிளமையாரைப் பற்றிய மெய்க்கீர்த்தியாகவே அமைகின்றது. சாசனத்தின் முடியிலே வாணிபத் தொழிலைப் பற்றிய குறிப்புண்டு. கோயிலின் பெயர் வலகழி என்பதாகும். அப்பெயர் இச்சாசனத்தின் மூலமாகவே அறியப்படுகின்றது. இச்சாசனத்தில் வரும் பதி என்ற சொல் வழிபாட்டுத் தலமொன்றைக் குறிக்குமாயின் சீரிளமை சேர்ந்த பதியில் என்ற சாசனத் தொடரினை வலகழி என்பதற்குரிய அடைமொழியாகக் கொள்ளலாம். எனவே இச்சாசனம் சிறப்புகள் பலவற்றைக் கொண்ட ஒரு புதிய சிவாலயம் பற்றிக் குறிப்பிடுகின்றது என்று கருதலாம்.

ஆலயந் தொடர்பாகவே விசையராமய் பேரிளமையாரைப் பற்றிய குறிப்பு வருகின்றது. அவன் பதவியாவிற் புதியதொரு சிவாலயத்தைக் கட்டுவித்து, அதற்கு வலகழி எனப் பெயரிட்டு அதன் நாள் வழிபாடுகளுக்கு நிவந்தங்கள் வழங்கியிருந்தான் என்று கொள்வதற்குச் சாசனக் குறிப்பு ஆதாரமாகின்றது. இச்சாசனத்தின் வாசகம் ஆலய ஸ்தாபனப் பிரகடனம் போன்றதாகும்.

குறிப்புகளும் விளக்கவுரைகளும்

1. S. Pathmanathan, "The Nagaram of the Nananadesis in Sri Lanka Cirea A. D. 1000-1300 **The Sri Lanka Journal of the Humanities**, Vol 10, Nos 1 of 2 University of Peradeniya, 1984 (Published in 1987), pp. 132-134, 150; S. Pathmanathan "Temples of Siva at Padaviya", **Temples of Siva in Sri Lanka** Ed. S. Pathmanathan, Colombo; Chinmaya Mission, 1999, pp 120 - 132 சி. பத்மநாதன், **இலங்கையில் இந்து கலாசாரம் பதி ஒ** (457 பக்கங்கள்), கொழும்பு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், ப 227 - 246

2. A. Velupillai, **Ceylon Tamil Inscriptions Pt I**, Peradeniya, 1971, pp 54-55; A. Velupillai, Ceylon Tamil Inscriptions pt II, Peradeniya, 1972, pp 19-21

3. சி. பத்மநாதன், **இலங்கையில் இந்து கலாசாரம்** பகுதி ஒ, ப 231-2

4. மேலது

5. ஐயம்பொழில் பட்டினத்து திசை(ச) விக்கிரம கடிகைத் தாவளம் உள்ளிட்ட இப்பட்டினத்து வய்க்கப் பெறும் பணமும் என்னும் தொடர்கள் சாசனத்திற் காணப்படுகின்றன. A. Velupillai, **Ceylon Tamil Inscriptions** pt II, P. 20

6. முதலாஞ் சிவாலயத்து அத்திபாரக் கற்களிலுள்ள மேல்வரும் சாசனங்கள் குறிப்பிடும் பெயர்கள் வணிகருக்கு உரியனவாகும்.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ. இக்கல்லு வருதன் திருமால் இட்டது. இக்கல்லு அழகன் வர்தரமாராஸ்வயன் இட்டது.
2. ஸ்வஸ்தி ஸ்ரீ. இக்கல்லு அழகன் வத்தமானான தேசியாத் துணைச் செட்டி இட்டது.
3. ஸ்வஸ்தி ஸ்ரீ. இக்கல்லு (பதியில்) வணிகன் தனி அப்பன் இட்டது.

7. நானாதேசி வணிகனான கொண்ணாவில் வெண்காடன் என்பவன் வெண்கல எறிமணி ஒன்றினை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவிகுல மாணிக்க - ஈஸ்வரம் என்னுங் கோயிலுக்கு நன்கொடையாக வழங்கினான். சி. பத்மநாதன், இலங்கையில் இந்து கலாசாரம் பகுதி ஒ ப 65

8. A. Velupillai, Ceylon Tamil Inscriptions pt. II, pp 28 - 31

9. மேலது ப. 28

10. அவர் சாசனத்தை மேல்வருமாறு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

Hail prosperity . As soon as one says Vala kali, the temple of the Supreme Spirit (he attains) the wealth of one who with daily religious austerities and his thought directed to salvation, chants (the name of god) with the offering of thousand flowers at the dust (of the feet) of the ever young one who was the beginning of the origin (of everything) in padaviya which is young and prosperous. (That wealth is equivalen to) the wealth of the accumulator who accumulated justify.

சாசனத்தின் பிற்பகுதியைப் பிழையாக வாசித்துள்ளமையாலும், பேரிளமையார் என்பது ஒரு சமுதாயப் பிரிவினரின் பெயர் என்பதை உணர்ந்து கொள்ளாமையாலும் இதில் அடங்கியுள்ள கருத்துக்கள் இடம்பெறலாயின.

11. திகந்தம் என்னுஞ் சொல் திரிசோணாசல புராணத்தில் வருகின்றமை கவனித்தற்குரியது.

12. முதலாம் இராஜராஜனின் 21ம் ஆண்டில் எழுதப்பெற்ற சாசனமொன்று பேரிளமையாரைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. நாராயணச் சேரியில் வாழும் ஒருவன் ஸ்ரீ வெளி விஷ்ணு கிருகத்து வெள்ளை மூர்த்தி ஆழ்வார் சந்நிதியில் எரிப்பதற்கென விளக்கொன்றைத் தானம் பண்ணினான். அதனை எரிப்பதற்குப் பேரிளமையார் பொறுப்பேற்றனர்.

அடுத்த வருடத்தில் வாமனச்சேரியில் வாழ்ந்த பிராமணி ஒருத்தி அதேயிடத்திலே எரிப்பதற்கென்று விளக்கொன்றினை நன்கொடையாக வழங்கினாள். அதனைப் பொறுப்பேற்றுக் கொண்டு அதனைப் பற்றிய அறக்கட்டளையினை நிறைவேற்றுவதாகப் பேரிளமையார் உத்தரமேரூர்ச் சபையாருக்கு உத்தரவாதம் அளித்தனர். அரசனின் 22ஆம் ஆண்டிலே மலைமண்டலத்து தண்ணீர் முட்டத்து உதயன் ஆதித்தன் என்பான் அதே கோயிலில் விளக்கெரிப்பதற்கு 96 ஆடுகளைத் தானம் பண்ணிய போது அவற்றைப் பொறுப்பேற்றனர்.

இராஜராஜனின் 25 ஆம் ஆண்டில் எழுதப்பெற்ற மாமல்லபுரத்துச் சாசனமொன்று மாமல்லபுரத்து நகரத்தார், பேரிளமையார் என்போர்க்கிடையிலே நிலங்கள் பங்கீடு செய்யப்பட்டமை பற்றிக் குறிப்பிடுகின்றது.

நகரம் மாமல்லபுரத்து ஜலசயன மகாதேவர் கிழக்குப் புரத்திலுள்ள நந்தவனத்திலே தங்கியிருந்தவனாகிய ஆமூர்கோட்டம் நாட்டுவகை செய்கின்ற ஏகாதிரன் ஐம்பதின்மன் நிலப்பங்கீடு பற்றிய கட்டளையை வழங்கினான்.

K. A. Nilakanta Sastri, **The Colas** Vol 2, pt 2., University of Madras 1939, pp. 508, 511


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வெட்டுக்களில் காணப்படும் இந்துசமயச் செய்திகள்

ச. ஜெகநாதன்
தமிழ் சிறப்புக்கலை
கலைப்பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

பண்டைத் தமிழர் தம் வரலாறு, பண்பாடு, சமயம், நாகரிகம், வாழ்வியல் நெறிகள் ஆகியவற்றை அறிய தொல்லியல் ஆய்வு, நாணயம், ஓவியம், சிற்பம், இலக்கியம் போன்றவற்றின் பயன்பாட்டைப்போலக் கல்வெட்டுக்களும் உதவுகின்றன. பண்டைக் காலத்தில் அரசர்கள் கோயில்களுக்கும், புலவர்களுக்கும் தானங்களை அளித்தது பற்றிய உத்தரவு அல்லது கட்டளைகளை ஓலைகளிலும் வெள்ளி, செம்பு, தங்கம் முதலிய உலோகங்களிலும் எழுதினார்கள். எனினும், பெரும்பாலும் அவை கல்லிலேயே வெட்டப்பட்டு வந்தன. எனவே கல்வெட்டு என்பது கல்லில் வெட்டப்பெறும் எழுத்துக்கள் எனப் பொருள்படும். இதனை ஆங்கிலத்தில் (Inscription) என அழைப்பார்கள். இக்கல்வெட்டுக்கள் தமிழகத்தில் பாறைகளிலும், குகைகளிலும், கோயில்களிலும் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுக்கள் கவின் மிகு சொல்வெட்டுக்களாகவும் கருத்தைக் கவரும் காலச் சிட்டுக்களாகவும், கற்பனை கலவாத இலக்கியச் சுவை கொண்ட இனிய சொற்களாகவும், கருத்தாழங் கொண்ட கருவூலங்களாகவும் காணப்படுகின்றன.

தமிழ் இலக்கிய வரலாற்றின் ஆரம்ப காலமான சங்க காலத்தில் போரில் இறந்த வீரன் நினைவாக நடப்பட்ட நடுகற்களில் அவ்வீரனின் பெயர், வீரதீரச் செயல்கள் என்பன பொறிக்கப்பட்டன. இவ்வாறு நடுகற்களாக நடப்பட்டவற்றை தொல்காப்பியம்

"காட்சி கால்கோள்நீர்ப்டைநடுதல்"
சீர்த்தகு சிறப்பில் பெரும்படை வாழ்த்தலென்று"

என்ற பாடம் மூலம் குறிப்பிட்டு சொல்கிறது. இவ்வாறு நடப்பட்ட சில நடுகற்கள் கோயில்களாயின. இவ்வாறு நாட்டப்பட்ட நடுகல்லை அதிகாலையில் நீராட்டி, வாசனைப்புகை காட்டி, நெய்விளக்கு ஏற்றுவார்கள். கரந்தைப் பூவையும், பனையோலையில் தொடுக்கப்பட்ட வேங்கைப் பூவையும் சூட்டி மகிழ்வர். நெல்லோடு பூவைக் கலந்து தூவி வழிபடுவர். இவற்றினை நோக்கும் போது இந்து சமய வழிபாட்டு முறையின் ஆரம்ப நிலையினைக் காணக்கூடியதாகவுள்ளது. கி. பி. ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை தமிழ் நாட்டில் அரசு புரிந்த பல்லவ மன்னர்கள் முதலில் கருங்கற்களால் கோயில்ளைக் கட்டினார்கள். இப்பல்லவர்களுக்குள் மகேந்திரவர்மன் பல குடைவரைக் கோயில்களைக் கட்டினான். இவனுடைய கல்வெட்டொன்று சீயமங்களச் சிவன் கோயிலில் காணப்படுகின்றது. இதே காலத்தில் நம்பியப்பி என்பவன் திருத்தணிகையில் ஒரு சிவன் கோயிலைக் கட்டினான். இவனுடைய அரிய செயல்களைப் பாராட்டுமுகமாக அபராசிதன் என்பவன் பாடிய

"திருந்து திருத் தணியிற் செஞ்சடையீடற்குக்
கருங் கல்லாற் கற்றளியா நிற்க"

எனும் வெண்பா கல்வெட்டில் இடம்பெற்றுள்ளன.

மேலும் முதலாம் இராச இராசன் தஞ்சாவூரில் இராச ராசேச்சுரம் என்றும் கற்கோயிலை எடுப்பித்தான். அவன் அளித்த அளவிளந்த கொடைகளைப் பற்றி இக்கோயில் கல்வெட்டு பறை சாற்றிக் கொண்டிருக்கிறது. இவன் கோயில் வழிபாட்டின் பொருட்டு பல தானங்கள் அளித்தமையையும் குறிப்பிடுகின்றது. மேலும், முதலாம் குலோத்துங்கனின் படைத்தலைவனாக விளங்கியவன் காலிங்கராயன். இவன் சிறந்த சிவபக்தன். மூவர் தேவாரத்தைச் செப்பேடுகளில் எழுதிவித்துத் தில்லைத் திருக்கோயிலில் வைத்தான் என்பதைக் கல்வெட்டு செய்தி மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

மேலும் திருமால் கோயில்களில் திருவாய் மொழி விண்ணப்பம் செய்ய தானங்கள் அளிக்கப்பட்டன. முதலாம் இராசராசனுடைய முப்பதாம் ஆட்சியாண்டின் திருப்புவணிக் கல்வெட்டு இச் செய்தியை விளங்குகிறது.

இந்த வகையில் பல்லவர் காலத்தில் கோயிற் கல்வெட்டுக்கள் சைவ, வைணவ மதச் சார்புடைய கல்வெட்டுக்களாக பொறிக்கப்பட்டுள்ளதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

சோழ மன்னர்கள் சோழ நாடு முழுவதும் கற் கோயில்ளைக் கட்டினார்கள். இக்காலத்தில் கோயில்களில் நடைபெற்ற விழாக்கள், கூத்துக்கள் போன்றவற்றினைக் கல்வெட்டுக்கள் தெளிவாக கூறுகின்றன. முதலாம் குலோத்துங்க சோழனின் பதினெட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களில் தமிழ்க்கூத்து ஆடப்பட்டது பற்றிக் குறிப்பிடுகின்றது. இது போல தேவரடியார்களுக்கு தானமாக வழங்கப்பட்ட பொருட்கள், நிலங்கள் பற்றியும் பிராமணர்களுக்கு குடியிருப்பதற்கு வழங்கப்பட்ட நிலமாகிய சதுர்வேதி மங்களம் என்னும் நிலங்கள் பற்றியும் நந்தா விளக்கு எரிப்பதற்கு தானமாகக் கொடுக்கப்பட்ட எண்ணெய் பற்றியும் கூறப்படுகிறது.

மேலும் பாண்டியர்களும், சோழர்களைப் போலவே பலகோயில்களை கட்டி சமயப்பணி செய்தார்கள். முதலாம் மாறவர்மன், சுந்தர பாண்டியனின் பத்தாம் ஆட்சியாண்டுக்குரிய கல்வெட்டில் அவ்வூர்க் கோயிலுக்கு அவன் செய்த அறச் செயல்கள் பற்றியும், கோயில் சபையினரைப் பற்றியும் குறிப்பிடுகின்றது.

விஜயநகர மன்னர் ஆட்சிக்காலத்திலும் பல கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டன. கோயிலில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அளவுக்கு அதிகமான வரியினை விதித்தமையினால் அவ்வரிக் கொடுமையைத் தாங்க மாட்டாமையினால் திருத்தொண்டு புரிந்த பணியாளர்களுள் ஒருபெண் கோயிலின் கோபுர உச்சிக்குச் சென்று கீழே விழுந்து தற்கொலை செய்து கொண்டாள் எனக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. மேலும் நாயக்க மன்னர்களின் இந்துசமயப் பணிகள் பலவற்றைக் கல்வெட்டுக்கள் மூலம் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

இவ்வாறாக அரசர்கள் எடுப்பித்த கோயில்கள் மலைப்படைப்புக்களின் சின்னங்களாக மட்டும் அமையாமல் சமய வளர்ச்சியின் நிலையங்களாகவும் திகழ்ந்தன. இக் கோயில்களை நாள் வழிபாடும், திங்கள் விழாக்களும் அணி செய்தன. இவ்விழாக்கள் சிறப்புற்று அமைய மன்னர்கள் பொன்னையும் பொருளையும் வழங்கினார்கள். இச்செய்தியினைக் கல்வெட்டுக்களில் பொறித்து கோயில்களில் அனைவரும் பார்க்க கூடியமுறையில் அவற்றினை அமைத்தார்கள். இவ்வாறு வைப்பதன் மூலம் வேறு பலரும் தானங்களை அளிக்க முன்வருவார்கள் என்ற நோக்கத்திலும், பலரது பார்வையில் படும்படி பொறிக்கப்பட்டது எனக் கூறலாம்.

மேலும், கல்வெட்டுக்களில் கையாளப்பட்டிருக்கும் இந்து சமயம் சார்பான சொல்லாட்சிகளை நோக்கும் போது கோயில்களையும், கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களையும் பாதுகாக்கும் ஒரு தனிநபர் அல்லது குழுவினரை அறங்காவலர்கள் என குறிக்கப்பட்டிருக்கக் காணலாம். இச்சொல்லாட்சி இன்றும் அவ்வாறே அழைக்கப்பட்டு வருகிறது. மேலும் இறைவனை ஆடை, அணிகலன், பூமாலைகள் கொண்டு அலங்கரிக்கப்படுதலை சாத்துப்படி சாத்துதல் எனக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. திருவமுது செய்யும் இடம், பொருள் வைக்கும் இடம் ஆகியன மடப்பள்ளி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவை இன்றும் அவ்வாறே அழைக்கப்பட்டு வருகின்றன.

மேலும், இலங்கையிலும், பொலனறுவை, அனுராதபுரம், மாதோட்டம், யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் காணப்படுகின்ற கல்வெட்டுக்களில் இந்து சமயம் பற்றிய செய்திகளை அறியக் கூடியதாக இருக்கிறது. சிறப்பாக சோழர் ஆட்சி இலங்கையில் நிலவியபோது பொலநறுவையில் இந்து சமயம் பெற்றிருந்த செல்வாக்கை அப்பகுதியில் காணப்படுகின்ற (இன்று பொருட் காட்சியகத்தில் இருக்கிறது) கல்வெட்டுக்கள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

மேலும், தமிழ்நாட்டுக் கோயில்களுக்கு சொந்தமான பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் பல சமூக சுரண்டல்காரர்களால் அபகரிக்கப்பட்டுள்ளன. இச் சொத்துக்களைக் கல்வெட்டு ஆதாரத்தைக் கொண்டு நீதிமன்ற உதவியுடன் மீறப்பெறுதல் நடைபெற்று வருகிறது. இன்றும் கூட தமிழக கோயில்களுக்கு சொந்தமான பல சொத்துக்கள் இலங்கையின் யாழ்ப்பாணப் பகுதியில் இருக்கின்றன. இதற்கு முக்கிய ஆதாரமாக இருப்பவை கல்வெட்டுக்கள் ஆகும்.

இன்று உலகமே கணனிமயமாக விளங்குகின்ற போதிலும், தமிழக அரசு பல முக்கியமான செய்திகளைக் கல்லிலே அழியாத ஆவணமாக பொறிப்பதிலிருந்து கல்வெட்டின் அழியாத் தன்மையினைக் காண முடிகிறது.

இந்த வகையில் மேற்கூறிய யாவற்றினையும் தொகுத்து நோக்கும் போது என்றும் அழியாத சொல் வெட்டுக்களாகக் காணப்படும் கல்வெட்டுக்களில் இந்து சமயச் செய்திகள் பல காணப்படுவதை அறிய முடிகிறது.

**துணையன்கள்**


1. கல்லெழுத்துக்கலை - நடனகாசிநாதன் . எம். ஏ
2. கல்வெட்டில் வாழ்வியல் - டாக்கடர் அ. கிருட்டினன்
3. சாசனமும் தமிழும் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை
4. தென்னிந்திய சாசனங்கள்
5. வாழ்வியல் களஞ்சியம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமய வளர்ச்சியில் ஆதீனங்களின் பங்களிப்பு

கு. சிபானி
முதலாம் வருடம்
கலைப்பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

சைவ சமயத்தினுடைய வரலாற்றுப் பரப்பிலே பல்லவர் காலத்தில் ஏற்பட்ட பக்தி எழுச்சியும், சோழர் காலச் சமய எழுச்சியும், நாயக்கர் காலத்திலே தொடாந்து நிலை பெற முடியவில்லை. பல்வேறு அரசியல், சமயக் கெடுபிடிகளால் சைவசமயத்திலே நலிவுநிலை ஏற்பட்டது. அதனைப்போக்கி சைவ சமய வளர்ச்சியினை இன்றுவரை நிலைபெறச் செய்வதிலே ஆதீனங்களும், மடங்களும் மட்டிட முடியாப், பங்களிப்பினை மேற்கொண்டு வருகின்றன.

சமய வரலாற்றுப் பரப்பிலே நாயக்கர் காலத்தில் ஏற்பட்ட சமயச் சீரழிப்புத் தன்மை, அந்நிய மதச் செல்வாக்குகள், படை எடுப்பாளரின் ஆதிக்கம், ஸ்திரமில்லாத அரசியல் சூழல் என்பவற்றையெல்லாம் முறியடிக்கும் நோக்குடனும் சமயம், கலை, கலாசாரத்தை ஏனைய காலகட்டங்களிலும் பார்க்கச் சிறப்பாக வளாக்கவும், பிறசமயத்திடம் இருந்து சைவம் காப்பாற்றப்படவும், கோயில்கள் இடித்து அழிக்கப்படுவதை தடுக்கவும், சமய நலிவு நிலை போக்கவும் சிறப்பான காலகட்டமாக பதினான்காம் நூற்றாண்டு தொடக்கம் பதினெட்டாம் நூற்றாண்டுக்கிடையில் தோன்றியனவையே ஆதீனங்களாகும்.

சோழப் பேரரசுக் காலத்திலே உயர் வளர்ச்சியடைந்த இந்து மதம் விஜயநகரப் பேரரசுக் காலத்தில் பல இடையூறுகளைச் சந்தித்தது. எனினும் இக்காலத்துச் சில மன்னர்களின் முயற்சியாலும் ஆதீனங்களின் தோற்றுவாயாலும் இந்து சமயம் அழிவுறாத் தன்மையைப் பெற்றது எனலாம். இக்காலத்திலே பாரத தேசம் எங்கும் பல்வேறு விதமான படையெடுப்பு நிகழ்ந்தது. இதன் காரணமாக ஆட்சிப் பீடங்கள் யாவும் குழம்பிப் போயிருந்தன. இதனால் சமய எழுச்சிகள் சோழர்காலத்தில் இருந்ததைப் போல் உயர்நிலை அடைய முடியவில்லை. எனினும் தமிழகத்தைக் கூறுபோட்டு ஆண்ட பல அரசுகளிடையே சைவ, வைணவப் பற்று மிகுதியாக இருந்தது. இதனால் அக்கால அரசர்கள் சமய நலிவு நிலையைப் போக்க எண்ணி, புதிய ஆலயங்களையும், அடியவர்கள் தங்குவதற்கான மடங்களும், சமயப்பணி ஆற்றுவதற்கான ஆதீனங்களும் ஆங்காங்கே தோன்றி இக்காலத்தில் சமயத்தை வளர்த்தனர். இவ் விஜயநகர நாயக்கர் காலத்தை ஆய்வாளர்கள் இந்து சமய வரலாற்றில் மடாலயங்களும் ஆதீனங்களும் வளர்சசி பெற்ற காலமெனச் சிறப்பித்துக் கூறுமளவிற்கு இக்காலத்தில் தோன்றிய ஆதீனங்களும் மடங்களும் சைவசமய வளர்ச்சியில் பல்வேறு வகையான தொண்டுகளை ஆற்றி சமயத்தை வளர்த்தன.

பன்னெடுங் காலமாக பாதுகாக்கப்பட்டு வந்த இந்து சமயத்தொன்மையையும், நாயன்மார்களின் திருமுறைகளையும், வேத ஆகமம் நெறிமுறையையும் அழிய விடாது காப்பாற்றிய பெருமை ஆதீனங்களையே சாரும். ஆதீனங்கள் சமயக் கருத்துக்களையும், தத்துவக் கொள்கைகளையும் பரப்பும் பொருட்டு தோற்றுவிக்கப்பட்ட நிலையில்

1. தருமபுர ஆதீனம்
2. திருவாவடுதுறை ஆதீனம்
3. திருப்பனந்தாழ் ஆதீனம்
4. மதுரை ஞானசம்பந்தர் ஆதீனம்

போன்ற ஆதீனங்கள் உட்பட இன்னும் பல்வேறு ஆதீனங்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. திருக்கோவிலுள் ஞானியர் மடம்
2. திருநகர் செங்கோல் மடம்
3. காஞ்சிப் பீடம்

போன்ற மடங்களும் சைவ சமய வளர்சிக்குப் பெரும் பங்காற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இவை சைவசமயம் வளர வேண்டும் என்ற பெருநோக்கால் பெரியோர்கள், துறவு பூண்டோர், நல்மனம் வாய்க்கப்பட்ட அறிஞப் பெருமக்கள் தமது செல்வத்தினைப் பெருநிதியாக இவற்றுக்கு வழங்கி இவற்றினை வளர்த்துச் செல்வதனால் இவை தமது சேவையையே இலட்சியமாகக் கொண்டு செயற்படுகின்றன.

இவ் ஆதீன கர்த்தாக்கள் சைவம், தமிழ் இரண்டும் வளர வேண்டும் என்னும் பெருமுனைப்போடு செயற்படுகின்றனர். இவர்கள் அறிவும், அருளும் பூண்டு தொண்டு செய்யும் நிலையில் ஆதீனங்களைச் சார்ந்தோர் நூல்களை எழுதியும், மாணவர்களுக்கு உறையுளும், உண்டியும் கொடுத்து கல்வி கற்பித்தும் சமய உபதேசம் செய்தும் அத்துடன் குரு, சீட முறையில் கல்விப் பாரம்பரியத்தினை வளர்த்தும் வந்தனர்.

இவ் ஆதீனங்கள் ஆலயங்களை நிர்வகித்தலும், சைவ சித்தாந்த சாஸ்திரங்களை முறைப்படி உபதேசித்தும், வேத, மந்திர நூல்களைப் பதிப்பித்தும், தேவார பண்ணிசைக் கல்லூரி, சமய சாஸ்திர வகுப்புக்கள் என்பவற்றினை நிறுவியும், சமய சாஸ்திரங்களில் வல்லவர்களையும், தமிழ்ப்புலமை உள்ளவர்களையும் ஆதரித்து சைவசமய நூல்களையும், ஆய்வு நூல்களையும், தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களையும் எழுதுவித்தும் வெளியிட்டும், சமயப் பிரசாரம் செய்தும், திருக்கோயில் பணி ஆற்றியும், அநாதரவற்ற பிள்ளைகளைப் பேணியும், கல்விச் சாலைகளை எழுப்பியும், மருத்துவ மனைகளை அமைத்தும் இவை சமய, சமூகப் பணிகளை ஆற்றி வருகின்றன.

தமிழகத்தில் மிகவும் பழைமைவாய்ந்த , சிறப்புமிக்க ஆதீனங்களில் ஒன்றாக விளங்குவது திருவாவடுதுறை ஆதீனம். இவ் ஆதீனம் சமயப் பேருண்மைகளை உலகறியச் செய்வதிலும், திருமுறைகளைப் பேணிப் பாதுகாப்பதிலும், சமய நூல்களை அழிய விடாது பாதுகாத்தும் சமய வளர்ச்சிக்கு உதவுகிறது.இங்கு வாழ்ந்தோர் சிவஞானமாபாடியம், காஞ்சிபுராணம் உட்பட பல்வேறு நூல்களையும் யார்த்துள்ளனர். ஈழத்து சைவசமய வரலாற்றில் நாவலரின் பிரசங்கம் ஒரு தனித்துவப் போக்கினைக் கொண்டது. இதனைப் பாராட்டி "நாவலர்" எனும் சிறப்புப்பட்டம் கொடுத்துக் கௌரவித்தது. இவ் ஆதீனம், சமய தமிழ் பணியுடன் சமூகப் பணியையும் ஆற்றி வருகின்றது. ஆலய நிர்மாணம், சடங்குகள், சொற்பொழிவுகள், பிரசங்கம் ஆகியவற்றைக் கடைப்பிடித்தும் சமயத்தைப் பரப்பியும், ஏழைகளுக்கு உணவு, உடை, கல்வி போன்றவற்றை வழங்கியும், கல்விச் சாலைகளையும், பராமரிப்பு நிலையங்களையும் நிறுவி சைவசமய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியது என்றால் மிகையாகாது.

தென்நாட்டிலே சைவசித்தாந்தக் கொள்கைகளைப் பேணிப் பாதுகாக்கும் ஆதீனங்களில் தருமபுர ஆதீனமும் ஒன்று. பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோற்றம் பெற்ற இவ் ஆதீனம் துறவிகளின் இருப்பிடமாக விளங்குகிறது. இந்துசமயக் கோட்பாடுகளை நிலை நிறுத்துவதற்கு சைவத்திற்கும், தமிழுக்கும் அரிய தொண்டினை ஆற்றி வருகின்றது. சமயம் சார்பான பல்வேறு நூல்களை வெளியிட்டுள்ளது. ஆலயத் திருப்பணிகள், நூல்நிலையங்கள், அச்சகங்கள், வேதசிவாகமப் பாடசாலைகள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகப்பேற்று இல்லம், சமய பிரசார இல்லம், அநாதை விடுதி, பல்கலைக்கழக விடுதி, கோயில்கள் என்பவற்றினை அமைத்துப் பணியாற்றுகிறது. மாதாமாதம் " ஞானசம்பந்தம்" என்ற மாத இதழை வெளியிட்டு சமய உண்மைகளை வெளிப்படுத்துகிறது. சென்னையில் தேவார சமயப் பிரச்சார நிலையமொன்றை அமைத்துள்ளது. அங்கே குருபூசைகள், சைவசமய பிரசங்கங்கள், சைவ சித்தாந்த வகுப்புக்களையும் நடத்தி வருகிறது. இவ் ஆதீனம் சமய, சமூக, கல்விப் பணிகளுடன் மருத்துவப் பணியையும் ஆற்றி வருகின்றது.

திருப்பனந்தாழ் ஆதீனம் சமயப் பணி, தமிழ்ப்பணி, கலைப்பணி, மருத்துவப்பணிகளை ஆற்றி சமய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி வருகிறது. உயர்கல்வி வழங்கல், கால்நடை மருத்துவம், அச்சக வேலை போன்றவற்றுடன் சைவசித்தாந்தத்தைப் படிப்பதற்கு பலநூல் மொழிபெயர்ப்புக்களையும் மேற்கொள்வதுடன் " குமரகுருபரன்" என்ற மாதஇதழையும் வெளியிட்டு சைவசமய வளர்ச்சிக்கு உதவுகிறது.

அறுபத்து மூன்று நாயன்மாரது குருபூசையையும், பலவிதமான போட்டிகளையும், கண்பார்வையில்லாதவருக்கு மூக்குக் கண்ணாடி, மருந்துப் பொருட்கள் கொடுத்தும், தெய்வீக மாநாடுகளையும் நடத்தி குன்றக்குடி ஆதீனம் சமய, சமூக வளர்ச்சிக்கு உதவுகிறது.

மதுரை ஆதீனம் பல தெய்வீக அம்சம் நிறைந்த சொற்பொழிவுகள் ஆற்றியும், " சித்தாந்தம்" என்ற மாத இதழையும் வெளியிட்டு ஆன்மீக தத்துவங்களைப் பரப்பி சமய வளர்ச்சிக்கு உதவுகிறது.

ஈழத்திரு நாட்டிலும் ஆதீனங்களும், மடங்களும் இன்றுவரை தமது பணியைச் செய்யத் தவறவில்லை. குறிப்பாக நல்லை ஞான சம்பந்த ஆதீனம் குறிப்பிடத்தக்க பணிகளைச் செய்கிறது. சைவசமய உண்மைகளைப் பிரசாரம் செய்வதும், சிவதீட்சை வழங்கல், ஆகம நெறியைப் பரப்புதல், திருமுறைகளை ஓதல் ஓதுவார்களை வைத்து ஓதுவித்தல், புராணக் கதைகளை மக்களுக்கு பரப்புதல், இதிகாச நூல்களை பாமர மக்களுக்கு விளங்கக்கூடிய வகையில் பிரசாரம் செய்தல், வேதநெறி வகுப்புக்களை பிராமணச் சிறுவருக்கு ஏற்படுத்திக் கொடுத்தல், நலிவுற்றவர்களுக்கு வைத்திய உதவிகளை வழங்கல் போன்றவற்றைச் செய்து சமய வளர்ச்சிக்கு உதவுகிறது.

திருநெல்வேலியிலுள்ள வேதாந்த மடம் சற்சங்கம் கூடி சமய உண்மைகளை ஆற்றி வருகின்றது. அத்துடன் கிளிநொச்சியிலுள்ள மகாதேவா ஆச்சிரம், திருகோணமலையிலுள்ள அன்பு இல்லம் போன்றனவும் இன்றும் தம்மால் இயன்ற பணிகளை சைவசமய வளர்ச்சிக்காக ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

மேலே கூறிய கருத்துக்களைத் தொகுத்து நோக்கும் போது விஜயநகர நாயக்கர் காலப்பகுதியில் அழிவுறும் நிலையில் சைவ சமயத்தினை அழிய விடாது காப்பாற்றிய பெருமைக்குரியனவாக விளங்கிய ஆதீனங்கள், மடங்கள் பற்றியும், அவை எவ்வாறு தமிழ் நாட்டிலும் ஈழநாட்டிலும், சமய வளர்ச்சிக்கு உதவின என்பதைப் பற்றியும் நோக்கினோம். அன்று சைவ சமயத்தினை வளர்ப்பதற்காகத் தோன்றிய ஆதீனங்களும் மடங்களும் இன்றுவரை சைவசமயத்தினை வளம்படுத்திச் செல்கின்றன என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையும், சமயமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண் கனிந்த திருமுறை ஓர் அறிமுகம்

மு. சதீஷ்பாலமுருகன்
பொறியியல் பீடம்
இறுதி வருடம்

இனிமை பயக்கும் இசை தோன்றும் படியாகச் சுரங்களை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்குவதால் பிறப்பதைப் பண் என்கிறோம். இந்தப் பண்ணானது சங்ககாலம் தொட்டே பேசப்பட்டு வந்திருக்கிறது. அந்தக் காலத்தில் 103 பண்கள் புழக்கத்தில் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. சங்க நூலாகிய பரிபாடலிலே இப்பண்களில் பல பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. தேவாரத் திருப்பாடல்களிலேயும் இவை பயன்படுத்தப்பட்டிருக்கக் கூடுமெனினும், காலத்தாலழிந்தது போக எஞ்சியிருக்கும் தேவாரப் பதிகங்களில் இருபத்து மூன்று பண்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. சங்க மருவிய காலத்தில் வாழ்ந்தவராகக் கருதப்படும் காரைக்காலம்மையார் அருளிய திருப்பதிகங்களில் இன்று எமக்குக் கிடைத்துள்ளவை இரண்டு பதிகங்கள் மட்டுமே. அவை திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் என வழங்குகின்றன. இவற்றுள் ஒன்று நட்டபாடைப் பண்ணிலும் மற்றயது இந்தளப் பண்ணிலும் அமைந்துள்ளது. அவ்வாறு அமைந்தபோதும் அவை பாடப்பட்டு வந்த முறை பற்றித் தெளிவான செய்தி எதுவும் இன்றெமக்கு கிடைக்கவில்லை. வைணவ பிரபந்தமாகிய நாலாயிர திவ்ய பிரபந்தத்திலும் பண் முறைமை காணப்படுகிறது. இன்று வழக்கிலிருக்கும் திருமுறைப் பாடல்களில் பயின்று வரும் பண்களுக்கு உரியவை எனக் கருதப்படும் இராகங்கள் இவை:

| பண் | இராகம் |
|---|---|
| நட்டபாடை | கெம்பீரநாட்டை |
| தக்கராகம் | காம்போதி |
| பழந்தக்கராகம் | சுத்தசாவேரி, ஆரபி |
| தக்கேசி | காம்போதி |
| வியாழக்குறிஞ்சி | சௌராஷ்டிரம் |
| மேகராகக்குறிஞ்சி | நீலாம்பரி |
| இந்தளம் | மாயாமாளவகௌளை |
| சீகாமரம் | நாதநாமக்கிரியை |
| காந்தாரம் | நவரோஜ் |
| பியந்தைக்காந்தாரம் | நவரோஜ் |
| நட்டராகம் | பந்துவராளி |
| செவ்வழி | எதுகுலகாம்போதி |
| காந்தாரபஞ்சமம் | கேதாரகௌளை |
| கொல்லி | நவரோஜ் |
| கொல்லிக்கௌவாணம் | நவரோஜ் |
| கௌசிகம் | பைரவி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பஞ்சமம் | ஆகிரி |
| சாதாரி | பந்துவராளி |
| பழம்பஞ்சுரம் | சங்கராபரணம் |
| புறநீர்மை | பூபாளம் |
| அந்தாளிக்குறிஞ்சி | சாமா |
| செந்துருத்தி | மத்தியமாவதி |

இவற்றிலே செந்துருத்திப் பண் தவிர்ந்த ஏனைய பண்கள் எல்லாவற்றிலும் சம்பந்தப் பெருமான் பாடல்களையருளியுள்ளார். செந்துருத்திப் பண் சுந்தரரது பதிகங்களில் மட்டுமே இடம் பெற்றிருக்கின்றது. ஆனால் அந்தாளிக் குறிஞ்சிப் பண்ணோ சம்பந்தரது தேவாரங்களை மட்டுமே அலங்கரிக்கிறது. இன்று எம்வசமிருக்கும் பண்ணிசைப் பாடல்கள் முதலேழு திருமுறைகள் மட்டுமே. சிலர் திருவாசகப் பாடல்கள் முல்லைப் பண்ணில் அமைந்துள்ளன என்று கூறுவர். முல்லைப் பண்ணுக்குரிய இராகம் மோகனம், எனவேதான் திருவாசகம் மோகன இராகத்தில் ஓதப்படுகின்றதெனவும் வலியுறுத்துவர். தேவாரப் பாடல்களிலே மொத்தம் 795 பதிகங்கள் உள்ளன. அவற்றில் சம்பந்தர் 383 பதிகங்களையும் சுந்தரர் 100 பதிகங்களையும் பாடியுள்ளனர். ஏனையவற்றை அப்பர் சுவாமிகள் அருளியுள்ளார். கல்வெட்டிலிருந்து கிடைத்துள்ள பதிகம் ஒன்று சம்பந்தரின் பதிகமெனக் கருதப் படுகிறது. பின்வந்த தேவாரப் பதிப்புகளில் அப்பதிகம் பின்னிணைப்பாக பதிக்கப்பட்டுள்ளது. பண்ணிசைப் பாடல்கள் இறைவனின் சிறப்பையும் சைவநீதிகளையும் சித்தாந்தங்களையும் எடுத்தியம்புவனவாகவும் திருக்கோயில்களின் சிறப்புக்களையும் இயற்கை வருணனைகளையும் நகைச்சுவைக் கருத்துக்களையும் உடையனவாகவும் விளங்குகின்றன.

எங்கும் இறைவன் எதிலும் இறைவன் என்பது எமது சமய சித்தாந்தம். திருவீழிம்மிழலைப் பதியிலே இந்தக் கருத்தைச் சொல்லும் சம்பந்தப் பெருமான் சிறந்தன சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அடுக்கி நட்டபாடைப் பண்ணிலே அருட்பா ஒன்றை அருளுகின்றார். அதிலே முன்னதாக முதலாக அமைந்திருக்கிறது பண் என்ற சொல்.

" பண்ணும்பதம் ஏழும்பல வோசைத்தமி ழவையும்
உண்ணின்றதொர் சுவையும்முறு தாளத்தொலி பலவும்
மண்ணும்புனல் உயிரும்வரு காற்றுஞ்சுடர் மூன்றும்
விண்ணும்முழு தானானிடம் வீழிம் மிழலையே "

இறைவன் விரும்பி எழுந்தருளுகின்ற அருவ உருவங்களில் முன்னிடத்தில் பண் அமைந்திருப்பதாக கருத இது இடமளிக்கிறது. இதனையே இன்றைய பக்திப் பாடல்கள் " இசையால் வசமாகா இதயம் எது? இறைவன் இசைவடிவம் எனும்போது" என்றுரைத்து நிற்கின்றன.

இத்தகைய சிறப்பமைந்த பண்ணிசைப் பாடல்கள் இறைவனின் சிறப்பையும் சைவசமயிகள் பின்பற்ற வேண்டிய சிந்தனைகளையும் எடுத்தியம்புகின்றன. பாண்டி நாட்டு மன்னன் வழுதி வழிபிறழ்ந்து நிற்கின்றான். பாண்டிமாதேவிக்கும் அமைச்சருக்கும் சொல்லொணாக் கவலை. சம்பந்தப்பெருமானை அழைக்கிறார்கள். உடனே சம்பந்தர் புறப்பட்டுவிட்டார். உடனிருந்த அப்பரே "இன்று நாளும் கோளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றிலையே என்கிறார். அதற்கு சம்பந்தர் அடியவர்களுக்கு "நாளும் கோளும் நல்லனவே செய்யும்" என உரைத்து கோளறு பதிகத்தை அருளுகிறார். "ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார வர்க்கு மிகவே" எனக் கூறிப் புறப்பட்டு விட்டார். ஆண்டவனிடத்தில் அத்தகைய அசைக்க முடியாத நம்பிக்கை! பாண்டி நாட்டிற்கு வந்தாயிற்று; மன்னனை நேர்வழிப்படுத்தியாயிற்று. உடனிருந்த சமணர்கள் சம்பந்தரை வாதிட அழைக்கின்றார்கள். உடனிருந்த பாண்டிமாதேவிக்கோ இவரொரு பாலகனென்று பயம். அவரது பயத்தைக் குறிப்பாலுணர்ந்த சம்பந்தர் கொல்லிப் பண்ணிலே

" மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவன் என்றுநீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே"

என்று பாடுகிறார். ஆலவாயீசன் துணையாக இருக்கும் போது கொடுமை செய்பவர்களுக்கு நான் அஞ்சமாட்டேன். அவர்களது கொடுமைகளை வெல்வேன் என்ற அவரது பூரண நம்பிக்கை அங்கு வெற்றிக்கு அடிகோலியது. இதேகருத்தைச் சொல்ல விளையும் அப்பர் சுவாமிகள்.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்திலிடர்ப்படோம் இன்பமே யெந்நாளும் துன்பமில்லை" என்று பாடுகிறார்.

மேலும் நாம் சிவபிரானின் அடியாரகையால் "அஞ்சுவது யாதொன்றுமில்லை. அஞ்சவருவதுமில்லை". என்கிறார்.

மற்றவர் புகழ்ச்சிக் கெல்லாம் மயங்காமல் உள்ளதை உள்ள படியே உரைத்தல் வேண்டும். அவ்வாறே இறைவனைத் துதித்துப் பாடும் நீ உன் வாயால் பொய்யிலே உளலுகின்றவர்களையெல்லாம் பாடக்கூடாது என்று சொல்லும் சுந்தரர்.

"தம்மையே புகழ்ந்திச்சை பேசினுஞ்
சார்வினுந் தொண்டர்த் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்கள்...."

என்கிறார்.

அன்பு, பாசம், பொறுமை இவற்றையெல்லாம் நாம் கண்கூடாக கண்டநுபவிப்பது தாயிடமே. அத்தகைய தாயினும் நல்ல தலைவர் தான் நம் இறைவன் என்கிறார் சம்பந்தப்பெருமான். இறை வனிடத்தில் மாசற்ற அன்பு வைத்திருக்கும் எவருக்கும் துன்பம் என்று ஒன்றில்லை என அந்தாளிக் குறிஞ்சிப் பண்ணில் அழுத்தமாக சம்பந்தப் பெருமான் பாடியிருக்கிறார்.

"அன்புறு சிந்தைய ராகி அடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமணம் மேவிநின்று
இன்புறு மெந்தை இணையடி ஏத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டு செய்வாரே".


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே அவர் நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தின் சிறப்பை எடுத்தியம்பும் போது "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது "என்று கூறுகிறார். இச்சிறப்பையே அன்பே சிவம் என்று சுருக்கமாகக் கூறி நிற்கிறது திருமந்திரம்.

இவ்வாறான நீதிக்கருத்துக்கள் மட்டுமல்லாது இயற்கை வருணனைகளிலும் எமது பண்ணிசைப் பாடல்கள் சிறந்தோங்கியிருப்பது கண்கூடு. திருவையாற்றிலே திருவிழா பெண்கள் நடனமாடுகிறார்கள். முழவுகள் அதிர்கின்றன. இச்சத்தங்கள் சம்பந்தருக்கு மழையையும் இடியையும் நினைவூட்ட.

"வலம் வந்தமடவார்கணடமா முழவு அதிர மழையென்றஞ்சி சில மந்தி யலமந்து மரமேறி முகில் பார்க்கும் திருவையாறே "

என்று அழகான வர்ணனையொன்றை அமைத்து விடுகிறார்.

இவ்வாறே சுந்தரரோரிடத்தில்

"அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட
அணிமயில்கள் நடமாடும் அணி பொழில் சூழ் அயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளரும் களனிக்
கமலங்கள் முகமலரும் கலயநல்லூர் காணே"

என்று பாடுகிறார்.

சிவன்கோவில் ஒன்றில் திருவிழா, பக்தர்கள் குழுமி வழிபாடியற்றுகிறார்கள். அப்பரடிகளும் அங்கே வருகிறார். குழுமியிருக்கும் பக்தருள் ஒரு பெண் கொன்றை மலர் மாலை சூடியிருப்பதைஅவதானிக்கிறார். அவ்வளவுதான் அவருக்கே இயல்பானநகைச்சுவைவு பீறிட்டுக் கிளம்புகிறது. சிவன் தன் சடா மகுடத்தில் கங்கையைத் தரித்திருக்கிறார். இடப்புறத்திலே உமையம்மை வீற்றிருக்கிறார். தம்முடைய அடையாள மாலையாகிய கொன்றை மாலையை இந்த இருவருக்கும் தெரியாமல் எப்படிச் சிவன் அந்தப் பெண்ணுக்கு கொடுத்திருக்கக்கூடும் என்பதுதான் அவர் வியப்புத் தொனியுடன் வினாவும் வினா.

"கங்கை காணக் கொடார் முடிக் கண்ணியை
மங்கை காணக் கொடார் மணமாலையை
நங்கை மீரிடை மருதரிந் நங்கைக்கே
எங்கி வாங்கிக் கொடுத்தார் இதழியே"

அப்பரடிகளின் அருட் பாடல்கள் நகைச்சுவை மிக்கதாய் அமைந்து மற்றொரு சுவை பயப்பனவாகவும் விளங்குகின்றன.

சாஸ்திரக் கருத்துக்கள், இசைச்சிறப்பு, நகைச்சுவை, இயற்கை வருணனையென பல்வேறு அம்சங்கள் நிரம்பியனவாய் பண் கனிந்த திருமுறை விளங்குகின்றது. கிடைத்தற்கரிய இச்செல்வம் நமக்குக் கிடைத்திருந்தும் அதன் பெருமையை உணராதவர்களாய் நாம் இருக்கிறோம். இச்செல்வத்தை உரிய முறையில் பயன்படுத்தி வருங்காலச் சந்ததிக்கும் வழங்கி வழிவழி இச்செல்வம் துய்த்து இன்புற வழிவகுப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச்சனை பாட்டேயாகும்....

பரா. ரதீஸ்
தமிழ் விசேட துறை
இரண்டாம் வருடம் கலைப்பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

இந்துக்கள் மலர் தூவியும், தூபமிட்டும், தீபம் காட்டியும், சந்தனம் சாத்தியும், மந்திரம் ஓதியும், இசைமாரி பொழிந்தும் பலவாறாக இறைவனுக்கு வழிபாடு இயற்றுகின்றனர். இவற்றில் இறைவனை இலகுவில் வசம்ப்படுத்தக் கூடிய வழிபாட்டு முறையாக இசைவழிபாடு காணப்படுகின்றது.

அழகியற்கலைகளில் இசைக்கலையும் ஒன்றாகும். செவியினூடாக உள்ளத்திற்கு இன்பத்தைதருவதாக இசைக்கலை காணப்படுகின்றது. இசை என்றால் என்ன என்பதற்கு பலரும் பலவாறாக விளக்கம் கொடுத்துள்ளார்கள். " பல இயற்பாக்களுடனே நிறத்தை இசைத்தலால் இசை என்பது பெயராம்" என்று அடியார்க்கு நல்லாார் கூறிகின்றார். " இசை என்ற சொல்லானது மக்களினுடைய மனதை வயப்படுத்துவது, அசைவிப்பது என்னும் பொருளைத் தருகின்றது". என்று எம். எல். தண்டபாணி தேசிகர் குறிப்பிடுகின்றார். திரு. கா. சுப்பிரமணியப்பிள்ளை கூறுகின்ற போது " இனிமை தரத்தக்க இசைகளை இசைத்தொலிப்பது இசை" என்கிறார். இவர்களின் கருத்துக்களையெல்லாம் வைத்துப்பார்க்கின்றபோது மனிதமனங்களை கவரத்தக்கவல்லமை இசைக்கு உண்டு என்ற முடிவுக்கு வரலாம். சமயப் பெரியார்கள் மனிதமனங்களை மட்டுமன்றி இறைவனை வசப்படுத்தக்கூடியவல்லமையும் இசைக்கு உண்டு என்கிறார்கள்.

இசைவேறு இறைவன் வேறல்ல. இறைவன் இசையின் வடிவமாக விளங்குகின்றான். இதனை சுந்தரர் " ஏழிசையாய் இசைப்பயனாய்..." என்றும், அப்பர் "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே...." என்றும், அருணகிரி நாதர் "நாதவிந்து கலாதி நமோ நமோ வேதமந்திர ஸ்வரூபா நமோ நமோ...." என்றும் திருமூல நாயனார்.....

" மன்னு, மலைமேல் மதவாரணத்தின் மேல்
இன்னிசை பாட இருந்தவர் ஆரெனில்
முன்னிய கால முதல்வனார் நாமத்தைப்
பன்னினார் என்றே பாடறிவீரே" என்று பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேவாரமோதுதல், இசை வழிபாட்டின் பாற்படும் காரணம் இவை இசையை தன்னகத்தேகொண்டுள்ளமையேயாகும். தேவாரம் எனும் போது " தெய்வத்தை பரவும் இசைப்பாடல் என்று பொருள் கூறுவர். இத்தேவாரங்களை பக்தியோடு படிக்கின்றபோது உள்ளத்தூய்மையும், இறை சிந்தனையும், இன்ப உணர்வும் , இறைவனை அடைதற்குரிய வழியும் கிட்டுகின்றன. திருமுறைகளை இசையோடு ஓதுகின்றபோது உள்ளம் இறைவனை நாடிச் சென்று அவனோடு சம்மந்தப்படுகிறது. இதனை சம்பந்தர் பின்வருமாறு பாடுகின்றார்.

" புற்றில் வாழும் அரவ(ம்) அசை ஆர்த்தவன் புகலூரை
கற்று நல்ல அவர்காழின் ஞான சம்பந்தன் தமிழ் மாலை
பற்றி என்னும் இசைபாடிய மாந்தர், பரமன் அடி சோர்ந்து
குற்றம் இன்றி குறைபாடு ஒழியா, புகழ் ஓங்கிபொலிவீரே"

இறைவன் இசையின் மீது மிகுந்தஆர்வம் உடையவனாக காணப்படுகின்றான். " நான் வைகுண்டத்திலும் இல்லை, யோகியர் உள்ளத்திலும் இல்லை, சூரிய சந்திரமண்டலங்களிலும் இல்லை, மக்கள் கானம் செய்யும் இடங்களில் தான் இருக்கின்றேன்". என்று நாராயணணால் நாரதருக்கு கூறும் கூற்றில் இருந்து இதனை நாம் அறிந்து கொள்ளலாம். இறைவன் இலகுவில் இசைக்கு வசப்படக்கூடியவனாக காணப்படுகின்றான். இராவணன் கையிலையங்கிரியை பெயர்க்க முனைந்தபோது அங்கே அகப்பட்டுக் கொண்டான் அதாவது சிவபெருமானால் நெரிக்கப்பட்டான். அப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் சாமகானம் செய்தான். இசைக்கு வசப்பட்ட இறைவன் இராவணனை விடுதலை செய்தான். இதனை சம்பந்தர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

" தென் இலங்கை அரையன் வரை பற்றி எடுத்தான்
முடி திண்தோள்
தன் இலங்கு விரலால் நெரிவித்து இசைகேட்டு அன்று
அருள் செய்த
மின் இலங்கு அடையான் மடமாதோடு மேவும்
இடம் என்பரால்
பொன் இலங்கு மணி மாளிகை மேல் மதி தோயும்
புகழுரே"

இறைவன் இசைக்கு வசப்படக்கூடியவன் என்பதற்கு இச் செய்தி தக்கதோர் உதாரணமாகும்.

சமய உண்மைகளை மக்கள் மத்தியில் வெளிப்படுத்துவதற்கு சிறந்தஊடகமாக இசைக்கலை பயன்படுத்தப்படுகின்றது. இதனால் தான் போலும் அப்பர், சுந்தரர் போன்றோர் இசையோடு கூடிய பக்திப்பாடல்களைப் படைத்துள்ளனர் என்று எண்ணத்தோன்றுகின்றது. ஆகமங்களிலே கூட பதினான்காவது (14) பூசையாக இசை வழிபாடு கூறப்படுகின்றது. மலர் மாலையால் இறைவனை அலங்கரிப்பதைக் காட்டிலும் , பாமாலையினை இறைவனுக்கு சூட்டுவதே சிறந்தது ஆகும்.

இந்து இசைக்கலையினுடைய வளர்ச்சிக்கு குறிப்பிட்டு சொல்லத்தக்க பங்களிப்பினைப் பாணர்கள் செய்திருக்கிறார்கள் பண்டைக்காலத்தில் இசைக்கலையில் வல்லவர்களாக பாணர்களே இருந்தார்கள். இந்து மத வரலாற்றின் பல செய்திகளில் இருந்து பாணர்கள் இசைக்கலைக்கு ஆற்றிய பங்களிப்பினை அறிந்து கொள்கின்றோம். திருஞானசம்பந்தருடைய காலத்தில் திரு நீலகண்டயாழ்பாணர் இசையோடு பதிகங்களை ஓதுவதற்கு சம்பந்தருக்கு உதவிசெய்துள்ளார். வரகுணபாண்டியர் காலத்தில் வாழ்ந்தபாணபத்திரர் இசைக் கலைக்கு அளப்பரிய தொண்டினை ஆற்றியுள்ளார். தேவாரங்களுக்கு பண் அமைத்தது கூட திருநீலகண்ட யாழ்பாணர் மரபில் வந்த பெண்ணொருத்தியே என்பது குறிப்பிடத்தக்கது.

" அர்ச்சனை பாட்டேயாகும்". ஆதலால் என்னை இசையில்பாடுக என்று சிவபெருமான் சுந்தரருக்கு கட்டளையிட்டதாக ஒரு செய்தி பெரியபுராணத்தில் கூறப்படுகின்றது. அதாவது இறைவன் சுந்தரைப் பார்த்து மலர், தூபம், தீபம் போன்றவற்றால் அர்ச்சிப்பதைக் காட்டிலும் இசையால் அர்ச்சிப்பதே சிறந்தது இசையால் அர்ச்சிக்கும் அர்ச்சனை மீது எனக்கு மிகுந்தபிரியம் உண்டு எனவே என்னை இசையால் அர்ச்சிக்கவும் என்று கட்டளையிட்டதாக கூறப்படுகின்றது. இதனை சேக்கிழார் பின்வருமாறு பாடுகின்றார்.

" மற்றுநீவன்மை பேசி வன்றொண்டனென்று நாமம்
பெற்றனை நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
வற்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேனம்மைச்
சொற்றமிழ் பாடுக என்றார். தூமறை பாடும் வாயார்"

இறைவனை வழிபடுவதற்கு பல்வேறு வழிபாடுகள் காணப்பட்ட போதும் இலகுவான வழிபாட்டு முறையாகவும் இலகுவில் இறைவனை வசப்படுத்தக்கூடிய வழிபாடாகவும் இசைவழிபாடு காணப்படுகின்றது. எனவே நாம் இறைவனை இசையால் வழிபட்டு அவனருள் பெற்றுவையத்தில் வாழ்வாங்கு வாழ்வோமாக....

" சலம்பூவொடு தூபம்மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்".

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவியல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளந்தலைமுறையினரும் ஆன்மீகச் சிந்தனைகளும்

பேராசிரியர் க. அருணாசலம்
தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

மனித வாழ்வைச் செம்மைப்படுத்தவும் மனிதனை இவ்வுலகில் மனிதனாக வாழ்வாங்கு வாழவைப்பதற்கும் உலகச் சமயங்கள் முயன்று வந்துள்ளன. எமது முன்னோர்கள் கல்வி அறிவும் அனுபவ முதிர்ச்சியும் உடையவர்கள். உள் ஒளிவாய்க்கப் பெற்றவர்கள். தாம் பெற்றுக் கொண்ட முதிர்ந்த அனுபவங்களால் மனித வாழ்வைச் செம்மைப்படுத்த முயன்றனர். மனித வாழ்வு செவ்வனே அமைவதற்கு அவசியமான நெறிமுறைகள் பலவற்றை வகுத்தனர். இன்றைய உலகில் அவை பெருமளவிற்கு அலட்சியப்படுத்தப்படுவதனால் வன்முறைகளும் குரூரங்களும் அழிவுகளும் அமைதியின்மையும் பெருகி வருகின்றன.

தலைமுறை (Gereration) என்பதற்குப் பலரும் பலவகையான விளக்கங்களைக் கொடுத்திருந்தாலும் "ஒருவர் பிறந்து வளர்ந்து மற்றுமொரு சந்ததியை உருவாக்கிவிடும் வரை உள்ள (இருபத்தைந்து அல்லது முப்பது ஆண்டு) காலப்பகுதி" (க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, தமிழ் – தமிழ், ஆங்கிலம் 1992) என்னும் விளக்கம் பொதுவாக ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றாகும். இளவயதினர், நடுத்தர வயதினர், முதியவர், வயோதிபர் எனப் பயின்றுவரும் சொல்லாட்சிகளும் இங்கு அவதானிக்கத்தக்கவை.

ஒரு சமூகத்தின் ஏனைய தலைமுறையினருடன் ஒப்பிடுகையில் இளந்தலைமுறையினர் பல வழிகளிலும் மிகுந்த முக்கியத்துவம் பெறுவதை அவதானிக்கலாம். குழந்தைகளே வளர்ந்து இளந்தலைமுறையினர் ஆகின்றனர். குடும்பத்தலைவர்களாகவும் தலைவிகளாகவும் விளங்கிச் சமூகத்தினை முன்னெடுத்துச் செல்கின்றனர். அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளினதும் பல்வேறு நிறுவனங்களினதும் தலைவர்களாகவும் பொறுப்புமிக்கவர்களாகவும் விளங்கவிருப்பவர்கள். இத்தகைய இளந்தலைமுறையினரை எந்த ஒரு சமூகம் மனம் போனபடியெல்லாம் செயற்படவிடுகின்றதோ அவர்களை நன்னெறியில் வழிப்படுத்தத்தவறுகிறதோ அச்சமூகம் சீரழியும் என்பதைச் சமூக வரலாறு உணர்த்தி நிற்கிறது. குழந்தைகளை நன்நெறிப்படுத்துவதிலும் கல்வியில் ஆர்வம் கொள்ளச் செய்வதிலும் மனித நேசிப்பிலும் மனித விழுமியங்களைப் பேணுவதிலும் நாட்டமுடையவர்களாக்குவதிலும் பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மட்டுமன்றி ஆட்சியாளர்களுக்கும் பெரும்பங்குண்டு என்பதை நாம் மனங் கொள்ள வேண்டும்.

இளந்தலைமுறையினர் தீவிர உணர்ச்சிமுனைப்பும் உற்சாக செயல்துடிப்பும் நிறைந்தவர்கள். தாம் விரும்பியவற்றை அடைவதற்குத் தீவிரமாகச் செயற்படுபவர்கள். மனோவேகம் மிக்க அவர்கள் உலக இன்பங்களையெல்லாம் அனுபவிக்கத் துடிப்பவர்கள். நன்மை, தீமைகளைப் பகுத்து நோக்குவதில் பொறுமையற்றவர்கள். இவற்றுக்குப் புறநடையாக விளங்கும் ஒரு சிலரும் அபூர்வமாக உள்ளனர் என்பதையும் நாம் மறுப்பதற்கில்லை.

இத்தகைய இளந்தலைமுறையினரைச் சிறுபராயத்திலிருந்தே நல்வழிப்படுத்துதல் மிகமிக அவசியமானதாகும். " ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்னும் சான்றோர் வாக்கினை நாம் எளிதில் அலட்சியப்படுத்த முடியாது.

இளந்தலைமுறையினரது உள்ளத்தைப் பண்படுத்தவும் உயர் விழுமியங்களைப் பேணவும் போற்றவும் வாழ்வில் ஏற்படும் இன்பதுன்பங்களையும் பெருஞ்சவால்களையும் ஏற்றுத் துணிவுடன் செயற்படவும் ஏற்றவாறு பயிற்றுவிக்க வேண்டும். இவற்றுக்குப் பலவழிமுறைகள் உள்ளன. அவற்றுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக முக்கியமானது சிறுபராயத்திலிருந்தே அவர்களிடம் ஆன்மீகச் சிந்தனைகளைத் தாய்பாலை ஊட்டுவது போன்று ஊட்டி வளர்த்தெடுப்பதாகும்.

எமது நீண்டகால இந்தியச் சிந்தனை மரபில் வாழ்க்கை பற்றிய பல அரிய செய்திகள் காணப்படுகின்றன. காலம் காலமாகப் போற்றப்பட்டு வந்த உயர்ந்த விழுமியங்களுடன் கூடவே சிற்சில தீமையான கருத்துக்களும் இடையிலே உட்புகுந்து இன்றுவரை இந்து சமூகத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றன. யுகப் பெருங்கவிஞனான பாரதியார் கவிதைகளின் மூலமும் கட்டுரைகளின் வாயிலாகவும் இவற்றை மிகவும் தெளிவான முறையில் வெளிப்படுத்தியுள்ளார். அதே சமயம் அவர் தாம் காண விழைந்த புதிய யுகத்தினை கிருத யுகத்தினை "ஆத்மீகம்" என்னும் வைரம் மிக்க அத்திவாரத்தின் மீதே கட்டியெழுப்ப விளைந்தார் என்பதனை அவரது சகல படைப்புகளும் நிரூபித்து நிற்கின்றன.

இந்துக்களது வாழ்வில் மூவாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகக் "குருகுலக் கல்விமுறை" நிலவி வந்துள்ளது. அக்கல்விமுறையில் மிகச் சிறந்த நன்மைகளும் ஒருசில குறைபாடுகளும் இடம்பெற்று வந்துள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து இந்தியா, இலங்கை முதலிய நாடுகளில் "நவீன கல்வி முறை" அறிமுகமாகத் தொடங்கின. அக்கல்விமுறையிலும் மிகச் சிறந்த நன்மைகளும் ஒருசில குறைபாடுகளும் காணப்படுவதை இன்று பலரும் ஏற்றுக் கொண்டு அவற்றுக்கான தீர்வு மார்க்கங்களையும் காண முயன்று கொண்டிருக்கின்றனர்.

குருகுலக்கல்வி முறையின் மிக முக்கியமான அம்சங்களுள் ஒன்று சமயக்கல்விக்கு அது கொடுத்து வந்துள்ள பிரதான இடமாகும். அதனால் ஏற்பட்ட மாபெரும் நன்மைகள் அதிகம். தீமைகள் சொற்பம்.

"அறிவியல்யுகம்," "கணனியுகம்" என்றெல்லாம் போற்றப்படும் இற்றைநாளில் சமயக் கல்வியின் அவசியத்தை உலக நாடுகள் பலவும் வற்புறுத்தி வருகின்றன. அறநெறிப் பாடசாலைகளையும் தியான நிலையங்களையும் இளைஞர் நலன்புரி நிலையங்களையும் நிறுவித் தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இத்தகையதொரு நிலையில் உலக நாடுகள் பலவற்றிலும் ஒவ்வொரு குடும்பத்திலும் இளந்தலைமுறையினரை நல்வழிப்படுத்த முடியாது பெரும்பாலான பெற்றோர்கள் தவித்துக் கொண்டிருக்கின்றனர். பெற்றோர்களுக்குப் பிள்ளைகள் அஞ்சி வாழ்ந்த காலம் போய், பிள்ளைகளுக்கு அஞ்சிப் பெற்றோர்கள் வாழவேண்டிய பரிதாப நிலையே இன்று அதிகமான குடும்பங்களிற் காணப்படுகின்றது.

மனஉளைச்சல்களுக்கும் தாழ்வுச் சிக்கல்களுக்கும் அதிக அளவில் உள்ளாகும் பருவம் இளமைப்பருவமாகும். கல்நெஞ்சையும் கரைய வைக்கும் திருவாசகத்தைப் பாடியவரும் பிரமச்சாரியும் புலனடக்கம் மிகுந்தவருமான மாணிக்கவாசகர், தாம் இளவயதில் எத்தகைய உபாதைகளிலிருந்தெல்லாம் தப்பிப் பிழைத்தார் என்பதனை... யானை முதலா யெறும் பீராய ... எனத் தொடங்கி விபரித்துச் செல்கிறார்.

உலகின் இன்றைய சூழ்நிலைகள் இளம் பருவத்தினரின் மனஉளைச்சல்களை மிகுவிப்பனவாகவே காணப்படுகின்றன. விஞ்ஞான தொழில்நுட்பத்துறைகளும் தொடர்பு சாதனங்களும் இன்று மிக வேகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றினால் ஏற்படும் சாதகமான விளைவுகளை மட்டுமன்றிப் பாதகமான விளைவுகளையும் எண்ணிப் பார்த்தல் வேண்டும். திரைப்படம், தொலைக்காட்சி, பத்திரிகைகள் முதலியன மட்டுமன்றி அண்மையில் எமக்கு அறிமுகமாகிய இணையம், மின்அஞ்சல் முதலியனவும் கூட துரதிஷ்டவசமாகப் பாலியலை மூலதனமாகக் கொண்டு கொள்ளை இலாபமீட்ட முனைவதையும் அவை இளந்தலைமுறையினரை வெகுவாகப் பாதிப்பதையும் நாம் உன்னிப்பாக அவதானிக்க வேண்டும். அதேசமயம் பாலியல் சார்ந்த எயிட்ஸ் என்னும் "ஆட்கொல்லி நோய்" விஞ்ஞான, தொழில்நுட்ப, மருத்துவத்துறைகள் மெத்தவும் வளர்ந்துள்ள மேலைநாடுகள் முதல் அத்தகைய வளர்ச்சியற்ற கீழைநாடுகள் வரை நவீன யமனாகச் சகலரையும் அச்சுறுத்திக் கொண்டிருப்பதையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல இலட்சக் கணக்கான உயிர்களைப் பலியெடுத்துள்ளமையையும் நாம் இலகுவில் அலட்சியப்படுத்த முடியாது.

இப்பூமிப் பந்தில் அமைந்துள்ள சகல நாடுகளையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இன்னுமொரு நவீன யமன் போதைவஸ்து என்பதாகும். போதைவஸ்துகளில் தான் எத்தனை ரகம் ! எத்தனையோ சட்டதிட்டங்களையும் மீறிப் போதைவஸ்துப் பாவனை இளந்தலைமுறையினர் முதல் முதிய தலைமுறையினர் வரை பெரும்பாலானவர்களை வெகுவாகப் பாதித்துக் கொண்டிருக்குமாற்றை நாள்தோறும் தொடர்பூடகங்களினூடாகக் கேட்டுக் கேட்டு அலுத்துப் போய் விட்டது. இவற்றுக்கு ஏதாவது தீர்வு மார்க்கம்!

மேற்கண்டவற்றுக்கப்பால், எமது நாட்டைப் பொறுத்தவரை, கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தக் கொடுமைகள், பலப் பரீட்சைக் கெடுபிடிகள், உயிர், உடைமை இழப்புகள், இடப்பெயர்வுகள், புகலிடம் தேடியோடுதல், அகதி வாழ்க்கை, ஏதிலி நிலைமை முதலியன எமது இளந் தலைமுறையினரை எந்த அளவிற்குப் பாதித்திருக்கும் என்பதை முதிய தலைமுறையினராகிய நாம் சற்றே சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். எமது அன்றைய இளமை வாழ்க்கையையும் இன்றைய இளந்தலைமுறையினரது வாழ்க்கை நிலையும் ஒப்பிட்டுப் நோக்கும் போது கண்டறியாதன பலவற்றைக் காண நேரிடும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. புகலிடம் தேடி மேலை நாடுகளுக்குச் சென்ற பலர் கலாசாரச சீரழிவுகளுக்கு உள்ளாவதும் விசனத்துக்குரியதாகும்.

மனிதனிடம் பொருளாதார வேட்கையும் உலக சுகபோக நாட்டமும் அதிகம் மேலோங்குமிடத்து அன்பு, பாசம், கருணை, சத்தியம், நேர்மை, தியாகம், முதலிய அருகிச் சமுதாயம் அமைதியிழந்து தவிக்க நேரிடுகின்றது. காலம் காலமாகச் போற்றப்பட்டு வந்த மனித விழுமியங்கள் பலவற்றை இன்று மனிதரிடத்துக் காண்பதிலும் மிருகங்களிடம் காண்பது சுலபமாக உள்ளது.

மேற்கண்ட நிலைமைகளிலிருந்து இளந்தலைமுறையினரைப் பாதுகாப்பதில் ஏனையோரைப் போன்று ஆட்சியாளர்களுக்கும் பெரும் பங்குண்டு. பாலியல் வன்முறைகள், பாலியல் வணிகம், கொலை, கொள்ளை, வன்செயல்கள், போதைவஸ்துப் பிரேயாகம் முதலியவற்றைத் தடுப்பதில் ஆட்சியாளர்களே கூடுதலான பங்களிப்பினைச் செலுத்த முடியும்.
இளந்தலைமுறையினரைச் சிந்திக்க வைக்கும் வகையிலும் அவர்களது ஆக்கத்திறனை வளர்த்துக் கொள்ளும் வகையிலும் ஆத்மீக ஈடுபாட்டினை ஏற்படுத்தும் வண்ணமும் கல்வி முறை அமைதல் வேண்டும்.

உலகில் இன்று பல்வேறு துறைகளும் அறிவியல் மயமாகிக் கொண்டிருக்கின்றன. கணனியுகம் என்று சிறப்பித்துக் கூறுமளவிற்குக் கணனியின் செல்வாக்கு நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. எவற்றையும் அறிவியல் பூர்வமாகச் சிந்திக்கும் ஆற்றலை இன்றைய தொழில்நுட்ப, அறிவியல் முன்னேற்றங்கள் இளந்தலைமுறையினருக்கு நல்கிக் கொண்டிருக்கிறன. எவற்றையும் அறிவியல்பூர்வமாகச் சிந்திக்கும் ஆற்றலை இன்றைய தொழில்நுட்ப, அறிவியல் முன்னேற்றங்கள் இளந்தலைமுறையினருக்கு நல்கிக் கொண்டிருக்கின்றன.

விஞ்ஞானத்திற்கும் மெய்ஞ்ஞானத்திற்குமிடையில் ஒற்றுமை காணும் முயற்சிகளும் அறிவியல் முன்னேற்றங்களையும் மனிதநேயத்தையும் இணைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்றைய உலகின் கல்வி முறையிலும் இவை இரண்டுமே வளர்த்தெடுக்கப்படும் போது தான் மனித வாழ்க்கை அர்த்தம் நிறைந்ததாகவும் மேம்பாடுடையதாகவும் விளங்க முடியும்.

இளந்தலைமுறையினரின் உள்ளங்களில் ஆத்மீகச் சிந்தனைகளை வளர்த்தெடுப்பதில் பெற்றோர்களும் சமய நிறுவனங்களும் ஆத்மீகத் தலைவர்களும் பெரும் பங்களிப்பினை நல்க முடியும். இளந்தலைமுறையினரின் உள்ளங்களில் ஆத்மீகச் சிந்தனைகளை வளர்த்தெடுப்பதன் மூலமே அவர்களிடம் குரூர, வக்கிர மனப்பான்மை உருவாகி வளர்வதைத் தடுக்க முடியும். அன்பு, கருணை, பாசம், நேர்மை, தியாக உள்ளம் முதலிய நற்பண்புகளை வளரச் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருக

பூ. சோதிநாதன்
விரிவுரையாளர்
பொருளியல் துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

பல சிக்கல்களும் நிரம்பிய உலகிலே வாழுவதற்கு முதலிலே தேவைப்படுவது எளிமை எனப் பல அறிஞர்கள் சிந்தித்தும், எழுதியும், பேசியும், நடந்து காட்டியும் வந்திருக்கின்றார்கள். பொருளியல் அறிஞரான சூமாக்கர், மருத்துவத்தைக் கற்றுப் பட்டம் பெற்றுப் பின் சிந்தனை முறை பற்றியே ஆராய்ந்து பல நூல்களை எழுதிய எட்வேட் த.பொனோ முதலாகப் பல துறைகளிலும் தொண்டாற்றிய பலரை இதற்கு உதாரணமாகக் கூறலாம். அவர்கள் கண்ட, தெரிவித்த, கடைப்பிடித்த எளிமையிற் சில வேறுபாடுகளைக் கூட ஒருவர் அவதானிக்கலாம். எனினும், உலகிலே பலரது சிந்தனையைக் கவரக்கூடிய ஒரு விடயமாக எளிமை இருந்து வந்திருக்கின்றது என்பதை இவற்றில் இருந்து மட்டுமன்றி, எமது நாளாந்த வாழ்வுச் சிக்கல்களிலே கடுமையாகத் திணறுகின்ற வேளைகளில் நல்லதென எண்ணிப் பின் அடிக்கடி மறந்து போகின்ற ஒன்று என்பதிலிருந்து அறியலாம். எம்மைச் சுற்றிச் சுழன்று தாக்குகின்ற சிக்கல்களினால் நாமே ஏற்படுத்திக் கொண்ட நெஞ்சக் கனகல்லை இளக்கிக் கொள்ள எளிமையினாலேயே சாத்தியமாகும்.

எம்மிற் பலர் எளிமை என்றால் ஒதுங்கிக் கொள்ளுகின்ற ஒரு வெளித்தோற்றம் மட்டுமே என்று நினைக்கின்றோம். அதாவது சில உடைமைகளை வைத்திருப்பது, கோவணம் மட்டும் அணிவது, வீடுவாசலின்றி இருப்பது, சில உடைமைகளுடன் வாழ்க்கையைச் சமாளிப்பது, ஒரு சிறிய வங்கிக் கணக்கை வைத்திருப்பது எனக்கருதுகின்றோம். பல சமயங்களில் ஒருவரைக் குறிப்பிட்டு "அவர் ஒரு எளிமையான மனிதர்", எனக் கூறும்போது மேலேயுள்ள அர்த்தத்திலேயே பயன்படுத்துவதைக் காண்கிறோம். ஆனால் அப்படியான எளிமை உண்மையான எளிமை அன்று. அது ஒரு வெளி நடிப்பு மட்டுமே. அது எளிமை அன்றெனின் டாம்பீகமாயோ, படாடோபமாயோ வாழ்வது எளிமை என்ற முடிவுக்கு ஒருபோதும் வரவேண்டியதில்லை. எனவே எளிமை என்பது ஒருவர் தனது மன ஓட்டங்களைக் கணத்துக்குக்கணம் விழிப்போடு அவதானித்துச் சுயஅறிவைப் பெற ஆரம்பிக்கும் போது அதற்குள் பிரவேசிக்கலாம் என்று மட்டும் கூறக்கூடிய ஒரு விடயமாகும்.

ஒருவர் தன்னை ஏதோ ஒரு முறைக்குச் சரிசெய்து கொள்வது மட்டும் எளிமை அன்று. எளிமையாய் இருப்பதற்கு மிகக்கூடிய விவேகம் தேவை. ஏனெனில், மனம் தனது வழமையான பழகிப்போன தடங்களிலே ஒன்றை விட்டு ஒன்றுக்குத் தாவி ஓடி விவேகத்தை என்றுமே தடுக்கக்கூடிய மிகப்பெரிய ஆற்றலுடையது என்பதனால் ஆகும். அத்துடன் புறத்தில் எவ்வளவுதான் பயனுள்ளதாக இருந்தாலும் ஒரு குறித்த முறைக்கு இணங்கிப் போவது அல்லது ஒத்துப்போவது மட்டும் எளிமை அன்று. எம்மில் பலரும் எளிமையை எதிர்பாராத விதமாகப் புறத்திலேயும், வெளி விடயங்களிலுமே தேட முயற்சிக்கின்றோம். சில பொருட்களை மட்டும் வைத்துக்கொண்டு அவற்றுடன் திருப்திப்படுவது ஒப்பீட்டு அடிப்படையில் இலகுவானதாகும். உண்மையிலே சிலவற்றோடு திருப்திப்பட்டுக்கொண்டு, அவற்றையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது இலகுவானதும் சாத்தியமானதுமே. ஆனால் விடயங்களிலும், பொருட்களிலும், உடைமைகளிலும் எளிமையைப் புறத்தே கடைப்பிடிப்பது மட்டும் உண்மையில் அகத்தேயுள்ள எளிமையைக் குறிக்கப்போவதில்லை. .

தற்போதுள்ள நிலையில் உலகம் புறத்தே வெளிப்பகட்டான விடயங்களை மேலும் மேலும் எம்மீது சுமத்தித் திணித்துக் கொண்டிருக்கின்றது. இதனால் வாழ்க்கை மேலும் மேலும் அதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கலாகிக் கொண்டே வர அதிலிருந்து தப்பிக்கொள்ளும் பொருட்டு விடயங்களையும், பொருட்களையும், துறந்து பற்றற்றிருக்கப் பலர் முயற்சி செய்கின்றோம். அதாவது பல சமயங்களில் புறத்தேயிருந்து எம்மீது சுமத்தப்படும் விடயங்களில் இருந்தும், கார் முதலான ஆடம்பர பொருட்களில் இருந்தும், திரைப் படங்களில் இருந்தும் பற்றற்றுத் துறவு பூணமுயற்சிக்கின்றோம். அப்படி ஒதுங்குவதன் மூலம் எளிமையாக இருக்கலாம் என்றும் நினைக்கின்றோம். ஆனால் அவ்வாறு செய்தும் எளிமையாக இருக்க முடிவதில்லை.

அடிப்படையான, உண்மையான எளிமை புறத்திலே இருந்து அன்றி அகத்திலேயே மலர முடியும். அவ்வாறு மலரும் அக எளிமையிலிருந்து இயல்பாகப் புறத்திலேயும் அதன் வெளிப்பாடு ஒன்று இருக்கும். அகத்தில் இருந்துவரும் எளிமை ஒருவரின் நெஞ்சக்கனகல்லை மேலும் மேலும் இளகச்செய்யும். விரைவாகப் புலன்களினால் அறிவதற்கும், விரைவாக எதையும் இது, இதுதான் என அடையாளங் காண்பதற்கும் வேண்டிய ஆற்றலைப் பெறுவதற்கு ஓர் இளகிய நெஞ்சம் அவசியமானது ஆகும்.

ஒருவர் தான் வெளிப்படையாகவோ, மறைவாகவோ கொண்டிருக்கின்ற எண்ணற்ற தடைகள், பற்றுக்கள், பயங்கள், என்பவற்றைப் புரிந்து கொள்வதன் மூலம் மட்டுமே உண்மையில் அகத்தே எளிமையைக் காணலாம். ஆனால் நாமோ எம்மை மற்ற மனிதர்கள், உடைமைகள், எண்ணங்கள் முதலானவை ஆட்கொள்வதையே எம்மையறியாமலே விரும்புகின்றோம். அதாவது, நாம் அவர்களினதும், அவற்றினதும் சிறைவாசிகளாய் இருக்கப் பழக்கதோஷத்தினாலே விரும்புகின்றோம். அதனாலே புறத்தே எளிமையை மேலோட்டமாக எண்ணிக்கொண்டும், விரும்பிக்கொண்டும் அகத்தே நாம் சிறை வாசிகளாக இருக்கின்றோம். எமது ஆசைகளுக்கும், எமது விருப்பங்களுக்கும், எமது இலட்சியங்களுக்கும், எண்ணற்ற தூண்டுதல்களுக்கும் அடிமையாகி விடுகின்றோம். ஆனால் ஒருவர் அகத்தே விடுதலையானால் அன்றி அவராலே புறத்தே எளிமையைக் காணமுடியாது.

எளிமையைத் தடைபோடுவதில் நம்பிக்கையும் ஒருமுக்கிய விடயமாகும். மனம் எதற்காக ஒரு நம்பிக்கையிலே பற்றுவைக்கின்றது? நம்பிக்கை என்பது உண்மையென்று நிரூபிக்கப்படாமல் உண்மைபோல ஏற்றுக் கொள்ளப்படுவதாகும். அது எதுவாயிருப்பினும், ஒரு நம்பிக்கையை விஞ்ஞான பூர்வமாக நிரூபித்துவிட்டாற் பின்பு அது உண்மையே அன்றி நம்பிக்கை அன்று. எனவே நம்பிக்கை என்றால் என்ன, அது எப்படிச் செயற்படுகிறது, மனம் அதில் எப்படித் திருப்தி காண்கிறது, முதலானவற்றை ஒருவர் ஆழமாகச் சிந்தித்துப் புரிந்து கொள்ளுகின்ற போது அங்கே சொல்ல முடியாத ஒரு விடுதலையைக் காணலாம். நம்பிக்கைகளில் இருந்து விடுதலை பெறும்போது அங்கே எளிமை தானாகவே மலரும். ஆனால் அந்த எளிமை மலர மிக சிறந்த விவேகம் தேவையாகும். மிக சிறந்த விவேகத்தோடு ஒருவர் எப்பொழுதும் இருக்க வேண்டுமாயின், அவர் தனது சொந்த இடையூறுகளை ஒவ்வொரு கணமும் விழிப்போடு உணர்ந்து கொள்ள வேண்டும். அவ்வாறு விழிப்போடு இருப்பதற்கு நிறைந்தசக்தி தேவைப்படும். எனவே ஒருவர் தனது சக்திகள் எல்லாவற்றையும் ஒன்றுபடுத்தி விழிப்போடு ஒவ்வொரு கணமும் உணர்வதற்கு ஏதாவது ஒரு குறித்த முறையிலே சிந்தனையோ செயலோ செய்யாது, தனக்கென ஓர் ஒதுக்கிடத்தைத் தேடிக் கொள்ளாது தொடர்ச்சியாக அவதானத்துடன் இருக்கவேண்டும்.

ஒருவர் அகத்தே எப்படி இருக்கின்றாரோ அதுதான் அவர் காணுகின்ற புறத்தோற்றப்பாடும் ஆகும். அதாவது அகமே புறத்தைத் தோன்றுவிக்கின்றது. நாம் வாழும் சமூகம், எமது அமைப்புக்கள் யாவும் எமது அகத்தின் எதிர்பார்க்கைகளும், வெளிப்பாடுகளுமே ஆகும். (இக்கருத்துக்கான பரந்த விரிவான விளக்கத்தை, ஜேம்ஸ் அலன் என்பவரின் As a man thinketh என்ற நூலிலும் ஜே. கிருஷ்ணமூர்த்தியின் You are the world என்ற நூலிலும் காணலாம்) எனவே அகத்தை மாற்றுா்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவரும் சீர்திருத்தங்கள், புரட்சிகள் யாவும் புறத்தே எதுவிதபாரிய தாக்கத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. அச்சீர்திருத்தங்கள் சில சரிக்கட்டல்களைச் சிறிது காலத்திற்குக் காட்டி மீண்டும் பழைய படி அகத்தேயுள்ள நிலையையே புறத்தேயும் நிலவச் செய்யும். அகத்தே நாம் எவ்வளவு சிக்கலான பேராசைகளோடு இருக்கின்றோமோ, புறத்தே சமுதாயத்தை எவ்வளவு கவனமாக திட்டமிட்டு நல்லதாக அமைக்கப் புறப்பட்டாலும் புறத்தே அவ்வளக்கு அவற்றின் பிரதிபலிப்பான சிக்கல்கள் இருந்தே தீரும்.

புறத்தினூடாக அகத்தைக் காண்பதே அன்றிப் புறத்திலே சீர்திருத்தங்களை ஏற்படுத்த, அகம் ஒரு சிறிது வித்தியாசப்பட்டாலும் பெரும் மாற்றத்தையோ மலர்ச்சியையோ காண முடியாது. புறத்தை நிராகரிக்காமலும், விலக்காமலும் புறத்தைப் புரிந்துகொண்டு அகத்துக்கு வந்து அதன் சிக்கல்களை ஆராய்ந்து கொண்டு போகப்போக நாம் மேலும் மேலும் இளகிய மனமுடையவராகவும், விடுதலை அடைபவராகவும் ஆவோம். அந்த இளகிய விடுதலை அடைந்த எளிமைதான் மனிதவாழ்க்கைக்கு மிக முக்கியமானது. இளக்கமற்ற, விழிப்படையாத மனம் சுறுசுறுப்பற்று மந்தமாக இருப்பதனால் எல்லா வற்றையும் ஏற்றுக்கொண்டு எவ்வித ஆக்கத்திறனான செயலையும் செய்ய ஆற்றலற்றதாகி விடுகிறது.

எம்மை எளிமையாக்குவதற்கான ஒருவழியாக இணங்கிபோவதைக் கடைப்பிடிப்போமாயின் அதனால் உண்மையில் எமது மனத்தையும், இதயத்தையும் மந்தமாக்கிக் கல்லாக மாற்றிவிடுவோம் .எவ்வகையான அதிகார வற்புறுத்தல் வடிவமும், அது தனக்குத் தானே ஏற்படுத்திக் கொள்வதாயோ மற்றவர்கள் திணிக்க ஏற்றுக் கொள்வதாயோ இருந்தாலும், அகத்தே எளிமை இல்லாவிடின் நெஞ்சத்தைக் கல்லாக்கியே தீரும். பலர் தம்மைச் சமயிகள் என்று கூறிக்கொண்டு செய்யும் செயல்கள் போல எதற்கும் இணங்கிப்போய்ப் புறத்தே ஓர் எளிமைத் தோற்றத்தை மட்டுமே அதனாற் காட்ட முடியும். அவர்கள் பலவிதமான ஒழுக்கங்களை மேற்கொண்டு, பலவிதமான சமய நிறுவனங்களில் ஒன்றிலோ பலவற்றிலோ சேர்ந்து, ஏதோ ஒரு வகையான தியான முறையைப் பின்பற்றி, அதனால் வரும் தோற்றத்தைப் புறத்தே காண்பிக்கின்றார்கள். ஆனால் இணங்கிப் போவதற்காக மேற்கொள்ளும் அச்செயல்கள், ஒருவரின்நெஞ்சக் கனகல்லை இளக்கி எளிமையாக்காது. தனதோ, பிறரினதோ எவ்வகையான வற்புறுத்தலும் ஒருவரை ஒருபோதும் எளிமைக்கு அழைத்துச் செல்லமாட்டாது. அதற கு மாறாக அவ்வற்புறுத்தல் அவரை மேலும் மேலும் அவரது எளிமையைத் தடுக்கவும், எளிமைக்குப் பதிலான பதிலீடுகளைப் பின்பற்றவுமே அழைத்துச் செல்லும். ஆனால், அந்த அடக்கு முறை, பதிலீடு, இணங்கிப்போதல் என்பன எவ்வாறு மிகமிக ஆழமாகவும், நுண்மையாகவும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைக் கூர்ந்து அவதானிக்கப் புறப்பட்டால், அப்புறப்பாடே எளிமைக்கு அழைத்துச் சென்று அதனை மலரச் செய்யும்.

எம்மைச்சுற்றி நெருக்கி வருகின்ற சிக்கல்களை அசாதாரணக் கெட்டித் தனத்தினாலோ, புலமையினாலோ அன்றி எளிமையினாலேயே இலகுவாகச் சந்தித்துத் தீர்க்கலாம். சிக்கலான ஒரு மனிதனைக் காட்டிலும், எளிமையானவன் எதையும் நேரடியாகப் பார்த்து நேரடியான அனுபவங்களைப் பெற்றுக்கொள்கிறான். கருத்துக்கள் அடங்கிய எல்லையற்ற அறிவோடு எமது மனங்களை நிரப்பிக் கொண்டு இருக்கின்றோம். அதுவும் மற்றவர்கள் சொன்னவற்றை மனங்களிலே குவித்து இரண்டாந்தர மனிதர்களாக இருக்கின்றோம். எம்மைப் பற்றிய நேரடி அனுபவத்தைப் பெறாததில் எம்மிடம் எளிமை மலராது நெஞ்சம் கனகல்லாகி விட்டது.

எளிமையை மலரச்செய்ய வழமையான வழிகளை விடுத்து ஒரு புதிய வழியிலேயே அணுக வேண்டும். மறுவார்த்தைகளிற் கூறின், அவனருளாலே அவன் தாள் வணங்குவது, தவமும் தவம் உடையார்க்கே ஆகும். என்பன போல எளிமையாக இருக்கும் போது மட்டுமே எளிமையாக எளிமையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுகலாம். எங்களை நாமே புரிந்து கொள்வதன் ஊடாகவும், சுய அறிவை பெறுவதன் ஊடாகவும் மட்டுமே அந்தஎளிமை மலரக் கூடும். நாம் வழமையாகச் சிந்திக்கும் வழிகள் உணர்ந்து கொள்ளும் வழிகள், எமது எண்ணங்களின் இயக்கங்கள், அவ்வெண்ணங்களுக்காக நாம் மேற்கொள்ளும் பிரதிச் செயல்கள், நாம் கொண்டுள்ள பயங்கள், பொதுசன அபிப்பிராயம், முதலான எல்லாம் எமது சிந்தனையற்ற, சுய அறிவற்ற, இணங்கிப் போகின்ற, பாதுகாப்புத் தேடுகின்ற இயல்பையே சுட்டிக்காட்டும். ஒருவர் எந்த ஒரு வகையான பாதுகாப்பைத் தேடிக்கொண்டு இருந்தாலும், அவர் அவ்வேளையிலே பயம்கொண்ட நிலையிலேயே இருக்கின்றார் என்பது வெளிப்படை ஆகும். பயங்கொண்டவர் தன்னைக் கல்லாக்கிக் கொள்வதை விடுத்து எளிமையாய் இருக்க முடியாது.

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்", என்ற வள்ளலாரின் வாக்கை மனப்பாடம் பண்ணியிருந்த ஒருவரின் வீட்டுக்கு முன்னின்ற ஒரேயொரு றோசாச் செடி நீரின்றி வாடியிருந்தது. அவரது நெருங்கிய நண்பர் ஒருவர் அதனை அவருக்கு முதற்தடவை சுட்டிக்காட்டினார். வேறொருநாள் மறுதடவை அச்செடி இறந்து பட்டுப்போகும் நிலையை அண்மியிருந்ததைக் கண்டு அந்நண்பர் அதற்கு ஒரு சொட்டுத் தண்ணீர் தருவித்து விட்டார். அவரோ தனக்கு அந்த றோசாச்செடி தன்னிடம் இருப்பதே தெரிவதில்லை என்று சமாதானம் சொன்னார். இதிலிருந்து, எளிமையாக இருந்தாலன்றி மரங்களுக்கும், பறவைகளுக்கும், மலைகளுக்கும், காற்றுக்கும் உலகிலுள்ள எல்லாவற்றுக்கும், ஏன் சக மனிதர்களுக்குத்தானும் நெஞ்சம் கல்லாய்ப்போக இளகிய மனமின்றி வாழவேண்டி நேரிடும். ஒருவர் எளிமையாக இல்லாவிடில் அவரைச் சுற்றியுள்ள மனிதர்கள், பொருட்கள், விடயங்கள் முதலான எல்லாம் அவரைச்சுற்றி இருந்தும் அவரோடு உறவாட முடியாது விலகிவிடும். ஒருவர் அவற்றோடு அகத்தே உறவாட வேண்டுமாயின் எளிமையாக இளகிய மனத்துடன் இருந்தால் மட்டுமே முடியும்.

எம்மிற் பெரும்பாலானோரும் எமது உள்ளங்களின் ஆழத்திற்குச் செல்லாது அதன் மேல்மட்டத்தில் மேலெழுந்தவாரியாக வாழுகின்றோம். அங்ஙனம் மேலெழுந்தவாரியாகச் சிந்தித்து, வாதித்து, அறிவைப் பெற்று வாழ்ந்து திருப்திப்படுகின்றோம். அவ்வாறு மேல் மனத்தினால், வழமையாகவே ஆழமாகச் சிந்திக்காது, சில ஒழுக்கங்களைப் பின்பற்றி வலிந்து எளிமையைப் பின்பற்றும் போது அவ்வற்புறுத்தல் மனத்தை மேலும் கல்லாக்குமே தவிர வேறேதும் செய்யப் போவதில்லை. எனவே, எமது உண்மையான இயல்பை ஆராய்ந்து கண்டு பிடிப்பதற்கு மனத்தின் ஆழஅகலங்கள், மூலை முடுக்குகள் எங்கும் எதுவித ஒழிவு மறைவுமின்றி, மிக அக்கறையோடு விழிப்புடன் எளிமையாக இருக்கவேண்டும். அதாவது எமது உறவுகளின் ஒவ்வொரு மிகச்சிறிய குறிப்புக்கும் கூட, எம்மகத்தே என்ன நிகழுகின்றது என்பதை விழிப்பாக அவதானிக்க வேண்டும். இதற்கு உதாரணமாக ஒருவர் எம்மிடம் உறவு கொண்டு ஒரு விடயம் பற்றிக் கேட்கும் போது, மேல் மனத்தினால் ஒருவிடையைச் சொல்லிக் கொண்டு இருக்கும் அதே வேளையிலேயே மனத்தின் அடுத்த அடுத்த படைகளில், வெளிப்படையாக அறியாதிருப்பதை விட, அறிந்து கொண்டே பலவிடைகளை வைத்திருக்கின்றோம் என்பதைக் காட்டலாம். அப்படியாக இருப்பதில் நாம் பாதுகாப்பைத் தேடியபோதும் அது பாதுகாப்பை அன்றிப் பயத்தையே தருகிறது. எனவே, எமது பயங்களையும், நம்பிக்கைகளையும், பாதுகாப்புக்களையும் நன்கு ஆராய்ந்து அவற்றிலிருந்து முற்றாக விடுதலை பெற்றுக்கொள்ள வேண்டும். அதனாலேதான், பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளும் என்றார் மணிவாசகப்பெருமானும்.

ஒருவர் புதியதாக இவை எல்லாவற்றையும் ஆராயக்கூடிய ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் அவ்வாற்றலைத் தடுக்கும் சக்திகள் அநேகமாதலால், எளிமை ஒன்றே நேரடியான அனுபவத்துக்கு இட்டுச்செல்லும். மனம் ஒன்றிற் கடந்தகாலத்திலோ அன்றி வருங்காலக் கற்பனைகளிலோதான் என்றும் சுற்றிச் சுழன்று றாங்கித்தனம் பண்ணி, அந்த றாங்கித்தனத்தில் அறிவு தேடி நொந்து போய் மந்தமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையிலே காவி உடைதரித்தோ, கோவணம் தரித்தோ, நாளுக்கு ஒருவேளை உண்டோ இப்படி அல்ல அப்படி இருக்க எண்ணற்ற சத்தியங்களைத் தனக்குத் தானே செய்தோ எளிமையாய் இருக்க முடியாது. இதனாலேதான் வள்ளுவரும் மழித்தலும் நீட்டலும் வேண்டா என்றாரா போலும். எனவே எதுவாகவும் ஆகாதவனே உண்மையில் எளியவனாவான். அவனது மனத்தில் எல்லையில்லா ஆற்றலன்றி எதுவித தடைகளோ, பயங்களோ, இன்னொன்றாக ஆகப்போவதோ கிடையாது. அந்தமனத்தினால் அவன் அருளை, கடவுளை உண்மையைக் காணக்கூடிய ஆற்றலைப் பெறலாம். சிக்கல்களினாலும், சுமையினாலும் நொந்துபோன மனத்தினால் உண்மையைக் காண வலிமை இருக்காது. ஆனால் அங்குள்ள பலவீனம், உண்மை ஒரோவழி மின்னற் கீற்றுபோலப் பளிச்சிட்டாலும் அதனை ஏற்க ஆற்றலற்றுக் கவனிக்காது விட்டு விடக் காரணமாகும். இதனை யோக சுவாமிகளின் "உலகிலுள்ள மிகப்பெரிய ஒரேயொரு புதினம் கடவுள் என்றும் உன்னோடு இருக்கின்றார்", என்ற வாக்கிலே நன்றாகப் புலப்படக்காணலாம். அந்த உண்மையைக் கண்ட பின்பே ஆனந்தம் வரும். ஆனால் ஆனந்தத்தைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டால் உண்மையைத் தவற விடவேண்டி வரும் ஏனெனில் ஆனந்தம் ஒரு நோக்கமின்றி உண்மையின் விளைவாக நேரிடுவதனாலேயே ஆகும்.

நெஞ்சக்கனகல்லை இளக்கி எளிமையை எளிமையால் மலரச்செய்ய ஒருவரிடம் தன்னடக்கம் தானாகவே வந்து குடிபுகும். அடக்கம் அமரருள் உய்க்கும் என்றார் ஆன்றோரும். நற்பண்பைப் பின்பற்றியோ, பயிற்சி செய்தோ, வலிந்தோ, வேண்டுமென்றே பணிவாக நடந்தோ தன்னடக்கத்தைக் கொண்டு வரமுடியாது. சிவா,சிவா என்று பேசப் பழக்கிப் பேசிவருகிற கிளியும் பூனையைக் கண்டதும் மீண்டும் கீ கீ என்பது போல, அப்படி ஏற்படுத்திய தன்னடக்கம் மிக இக்கட்டான வேளையில் ஏமாற்றிவிட்டு இருந்த இடம் தெரியாது போய்விடும். வலிந்து தன்னடக்கத்தை ஏற்படுத்துவதற்கு இரண்டு காரணங்கள் பிரதானமாக இருக்கக்கூடும். ஒன்று, தன்னைப் பற்றிய தனக்குள்ள பயம். மற்றது மற்றவர்களைப் பற்றித் தனக்குள்ள பயம் ஹரன் ஹோணி என்ற உளவியலாளர் தனது "எமது அகப்பிணக்குகள்" (Our innter Conflicts) என்ற நூலிற் கூறியவாறு ஒரு பிரச்சினை வந்ததும் சிலர் தாமேதான் அதற்கு முற்றும் காரணர் என்றும் , வேறுசிலர் மற்றவன் தன்னை இப்படித்தான் கெடுக்கின்றான் என்றும் ஒன்றில் தன்னிலோ அல்லது பிறரிலோ அதனைச் சுமத்திவிட்டுப் பிரச்சினையைத் தப்பிப்போக விடுகின்றார்கள் என்கின்றார். அவரது கருத்துப்படி பிரச்சினையைத் தீர்க்கப் பிரச்சினையையே தானோ பிறரோ சாராது புறவயமாக அவதானித்து அணுகவேண்டும். அதுபோலவே தனக்காகவோ பிறருக்காகவோ அன்றி இயல்பாகவே தன்னடக்கம் மலர வேண்டும். அவ்வாறு வரும் தன்னடக்கத்தில் அவரோ பிறரோ அங்கு முக்கியமில்லாது போகின்றனர்.

சிக்கலாக, இயல்பாகவே இல்லாத தன்மையினாதலேதான் சிக்கலான மனங்களுக்கு எளிமையை விளக்குவது, விளங்குவது, எளிமையாக இருப்பது கடினமாகிவிடுகிறது. எனவே எது எளிமை என்று சிந்திப்பதைவிடுத்து எவை, எவை எல்லாம் எளிமை இல்லை எனவும் அவதானிக்கலாம். ஏனெனில், அந்தச் சிக்கல்களை நிறைந்த செல்வமாகப் பேணுகின்ற மனிதன் அவற்றை உதறித் தள்ளிவிட்டு அகத்தேயும், புறத்தேயும் புரட்சி செய்து எளிமையைக் காணப் பயப்படுகிறான்.

ஒருசிக்கலான மனம், ஒரு கெட்டிக்கார மனம், பயத்தினாற் செயற்படும் மனம் வெகுமதிக்காக இயங்கும் மனம், அறிவுச்சுமையால் நிரம்பிய மனம், நம்பிக்கைகளால் முடங்கிப்போன மனம், ஓரிரண்டு கோவணங்களுடன் மட்டும் திருப்தி காணுகின்ற மனம், புறப் பகட்டுகளை விரும்பி ஓடுகின்ற மனம், வெளிப் பகட்டுகளால் ஏமாறுகின்ற மனம் எளிமையான மனம் அன்று.

சிலர் முக்கிய மற்றவற்றை விடுத்து முக்கியமானவற்றை மட்டும் பின்தொடர்வது எளிமை ஆகுமோ என்று சிந்திக்கக் கூடும். அவ்வாறு தெரிவு செய்யும் முறையும் தெரிவு செய்யும் வஸ்துவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிமையைக் கொண்டுவரப் போவதில்லை. முறை அல்லது வஸ்து முக்கியம் என்று ஒருவர் எப்படி அறிவது? ஒன்றில் மற்றவர்கள் அவருக்கு அது முக்கியமான முறை அல்லது வஸ்து என்று கூறிய அனுபவம் இருக்க வேண்டும் அல்லது அவரது சொந்த விருப்பத்தின் அடிப்படையில் அது முக்கியமாக இருக்க வேண்டும். எனவே இத்தெரிவும் ஒருவர் தனது விருப்பத்தை அல்லது மற்றவரது விருப்பத்தைத் திருப்தி செய்யவே மேற்கொள்கிறார். அங்கு அவரோ அல்லது மற்றவரோ இடம்பெறுவதால் தெரிவுக்குள் நுழைந்து எளிமையைத் தேடுவது மீண்டும் பழையபடி பிணக்குகளையே சந்திக்கும்படி செய்யும். பிணக்குகள் மனத்தைக் குழம்பிய நிலையிலேயே வைத்திருக்கக் கூடியன. அப்படிக் குழம்பிய மனத்தினால் எப்படித் தெளிவான தெரிவைச் செய்ய முடியும்? அத்தெரிவு செய்யப்பட்ட பொருளும் குழப்பமானதல்லவா? எனவே முக்கியமான வற்றுக்கும் முக்கிய மற்றவற்றுக்கும் இடையே தெரிவதும் எளிமையன்று. அதுவும் ஒரு பிணக்கே ஆகும்.

பிணக்கிலும் குழப்பத்திலும் உள்ள மனம் எளிமையானது அன்று தெரிவைச் சரியானதாகச் செய்வதற்கும்கூடப் பிணக்கற்ற மனந்தானே வேண்டும். எனவே தெரிவு முதலான போலி விடயங்கள் எல்லாவற்றையும் விடுத்து மனத்தின் திருகுதாளங்களை உன்னிப்பாகக் கவனித்து அறிய எளிமை தானாகவே மலரும். எளிமை ஓர் எண்ணமற்ற செயல் ஆகும். எண்ணங்களால் நிறைந்து சிக்குண்டு தவித்து இரவிலே நீண்ட நேரம் நித்திரை கொள்ளமுடியாத நிலையை ஒப்பிட்டு எண்ணமற்ற செயல்தான் எளிமையெனச் சுட்டிக் காட்டலாம். ஆனால் அவ்வாறான எண்ணமற்ற நிலை மிக மிக அருமையான ஒரு நிகழ்வாகும். அங்கு எளிமை நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப் பேராது நின்று பெருங்கருணைப் பேராறாகப் பெருகும்.

எண்ணமற்ற செயலிலே தான் மிக உயர்ந்தஆக்கத்திறனைக் காணலாம். ஆக்கத்திறன் இல்லாத வரையில் நாம் அழிவுக்கும், துன்பத்துக்கும், ஏமாற்றுக்கும்தானே மையங்களாக இருப்போம். எளிமையில்லாத விடயங்களையும் சுமந்து கொண்டே எளிமையைத் தேடிக்கண்டு பிடித்து வைத்துக் கொண்டு அனுபவிக்கலாம், என்ற நோக்கமும் ஒரு எளிமை அன்று. காவிய நாயகன் இன்றித் தொண்டையே காவியநாயகம் ஆக்கிய பெரிய புராணம் "வீடும் வேண்டா விறல்" என்று கூறுவதை ஒத்தது உண்மையான எளிமை. ஒருவர் தனது இருப்பிலும், உறவுகளிலும் தனது மனம் இயங்கும் முறைகளை ஒழிவு மறைவின்றிப் புரிந்து கொள்ளும் போது சரியான வேளை வந்ததும் மொட்டு ஒன்று மலர்வது போல நெஞ்சக் கனகல்லு இளகும் வேளையில் எளிமை இயல்பாக வருகின்றது. அப்படி ஒரு விடுதலையான மனத்தினால் மட்டுமே உண்மையைக் காணமுடியும். அப்படிப்பட்ட இளகிய மனமே சிந்தையும் மொழியும் சென்றடைய முடியாத, பெயரில்லாத அளவிட முடியாததைக் காணும் ஆற்றலுடையதாகும். ஆனால் அதனைக் காணச் சில வழிகளைப் பின்பற்றி அவற்றை எளிமையாகக் கொண்டு மயங்குவதோ, அந்த உண்மையைக் கண்டால் எளிமை பின்புதான் வருமென்று ஏமாறுவதோ எளிமையே அன்று.

பல வைர மரங்களிலும் கொத்தி விட்டு கட்டிய தச்சன் குருவி வாழை மரத்தைக் கொத்தப் போய் அலகு சிக்கி இனி இந்தமாதிரிக் கடும் வைரமரங்களை அணுகக் கூடாது என்றதுபோல எளிமையை எதிர்கொள்ளப் பயந்து மனத்தை இளக விடாது கனகல்லாக்குவது மட்டும் பலருக்கும் எளிதாயிருப்பது ஆச்சரியமே.

வஞ்ச நினைவு வழக்கில் அகல
அஞ்ச வருதல் அணுவும் இலதால்
எஞ்ச எதுவும் எனத்தான் இலையே
நெஞ்சக் கனகல் நெகிழ்வார் தமக்கே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதங்களும் மறுபிறப்புக் கோட்பாடும்

செல்வி. இரா. சர்மிளாதேவி பி. ஏ(சிறப்பு)
உதவி விரிவுரையாளர்
தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

மரணத்தின் பின் வாழ்வு உண்டென்பதை முழுமையாக நம்பி – அதனடிப்படையில் வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் அமைத்துக்கொண்டால்தான். மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்து இவ்வுலகில் நிம்மதியையும் மறுவுலகில் பேரின்பத்தையும் அடையமுடியும் என்ற நம்பிக்கையை மதங்கள் பல கொண்டுள்ளன.

எமது ஈழத்திருநாட்டைப் பொறுத்தவரையில் இங்கு பௌத்தர்களும் சைவர்களும் இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் பெரிதும் வாழ்கின்றனர் என்பது நாமறிந்ததே. இவர்கள் அனைவரும் தத்தமது மதம் தொடர்பான தனித்துவமான கொள்கைகளையும் கோட்பாடுகளையும் கொண்டுள்ளனர். அவற்றுள் முக்கியமானது மறுபிறப்புக் கோட்பாடாகும். பௌத்தர்களும் சைவர்களும் மறுபிறப்பு உண்டென்பதை முழுமையாக ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் உயிர்களுக்கு மறுபிறப்பு உண்டென்பதை மறுக்கும் அதேவேளை ஊழிக் காலமுடிவில் புதியதோர் உலகம் தோன்றுமெனவும் அப்போது சர்வவல்லமை பொருந்திய இறைவன் எல்லா உயிர்களையும் மீண்டும் உயிர்த்தெழவைப்பான் என்றும் நம்புகின்றனர். மதங்களின் மறுபிறப்புக்கோட்பாடு பற்றி நோக்குவதைப் பிரதானமாகக் கொண்ட இக்கட்டுரையில் தேவையானவிடத்து பௌத்தம் சைவம் இஸ்லாம் கிறிஸ்தவம் தவிர்ந்தபிறமதங்களும் நோக்கப்படும்.

ஈழத்திலே பெரும்பாலானோரால் பின் பற்றப்படும் பௌத்தமதம் பற்றி நோக்குகையில் பௌத்தம் ஒரு மதமா அல்லது தத்துவஞானமா என்ற சந்தேகம் அறிஞரிடையே உண்டு. எதுவாயினும் பௌத்தத்திலும் மறுபிறப்புப் பற்றிய நம்பிக்கை உண்டு. புத்தமதத்தில் எல்லாம் வல்ல கடவுள் பற்றிய நம்பிக்கை கிடையாது. புத்தமதம் தவிர மற்ற எல்லா மதங்களும் உலகத்தைப் படைத்துப் பேணும் ஒரு கடவுளை மையமாகக் கொண்டுள்ளன. அக்கடவுளுக்குப் பிரார்த்தனை செய்வதன் மூலம் விமோசனமடைய முடியும் என்ற போதனை பௌத்தத்தில் இல்லை. கடவுளுக்குப் பதிலாக இவ்வுலகில் வாழும் மனிதர்களும் ஏனைய மிருகங்களும் உயிர்களும் எண்ணற்ற பிறவிகளை எடுத்துக் கொண்டு அளவில்லாதநீண்ட காலம் வாழ்வார்கள் என்றும் அவ்வாறான வாழ்வு கர்மத்தின் சக்தியால் செயல்படுகிறதென்றும் பௌத்தர்கள் நம்புகிறார்கள். அவர்கள் செய்யும் நன்மைக்கு நல்ல பலன்களையும் தீமைக்குத் தீய பலன்களையும் பெறுகின்றார்கள். மிருகங்களாகப் பிறப்பெடுப்பது முற்பிறப்புகளில் செய்ததீய வினைகளின் பலனே என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

ஒருவர் தீய செயலொன்றைச் செய்தால், அதைப்பற்றிக் கடவுளுக்குப் பிரார்த்தித்துக்கொண்டு பச்சாதாபப்பட்டு மன்னிப்புப்பெறலாம் என்ற நம்பிக்கை பௌத்தத்தில் இல்லை. ஒரு செயலின் பயனை அதைச் செய்தவர் கட்டாயம் அனுபவிக்க வேண்டும். மனிதர் பிறப்பில் ஒரு பாவி என்பதும் அப்பாவத்திலிருந்து விடுவித்துக்கொள்வதற்குக் கடவுளுக்கு வழிபாடு, பிரார்த்தனை செய்ய வேண்டும் எனவும், தந்தையின் பாவத்திற்கு மகன் பொறுப்பேற்க வேண்டும் எனவும் பௌத்தமதத்தில் இல்லை. ஒருவர் செய்த பாவத்துக்கு அல்லது நன்மைக்கு அவரே பொறுப்பு வேறு யாருமே இல்லை என்பதுதான் பௌத்தத்தின் போதனை. இதற்கு பௌத்தத் திருமுறையின் ஒரு பகுதியாகிய தம்மபதம் சான்று பகர்கின்றது.

"பலவிதமான பிறவிகளை நான் எடுத்தாயிற்று – இந்த
(உடலாகிய) குடிலைக் கட்டியவனை நான் இரவும்
பகலும் தேடியும் காணவில்லை. மீண்டும் பிறப்பது துக்கமாகவேயுள்ளது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலம் ஆன்மாவானது தான் செய்தவினையை தானே அனுபவிக்கின்றது என்பதை அறியலாம். மேலும் இவ்வுலகத்தில் தீமை செய்தவர்கள் தண்டனை விதிக்கும் நகரங்களுக்கும் நன்மை செய்தவர்கள் சுகத்தை அனுபவிக்கக்கூடிய தெய்வலோகங்களுக்கும் செல்வர் என பௌத்தமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், பாவம் செய்தவர்களுக்கு நிரந்தர நரகமும் நன்மை செய்தவர்களுக்கு நிரந்தர சுவர்க்கமும் பௌத்தத்தின் படி இல்லை. நரகத்தில் தண்டனை அனுபவித்து முடித்தபிறகு இவ்வுலகத்துக்குத் திரும்பிவர வேண்டும் பௌத்தத்தின் படி உயிர்களின் இறுதி நிலை நிருவாணமாகும். நிருவாணம் என்பது தன்கா எனப்படும் ஆசையை ஒழித்த பிறகு அடையும் சுகநிலை ஆகும். அதைஅடைந்தபிறகு பிறப்பு, இறப்பு ஒன்றுமில்லை.

இவ்விடத்தில் சமண மதத்தின் மறுபிறப்பு கோட்பாடு குறித்த நோக்ககுதல் பொருத்தமானது. ஏனெனில் பௌத்த மதத்திற்கும் சமண மதத்திற்கும் பொதுவான சில கொள்கைகள் உள்ளன. சமண மதத்திலும் கடவுள் பற்றிக் கூறப்படவில்லை. பந்தபாசங்களில் நின்றும் விடுபட்டு மோட்ச நிலையை அடைந்த உயிரே கடவுள் என்பது அவர்கள் முடிவு. ஜீவாத்மாவுக்கு வேறான ஒரு பொருள் உண்டென்று சமணர்கள் ஒப்புக் கொள்வதில்லை. உயிர், உலகு என்ற இரண்டையும் அவர்கள் ஒப்புக்கொள்கின்றனர். என்றுமுள்ளதும் பேரின்பமானதுமான உயிர் இரு வினைகளைச் செய்து அவற்றின் பயனாக இன்ப துன்பங்களை அனுபவிக்க நரககதி, விலங்குகதி, மக்கள் கதி, தேவகதி என்ற நான்கு கதிகளில் பிறந்தும் இறந்தும், திரிந்தும் வினையறுத்துப் பிறவா நிலையாகிய பேரின்பநிலையினை அடைகின்றது என்பதைஅ வர்கள் நம்புகின்றனர். சீவக சிந்தாமணி பாடலொன்று இதனை மேலும் தெளிவுபடுத்துகின்றது.

" பொய்வகை தெரிதல் ஞானம்
விளங்கிய பொருள்கள் தம்மைப்
பொய்வகை இன்றித் தேறல்
காட்சிஐம் பொறியும் வாட்டி
உய்வகை உயிரைத் தேயா
தொழுகுதல் ஒழுக்கம் இம்மூன்றும்
இவ்வகை நிறைந்தபோதே
இருவிணை கழியும் என்றான்"

தொடர்ந்து சைவமதத்தின் மறுபிறப்புக் கோட்பாட்டைப் பற்றி நோக்குகின்றபோது, சைவமதமானது தனக்கென பல இலட்சியங்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் முக்கியமானதும் சிறப்பானதும் வீடுபேறாகும். வீடுபேறு அடைவதே ஆன்மா (உயிர்) வின் நோக்கமாகும். வீடுபேறு அடைவதற்கு ஆன்மாவானது பிறவித்தளையில் இருந்துவிடுபடவேண்டும். சைவமதமானது ஆன்மாவுக்கு பல பிறவிகள் உள்ளன என்பதைஏற்றுக்கொள்கின்றது. இதனைத் திருவாசகம் சிறப்புற எடுத்தியம்புகின்றது.

" புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் காணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றவித் தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேனெம்பெருமான்"

இப்பாடல் வரிகளின் மூலம் உயிர்களுக்குப் பல பிறவிகள் உள்ளன என்பதை அறிய முடிகின்றது. ஒரு பிறவியில் செய்தசெயல் எல்லாவற்றையும் அப்பிறவியில் அனுபவிக்க முடியாமல் போகலாம். எஞ்சியதைஅனுபவிக்க மீண்டும் பிறக்க வேண்டும். ஆன்மாக்கள் சரீரங்களை எடுப்பதற்கு கன்மங்களே (வினைகள்) காரணமாகும். சைவசமயமானது ஆகாமிய கன்மம் (முற்பிறவியில் செய்தவினை), சஞ்சிதகன்மம் (முன்னைப் பிறவியில் செய்தவினைகளிலும் இப்பிறவியில் செய்தவினைகளிலும் அனுபவத்துக்கு வராமல் ஏனைய பிறவிகளும் என எஞ்சிக்கிடக்கும் வினை) பிராரத்துவ கன்மம் (இப்பிறவியில் செய்யும் வினை) என மூவகை கன்மங்கள் பற்றிப் பேசுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்மம் முதலான மலங்களில் இருந்து விடுபட்டு பிறப்பறுக்கு மெங்கள் பெருமான் திருவடி அடைதல் ஆன்மாவின் இறுதி நிலையாகும். இதனையே முத்தி என்கிறது சைவசித்தாந்தம் இந்நிலையில் ஆன்மாவானது மலங்கள் (ஆணவம், கன்மம், மாயை) நீங்கப் பெற்று தான் சிவனாகும் தன்மையை பெறும். எனவே ஆன்மா தனது இலட்சியத்தைஅடைய (பிறப்பில் இருந்து விடுபட) இறைவன் துணையை நாடவேண்டும். அதற்கு சைவ சாதனங்களைத் (சரியை, கிரியை, யோகம், ஞானம்) துணைக் கொள்ள வேண்டும் என சைவசித்தாந்தம் கூறுகின்றது.

சைவத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்ட மதம் வைணவமாகும். இவை இரண்டும் வைதீக மதங்கள் என்றழைக்கப்படுகின்றன. எனவே வைணவ மதத்தின் மறுபிறப்புக் கோட்பாடு பற்றியும் நோக்குதல் நன்று. வைணவமதமும் உயிருக்குப் பல பிறவிகள் உண்டென்பயையும் பிறவித்தளையில் இருந்துவிடுபட பொருட்களில் வைத்திருக்கும் ஆசைகளை முற்றிலும் அகற்றி விட்டு உயிரை இறை வனுக்கு என்று அர்ப்பணம் செய்யும்படி கூறுகின்றது.
இதனை

" பிறவித் துயர்அற, ஞானத்துள் நின்று,
துறவி சுடர் - விளக்கம் தலைப் பெய்வார்
அறவனை ஆழிப்படை அந்தணனை
மறவியை இன்றி மனத்து வைப்பாரே"

என்று திவ்வியப்பிரபந்தம் கூறுகின்றது. இதன் பொருள் பிறவித் துயரங்கள் போகும் படியாக பகவத் ஞானத்தில் நின்று உலகப் பற்றுக்களைக் களைந்து அதனால் பெறக் கூடிய பிரசாந்த நிலையை அடைய விரும்புகிறவர்கள், தர்மத்துக்கு உரியவனும், சக்கரமேந்திய அந்தணனுமாகிய நாராயணனை நிரந்தர பாவனை செய்து பூஜிப்பார்கள் என்பதாகும்.

அடுத்தாக இஸ்லாமிய மதத்தினை எடுத்துக் கொண்டால், உயிருக்கு பல பிறப்புக்கள் உள்ளன. என்பதை இம்மதம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆயினும் மரணத்துக்குப் பின் உயிர்களுக்கு என்ன நடக்கின்றது என்பதை திருக்குர்ஆன் கூறுகின்றது. அதாவது நம் இயல்பும் நமது காரண காரியமும் வேண்டி நிற்கின்ற மறுமை உலகம் ஒரு நாள் உண்மையில் வரும் என அது உறுதி கூறுகின்றது. பௌதிக நியதிகளின் படி இயங்குவதற்காகப் படைக்கப்பட்ட பிரபஞ்சத்தின் இவ்வமைப்பு ஓரே வீச்சில் தவிடுபொடியாக்கப்படும், அதற்குப் பதிலாக அங்கு வேறோர் உலகம் படைக்கப்படும். அவ்வுலகில் மண்ணும், விண்ணும், இதர எல்லாப் பொருட்களும் இவ்வுலகில் இருப்பதை விட மிக மாறுபட்ட தன்மையில் இருக்கும். படைக்கப்பட்ட காலந்தொட்டு உலகம் முடியும் நாள் வரை தோன்றும் எல்லா மக்களையும் சர்வ வல்லமை கொண்ட ஆண்டவன் உயிர்த் தெழவைப்பான் உயிர்த்தெழவைத்து அனைவரையும்ஏககாலத்தில் தன் சந்நிதியில் ஆஜராகும்படி செய்வான். அங்கே எல்லா நபர்களுடைய எல்லா சமுதாயத்தினருடைய மனிதகுலம் குழுவதினுடைய செயல்கள் அத்தனையும் பதிவு செய்யப்பட்ட பதிவேடுகள் இருக்கும். அவற்றில் இம்மியும் கூடுதலோ குறைவோ இருகக்காது. இம் மண்ணுலகில் ஒவ்வொரு மனிதனும் செய்த ஒவ்வொரு செயலும் அதற்கு இவ்வுலகில் ஏற்பட்ட விளைவுகள் அனைத்தும் முழுமையாகத் தொகுக்கப்பட்ட பட்டியல் அங்கிருக்கும். அச்செயலின் விளைவாகப் பாதிக்கப்பட்ட சந்ததிகள் அனைவரும் சாட்சிக்கூண்டில் நிறுத்தப்பட்டிருப்பார்கள்.

மனிதனின் சொல்லாலும் செயலாலும் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு தூசும் துரும்பும் அதனதன் கதையினைக் கூறும். மனித உடம்பின் ஒவ்வோர் உறுப்பும் - க்ண், கை,கால்கள் அவை எப்படி எப்படி நற்செயல்களுக்கு அல்லது தீச் செயல்களுக்குப் பயன்படுத்தப்பட்டன என்பதற்குச் சான்றுபகரும். மறுக்கவோ அழிக்கவோ முடியாத இந்தச் சான்றுகள் முழுமையான பதிவேடுகளின் அடிப்படையில் பிரபஞ்சத்தின் சர்வவல்லமையுள்ள அல்லாஹ் ஒவ்வொரு வழக்கிற்கும் சரியான நீதி வழங்கி வெகுமதியோ தண்டனையோ நல்குவான். மேலும் இந்தவெகுமதிகளை அனுபவிப்பதற்குக் குறுக்கே மரணமோ நோயோ வயோபதிபமோ நிற்கமாட்டாது. இதற்கு நேர்மாறாக தன் தீயச் செயல்களின் காரணமாக பல லட்ச உயிர்களை நாசத்தில் ஆழ்த்திய மனிதன் அவற்றிற்கேற்ற தண்டனையைப் பெறுவான். மேலும் மரணமோ உணர்வற்ற மயக்க நிலையோ இந்தத் தண்டனையின் வேதனையிலிருந்தும் துயரத்திலிருந்தும் அதைஅனுபவிப்பவனைக் காப்பாற்ற முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவர்களை நோக்கின் இவர்களும் இஸ்லாமியர்களைப் போல உயிருக்குப் பல பிறவிகள் உள்ளன என்பதைஏற்றுக்கொள்ள மறுக்கின்றார்கள். கிறிஸ்து மனிதனாக இப்புவியில் அவதரித்து வாழ்ந்த காலத்தில் இதனைப் பற்றித் திட்டவட்டமாகக் கூறிச் சென்றார்.

"ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய
இராஜ்யத்தை(பரலோகத்தை) காணமாட்டான்
என்று மெய்யாகவே சொல்கிறேன்"
என இயேசு கூறுகிறார். (யோவான் 3:3)

இக்கூற்றை இயேசுவானவர் யுதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமுக்கு கூறினார். அவ்வேளையில் அவன்,

"ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்
அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாம் தரம்
பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ" என்றான்(யோவான் 3:4)

இயேசு அதற்கு பதிலாக

"ஒருவன் ஜலத்தினாலும் (தண்ணீரினாலும்) ஆவியினாலும்
பிறவா விட்டால் தேவனுடைய ராஜ்யத்தில்
பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே
மெய்யாகவே எனக்குச் சொல்கிறேன்" என்றார். (யோவான் 3:5)

தண்ணீரினாலும் பரிசுத்த ஆவியினாலும் மீண்டும் பிறப்பது என்பதை நோக்குமிடத்து பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் ஜன்ம பாவம் என்னும் பாவம் நிறைந்தவனாகவே பிறக்கின்றான். பாவம் நிறைந்தவன் பரலோகத்தில் பிரவேசிப்பதில்லை. எனவே தன் பாவக்கறையை கழுவ தண்ணீரினால் ஞானஸ்தானம் பெற்று இயேசு இவ்வுலகில் வாழ்ந்து இறந்து உயிர்த்தெழுந்தபோது தம்மை விசுவாசித்தவர்களுக்கு துணையாக அனுப்பிய பரிசுத்த ஆவியைப் பெற்று பாவம் நிறைந்தபழைய மனிதன் இறந்து புதிய மனிதனாக மாறுவான். இங்கு கிறிஸ்தவர்களும், மறுபிறப்புக் கோட்பாட்டினை ஏற்றுக் கொள்வதுபோலத் தோன்றினாலும் அவர்கள் உண்மையில் மறுபிறப்புக் கோட்பாட்டினை ஏறறுக்கொள்வதில்லை. மேலும் ஊழிக்கால முடிவில் கிறிஸ்து மீண்டும் அவதரிப்பார் என்று நம்புவதுடன் அப்போது தம் விசுவாசிகளை ரட்சிப்பார் என்பதும் அவர்களது நம்பிக்கையாகும்.

எனவே தொகுத்து நோக்குகையில், இலங்கையில மறுபிறப்புக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்ட மதங்கள் சிலவும் அக்கோட்பாட்டில் நம்பிக்கை கொள்ளாதமதங்கள் சிலவும் இருப்பது கண் கூடு ஆயினும் அனைத்து மதங்களும் மனிதன் செய்யும் நன்மை தீமைக்கு ஏற்பவே பயனை அடைகின்றான் என்பதைஏற்றுக் கொள்கின்றன. இதிலிருந்து பார்க்கும் போது, மறுப்பிறப்புக் கோட்பாடென்பது மக்களை நல்வழிப்படுத்த, வாழ்நெறிகளைக் காட்ட ஏற்படுத்தப்பட்ட தென்பது தெள்ளத்தெளிவாக விளங்குகின்றது. இதன் பொருட்டே வள்ளுவரும்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்றார். எனவே நாம் அனைவரும் நல்வினைகளைச் செய்து இம்மையிலும் மறுமையிலும் நற்கதியடைவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் புனிதனாக வாழ வழி காட்டும் சமயம் இந்து சமயம்

*சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்*
*விரிவுரையாளர்*
*ஆசிரிய கலாசாலை*
*பலாலி*

உலகில் இன்றுநிலவி வரும் பெரும் சமயங்களில் இந்து சமயமும் ஒன்றாகும். இன்றும் உலகில் பல கோடிக்கணக்கான மக்களால் பின்பற்றப்படும் சமயமாக இந்து சமயம் திகழ்கிறது. ஒருவரால் ஒரு இடத்தில் ஒரு காலத்தில் தோற்றுவிக்கப்படாத பழமையும் பெருமையும் மிக்க சமயமே இந்து சமயம் ஆகும். தொன்று தொட்டு வரும் வாழ்க்கை நெறி என்பதால் சனாதன தர்மம் என்ற பெயர் இந்து சமயத்திற்கு வழங்கப்படுகின்றது. இந்து சமயம் தத்துவத்தோடும், கலைகளோடும், பண்பாட்டோடும், வாழ்க்கையோடும் பின்னிப் பிணைந்துள்ளது. தத்துவம் காட்டுகின்ற உண்மைப் பொருளும் சமயம் பேசுகின்ற மெய்ப்பொருளும் ஒன்று என இந்துமத சிந்தனையாளர்கள் நிறுவினார்கள். ஒவ்வொரு தனி மனிதனும் சரியாகச் சிந்திப்பதற்கு மட்டுமன்றி முறையாக வாழ்வதற்கும் இந்து மத தத்துவங்கள் வழிகாட்டுகின்றன. புற உலகை மட்டுமன்றி அகந்தையையும் சிறப்பாக ஆன்மாவையும் இந்து சமய தத்துவங்கள் ஆராய்கின்றன. தமிழர்களின் சிந்தனையில் முகிழ்த்த உயர் தத்துவமாகிய சைவ சித்தாந்தம். ஒவ்வொரு தனி மனிதனும் ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்கான வழிவகைகளைத் தெளிவாக கூறுகிறது.

இந்து சமயம் கலைகள் அனைத்தையும் தெய்வீகமாகவே காண்கிறது. இந்தக் கலைகள் பெரும்பாலும் சமயச் சார்புடையனவாக தெய்வாம்சம் பொருந்தியவையாக மறைபொருள் கருத்துக்களை விளக்குபவையாக அமைந்துள்ளன. கலைகள் அனைத்தும் இறைவனிடமிருந்து தோன்றியவை என்றே இந்துக்கள் கருதுகிறார்கள். இந்துக் கோயில்கள் கலைக்கருவூலங்களாகத் திகழ்கின்றன. இசை, நடனம், நாடகம், சிற்பம், ஓவியம் என்பன இக்கோயில்களினூடாக மக்கள் வாழ்வினை செம்மைப்படுத்தி சிறப்படையச் செய்கின்றன. கலைஞர்களை அபரபிரமாக்கள் என்றே இந்து மதம் கூறுகிறது. ஒழுக்கமும், புலனடக்கமும், பக்தியும் கலைஞர்களுக்கு இன்றியமையாதன ஆகும். இந்து சமயத்தில் கோயில் என்பது ஆண்டவனின் அருள் சுரக்கும் நிலையமாக மட்டுமல்லாது அழகுக் கலைகளின் உறைவிடமாகவும் கலைவளர்க்கும் அரங்கமாகவும் கலைஞர் சமுதாயத்தின் மையமாகவும் இருந்து வந்துள்ளது.

ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்கும் இறைவனை இசையால் இசைவிப்பது சுலபம் ஆகும். இராவணன் இசைத்த சாம கானம் நாத வடிவினனாகிய சிவலோகநாதனை மகிழ்வித்தது. வேதங்களில் யான் சாம வேதமாக உள்ளேன். (வேதா நாம சாம வேதோ ஸ்மீ) எனக் கீதையிலே கிருஷ்ண பரமாத்மா கூறுகிறார். இசையின் பயன் இறைவனை வழிபடலும் அதே சமயம் ஆத்மானுபவம் பெறுதலுமாகும். வேதாத்தியனம், யோகம், தியானம், பூஜை என்பவற்றினால் பெறுகின்ற இறையனுபவத்தை சங்கீதத்தின் மூலம் வெகு சுலபமாகப் பெற்று விடலாம் என யாக்கவல்லிய மகரிஷி தமது ஸ்மிருதியில் கூறியுள்ளார். ஆன்மாவை இறைவனோடு இணையவைக்கும் யோகக்கலையே நாட்டியக் கலை என இந்து சமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகிறது. மலர், நீர், தூபதீபம் ஆகிய எல்லாவிதமான உபசாரங்களிலும் நிருத்தியோபசாரத்தையே ஆண்டவன் பெரிதும் விரும்புகிறான் என்பதை நிருத்தியரத்னாவளி என்ற நூல் குறிப்பிடுகிறது. நாட்டியமானது இறைவனை வழிபடுவதற்கு உகந்ததோர் வேள்வியாக அமைகிறது என காளிதாச மகாகவி கூறுகிறார். வேதமோதி வேள்விகள் தானங்கள் செய்து அடையும் பயனை நாட்டியக் கலையும் மனிதனுக்குக் கொடுக்கவல்லது எனப் பரதமுனிவரும் தமது நாட்டிய சாஸ்திரம் என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

இந்து சமயத்தவர்களுடைய வழிபாட்டில் கோயில்கள் முக்கிய இடம்பெறுகின்றன. ஆன்மா இறைவனிடம் வயப்படும் இடம் ஆலயம் ஆகும். ஆலயத்தில் நடைபெறும் கிரியைகள் அங்கு வழிபடவரும் ஒவ்வொருவரையும் இறைவனிடம் வழிப்படுத்தும் சாதனமாகக் காணப்படுகின்றன. ஆலயச் சூழலில் தெய்வீக மணம் கமழ வேண்டும். தெய்வீகத்திற்கு புறம்பான செயல்கள் எதுவும் ஆலயங்களில் இடம்பெறக்கூடாது. ஆலயத்தில் கிரியைகளைச் செய்யும் சிவாச்சாரியாரே அங்கு வழிபடவரும் அடியார்களிடம் தெய்வீக உணர்வை ஏற்படுத்துபவராகக் காணப்படுகிறார். அர்ச்சகருடைய பிரபாவத்தினால் தான் சிலை சிவனாகத் தெரிகிற என காரணாகமம் குறிப்பிடுகிறது. (அர்ச்சகஸ்ஸ பிரபாவேன சிவா பவதி சங்கர) ஆலயங்களில் பரார்த்த பூசையைச் செய்யும் சிவாச்சாரியார்களுக்கு இருக்க வேண்டிய தகுதிப்பாடுகளை காரணகமம் பின்வருமாறு தெளிவாகக் கூறுகிறது. சமயதீட்சை, விசேட தீட்சை, நிர்வாணதீட்சை, ஆசார்யபிஷேகம் அனைத்தும் பெற்றவராய் சிவபூஜாதுரந்தராய், ஆகமக் கிரியா வல்லுனராய் குரு, சிவாக்கினி, கடவுள் ஆகிய மூன்றிலும் நீங்காத பற்றுடையனவாய் புலன்களை வென்றவராய் பொது ஜனங்களில் விருப்புடையராய் இருப்பவரே சிவாச்சாரியாராக இருக்கத் தகுதியுடையவர் எனச் சிவாகமங்கள் கூறுகின்றன. இதேபோல் ஆலயத்தின் பரிபாலகர்களும் ஆசாரமும் ஒழுக்கமும் உடையவர்களாக இருக்க வேண்டும். வெறுமனே சமூக அந்தஸ்திற்காக ஆலய பரிபாலகர்களாகக் கடமையாற்றாமல் சமய உணர்வுள்ளவர்களாக உடையவர்களே ஆலயங்களை நிர்வகிக்க வேண்டும்.

ஆலயங்களில் நித்திய நைமித்திய கிரியைகள் ஒழுங்காக நடைபெறாவிட்டால் நாட்டிற்கும் மக்களுக்கும் பல்வேறு வகையான தீங்குகள் இடம்பெறும் என்பதனை

" முன்வரும் கோயில் பூசைகள் முட்டிடூன்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னம் களவு மிகுத்திடும் காசினி
என்னரும் நந்தி எடுத்துரைத்தானே"

எனத் தமிழ் மந்திரமாகிய திருமந்திரமும் எடுத்துக் கூறுகிறது. ஆலயங்களில் நடைபெறும் கிரியைகளை நித்தியக்கிரியைகள், நைமித்திய கிரியைகள், காமியக் கிரியைகள் என மூன்றாக வகுப்பர். நாள்தோறும் நடைபெறுவன நித்தியக் கிரியைகள் என்றும் விசேட காலங்களில் நடைபெறுவன நைமித்தியக் கிரியைகள் என்றும் பயன்கருதிச் செய்யப்படுவன காமியக் கிரியைகள் என்றும் அழைக்கப்படும். மகோற்சவம், கும்பாபிஷேகம் போன்ற கிரியைகள் நைமித்திய கிரியையினுள் அடங்கும். அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், தீபாராதனை, அர்ச்சனை, தோத்திரம், வாழ்த்து என்பன நித்தியக் கிரியையின அங்கங்களாகும். மகோற்சவம், கும்பாபிஷேகம் போன்ற நிகழ்வுகளில் பல்வேறு விதமான கிரியைகள் இடம்பெறுகின்றன. சிவாகமங்களின் கிரியா பாதத்தை இலகுபடுத்தி எழுந்த நூல்களாகிய பத்ததிகளில் கிரியைகளின் ஒழுங்குமுறைகள் எல்லாம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆனால் இன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஆலயங்களில் நடைபெறும் கிரியைகள் பல குறைத்தும் கூட்டியும் செய்யப்படுகின்றன. ஒப்பந்த அடிப்படையில் இடம்பெறும் வேலைத்திட்டங்களாகவும் ஆலய கும்பாபிஷேகக் கிரியைகள் நமது நாட்டில் இன்று இடம்பெற்று வருகின்றன. ஆலயத்தில் கிரியைகளை நடத்தும் சிவாச்சாரியாரே பக்தி மணும ரசத்தை ஆலயத்தில் வழிபடுவதற்காக குழுமியுள்ளோரிடம் தோற்றுவிப்பவர் ஆவார்(மந்த்ர தந்திர க்ரியா முத்ரா பாவநா பாவகாடபித)

சைவ சமய ஒவ்வொருவரும் சமயதீட்சை பெற்றுக் கொள்ள வேண்டும். நாளாந்தம் தனது உடலை சிவபோகமாக மாற்றி திரிபுண்டரமாக உடலின் பதினாறு இடங்களில் சிவமூலமந்திரத்தை உச்சரித்து திருநீற்றுறை அணிய வேண்டும். திருநீறு அணியாதவனுடைய முகம் சுடலைக்குச் சமன் எனச் சூதசங்கிதை என்ற நூல் குறிப்பிடுகிறது. திருநீறு அணிகிலாதவரைக் கண்டால் நாம் அச்சம் கொள்ள வேண்டும் என்பதை " வெண்ணீறணிகிலாதவரைக் காணில் அம்ம நாம் அஞ்சு மாறே" என மணிவார்த்தையாகிய திருவாசகம் குறிப்பிடுகிறது. ஒவ்வொருவரும் தன்னுடைய ஆத்ம ஈடேற்றத்துக்காக நாளாந்தம் ஆத்மார்த்த வழிபாடு செய்ய வேண்டும். இந்த வழிபாட்டிற்கு பூவும் நீரும் போதுமானது ஆகும். இதனைப் "புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு" எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது.

அண்ட சராசரமெல்லாம் வியாபித்திருக்கும் பரம்பொருளாகிய இறைவனை இந்தப் பிண்டமாகிய உடலிலே ஞானிகள் கண்டார்கள். இறையருள் பெற்று ஆன்மீக ஞானிகளாக வாழ்கின்ற அன்பர்களின் சுகம் முழுவதும் சிவமணம் கமழும் என்பதை " பூவினிற் கந்தம் பொருந்தியவாறு போல் சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது" எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. இறைவன் வீற்றிருந்து திருவருள் புரியும் இந்தப் புனித உடலினை நம்மவர்களில் சிலர் சுடுகாடாக மாற்றிப் பேய் பிசாசுகளைக் குடிபுகச் செய்து விடுகிறார்கள். மது மாமிசத்தால் வயிற்றை நிரப்புவதுடன் போதை வஸ்துக்களையும் உள்ளே வீடுகிறார்கள். பொய், கயமை, சினம், சோம்பல், கவலை, மயக்கம், வீண்புழுக்கம், அச்சம் என்னும் அட்டமத்துச் பசாசும் அகத்திலே குடிகொண்டு விடுகிறது. தெய்வீக உணர்வு செயலற்றுப் போக மிருக உணர்வு தலையெடுத்து தாண்டவம் ஆடுகிறது. புற ஒழுக்கம் உடம்பிற்கு தூய்மை தரும். அக ஒழுக்கம் ஆன்மாவைப் பரிசுத்தமாக்கும். உண்ணாது பட்டினி கிடந்தால் உயிர் உடலை விட்டு நீங்குமேயன்றி ஆன்மலயம் கிட்டாது ஆகையால் உடம்பை ஓம்ப வேண்டும் என்கிறார் திருமூலர். உடம்பை ஓம்புவதன் ஊடாகத் தான் உடம்பிற்குள்ளே இருந்து நம்மை இயக்குகின்ற இறைவனைக் காணமுடியும் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

" உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந்தோம்புகிறேனே"

தனிமனித வாழ்வில் ஒழுக்கம் இல்லாதவர்கள் சமயக் கோயிலுக்குள்ளே நுழைய முடியாது என்று இந்து சமயம் கூறுகிறது. ஆன்மீக வாழ்க்கைக்கு ஆதாரமாக இருப்பது ஒழுக்கம் என்பதே ஞானிகள் அனைவரினதும் ஏகோபித்த கருத்தாகும். கொலை, களவு, கள்ளுண்ணல், காமம், பொய் ஆகிய ஐந்துகுற்றங்களைப் பஞ்சமாபாதங்கள் என நமது சமய நூல்கள் எடுத்துக் கூறியுள்ளன. சமநிலை தளம்பாத மனநிலை பெற்றவர்களே ஞானத்தினால் இறைவனை அடைய முடியும். "எவன் கெட்ட காரியங்களிலிருந்து விலகவில்லையோ எவனுக்குச் சாந்தி ஏற்படவில்லையோ, எவனுக்குச் சமாதி நிலைக்கவில்லையோ எவனுடைய மனம் அமைதியைப் பெறவில்லையோ அவனால் ஞானத்தினால் கூட பரமார்த்மாவை அடைய முடியாது" என உபநிடதங்கள் கூறுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமய ஒருவனுடைய உயர் இலட்சியம் பரமபுருஷார்த்தமாகிய வீடுபேறு அடைதல் ஆகும். நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம் என்பதே நாவலர் பெருமானின் வாக்கும் ஆகும். இந்து சமயத்தவர்களின் பார்வையில் மனித வாழ்க்கை வரப்பிரசாதமாகக் கருதப்படுகிறதே ஒழிய தண்டனையாகவோ சாபக்கேடாகவோ கொள்ளப்படவில்லை. மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் என்ற ஞானக் குழந்தையாகிய சம்பந்தரும் தனது பாடலில் குறிப்பிடுகிறார். இந்து சமய ஒவ்வொருவரும் அடைய வேண்டிய உறுதிப் பொருட்களாக அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நால்வகைப்புருடார்த்தங்களும் கூறப்பட்டுள்ளது. மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களாலும் ஒவ்வொருவரும் அறமுடையவர்களாக வாழ வேண்டுமென்றே இந்து சமயத் திருநூல்கள் அனைத்தும் குறிப்பிடுகின்றன. தர்மத்தைக் காத்தவனை அது காக்கும். கொன்றவனை அது கொல்லும் என்றே தரும சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. அறவாழ்வு வாழ்பவர்களின் மனச்சான்று என்றுமே மகிழ்ச்சியாக இருக்கும். மறந்தும் பிறருக்கு நாம் தீமையை நினைக்க கூடாது. தீமையை நினைப்பவர்களின் வாழ்வையே அந்நினைவு பாதிக்கச் செய்யும் . இதனை " மறந்தும் பிறன்கேடு ஆழற்க சூழின் அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு" எனத் தமிழ் மறையாகிய திருக்குறள் கூறுகிறது.

உலகியல் வாழ்க்கைக்கு பொருள்வளம் மிகவும் அவசியம் ஆகும். நேர்மையான உழைப்பும் நாணயமான சம்பாதிப்பும் ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்விற்கும் அவசியம் என்றே வேதமும் கூறுகிறது. முயற்சி உள்ளவர்களுக்கே இலக்குமி கடாச்சரம் கிடைக்கும் என்பதை முயற்சியுள்ள மானிடரில் சிங்கம் போன்றவனையே திருமகளும் அணைவாள் எனப் பஞ்சதந்திரமும் கூறுகிறது. பொருள் இல்லாதவர்களை எல்லோரும் எள்ளி நகையாடுவார்கள். பொருள்வளம் உள்ளவர்களை எல்லோரும் சிறப்புச் செய்வார்கள்.

" இல்லாரை எல்லோரும் எள்ளுவர் செல்வரை
எல்லோரும் செய்வர் சிறப்பு"

எனத் திருக்குறளும் செப்புகிறது.

இன்பம் சிற்றின்பம், பேரின்பம் என இருவகைப்படும். உலகியல் இன்பங்களை அனுபவிக்கும் போது ஏற்படும் இன்பம் சிற்றின்பம் என்றும் இறைவனோடு இணைந்திருக்கும் இன்பம் பேரின்பம் என்றும் அழைக்கப்படும். உலகியல் தொடர்ந்து நடைபெறுவதற்கு இல்லற இன்பம் இன்றியமையாததாகும். தர்ம சாஸ்திரங்கள் இந்த இன்பத்தை இல்லற வழியில் அனுபவிக்கவேண்டும் என்று கூறுகின்றன. அறத்துக்குப் புறம்பான வழிகளில் அனுபவிக்கின்ற இன்பங்கள். இறுதியில் துன்பத்தையே தரும். சந்ததித் தொடர்பு அற்றுப் போகாமல் இருப்பதற்காக நீ கிருஹஸ்த தர்மத்தை மேற்கொள்வாயாக என்று பிரமச்சாரியப் பருவத்தை முடித்து வெளியேறும் மாணவனைக் குரு ஆசீர்வதித்து விடுவதைக் குருகுல கல்வியின் வரலாற்றில் இருந்து அறிய முடிகிறது. இல் வாழ்க்கைக்கு ஆதாரமாக இருப்பது அன்பும் அறமுமே ஆகும். இல்வாழ்க்கையின் பண்பு அன்பு என்றால் பயன் அறமாகக் காணப்படுகிறது.

இந்து சமயத்தில் இல்லறம் என்பது ஆச்சிரம தர்மத்தின் அச்சாணியாகக் குறிப்பிடுகிறது. தர்ம சாஸ்திரங்கள் இல்வாழ்வானை காற்றுக்கு ஒப்பிடுகின்றன. அறவழியில் நின்று பழி பாவத்துக்கு அஞ்சிப் பொருளை ஈட்டி நேரிய வழியில் இன்பத்தை அனுபவித்தால் வீடுபேற்றை அடைய முடியும் எனத் தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன. துன்பங்களில் இருந்து விடுபடுவது மட்டுமன்றி ஈடு இணையற்ற இன்பத்தை அனுபவிப்பதே மோட்சம் என்பது இந்து சமயம் கூறும் முடிவாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதங்களின் ஒருமைப்பாடு

கே. கிருஷாந்தி
தமிழ் விசேட துறை
மூன்றாம் வருடம்
போராதனைப் பல்கலைக்கழகம்

மதம் என்பது; மனிதன் ஆற்றலை விஞ்சிய ஒப்பற்ற ஆற்றலும், பிரபஞ்சத்தைக் காக்கின்ற தெய்வீக சக்தியுமான ஆன கடவுளை நம்புகின்ற பற்றுறுதியினைக் கொண்ட (Faith) அமைப்பாகும். Re-ligare என்பது கட்டப்படுதல் அதாவது இறைவனுடன் கட்டப்படுதல் என்ற என்ற சொல்லில் பிறந்தது.

குழந்தை தன் தாயிற்காக ஏங்குவது போன்று மனிதன் இறைவனுக்காக ஏங்குகிறான். குழந்தை விளையாடுவதில் தன்னை மறப்பினும் துன்பம், பசி, பயம், தாகம்... என்பவை ஏற்படுகின்ற போது தாயை நாடும். அது போலவே மனிதன் உலக இன்பங்களில் திளைத்தாலும் ஒரு நிலையில் இறைவனை நாட வேண்டியிருக்கிறது. எத்தனை நாஸ்திகம் பேசினும் நீண்டதூரம் மனிதனால் அதில் நிலைத்து நிற்க முடியாது. தனது உடல்நிலையில் நின்று அவன் தன்னை உள்நோக்குவானாயின் இறைதத்துவத்தை உணர்கிறான். இவ்வுணர்வு ஒவ்வொரு மனிதனுக்கும் கால தாமதங்களின் அடிப்படையில் மாறுபடினும் இறைவனை ஆத்மா நாடுவது என்பது உண்மை. சங்கராச்சாரியார்

" ஓ அறிவற்றவனே கால தேவன் கதவினைத் தட்டும் போது
கோவிந்தனைத் தவிர நீ உலகில் சேமித்து வைத்தது
ஒன்றும் உன் உதவிக்கு வராது. ஆகவே உனது
போசகராகவும், பாதுகாவலராகவும் உள்ள இறைவனையே நாடு"

என்று பஜகோவிந்தத்தில் பாடினார்.

இவ்வாறு இறை தத்துவத்தை, நம் உண்மையான இயல்பு இறைவனிடத்தில் உள்ளதென்ற உணர்வினை, விழிப்பை அளிப்பனவே மதங்கள். ஒவ்வொரு மனிதனதும் உடல், மனம், திறமை, ரசனை போன்ற மாறுபாட்டால் இம் மதங்கள் வெளிப்புறத் தோற்றத்தில் ஒன்றில் இருந்து ஒன்று வேறுபடுகின்றன. ஆயினும் எப்பெயரில் அழைத்தாலும் தெய்வீகத் தத்துவம் ஒன்று ஆகிறது. அந்த ஒன்றால் இறைவனே தந்தை ; மனிதர் அனைவரும் சோதரர்; படைப்புக்களும், சீவராசிகளும் ஒன்றுக் கொன்று தொடர்புடையன என்பது புலனாகும். இவ்வுணர்வே ஜாதி, மத பேதங்களில் இருந்து மனிதனைப் புறம் தள்ளி இசைவையும், அமைதியையும் உலகில் நிலவ வைக்கும்.

" ஜாதிகள் என்பது ஒன்றே அது மனித ஜாதி
மதம் என்பது ஒன்றே அது அன்பு மதம் "

- பாபா

மதங்கள், இறைவனை ஆத்மா சென்றடைவதற்கான பல வழிகள். ஆத்மாவினதும் இறைவனதும் தொடர்பையும், இணக்கத்தையும், இசைவினையும் எடுத்துக் காட்டும் சாதனங்கள். ஆசைகளாலும், சுயநலங்களாலும், பாசங்களாலும் கட்டுண்ட மன்தைத் தடுத்து, கழுவப்பட்ட மனத்தை இறைவழியில் அல்லது நேர்வழியில் திசைதிருப்பும் ஒரு கருவி மட்டுமே. அதாவது மதங்கள் மதியை வலுப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டவை எனலாம்.

இம்மதங்கள் ஒன்றில் இருந்து ஒன்று மாறுபட்டது ஏன்? என்று வினாவின், கொள்கைகள் அல்லது ஆன்மீக அனுபவங்கள் ஒவ்வொரு மதத்தையும், தோற்றுவித்தவர், வெளிப்படுத்தும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபதேசங்களையும், நற்செய்திகளையும் தமக்கே உரிய பாணியில் வெளியிட்டனர். அவ்வாறு வெளியிடும் போது தமது காலச் சூழலின் தன்மைக்கு வேண்டியவற்றைக் கொடுக்க வேண்டிய தேவை நிலவியது. அத்தேவையின் காரணமாக மதத்தை ஸ்தாபிப்பவரது கருத்துக்களும் வித்தியாசப்பட்டன. இவை ஒன்றுக்கொன்று எதிரானவை போன்று தோன்றுவது வெளிப்புறச்சடங்குகளாலும், மரபுப் பழக்க வழக்கங்களாலுமே. உதாரணமாக இறைவனுக்குக் கீழ்ப்படியும் யூதமதம், உயரிய கருணையை வலியுறுத்தும் புத்தமதம், தெய்வீக அன்பின் அகக் காட்சியான கிறிஸ்தவ மதம், இறைவனைச் சரணடைதல் என்ற இஸ்லாம் மதம் என்பவற்றைக் காட்டலாம். இந்து மதம் வேதத்தின் அடிப்படையில் தெய்வீகத்தைத் தனக்குள்ளேயும், எல்லாவற்றுள்ளேயும் அறிந்தும், உணர்வித்தும் மேற்கூறிய சகல மதங்களின் பண்புகளின் விரிசலாகவும் வாழும் இலட்சியம் கொண்டது என்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

மதங்கள் வெளிப்புறத்தில் வேறுபாடுகள் கொண்டிருந்தாலும் அதில் ஒற்றுமை இல்லை என்று கூறமுடியாது. ஒவ்வொரு மதங்களும் ஒவ்வொருவரால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. யூத மதம் மோசசாலும், கிறிஸ்தவ மதம் யேசுவாலும், புத்தம் புத்தராலும்... என்று கூறிச் செல்லலாம். அனைத்து மதங்களுக்கும் புனித நூல் என்று ஒன்று காணப்படுகின்றது. கிறிஸ்தவத்திற்கு பைபிளும், இஸ்லாத்திற்கு குர்ஆனும் ஆகும். இந்து மதம் மட்டும் ஸ்தாபகர், புனித நூல் என்று கூற இல்லாபோதும் உபநிடதம், பிரம்மசூத்திரம், பகவத்கீதை ஆகிய மூன்றும் பிரஸ்தான திரயம் எனக் கூறப்படுவதும் அதுவே மறைநூலாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. எல்லா மதங்களுக்கும் புனிதத் தலங்கள் கூறப்படுகின்றன. இந்துகளுக்கு காசி, முஸ்லீம்களுக்கு மெக்கா என்பன அத்தோடு மதங்கள் கிளைகளாகக் காணப்படுகின்றன. கிறிஸ்தவம், கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து, இஸ்லாம், ஷியா, சன்னி, புத்தம், மஹாயான, ஹீனயான என்று எடுத்துக் காட்டலாம்.

இவ்வாறு வெளிப்புற ஒற்றுமைகளுடன் அகப்புற ஒற்றுமைகளும் ஆழமானவை. எல்லா மதத்தவரும் மூலமான ஒரு பொருளை அதன் இருப்பை நம்புகின்றனர். அதுவே இறைவன் என்கின்றனர். (பௌத்தரும் சமணரும் இறைவனைப் பற்றிப் பேசாவிடினும் தெய்வ தத்துவமான பரிபூரணத்தைப் பேசுகின்றனர்) முத்தி அல்லது இறைவனை அடைதலே மதங்களின் நோக்கமாகிறது. ஒவ்வொரு மதத்தவரும் அப் பரம்பொருளை ஈஸ்வரன், பிரம்மம் (இந்து), அர்ஹத் கேவலின் (சமணம்), புத்தா (புத்தம்), அல்லாஹ் (இஸ்லாம்), பரமண்டலத்திலுள்ள பிதா (கிறிஸ்தவம்) என்று அழைத்தாலும் அவற்றின் தத்துவ ஆய்வுகள் " ஏகம் சத் விப்ரா பஹுதா வதந்தி" என்பதையே விளக்கி நிற்கின்றன.

இவ் ஒன்றான இறைவனே படைத்தல், காத்தல், அழித்தல் எனும் தொழில்களைப் புரிகிறான் என்பது அம் மதத்தவரின் நம்பிக்கை. இதனை இந்துக்கள் பிரம்மத்தின் அம்சமான பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன் ஆகியோரே நிகழ்த்துகின்றனர் என்றும், கிறிஸ்தவர் பரமபிதா தெய்வமகன், புனித ஆவி என்போர் நிகழ்த்துவதாகவும், நம்புகின்றனர்.

மதங்கள் மனித வாழ்வை பூவுலக, சுவர்க்க, நரக என்று வகுத்துக் கூறுகின்றன. இதனூடு மறு உலகவாழ்வு மதங்களால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. அவை அவனது கன்மத்தோடு தொடர்புபடுத்தப்படுகின்றன. இங்கு உடல், ஆத்மா என்ற இரு பிரிவுகள் வெளிப்படுகின்றன. ஆத்ம தத்துவம் எல்லா மதங்களுக்கும் பொதுவானவை. "சாவது உடலேயன்றி உயிரன்று" என்கிறது கீதை. " துகளாக இருக்கும் நீ துகளுக்கே திரும்பிச் செல்கிறாய் என்பது உயிருக்குப் பொருத்தமானதல்ல" என்று பைபிள் கூறுகிறது. இவ் ஆத்மா இறைவனை அடைதலே (முக்தி) இலட்சியம் என்பது ஒவ்வொரு மதத்தினதும் வாதமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தியை அடைய ஆன்மாவின் ஆன்ம ஈடேற்றத்திற்கு தியானம், அதன் அவசியம் மதங்களால் எடுத்துரைக்கப்படுகின்றன. " இறைவனின் திருவுள்ளத்திற்கு உன்னை அர்ப்பணித்துக் கொள்" என்கிறது குர்ஆன். சிற்றுயிர் உணர்வை ஆன்ம உணர்விற்கு அர்ப்பணம் செய் என்கிறது கீதை.

இத்தகைய ஆத்ம தத்துவம் உணரப்படுகின்றபோது மதங்கள் சமத்துவத்தை பேசுகின்றன. எல்லோரும் " இறைவனின் குழந்தைகள் யாவரும் சகோதரர்கள் நமது ஆளுமைத் தன்மையின் சூக்கும நிலைகளில், எனக்கும் அவருக்கும் (இறைவனுக்கும்) உனக்கும் இடையே வேறுபாடில்லை" என்று ஆத்ம ஒன்றிணைப்பை வலியுறுத்துகின்றன.

"ஒவ்வொரு ஆன்மாவும் உள்ளடங்கிய தெய்வீகம் நிறைந்தது. புற, அக இயற்கையை அடக்குவதன் மூலம் இந்த அக தெய்வீகத்தை வெளிப்படுத்துவதே நோக்கம். செயல் அல்லது வழிபாடு அல்லது தத்துவ ஆராய்ச்சி இவற்றுள் ஒன்றாலோ பலவற்றாலோ எல்லாவற்றாலுமோ இதனைச் செய்து சுதந்திரனாக இரு இதுவே மதத்தின் முழு உண்மை. கொள்கைகளும், கோட்பாடுகளும், சடங்குகளும், சாஸ்திரங்களும், கோயில்களும், உருவங்களும் இரண்டாம் நிலையிலுள்ள விளக்கங்களே" என்பது சுவாமி விவேகானந்தரின் கூற்றாகிறது.

மனித மேம்பாட்டிற்கு ஒரு கருவியாக அமைக்கப்பட்ட மதங்களின் கொள்கைகளை நாம் ஐந்து பிரிவினுள் அடக்கி நோக்கலாம். அவை சத்யம், தர்மம், சாந்தி, ப்ரேமை, அஹிம்சை என்பனவாம்.

சத்யம் என்பது அறிவானது தேடியலைந்து எந்த உண்மையிலும், இருப்பிலும் நிறைவு பெறுகின்றதோ அந்த உண்மையிலும் இருப்பிலும் ஆகிறது. எப்போதும் சரியான செயலைப் புரிவதற்கு மனித சங்கற்பத்தை செலுத்திச் செல்வதே தர்மம். மனித உணர்ச்சிகளின் போராட்டங்களையும் குழப்பங்களையும் அமைதியின் அடிப்படையான மனோ நிலையில் சீர்படுத்தி அமைத்தலே சாந்தி. ஆத்மாவைப் பற்றிய விழிப்பினையும், இதய உணர்வு விரிந்து மகிழ்தலையும் அத்வைத விழிப்பும் அஹிம்சை எனலாம். அஹிம்சையே மதங்கள் கூறும் புறசீலங்கள் அவையே உயர்ந்த கடமையாக எதனையும், எவரையும் நோக்கும்போது ஊற்றெடுக்கும் அன்பினையும் கொண்டது ப்ரேமை. உலகின் ஒருமை நிலையும், ஒற்றுமை நிலையும் ஆத்மா பற்றி மலர்ச்சியும் அஹிம்ஸா பரமோ தர்ம எனப் போற்றப்படுகின்றன.

இவ் ஐந்து கொள்கைகளுமே மதங்களின் சாரம். இன்று மதம் என்ற வட்டத்துள் அதன் கூரிய உண்மைகளை ஆழ்ந்து நோக்காத மனித இனம் மதத்தையே வெறியாகக் கொண்டு உலக ஜீவன்களின் அழிவிற்கு கடவுளரை சாட்சியம் வைக்கின்றனர். சத்யம், தர்மம், சாந்தி, ப்ரேமை, அஹிம்சை என்பன இன்று மனிதர்களின் வாய் உதிர் வார்த்தைகளான காய்ந்த சருகுகள். மதம் என்று தம்மைச் சுற்றி அறியாமை எனும் சிறு வட்டத்தைப் போட்டு வைத்துள்ள மனித இனம் ஒற்றுமைகளையும் கண்டறிய வேண்டும் அந்த கண்டறிதலே உலகில் சமத்துவத்தை ஏற்படுத்தவல்லது.

வெவ்வேறு மதங்களானவை ஒன்றுக்கொன்று உயிரூட்டம் கொடுகின்றன என்பதை அவை காட்டப்படும் வழிகள் மாத்திரமே என்பதையும் மனிதர்கள் உணரும் நிலை ஏற்படும் போது தான் உலகம் நாடுகின்ற சாந்தி, சமாதானம் மற்றும் அக, புற ஒருமைப்பாடுகள் தானாக உருவாகும்.

*" லோகா சமஸ்தா சுஹினோ பவந்து"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே....

சி. சிவேந்திரன்
புவியியல் விசேட துறை
இரண்டாம் வருடம்
கலைப்பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

உலகத்தின் கர்த்தாவாக விளங்குபவர் சிவபெருமான். அவர் ஆன்மாக்களின் மீது கொண்ட அளவற்ற அன்பின் காரணமாகவே படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் முதலான ஐந்தொழில்களையும் செய்கின்றார். இதனையே உலகமாகிய முட்டைமீது பறவையாகிய கடவுள் இருந்து அடைகாக்கின்றான் என ஆந்திரேய உபநிடதம் செப்புகின்றது. இவனே உலக நடையறிந்து மாதொருபாகனாக நின்று காட்சியளிக்கின்றான். சிவன் ஒருவனையே அம்மையே அப்பா என்றும் அம்மையும் நீயே ! அப்பனும் நீயே! என்றும் தாயும் நீயே! தந்தையும் நீயே! என்றும் பலவாறு சுட்டி வழிபடுவர். பிறவி எடுத்த ஒவ்வொருவருக்கும் தனித்தனி அப்பனும், அம்மையும் இருப்பது போலவே இந்த உலகத்திலுள்ள சகல ஜீவராசிகளுக்கும் அம்மையும், அப்பனுமாக இறைவன் இருக்கின்றான். இதனை நாம் வாழும் பூமி " சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு" என மாணிக்கவாசகரும் சுத்த அறிவினாலும் அனுபவத்தினாலும் முக்தி நிலையில் நிற்பார்க்கு உண்மைக் கடவுள் கொள்கைக்குப் பொருளாக சிவன் ஒருவரே உள்ளான் என அப்பரடிகளும் கூறுவதனூடாக அறிய முடிகின்றது.

இவ்வாறு எங்கும் நிறைந்தருளும் இறைவனின் அன்பு உள்ளம் படைத்தவர்களின் மீது எவ்வாறு துணையாக இருக்கின்றான் என்பதையும் அவன் அடியவரது அடியார் உள்ளத்தில், உயிரில், உடலில் உடனிருந்து உணர்த்துபவன் என்பதை திருமந்திரமானது

" அன்பினுள்ளான்புறத் தானுடலாயுளான்
முன்பினுள்ளான்முனி வர்க்கும் பிரானவன்
அன்பினுள்ளாகி அமரும் அரும்பொருள்
அன்பினுள்ளார்க்கே அணை துணையாமே"

என்று கூறி நிற்கின்றது.

இறைவனே உயிர்களுக்கு ஐயுணர்வு பௌதீகப் பொருட்களை அறிய உதவுவதுடன் அன்பு நெறியில் நிற்போருக்கு மெய்யுணர்வினைக் கொடுத்து ஈற்றில் பதி ஈனத்தை வழங்கி விடுகின்றான். இதையே வள்ளுவம்

" ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு எய்தாதவர்க்கு" என்கிறது.

ஒவ்வொரு உலோகத்திற்கும் ஒவ்வொரு உருகுநிலை இருப்பதுபோலவேதான் அன்பின் நிலையும் காணப்படுகின்றது. பொன்னின் உருகுநிலையை விட இரும்பின் உருகுநிலை அதிகமாக உள்ளதோ அதேபோன்றே இறைவனிடத்திலே அடியார்கள் கொண்ட அன்பு நாம் உலகியற் பொருட்களிலே காட்டும் அன்பினை விட மிக மிக அதிகமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்புல னொன்றி நாத வென்றரற்றி
உரை தடுமாறி உரோமஞ் சிலிர்ப்ப
கரமலர் மொட்டித்து இதயமலர்க்
கண்கணி கூர நுண்நுனி அரும்பச்
சாயா அன்பினை நாடொறும் தழைப்பவர்
தாயேயாகி வளர்த்தனை போற்றி அதாவது இறைவனை நினைத்து"

அன்பினால் நெகிழ்ந்து உருகுகின்ற போது இறைவன் அவ்வுள்ளத்தில் பகிர்ந்து விடுகின்றான். இதையே அருளெனும் அன்பின் குழவி என்கிறது வள்ளுவம். அன்புநிலை ஒரு குறிக்கப்பட்ட உயர்நிலையினை அடையும்போதுதான் அப்பன் நமக்கு எளியவனாக காட்சி தருகின்றான். சிவனடியார்களும் அப்படித்தான் இறைவனைக் கண்டார்கள். பல அற்புதங்களைச் செய்தார்கள்.

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாள் ஆர்வலர்
புண்கணீர் பூசல்தரும்" என்ற வள்ளுவர் வாக்குக்கமைய இறைவனை

அன்போடுருகி அகங்குழைந்து இறைவனை வழுத்துவது அவர்களுக்கு கைவந்த கலை. இந்த நிலையில் அவர்கள் இறைவனைச் சிலையாகக் காணாமல் நேரிலேயே கண்டுகளித்ததுடன் பிறருக்கும் காட்டினார்கள். இறைவனிடம் அன்புடமையோடு உறவாடுதல் மனித சக்திக்கு உட்பட்ட விடயம் என்பதை நிரூபித்துக் காட்டினார்கள். இதற்கு எத்தனையோ எண்ணற்ற நாயன்மார் கதைகளுள்ளன.

திருக்காளத்திநாதனின் நிலை கண்டு தன் கண்களையே தோண்டி இறைவனுக்கு வைத்த கண்ணப்ப நாயனாரின் அன்புதான் என்னவென்று சொல்வது, எச்சில் வழிய "உனக்குப் பால் கொடுத்தது யார்" என்று அதட்டிக் கேட்ட தந்தைக்கு " தோடுடைய செவியன்..." பதிகம் பாடி தனக்கு அன்புடன் பாலூட்டிய திருத்தோணிபுரத்து அம்மையப்பனை காட்டிய திருஞானசம்பந்தர் வரலாறு, தன்னையே நாடி வந்த காரைக்காலம்மையாரின் வேண்டுகோளுக்கிணங்க இறைவன் திருவாலங் காட்டில் வைத்து தனது திருநடனக் காட்சியை காட்டிய சம்பவம், திருவையாற்றிலே அப்பரடிகளுக்கு அவரின் அன்பு வெளிப்பாட்டினைக் கண்டு இறைவன் திருக்கைலாயக் காட்சியைக் காட்டிய சம்பவம், திருப்பெருந்துறையிலே குருந்த மரநிழலில் எம்பெருமான் குருவாய் வந்து திருவாதவூர அடிகளை அன்போடு ஆட்கொண்டமை, தன்னையே கதி என்று நம்பிய மார்க்கண்டேயருக்காக இமயனை இறைவன் காலால் உதைத்த சம்பவம் முதலான கதைகள் யாவும் இறைவனிடத்தில் அன்பை பொழிந்தோர் பெற்ற பேற்றினை பறைசாற்றுகின்றன.

இவ்வாறாக நாயன்மார்கள் இறைவனை வழிபட்ட மார்க்கந்தான் அன்புநெறி என்கிறது சைவநெறி. உள்ளத்தினதும் உயிரினதும் ஊக்கத்தினால் மட்டுமே இறைவனை அடையலாம். உடலால் ஊக்கம் கொள்வது எளிது உள்ளத்தினால் ஊக்கம் கொள்வது சிரமமான காரியம். எனவே உள்ளத்தினால் விடாமுயற்சியுடன் ஊக்கம் கொண்டு அன்பு வழியில் நின்று வழிபட வேண்டும் என்கிறது அன்பு நெறி.

சிவன் எனும் ஒரு புள்ளி மையமாக இருக்க அதனைச் சுற்றி அண்மையிலும் சேய்மையிலும் பல மனிதப் புள்ளிகள் காணப்படுகின்றன. இவற்றில் ஒரு குறிக்கப்பட்ட மனிதப் புள்ளியின் பண்பின் நடத்தையானது அப்புள்ளிக்கும் சிவன் என்னும் மையப் புள்ளிக்குமுள்ள இடைத்தூரத்தைக் கொண்டு நிர்ணயிக்கப்படும். சிவனை அன்போடு அணுக அணுக அவர் நடத்தையும் சிறப்புறும். மாறாக விலக விலக வாழ்வு வளம் குன்றும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேடி வரும் ஆவார்
சிவ சிவ எனச் சிவகதி தானே என்ற திருவாசகப் பாடலடிகள் அழகாக இதனை விளக்கி நிற்கின்றது.

நாயன்மார்கள் இறைவன் மீது காட்டிய அன்பின் ஆழத்தினைப் போல என்றும் போன்றவர்களால் இயலாது உள்ளது. காரணம் நாயன்மார்கள் போன்ற ஒரு சிலரினால் தான் இது முடியும் என நம் போன்றவர்கள் நினைக்கின்றமையேயாகும். இது மாபெரும் தவறாகும். அத்துடன் உண்மையை அறிவதில் ஊக்கம் கொள்ளாதவர்கள் ஐம்புலன்களால் உணரப்படும் உலகியல் இன்பமே பெரிய இன்பம் என்ற மயக்கத்தில் சுழன்று கொண்டிருக்கிறார்கள். வெளியே நின்றுகொண்டு போலி ஆசாரங்களைச் செய்து கொண்டு காலத்தை வீணடிக்கின்றார்கள். உயிர்களிடத்தில் அன்பு பாராட்டுதல் மனிதப் பண்பாகும். எனவே உலகியல் இன்பத்திலிருந்து விடுபட வேண்டுமெனின் ஒவ்வொரு இந்துவும் இயன்றவரை உயிர்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும். அங்ஙனம் செய்வோருக்கு முத்தியின்பம் இயல்பாகவே கிடைக்கும். சிவ புண்ணியத்தை இயல்பாக செய்வோருக்கு பசு புண்ணியம் இயல்பாக வரும். எனவே பசு புண்ணியத்தோடு சிவ புண்ணியம் செய்வார்க்கே இறையருள் விரைவில் கிடைக்கும். அன்பின் அற்ப அளவிலான அன்பு சிற்றின்பம் இது தூய்பதற்கு மட்டும் போதுமானது. நைந்துருகிப் பாய்வது போலன்பு ஆராத இன்பம் அது பேரின்பம் நுகர்வதற்கான அன்பு அவனருளால் அவனிடமிருந்தே பெற வேண்டிய அன்பினை வேறெந்த முறையாலும் பெற முடியாது. அதுவே முத்தியின்பமாகிய சுத்தாத்துவித நிலைக்கு நம்மை இட்டுச் செல்லும் எனவே சிவனை அன்பு செய்யாதவர் ஒருகாலும் பேரின்பத்திற்கு நிலையான இன்பத்திற்கு ஏதுவான மெய்யுணர்வைப் பெற முடியாது. இதனால் தான் நம் சைவப் பெரியோர்கள் அன்பினை முன்வைத்து சாத்திரங்களையும் தோத்திரங்களையும் பின்வைத்தார்கள். அந்தளவுக்கு அன்பு நெறி இறைவழிபாட்டுடன் இரண்டறக் கலந்திருப்பதனாலே ஆகும்.

அத்துடன் இறைவனை அடைவதற்கு நான்கு முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்கிறது அகனமர்ந்த அன்புடையராதல், அறுபாக சொற்றல், ஐம்புலன்களை அடக்குதல், ஞானப் புகலுடையராதல் அந்நான்கினையும் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறது இந்து மதம்.

எனவே இந்துக்களாகிய நாம் செய்கின்ற கருமங்கள் அனைத்தையும் இறைவனுடன் ஐக்கியப்பட்டு நிகழ்த்தினால் இறைவனின் பேரின்பத்தைப் பெறலாம். இவ்வாறான பேரின்பத்தை சிவவழிபாட்டின் மூலமே பெற முடியும். அவ்வாறான ஒரு நிலையை ஒருவன் பெறுவானானால் இறைவனானவன் அவன் உள்ளத்தில் இரண்டறக்கலந்து விடுவான் என்பதை திருமூலர் திருமந்திரத்தில்.......

"அன்பும் சிவமும் இரண்டென்பர் - அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே" கூறப்பட்டுள்ளது.

ஆகவே "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்ற ஔவையின் வாக்குக்கு அமைய பெறுவதற்கு அரிய மனிதப் பிறவியை எடுத்த நாம் அனைவரும் பிறவியின் மகத்துவத்தை உணர்ந்து இறைவனை அன்பு நெறியில் நின்று வழிபட்டுஇறைவனின் முக்தி இன்பக் கனியினை சுவைப்போமாக.....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய இலங்கைத் தமிழ் சமூக கட்டமைப்பும் அதன் சமய நிலைப்பாடும்

*இ. ஜனந்தன்*
*மூன்றாம் வருடம்*
*பொறியியல் பீடம்*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*

பொதுவாக உலக சமூகக் கட்டமைப்புக்களை நோக்கும் போது பொருளாதாரம், தொழில்நுட்பம், கல்வி போன்ற துறைகளின் வளர்ச்சியுடன் சமய கலாசார துறைகளும் வளர்ந்து கொண்டே செல்கிறது என்பது அவதானிக்கத்தக்கதாய் இருக்கிறது. இருந்தும் இவை எல்லா பிரதேசங்களிலும் சர்வசமமான வளர்ச்சிகளைக் காட்டாமைக்கு பலவிதமான காரணங்கள் பிரதேச ரீதியாகவும், இன அரசியல் ரீதியாகவும் காணப்படுகின்றன. தமிழ்ச் சமூக அமைப்பானது இந்த இரண்டாவது வகையான இன அரசியல் ரீதியானது என்ற வகைக்குள் அடங்குகிறது. இதற்கு எமது நாட்டில் காணப்படும் இனங்களும், அவற்றின் பரிணாமமும் பெரும்பான்மையினம் தன்னகத்தே கூடிய அதிகாரங்களை வைத்து ஆட்சி நடத்துவதும் முக்கிய காரணங்களாக இருக்கின்றது. எப்போது ஒரு சமூகம் தனது உரிமைகள் கொண்டிருக்கும் அதிகாரங்கள் என்பனவற்றைக் கூடியளவிற்கு சமூக, சமய, கலாசார நடவடிக்கைகள் மூலமே வெளி உலகிற்குப் பகிரங்கப்படுத்துகிறது. எனவே அதிகாரங்கள், உரிமைகள், மட்டுப்படுத்தப்படும் போது கூடிய அழுத்தம் அந்த சமூகத்தின் சமய, கலாசார கட்டமைப்பு மீதே பிரயோகிக்கப்படுகிறது.

இலங்கையின் தமிழ்ச் சமூகக் கட்டமைப்பை எடுத்து நோக்கும் போது பண்டைய காலத்திலிருந்தே இன்றைய காலம் வரை பல்வேறு வழிகளில் சிதைவுற்றும் திரிபடைந்தும் காணப்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழர் பிரதேசங்களில் நடத்தப்படும் போர் நடவடிக்கையே இதற்குப் பிரதான அடிப்படைக் காரணி ஆகும். அவரவர் பிரதேசங்களில் தனித்துவமாக வாழ்ந்து வந்த தமிழ் சமூகம் இன்றைய இந்த போர் மேகம் நிலை கொண்டுள்ள பிரதேசங்களில் தொடர்ந்தும் தம்மால் வாழ முடியாமல் இலங்கையின் பலபாகங்களில் மட்டுமல்ல உலகின் பல பாகங்களிலும் கூட தமது வாழ்வை தொடரவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதன் விளைவாக புலம் பெயர்ந்து வாழும் பிரதேசங்களின் சமூக போக்குடன் தாமும் இணைந்து வாழ வேண்டியதாலும் வாழும் பிரதேசங்களில் தம் சமய நடவடிக்கைகளைப் பேணிப்பாதுகாக்கக்கூடிய வசதிகள் இல்லை என்பதாலும் பாரம்பரிய நடவடிக்கைகளை கைவிடக்கூடிய ஒரு அபாயகரமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர். இன்றைய இந்த இனப்பிரச்சினை இன்றோ, நாளையோ அன்றி இன்னும் சொற்ப காலத்திலோ தீர்ந்து போகக்கூடியதொன்றல்ல. இந்நிலை தொடருமானால் சமய கலாசார விழுமியங்கள் அழிந்து போவதும் திண்ணமாகும். அநேகமாக தமிழ்ப்பிரதேசங்களில் இந்துக் கோயில்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. எத்தனையோ ஆலயங்கள் கைவிடப்பட்டிருக்கின்றன. இன்னும் நிறையவே இந்நிலையில் இருக்கின்றன. அது மட்டுமன்றி பல ஆலயங்களில் வருடாந்த உற்சவங்களை அதன் உண்மையான ஆகம முறைகளுடன் நடத்த முடியாத நிலையிலும் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் பார்த்தும் கேட்டும் இறுகிப் போன இதயங்களுடன் வாழும் தமிழ் மக்களில் அநேகர் இறைவன் உண்மையில் இவ் ஆலயங்களில் குடிகொண்டுள்ளான் என்பதை தயங்காமல் கேட்டு தம் இம்சைகளையும் தோல்விகளையும் வெளிப்படுத்துகின்றனர். காலத்தின் ஓட்டத்தில் அவ்வளவு தூரத்திற்கு நிலமைகள் மாறிக் கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சிமீது வான்இடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை என்ற மக்கள் இன்று நம்பிக்கையை இழக்க முடியாமல் இழந்திருகின்றார்கள். அதாவது இழக்க வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று கருதுவதே பொருத்தமானது. இலங்கையில் கூடியளவு தமிழ் சமூகங்கள் வாழும் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு, மன்னார் மாவட்டங்களில் எத்தனையோ புனித ஸ்தலங்கள் இருள் சூழ்ந்து கிடக்கின்றன. பல ஆலயங்களின் மூலஸ்தானங்களில் புற்களும் முளைத்திருக்கின்றன. இதுபோன்ற நடவடிக்கைகள் மேன்மேலும் தொடரப் போகின்றன என்பதே கூற இயலாமல் கூறவேண்டிய உண்மையாகும். சமயம் என்று பார்க்கும் போது அங்கு கோவில்கள் தேவாலயங்களே முன்னணியில் இருக்கின்றன. அதுமட்டுமன்றி எமது சமய செயல்பாடுகளில் காணப்படும் அம்சங்களான விரதங்கள், ஒவ்வோர் தெய்வத்திற்குமான சிறப்பு நாட்கள் போன்ற பல்வேறுபடட விடயங்களாலும் அவற்றின் அநுட்டானங்களிலும் பெரிய இடர்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது நாளை பிறக்கப்போகும் ஒவ்வோர் சிசுவிற்கும் வெறும் உருவச்சிலைகளும் பழைய கதைகளும் கூட மிஞ்சுமா என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. எனவே தன்கையே தனக்குதவி என்பதுபோல எமது சமய குறைபாடுகளையும் தடங்கல்களையும் நிவர்த்தி செய்வதற்கு நாம் நடவடிக்கைகளில் நேரடியாக இறங்க வேண்டும் என்பது கட்டாயமாகி விட்டது.

இருந்தாலும் இன்றைய தமிழ் சமூகங்களின் கூறுபட்ட வாழ்க்கையில் பிற சமயங்களுடன் ஒப்பிடும்போது தம்மால் இயன்றளவிற்கு தாம் வாழும் இடங்களில் சமய நடவடிக்கைகளை மக்கள் மேற்கொண்டு வருகிறார்கள். இன்று பிரித்தானியா, கனடா போன்ற தமிழர் செறிந்து வாழும் இடங்களில் சைவக்கோயில்களை அமைத்து வழிபடுதல், பாரம்பரிய வைபவங்களை சமய முறைப்படி நடாத்தல் போன்ற பல்வேறுபட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இதற்கு இவர்கள் தங்கிவாழும் மற்றைய சமூகங்களின் ஒத்தாசை புரிதலும் ஒரு அடிப்படை காரணியாக இருக்கின்றது. இல்லையேல் இவையொருபோதும் சாத்தியமாக அமையப்போவதில்லை. கலவரங்கள் ஏற்படும் போது முதலில் தாக்கப்படுவது அவ்வவ் இனங்களின் சமய வழிபாட்டுத் தலங்கள் என்பதை கண்கூடாக கண்டிருக்கிறோம். எனவே தமிழ் மக்கள் மென்மேலும் பல்வேறு முயற்சிகளில் தமது சமய கலாசார விழுமியங்களைப் பேண ஈடுபடல் வேண்டும். இதற்குச் சாத்தியமாகும் வழிகள் மூலம் செயற்பட்டாலே இலகுவானது. எனவே தங்கிவாழும் இடங்களில் தம் இல்லங்களிலேயே சமயத்திற்கென தனியான இடம் ஒதுக்கி வழிபடுதல், ஆலயங்கள் பேணக்கூடிய இடங்களில் அவற்றை மேற்கொள்ளல், பாரம்பரிய கலாசார செயற்பாடுகளை இயன்றளவு கடைப்பிடித்தல், சமய சம்பந்தமான கருத்துக்களை வெளிப்படுத்தக்கூடிய முறைகளை கையாளுதல், இதற்காக ஊடகத்துறைகளையும், பிரசாரத்துறைகளையும் பயன்படுத்தல், சாத்தியமாகக்கூடிய கல்விக்கூடங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் சமய சம்பந்தமான அமைப்புகளைத் தோற்றுவித்தல் போன்ற முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். உதாரணமாக தென்னிலங்கை பல்கலைக்கழகங்களில் பேராதனைப் பல்கலைக்கழகங்களில் இயங்கும் இந்து மாணவர் சங்கமும் அதன் செயற்பாடுகளும் போற்றத்தக்கதாகும்.

அத்துடன் இன்றைய பாரிய தகவல் தொழில் நுட்பத்தில் பயன்படுத்தப்படும் இணையத்தில் எத்தனையோ சமயசம்பந்தமான வெப்தானங்கள் காணப்படுகின்றன. இது ஒரு வரவேற்கத்தக்க விடயம் ஏனெனில் இன்றைய சமூகத்திற்கு சமய நடவடிக்கைகள் பற்றிய அறிவையூட்ட மிகச்சிறந்த வழி இதுவாகும். எனவே பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானிலும் தனிசிறந்தனவே என்பது போல் எம்மை கட்டுக்கோப்புக்குள் வைத்திருக்கும் எமது சமயமும் நனி சிறந்ததுவே. இதன் பொருட்டு எமது சயத்தையும் அதன் கோட்பாடுகளையும் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் தனித்தனியாகவோ அன்றி கூட்டாகவோ இந்த சமயப்பூகோளத்தன்று மீண்டும் கோளமாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டால் வளர்ச்சிப்பாதை வளையாது என்பது உறுதி.

" ஆத்மாவும் ஆன்மீகமும் உயிர்களின் இரகசியம்
இதைப் புரிந்து வாழ்பவனே பூவுலகில் புத்திசாலி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமதமும் பெண்களும்

சி. பரணிதரன்
முதலாம் வருடம்
விஞ்ஞான பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

உலக வரலாற்றிலே மிகவும் புராதனமான இந்திய ஆரிய இனத்திலேயே பெண்மை இலட்சியங்கள் மையம் கொண்டுள்ளன. வேதங்கள் சொல்வது போல் பெண்கள் "சுகதர்மின" மாக இருந்தார்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் யாக குண்டம் ஒன்று இருந்தது. திருமணத்தின் போது அதில் வளர்க்கப்படுகின்ற அக்கினி தம்பதியருள் ஒருவர் மரணம் அடையும் வரை அணையாமல் பாதுகாக்கப்படுகின்றது. சிதைக்கு வேண்டிய நெருப்பு இதிலிருந்தே எடுத்துச் செல்லப்படுகின்றது. யாக குண்டத்தில் வளர்கின்ற அக்னியில் கணவனும் மனைவியும் ஆஹுதி அளித்தார்கள். மனைவி இல்லாமல் கணவன் தனித்துப் பிரார்த்தனைகள் செய்ய முடியாது. ஏனெனில் கணவன் ஒரு பாதியாகவும் மனைவி அவனது மறுபகுதியாகவும் கருதப்படுகின்றாள். இதன் காரணமாக திருமணமாகாத ஒருவர் புரோகிதர் ஆக முடியாது. பண்டைய ரோம சாம்ராஜ்ஜியத்திலும் இதே கருத்து நிலவியது. புரோகிதர் என்ற ஒரு தனி வகுப்பினர் உருவாகிய போது மதச் சடங்குகளுக்கு மனைவி அவசியம் என்ற கருத்து படிப்படியாக மறையத் தொடங்கியது.

தொடர்ந்து வந்த காலங்களில் பெண்களுக்கு அதிகாரம் கிடையாது, திருமணமானாலும் அவளுக்கு எந்த உரிமையும் இல்லை என்ற வாதம் குரல் எழுப்பியது. இதனால் எல்லா இடங்களிலும் பெண்கள் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதற்கு இன்னொரு காரணம் திருமண முறையில் வந்த மாற்றமே. ஆரம்பகால முறை பெண் வழி மரபாக (Matriardy) இருந்தது. அதாவது குடும்பத்தலைவி தாயாக இருந்தாள் அவளது நிலையை அடைவது பெண்களின் நோக்கமாக இருந்தது. ஒரு பெண் பலரை மணக்கின்ற வழக்கத்திற்கு (Polyandry) இது வழி வகுத்தது. ஐந்தாறு சகோதரர்கள் ஒருத்தியை மணக்கின்ற வழக்கம் உருவானது. வேதங்களிலும் இது அனுமதிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். குழந்தைகள் இல்லாமல் ஒருவன் இறக்க நேரிட்டால் அவனது விதவை இன்னொருவனுடன் வாழ்ந்து குழந்தை பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டாள். இதைத் தொடர்ந்து வந்த காலத்தில் விதவைகள் மறுமணம் செய்ய அனுமதிக்கப்பட்டார்கள்.

ஆனால் பிற்காலத்தில் இந்த வழக்கம் இல்லாதொழிந்தது. இத்தகைய தேவையற்ற பழக்க வழக்கங்களுடன் தனிமனித தூய வாழ்வும் என்ற கருத்து இந்துக்கள் எல்லோரிடமும் தீவிரமாக எழுந்தது. வேதங்களின் ஒவ்வொரு பக்கங்களிலும் தூய வாழ்வு வற்புறுத்தப்படுவதைக் காணலாம். இதற்கு கடுமையான சட்டங்கள் வகுக்கப்பட்டன. கல்விக்காக ஆண்களும் பெண்களும் கல்விச்சாலைக்கு அனுப்பப்பட்டனர். ஒழுக்கத்திலிருந்து சிறிது பிறழ்பவருக்குக் கூட கொடூரமான தண்டனைகள் அளிக்கப்பட்டன. இந்த ஒழுக்க உணர்வு இனத்தின் நாடி நாளமெல்லாம் புகுந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களையே வெட்டிக் கொண்டு மாண்டார்கள். பெண்கள் தங்களைத் தீக்கரையாக்கினார்கள். ஆண்கள் அனைவரும் மாண்ட பின் சுல்தான் நகரத்திற்குள் நுழைந்தான். அங்கே தெருவில் எழுந்தது மாபெரும் நெருப்பு. ராணியே தலைமை தாங்கிச் செல்ல ஏராளம் பெண்கள் அந்த நெருப்பைச் சுற்றிவந்து கொண்டிருந்தனர். அவர்களின் நோக்கத்தைப் புரிந்து கொண்ட சுல்தான் சென்று ராணியைத் தடுத்தான். அதற்கு அவள் இதுதான் ராஜபுத்திரப் பெண் உனக்குக் கொடுக்கும் வரவேற்பு என்று கூறிவிட்டு தீயில் பாய்ந்தாள். முகமதியர்களிடம் இருந்து தங்கள் கற்பைக் காத்துக் கொள்வதற்காக அன்று 74, 500 பெண்கள் அந்தத் தீயில் வீழ்ந்து உயிர் துறந்ததாகக் கூறப்படுகிறது.

இன்னும் லட்சுமிபாய் (1857) ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட பெண்மணி. நவீனப்படைகளை வழிநடத்திக் கொண்டு பெரிய படைகளுக்குத் தலைமையேற்று அதை நிர்வகித்து இரண்டு வருடம் சுதந்திரமாக வாழ்ந்தாள் இந்த ராணி ஒரு பிராமணப் பெண்.

அடுத்து வருவது துறவியர் காலம்.புத்த மதத்தின் ஆதிக்க காலம் அது. உயர் நிலையை துறவியர் மட்டுமே அடைய முடியும் என்று அது போதித்தது. தூய வாழ்க்கை அது ஒன்றே நோக்கமாக இருந்தது. தவறுகள் அனைத்தும் பெண்கள் மீது சுமத்தப்பட்டன. இந்தியா முழுவதையும் ஒரு பெரிய மடமாக்கி பெண்களுக்கு எதிரான வாதங்களும் பழமொழிகளும் இயற்ற வழிவகுத்தன. துறவு நெறியின் வளர்ச்சி என்றாலே பெண்களின் வீழ்ச்சி என்று கருதுமளவிற்கு பெண்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது. பெண்கள் மிகவும் கேவலமான நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஆனாலும் பெண்களின் பெருமையை ஆதிதொட்டு இன்றுவரை தன்னகத்தே நிலைநிறுத்தி மிளிர்கிறது அர்த்தமுள்ள இந்து மதம். மேலை நாட்டில் பெண்மை தனது இலட்சியத்தை மனைவியில் கண்டது. கீழை நாட்டில் பெண்மையின் இலட்சியம் தாய். தாய்க்கு இந்து மதத்தில் உயர்ந்த இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மிகவும் ஆழ்ந்த தத்துவங்களை உள்ளடக்கிய சக்தி வழிபாடு இதன் அடிப்படையிலேயே விரிந்தது.

இன்றும் எரிந்து கொண்டிருக்கும் சமுதாய நிலைக்களன்களில் இந்துத் தத்துவப் பண்புகள் அழியா இடம்பெற்று விட்டன. இந்தியா முழுவதும் ஏன் இந்துக்கள் வாழும் இடமெல்லாம் கற்பு நெறி களங்கமில்லா வளர்ச்சி கண்டது. கற்பு நெறியில் உருவான இந்துப் பெண்மை இந்து சமுதாயத்திற்கே ஆணிவேராக இன்றும் நிலைக்கிறது. ஆனாலும் இந்து மதம் புரையோடிப் போயிருந்த யாழ்நகரில் இந்துப் பெண்கள் கற்பழிக்கப்பட்டது இந்துகளைப் பொறுத்தவரை தலைகுனிய வைப்பதற்காகவல்ல. இவையொல்லாம் இன்னும் சித்தூர் ராணிகளையும், கண்ணகிகளையும் சாவித்திரிகளையும் தோற்றுவித்தன, தோற்றுவிக்கின்றன. இதுதான் இந்து மதம் கொண்ட நெருப்பு இன்னும் அந்த நெருப்பு இந்துக்களிடையே எரியட்டும். கற்பு, இதுதான் இந்து இனத்தின் பெருமை இந்துப் பெண்களின் பெருமை. களங்கமில்லா இந்து நெறி ஒவ்வொரு இந்துவின் இரத்தத்திலும் ஓடட்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனின் வடிவமும் வழிபாடும்

க. வேல்வேந்தன்
மூன்றாம் வருடம்
பொறியியற் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

இந்து சமயமானது மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரீக காலத்தை அண்டிய மிகப் பழம்பெரும் சமயமாகும். இக்காலகட்டத்தில் இச்சமயமானது திராவிட மற்றும் ஆரிய மக்களால் வழிபட்டமைக்கான சான்றுகள் உள்ளன. அகழ்வாராய்ச்சியாளர்களினால் கண்டெடுக்கப்பட்ட பல பொருட்கள் ஆதாரங்களாக உள்ளன. எருமைக்கடாவின் கொம்புகளும் மற்றும் அம்பாளின் வயிற்றிலிருந்து செடி ஒன்று வளர்வதைப் போன்ற நினைவுச் சின்னங்களும் சிவன், அம்பாள் வழிபாட்டை உறுதிப்படுத்துகின்றன. இந்து சமயமானது ஆறு பிரிவுகளைக் கொண்ட சமயமாக விளங்குகிறது. அவையாவன சைவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம், வைணவம் முறையே சிவன், சக்தி, பிள்ளையார், முருகன், சூரியன், விஸ்ணு ஆகிய தெய்வங்களை குல தெய்வங்களாகக் கொண்டு பகுதி பகுதியாக மக்கள் வழிபட்டனர்.

நாம் எம் பரம் பொருளாகிய இறவனுக்கு இரு பெரும் இலக்கணங்களை வைத்திருக்கிறோம். ஒன்று தடத்த இலக்கணம் மற்றையது சொரூப இலக்கணம். சொரூப இலக்கணமானது அவலநிலை என்றும் நிர்குணநிலை என்றும் சச்சிதானந்த பிரம்மம் என்றும் கூறுவர். அருவம் என்றால் உருவமற்ற நிலை. அதாவது உண்மையான நிலை, உருவங்களுக்கு அப்பாற்பட்டு நிற்கும் நிலை. இதையே மணிவாசகப் பெருந்தகை கூட தனது திருவெமபாவை முதற் பாடலில்

"ஆதியும் அந்தமும் இல்லா
அரும்பெரும் சோதியை...."

என்று குறிப்பிட்டுள்ளார். அடுத்து தடத்த இலக்கணமானது உருவ நிலையைக் குறிக்கும். இறைவன் தனது சக்தியால் பல்வேறு வடிவங்களில் தோன்றி பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார். சிவன், நடராஜர், கணபதி, முருகன், விஸ்ணு, ஐயப்பன் போல பல தெய்வ வடிவில் அருள் பாலிக்கின்றார். ஒரு ஆறானது பல கிளைகளாக பிரிந்து பல இடங்களுக்கு பயன் கொடுத்து பின்னர் ஒன்றாவது போன்றதே இதுவாகும். இந்த உருவ நிலையை அப்பர் சுவாமிகள் மிக அழகாக சொல்லியிருக்கிறார்.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமின் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற் பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதேயிந்த மாநிலத்தே"

சிவபெருமானின் கருணை மிக்க கண்களின் வளைந்த புருவங்களையும், கொவ்வைப்பழம் போன்ற சிவந்த வாயில் தோன்றும் புன்முறுவலையும், கங்கா நதியின் குளிர் நீரால் நனைந்திருக்கும் சடைமுடியையும், பவளம் போன்று சிவந்த மேனியில் பூசப்பெற்ற திருவெண்ணீற்றையும் அடியவர்களுக்கு பேரின்பம் அருளும் தூக்கிய திருவடிகளையும் கொண்ட உருவத்தையுடைய உருவ நிலையை தரிப்பதற்கு இந்த உலகில் மானிடப் பிறப்பு வேடம் என்று அப்பர் பெருமான் வேண்டுகிறார்.

அடுத்து அருவுருவ நிலை. அதாவது அருவமும் உருவமும் இன்றி சிவலிங்கம், சக்திபீடம், சூலம் போன்ற நிலையில் இருந்து பக்தர்களுக்கு அருளும் நிலை. இம் மூன்று நிலையையும் நீரின் மூன்று நிலைகளுடன் சுவாமி மதுவானந்தர் ஒப்பிடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீரானது அருவுருவ நிலையில் தண்ணீர் போன்றும்
உருவநிலையில் பனிக்கட்டி போன்றும் அருவ
நிலையில் நீராவி போன்றும் இருக்கின்றது.
அது போலவே சச்சிதானந்தக்கடலாகிய இறைவன்
தண்ணீர் போல் அருவுருவ நிலையில் உள்ளான்.
பக்தி என்னும் குளிர் காற்றினால் அந்நீர் உறைந்து
பனிக்கட்டி போன்று உருவநிலையை அடைகிறான்.
ஆனால் ஞானசூரியன் உதித்ததும் உருவம் அற்ற
நீராவி போன்று அருவமாக மாறுகிறான்.
நீர் மூன்று நிலைகளிலிருப்பது போல் இறைவன்
அருவ, அருவுருவ, உருவ நிலைகளில் பக்தர்களின்
தரத்திற்கேற்ப வெளிப்பட்டு அருள் புரிகின்றான்."

ஆலயங்களிலே நாம் இறைவனை உருவ நிலையில் வைத்து வழிபடுகின்றோம். ஆலயம் தான் இறைவன் உறைகின்ற இடம். ஆலயத்திலே எமது ஐம்புலன்களையும் அடக்கி மனதை ஒருமுகப்படுத்தி வழிபடுகின்றோம். இவ்வாறு நாம் ஆலயத்திலே சென்று இறைவனிடம் நமக்கு வேண்டியவற்றை சொல்லி முறையிடுகின்றோம். இதற்கு ஒரு மரபுக் கதை கூட உள்ளது. எம்மைப் போன்ற பக்தர்கள் மூன்று விதமாக உள்ளனர்.

ஓர் ஊரில் ஒரு நாள் மூன்று மனிதர்கள் வழிப்போக்கர்களாக சென்றார்கள் அவர்களுக்கோ மிகுந்த பசி அவர்களிடமோ பணம் எதுவுமே இல்லை. தமக்கு உணவு எதுவும் கிடைக்காதோ என்று அங்கலாய்த்து கொண்டிருந்தார்கள். அப்போது அவ்வூர் அரசன் மிகவும் இரக்கசாலி என்பதையும் தன்னை நாடி வருபவர்களுக்கு ஆதரவளிப்பவன் என்பதையும் அறிந்து கொண்டார்கள். எனவே மூவரும் அவரிடம் செல்லத் தீர்மானித்தார்கள்.

முதலாம் நபர் அவ்வரசனிடம் சென்றான். அங்கு சென்று எனக்கு பசிக்கிறது ஐயா ஒரு பத்து ரூபா கொடுங்கள் என்று கேட்டான். உடனே அரசன் இரண்டு ரூபாவைக் கொடுத்து உனது பசியைத் தீர்த்துக் கொள் என்று அனுப்பினார். அடுத்து இரண்டாமவன் சென்று அரசனிடம் ஐயா எனக்கு பசிக்கிறது உங்களைப் பற்றியெல்லாம் அறிந்துள்ளேன். உங்கள் கொடைகளைப் பற்றி ஊரார் எல்லாம் சொல்லக் கேள்வியுற்றுள்ளேன். அதனால் உங்களிடம் வந்தேன். உடனே அரசன் ஐந்து ரூபாயைக் கொடுத்து அனுப்பினார். கடைசியாக மூன்றாவது நபர் சென்றான். அரசே உங்களைப் பற்றியும், உங்களுடைய சிறந்த குணங்களைப் பற்றியும் எல்லோரும் சொல்லக் கேள்வியுற்றிருக்கிறேன். அதனால் உங்களைப் பார்த்து தரிசித்து விட்டுப் போகலாம் என்று கூறினான். உடனே அரசன் அவனை ஆதரித்து அன்போடு அரவணைத்து உபசரித்து உணவு ஊட்டி பசியாற வைத்தான்.

பின்னர் அன்பரே உனது வந்த விடயம் என்னவென்று வினாவினார். அதற்கு அந்நபர் நான் வந்த காரியம் எப்பொழுதோ நிறைவேறி விட்டது. நன்றி ஐயா நான் வருகிறேன் என்று கூறினான். எல்லாவற்றையும் அறிந்த அரசன் அவனுக்கு பத்து ரூபாவும் கொடுத்து உன் துணைக்கு வைத்துக் கொள் என்று அனுப்பி வைத்தார். இவ்வாறே பக்தர்களில் மூன்று வகையினர் உள்ளனர். சிலர் முதலாம் நபர் போல இறைவனிடம் ஏதோ கடன் கொடுத்தவர்கள் திருப்பிக் கொடுக்கும்படி கேட்பது போல் கேட்கிறார்கள். எனவே இறைவன் கேட்டதில் ஒரு பகுதியையே கொடுக்கிறார். மூன்றாம் நபர் போல் இறைவனைத் தரிசிக்க செல்ல வேண்டும். பின்னர் எம் குறைகளை முறையிட வேண்டும். இறைவன் எமக்கு அருளுவார். எம்மிற் பலர் முதலிரு வகையினரே.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமதமும் விஞ்ஞானமும் குறியீட்டு ஒழுங்கும்

சி. சிவரூபன்
இரண்டாம் வருடம்
விஞ்ஞானபீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

மதங்கள் பலவகை அவற்றின் கொள்கைகள் ஒழுங்கு முறைகள் பலவகை. ஆனால் அன்று இன்று நாளை என்றும் நிரந்தரமான விஞ்ஞானரீதியில் தர்க்கிக்கக்கூடிய தனித்துவமான கொள்கைகளை தன்னகத்தே கொண்டுள்ளது இந்துமதம். பொதுவாக சொல்வார்கள் இந்து மதத்திலுள்ள நுணுக்கங்களை ஊடுருவி ஆராய்ந்து விளங்கக்கூடிய தகுதி பெரிய விஞ்ஞானிகளுக்கு மட்டுமே உண்டு. அவ்வளவு விளக்கங்களையும் விளங்கிக்கொண்டு செயற்பட உலகின் பெரும்பான்மையினராக இருக்கும் சாதாரண மனிதர்களுக்கு முடியாதகாரியம். எனவே வேறு சில நம்பிக்கை தரக்கூடிய பயமுறுத்தலுடன் கூடிய வகையில் அந்தஉண்மை விஞ்ஞானத்தை பாமரர் மத்தியிலும் செயற்படுத்தி அவர்களும் நன்மைபெற அமைந்துள்ளது இந்துமதம்.

இவ்வாறு செயற்படுத்தும் செயல்களிலும் சில குறியீட்டு முறைகளை வைத்து இவ்வாறு செய்தால் இது மங்கள நிகழ்விற்கு, இவ்வாறு இருந்தால் அது அமங்கள நிகழ்விற்கு என்று அர்த்தப் படக்கூடிய வகையில் இந்துமதம் சில கொள்கைகளையும் உள்ளடக்கியுள்ளது.

அன்றாட நிகழ்வுகளை எடுத்து நோக்குவோமானால் காலைக்குளிப்பு என்பது இரவு ஓய்வு பெற்ற உறுப்புக்கள் (வியர்வையோ, தசை இயக்கப்பாட்டுச் சக்தியால் வெப்பமோ பிறப்பிக்கபடாத நேரம்) புத்துணர்ச்சி பெறவும், புறச்சுத்தமாக இருப்பதற்காகவும் அமைகிறது. எண்சாண் உடம்பிற்கு சிரசு பிரதானம். அதிலும் நெற்றி முக்கிய இடமாக அமைகிறது. நெற்றியின் உட்புறத்தில் இருபக்கமும் இருக்கும் வெற்றுப்பைகளிற்குள் திரவ பதார்த்தம் தேங்கினால் உருவாகுவாதே " சைனஸ்" தலைவலி. வெளிபுற நெற்றியை ஈரம் குடிகொள்ளாது பார்க்கவேண்டியது எமது கடமை இதற்காக நெற்றியிலும், உடம்பில் எலும்பு மூட்டுகளில் உராய்வைத் தடுப்பதற்காக ஒருவகை எண்ணெய் பைகள் உள்ள இடத்திலும், சிறுநீரகம் உள்ள இடுப்பின் பின்பகுதியிலும் தீட்சை என்ற பெயரில் திருநீறு இடப்படுகிறது. திருநீறு மிகக்கூடிய அளவு ஈரப்பற்றை உறிஞ்சும் தன்மை கொண்டதாலே திருநீற்றை அவ்விடங்களில் அணிவதாக முறை கொண்டு வரப்பட்டுள்ளது. அடுத்து சூரிய நமஸ்காரம் செய்யும்போது உடலினுள் தோல்மூலம் காலைசூரியகதிர்களில் இருந்து விற்றமின் பெறக்கூடியதாக உள்ளதுடன் கண்தசைகளுக்கும் (கதிராளி) ஒரு பயிற்ச்சியாக அமைகிறது. வழமையாக இந்துக்கள் பொட்டு அணிவது வழக்கம். நெற்றியின் புருவ மத்தியில் தான் எல்லா நரம்புகளும் சந்திக்கின்றன எனவே வெளிவெப்பத்தில் இருந்து அவ்விடத்தை பாதுகாக்க இயற்கையாகவே குளிர்ச்சியை தரக்கூடிய பொருளான சந்தணம் அணிகின்றோம். ஏன் அருட்களை வசயம் செய்பவர்கள் கூட நரம்புமையமான புருவமத்தியூடாக சில கதிர்களை அனுப்புவதாலே வசயம் செய்ய முடிகிறதாம். ஆனால் நெற்றியில் பொட்டு இருந்தால் அந்நேரம் அவரை வசயம் செய்ய முடியாது என்கிறார்கள். அடுத்து தியானம் செய்வது மனதை ஒரு வழிப்படுத்தவும் உடம்பின் ஒவ்வொரு பாகத்தையும் எமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவும் ஞானகசக்தியை அதிகரிக்கவும் மன அமைதிக்கும் உதவுகிறது. அமெரிக்காவில் கலிபோர்னியாவில் நடாத்தப்பட்ட ஆய்வில் பலமணிநேர நித்திரையிலும் சிறிது நேர தியானம் உடலுக்கு கூடிய ஆறுதலை தருவதாக அவர்களது முடிவில் கூறி உள்ளார்கள். இன்று பல் வெளிநாட்டவர்கள் கூட எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியானமுறையை பின்பற்ற தொடங்கிவிட்டார்கள்.

அடுத்து கோயிலின் அமைப்பை நோக்கின் தலம், தீர்த்தம், விருட்சம் இருக்க வேண்டும் என்கிறது இந்துமதம் பக்தர்கள் கூடும் இடத்தில் வெப்பத்தைக்குறைக்க, நிழல்பெற, சுத்தமான காற்றைப்பெற மரங்கள் இருக்க வேண்டும் என்பதாலேயே விருட்சத்திற்கும் முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. மற்றும் கோயிலின் அமைப்பில் முன்னுக்கு கோபுரமும் கடைசியில் கருவறையுமாக நீண்ட குகை வடிவில் அமைக்கப்பட்டுள்ளது இது உண்மையில் சூரியக் காந்தப்புல சக்திகள் கோபுரத்தால் கருவறைதூபிக்கு தெறிக்கப்பட்டு தூபியால் கருவறை சிலையூடாக கீழ் உள்ள யந்திரத்தகட்டில் தெறிக்கப்பட்டு கோயில் சுற்றாடலில் பரப்பப்படுகிறதாம். இதன் பெரும்பகுதி மணிஒலி, ஒழுங்கு முறையில் காட்டப்படும் தீபம், மந்திரங்கள் என்பவற்றின் அதிர்வுகளுடன் சேர்ந்து ஒருவகையான மின்காந்த அலையாக நேராக வருகிறதாம். அதற்காகவே மக்கள் வணங்கும் போது நடு வழியை மறியாது இரு கரையிலும் நின்று எல்லோரும் அதை அனுபவிக்கும் வகையில் நடுவில் இடம்விட்டு வழிபடும் முறை காணப்படுகிறதாம். கூட்டு வழிபாட்டு நன்மையை நோக்கின் இதில் கூட பலநன்மைகள் உண்டு. சிலரால் எதுவித சத்தமும் இன்றி அவர்களது பின்புறத்தில் நடமாடுபவர்களை (பின்னால் வருபவர்கள்) யார் வருகிறார்கள் என்று அறிய முடிகிறது. இதற்கு காரணம் சூழல் வெப்பநிலையிலும் கூடிய பொருட்களில் இருந்து கதிர்வீசல் ஏற்படும் என்பதற்கிணங்க எமது உடம்பிலிருந்து கதிர்ப்புக்கள் குறிப்பிட்ட தூரத்திற்கு நகர்கின்றன. எனவே எமக்கு பின்னால் (கண், செவி புலத்திற்கு எட்டாமல்) இன்னுமொருவர் வர அவரது கதிர்ப்பும் எம்மிலிருந்து வரும் கதிர்ப்பும் சந்திக்கும்போது ஏற்படும் இடர்பாட்டை அறியக்கூடியதாக இருப்பதாலேயே இவ்வாறு ஏற்படுகிறது. இதேபோல் கோயிலில் கூட்டுவழிபாட்டில் ஈடுபடும்போது மற்றவர்களது நல்ல சிந்தனை குணம் உடைய உங்களது கதிர்கள் நம்மீது ஊடுருவுவதால் நாமும் பலன்பெறமுடியும் என்கிறார்கள். குறிப்பாகச் சொன்னால் ஒரு ஒழுங்கு முறையில் காட்டப்படும் தீபம், மணி, மந்திரம் மொத்தமாக அதிர்வுகளின் ஒழுங்கும், நான், எனது என்ற ஆணவத்தை அகற்றி, எமக்குமேல் அப்பாற்பட்ட சக்தி ஒன்று உள்ளது, நாம் நீதியிலிருந்து ஆடினால் அச்சக்தி எம்மை ஆட்டிவைத்து விடுவார் என்ற பயத்துடன் கூடிய நல்ல எண்ணத்தை திரும்ப திரும்ப பதியசெய்யும் இடமாக இருத்தலுமே நாம் கோயிலில் பெறும் உண்மையான பலன்களாகும்.

அடுத்து கிரியை முறையை நோக்கின் தீபத்திற்கு பாவிக்கும் கற்பூரத்தில் மென்தோல் (Mentholl) உண்டு. இது விரைவில் நீரை ஆவியாக்கும் தன்மை கொண்டது. இப்பொருள் சுவாசத்துடன் உட்செல்லும்போது பலநோய்க்கு நிவாரணம் அளிக்கக் கூடியது. தூபம் சனக் கூட்டம் அதிகம் உள்ள இடத்தில் நறுமனத்தைப் பரப்புவதுடன் புகையிலுள்ள போமலீன் (Formaline) என்பது கிருமிகொல்லும் இயல்புடையது. தீர்த்தம் என்பது துளசி, பூக்கள், திருநீற்றுப்பச்சை மற்றும் மூலிகைபொடிகள் சேர்ந்த நீராகும் இம்மூலிகைகள் பலநோய்களை குணமாக்கும் இயல்புடன், புதிதாக நோய் அணுகுவதையும் தடுக்கும் இயல்புடையவை. குறிப்பாக சொன்னால் இந்துமத்தின் ஒவ்வொரு துடிப்பும் விஞ்ஞானத்துடன் சேர்ந்தது. மக்கள் சேர்ந்துநிற்கும் இடங்களில் ஓரளவு ஒட்சிசனை வழங்குவததற்காக கட்டப்படும் தோரணம், மாவிலை, என்பன அவை கட்டுவதில் உள்ள குறியீட்டை நோக்கின் மூன்று, ஐந்து அடுக்குகளில் நிமிர்ந்தும் மாவிலையின் முன்பக்கம் கிரியை முறை நடக்கும் இடத்தைநோக்கியும் கட்டி இருப்பின் சுபகாரியம் என்றும், தோரணம் 4 அடுக்கில் நிமிர்ந்து அல்லது எத்தனை அடுக்கில் தலைகீழாகவும் மாவிலை வெளிப்பக்கம் பார்க்கவும் கட்டியிருப்பின் அமங்கள நிகழ்விற்கும் என்ற குறியீட்டையும் வைத்துள்ளனர்.

கோயிலில் மூன்றுமுறை கோயிலை வலம் வரவேண்டும். வெளி வீதி வலம் வந்தால் கூடப்புண்ணியம் ஒரு தரம் அல்லது இரண்டு தரம் சுற்றுவது பாவம் என்பார்கள். இது பய உணர்வு, கட்டுப்பாட்டுடன் உடப்பயிற்சி அளிக்கும் முறையாகும். தோப்புக்கரணம் போடுதல் (காதைநன்கு பிடித்து நன்றாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து எழும்புதல் வேண்டும்), மிகச்சிறந்த உடற்பயிற்சியான அங்கப்பிரதட்சனை, கருப்பை மற்றும் பல உறுப்புகளுக்கு நன்மை தரும் அடியளித்தல், அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரங்கள் சுவாமி தூக்குதல் என்பனவும் சிறந்தஉடற்பயிற்சிகளை பெறும் நோக்குடன் ஆடவர் பெண்கள் என அவர வருக்கு ஏற்றதாகவும் கோயில் சுற்றாடலில் தெறித்து பரவும் பலன் தரும் மின்காந்த அலைகளை கூடியளவிற்கு பெறுவதற்காகவும் செய்யப்படுகின்றன.

விரதத்தை எடுத்துக் கொண்டால் கிழமை முழுக்க உழைத்த சமிபாட்டுத் தொகுதிக்கு ஒரு தர மாவது ஓய்வைக் கொடுப்பது நல்லது என்கின்றது விஞ்ஞானம் என்பதற்கு இணங்க பிடிக்கப் படுகின்றது. மற்றும் பெண்கள் கந்தசஷ்டி விரதம் பிடித்தால் குழந்தை பேறு பெறாத தம்பதிகளுக்கு குழந்தை கிடைக்கும் என்பார்கள் இதிலும் விஞ்ஞானம் உள்ளது. உடம்பில் கொழுப்பு அதிகமாக இருந்தால் கருத்தரித்தலுக்கான நிகழ்வு மிகக்குறைவு என்கின்றது விஞ்ஞானம். கந்தசஷ்டியாக ஆறு நாட்கள் தொடர்ந்து உபவாசம் இருந்தவர்களுக்கு சக்தியை வழக்குவதற்காக அவர்கள் தோல்களிலுள்ள கொழுப்பு சக்தியை வழங்கும். எனவே அவர்களது பெரும்பகுதி கொழுப்பு கரைக்கப்படுகின்றது. எனவே இதற்குப்பின் குழந்தை கருத்தரிக்கும் நிகழ்தகவு அதிகரிக்கின்றது. இதுவே உண்மையாகும். சாதாரண மக்கள் ஏற்றுக்கொள்ளாத அவ்விஞ்ஞானக் காரணத்தைக் கூறி தொடர்ந்து ஆறு நாட்கள் உண்ணாதேயென்றால் ஒருவரும் அவ்வாறு இருக்கப் போவதில்லை. இவ் ஒழுங்கு முறை கடவுளுக்காக இருக்கிறோம் என்ற பயபக்தியில் ஆறு நாட்கள் அவர்களுக்கு ஒரு சில நாட்களாக கழிகின்றது. இதன் மூலம் விஞ்ஞான தத்துவம் சமயத்தினூடாக பாமரர் மத்தியிலும் பலன் பெறச் செய்கின்றது.

மூன்றாம் பிறை பார்த்தல் இந்தநாட்களில் பிறை சிறிதாக தெரியும் பார்த்தஉடன் தெரியாது எமது கண்ணை அவ்வளவு தூரத்திற்கு குவியப்படுத்தினால் தான் பிறையைக் கண்டுகொள்ள முடிகிறது. எனவே, இது தூரப்பார்வைக்கு அதாவது கண் பிசிர்தசை, வில்லைக்கு நல்ல பயிற்சியாக அமைகிறது. பிறைபார்த்தபின் கிட்ட உள்ளபொருள் பார்க்கவேண்டும் என்பார்கள். இதற்கு தூர குவித்திருந்தகண்ணை மிகக்கிட்டிய தூரத்திற்கு உடன் குவிக்க வேண்டி இருக்கும். இதுவும் கண்ணின் பயிற்சிக்காகவே ஆகும். புது மணத்தம்பதிகள் ஒரு வருடம் முடியும் வரை ரேடி பார்க்கக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது. பொதுவாக புதுமணத் தம்பதியர் பெரிய திருவிழாவான தேர்திருவிழாவுக்கு போக விரும்புவார்கள் ஆனால் முதியவர்கள் விடமாட்டார்கள். உண்மைதக் கருத்து தேர்த்திருவிழா அன்று சனக்கூட்டம் அதிகமாக இருக்கும். நெரிசல் கூடிய இடத்தில் கருத்தரித்த பெண் நிற்பதால் பெண்ணுக்கோ அச்சுற்றாடலுக்கோ ஏற்படும் விபரீதத்தை முன்கூட்டியே தவிர்க்கும் பொருட்டு அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. அடுத்து வடக்கே தலைவைத்து படுக்காதே யமன் கொண்டு போய்விடுவான் என்பார்கள் நம்மூதாதையர். வடக்கே தலைவைத்து படுக்கும்போது புவிகாந்தப்புலத்தால் எமது உடலுக்கு ஏற்படும் தாக்கம் அதிகம் என்பதாலேயே அவ்வாறு கூறப்படுகிறது. வீட்டுக்குள் மஞ்சள் தெளிப்பதுவும் மஞ்சள் நல்லதொரு கிருமிகொல்லி என்பதாலேயாகும். உணவுப்பொதி கட்டும்போது கரிதுண்டு வைத்து கட்டுமாறும் இல்லாவிடின் கொண்டு போகும்போது பேய் நஞ்சு கலந்துவிடும் என்பார்கள். உண்மையில் உணவு பல்வேறு தாவரப்பகுதிகளால் உருவாக்கப்பட்டது அவை சில வாயுக்களை வெளியேற்றக் கூடியவை. கரியானது காபன் மூலகத்தாலானது. காபனது சிறப்பிபல்பானது வாயுக்களை புறத் துறிஞ்சும் தன்மை கொண்டது. பார்சலினுள் கரித்துண்டை வைத்து கட்டும்போது பெறப்படும் கூடாதவாயுவும் உறிஞ்சப்கடும் எனவே உணவு பழுதாகாது இருக்கும் என்பதாலேயே அவ்வாறு கூற ப்பட்டுள்ளது.

பொதுவாக இந்துக்களின் வீடுகளில் மாடு வளர்ப்பது வழமை. பொதுவாக நடக்கக்கூடிய நிகழ்வுகளில் மாடுகட்டும் கயிறு தடக்கி விழுதலும் ஒன்று. நாம் மாட்டு கொடி நிலத்தில் இருப்பதாக எண்ணிகடப்போம். நாம் ஒருகால் கடந்தபின் மாடு கட்டி நிற்கும் கட்டையில் இருந்து தூரவிலகி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரின் கயிறு உயர்ந்துவிடும் அது எமக்கு தெரியாது எனவே மற்றக் காலையும் அதே முன்பு கால் உயர்த்திய உயரத்தாலே எடுத்து கடக்க அப்போது தடக்கிவிழல் நிகழ்வுநிகழ்கிறது. இதற்காகவே முன்னோர் மாட்டு கொடியை கடப்பதுபாவம் என்றும் வேண்டுமானால். மிதித்து கடக்கலாம் என்று வைத்துள்ளார்கள். மிதித்து கடக்குப்போது கயிறு எப்பொழுதும் எம்பாதத்திற்கு கீழ் இருப்பதால் தடக்கிவிழல் நிகழ்வு நிகழாது. இதேகொள்கையே தேர் வடத்திற்கும் உள்ளது ஆனால் அது கைபிடிப்பது என்பதால் தூய்மைக்காக மிதித்து செல்லகூடாது எனவரையறுக்கப்பட்டுள்ளது. இதேபோல் சிறுபிள்ளைகளுக்கு பூனையுடன் விளையாடுவதென்றால் நல்ல பிரியம் ஆனால் பூனை மயிர் மிக ஆபத்தான ஒன்று அது சுவாசத்துடன் உட்சென்றால் வெளியில் எடுப்பது மிக கடினம் என்பதாலேயே பூனையுடன் விளையாடாதே ஒரு பூனைமயிர் கழன்றால் ஒன்பது பிராமணை கொன்ற பாவம் என்று பயப்படுத்தி வைத்துள்ளார்கள். உண்மையில் அவ் மயிர் உட்சென்றால் அவ்வளவு பாவத்திற்கான அவ்வளவு அலைச்சலை தரக்கூடியதுதான்.

அடுத்து உணவு பரிமாறலை எடுத்துக் கொண்டால் வாழையிலையில் உண்ணும்போது வாழையிலையிலுள்ள சில சத்துக்களும் உணவுடன் சேர்ந்து உட்செல்கின்றதாம். தலைவாழையிலையில் சாப்பிடும் போது இப்பவும் பலருக்கு எப்படி இலைவைப்பது என்று தெரியாத தடுமாற்றம். பொதுவாக எல்லோரும் வலக்கையால் சாப்பிடுவதால் சபையில் வாழையிலையின் தலைப்பக்கம் இடது கைப்பக்கமாக அதாவது வாழையிலையின் அகலப்பக்கம் உணவை கறியுடன் கலந்து உண்ண வசதியாக வலது பக்கமாகவும் இருக்க வேண்டும். இடதுகையால் உண்பவர்கள் தங்கள் இலையை மாற்றிவைத்து உண்ணலாம். சபைகளில் இலைவைத்ததும் இலையை மாற்றிவைத்து உண்ணலாம். சபைகளில் இலைவைத்தும் இலையில் தண்ண ஏிக்க ஒருவர் கிண்ணமும் தண்ணியுமாக அனுப்பப்படுவார். இது உண்மையில் சபையில் இருககும் எல்லோருக்கும் இலை வைக்கப்பட்டுவிட்டதோ அல்லது வைக்கப்பட்ட இலையில் கிளிசல் ஏதாவது இருக்கா என பார்த்துவர அனுப்பப்படும் நபராவார். அறுசுவை உணவு உண்ணவேண்டும் என்கிறது இந்துமதம். அறுசுவை உணவில் நிச்சயமாக எல்லா சத்தும் இருந்தே ஆகும். சுவைக்கு பொறுப்பாக இருக்கும் இக்கறிவகைகள் சபையில் முதலில் இடப்படும் போது நாம் உணவுண்ண முன்னரே உடலில் சுரப்பிகள் சுரந்து ஆயத்தநிலையில் இருப்பதுடன், கடைசியில் சோறு போடுவதால் அனைவரும் ஒரே நேரத்தில் உணவுண்ண தொடங்கவும் முடிகிறது. வெளிநாடுகளில் கூட சில மருத்துவர்கள் உணவு மேசையில் இருந்து சிறிது நேரத்தின் பின்பே உண்ண தொடங்குகிறார்கள். சபையில் வாழைபழப் பரிமாறுப்போது கரை இலையிலேயே வைத்தல் வேண்டும் நிலத்தில் வைத்தல் கூடாது. சாப்பாட்டுக்கு இடையில் தண்ணீர் குடிக்கக்கூடாது சாப்பிட்டு முடித்ததும் கட்டாயம் நீர் அருந்த வேண்டும் என்பவை விஞ்ஞான உண்மைகளே. எல்லோரும் சாப்பிட்டு முடித்ததுமே எழும்ப வேண்டும். சபையில் இடையில் எழும்பக் கூடாது என்று வைக்கப்பட்டுள்ளது உண்மையில் இடையில் எழும்பும்போது அவரது கையில் ஒட்டியுள்ள உணவுபாகங்கள், அவர் தூக்கும் இலையிலுள்ள எஞ்சிய திரவம் என்பன மற்ற உணவு உண்பவர்களது உணவில் விழலாம் என்பதனாலே அவ்வாறு கூறப்பட்டுள்ளது.

கிரகங்களின் இயக்கம், சூரியகிரகணம், சந்திரகிரகணம் ஏற்படும் நேரங்களை மிகதிடமாக என்றே கணித்துவைத்துள்ள சிறப்பைக் கொண்ட இந்து மதம் மனித வாழ்வின் கருவிலிருந்து சுடுகாடுவரைக்குமான தேவையான பயனுள்ள விஞ்ஞானக் கொள்கைகளை கொண்டிருப்பதால், இந்துக்களாக இருப்பதையிட்டு நாங்கள் பெருமை கொள்ளவேண்டும்.

" இந்துவே உன்னை நீ அறிந்துகொள்
மிகுதி தானாக வெளிச்சத்திற்கு வரும்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவைத் தேடும் முடிவிலி

கு. பார்த்தீபன்
இறுதி வருடம்
பொறியியல் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை முழுமுதற் கடவுளாகக் கொண்ட எமது சமயம், அதனைப் பின்பற்றும் எமது மக்கள், அவர்கள் பேசும் மொழி, அவர்களது கலாசார விழுமியங்கள், பாரம்பரிய நடைமுறைகள் என்பன காலத்துடன் அழிந்து விடுமா? அழியலாம்.

நாட்டின் கோலமா, நம்மவரின் பாவமா தெரியாது. இன்று எமது மக்கள் அகதியாகி உலகெங்கும் பரந்து கொண்டு வருகின்றனர். அவர்களின் பண்பாடு, கலை, கலாச்சாரம், பழக்க வழக்கங்கள் என்னவாயிற்று. அடுத்த சமுதாயத்தின் மொழி என்ன? மதம் என்ன?

உண்மைக் கதைகளின் ஓரிரு உதாரணங்கள். இங்கு படித்து பட்டம் பெற்ற ஒருவரின் குடும்பம் வெளியூரில் வாழ்க்கை. ஓய்வு நேரத்தில் ஒரு சுற்றுலா தாய்நாட்டிற்கு. வந்தவர் பிள்ளை குறிஞ்சியில் வலம் வரும் சுவாமியைக்காட்டி தந்தையிடம் (who is he?) என்றது. இன்னொரு சமயம் இவ்வாறு தான் வேறொரு குடும்பம். திருநீறு வாங்கிய பிள்ளை ஐயாவிடம் சொன்னது Thanks என்று இன்னும் சில நாட்களில் வரும் சமுதாயத்திற்கு நாம் ஆங்கிலத்தில் இலங்கை என்று ஒரு நாடு இருந்தது. அங்கு வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் என்னும் இடங்களில் ஒரு மக்கள் கூட்டத்தினர் வாழ்கின்றனர். அவர்கள் பேசும் மொழி தமிழ் என்று கூறித்தான் எமது பரம்பரையினரை விளங்கப்படுத்த வேண்டும். தற்கால நிஜ வாழ்க்கையில் பெற்றோர்கள் விடும் பிழைகளால் இனி வரலாறு புகட்ட வேண்டிய காலம் தான் வரும்.

விவேகானந்தாரின் எண்ணத்தில் இருந்து, "புதிய இந்தியா" ஒரு புறம் சொல்கிறது. மேலை நாட்டுக் கருத்துக்கள், மொழி, உணவு, உடை, நடை முறைகள் ஆகியவற்றைப் நாம் பின்பற்றினால்தான் மேலைநாட்டினரைப் போன்று நாமும் உறுதியும் ஆற்றலும் உடையவர்களாவோம். மறுபுறம் " பழைய இந்தியா" சொல்கிறது முட்டாள்களே மற்றவர்களுடைய கருத்துக்களை குருட்டுத்தனமாக பின்பற்றுவதனால் ஒரு நாளும் அவை ஒருவனுக்கு சொந்தமாகி விடாது. புலியின் தோலைப் போர்த்திக் கொண்ட பசு புலியாகி விடுமா? (மேல் உள்ள வரி ஓர் உதாரணமே தவிர புலியின் (மிருகம்) திறமைக்கும், தோலின் பெருமைக்கும் மேலை நாட்டவரை அவர் ஒப்பிடவில்லை)

தொடாந்து பழைய இந்தியா சொல்கின்றது. மின்னலின் ஒளி மிகவும் நன்றாகத்தான் பிரகாசிக்கும். ஆனால் அது ஒரு கணம் தான். வருங்காலங்களில் இவ்வாறான அழிவினை தடுக்க பெற்றோர்கள் தான் கவனம் செலுத்த வேண்டும். வருங்கால பெற்றோர்கள் தற்போதைய நண்பர்கள். தயவு செய்து ஒரு கணம் சிந்தியுங்கள்.

இதற்கு என்ன மாற்றுவழி? நாம் நல்ல முன்னோடிகளாக இருக்க வேண்டும். இதுவும் ஓர் உண்மைக்கதை. சில நாட்களின் முன் எனது நண்பர் ஒருவர் தனது குடும்பத்துடன் குறிஞ்சிக்கு வந்திருந்தார். மிகுந்த இறை பக்தி உடையவர் அவர். அப்படி இருந்தும் அன்று அவர் கோவிலை எட்டியும் பார்க்கவில்லை. அவருடன் வந்திருந்தவர்கள் கோவிலுக்குள் வந்திருந்தார்கள். நான் அவரிடம் கேட்டேன் ஏன் வரவில்லை என்று? அவர் சொன்னார். நான் இப்படியே சுரிதாருடன் கோவிலுக்குள் வந்தால் மற்றவர்களும் தாங்களும் இப்படி வந்தால் என்ன என்ற எண்ணம் கொள்வார்கள். அப்படியான எண்ணத்தை ஏற்படுத்துவதை விட முருகனைப் பார்க்காமல் இருப்பது மேல். அவர்களின் வேறு பயணத்தின் வழியில் இங்கு வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்து மதத்தின் பெருமைகளை மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். இப்படியான வேலைகளில் ஈடுபடுபவர்களை மதவெறி பிடித்தவர்கள் என்று சில தீய சக்திகள் பின்னடையச் செய்யும். அதைக் கண்டு பயந்து விடாதீர்கள். எமது சமயம், மக்கள், மொழி என்பவற்றிற்கு நாம் என்ன செய்தோம் என்று சிந்தித்துப் பாருங்கள். எமது இத்தகைய வளர்ச்சிக்கு நேரடிக் காரணம் பெற்றோர்கள் எனினும் மறைமுகமாக சமயம், கலாசாரம், மொழி என்பன உதிவி புரிந்துள்ளன. உங்கள் பெற்றோருக்கு நோய் எனின் அதற்கு பரிகாரம் செய்கிறீர்கள். ஆனால் தேசத்திற்கு, சமயத்திற்கு என்ன செய்தீர்கள்?

எமது மக்களின் தற்போதைய நிலைமைகளை அறிந்து, அவர்கள் அடிப்படை வசதிகளே அற்றவர்கள் என்று அறிந்து அவர்களுக்கு பணத்தினைக் காட்டி மதமாற்றம் செய்யும் விஷமிகளும் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவே செய்கின்றனர். அப்பாவி மக்களை மதம் மாற்றுவது மயக்க நிலையில் உள்ள பெண்ணைக் கற்பழிப்பதற்குச் சமமாகும். வேறு மதத்தவர் இந்துக்களை மதமாற்றம் செய்தால் அது சமூக சேவை, இந்துக்கள் இந்துக்களுக்கு மதம் பற்றிய அறிவினைப் புகட்டினால் அது மதவெறி. இது தான் இன்றைய சமூகம்.

"ஒருவன் மதம் மாறுவதால் எமது மனத்தில் ஒன்று குறைவதை விட
மற்ற மதத்தில் ஒன்று கூடுகிறது என்பது தான் பெரிய விடயம்"

சுவாமி விவேகானந்தர்.

மற்றையது எமது ஆவணங்களை, வரலாறுகளை சமயக் கருத்துக்களை உலகில் உள்ள பலரும் அறிய வைத்தல் ஆகும். இன்றைய தகவல் தொழில்நுட்ப உலகிலே மேலை நாடுகளில் உள்ள எமது இளம் பரம்பரையினர் ஆவலுடன் இவற்றை அறிய வேண்டும் எனின், அதற்கு இவற்றினை ஒலி, ஒளியுடன் கூடிய இலத்திரனியல் வடிவமாக மாற்ற வேண்டும். உலக வலைப் பின்னலும் இதற்கு பயன்படும். உதாரணத்திற்கு இந்தியாவிலே திருக்குறளினை இலத்திரனியல் புத்தகமாக சென்னை **"கவிகள்"** என்னும் ஸ்தாபனத்தினர் வெளியிட்டுள்ளனர். அது ஒலி, ஒளி அமைப்புடன் செய்யப்பட்ட அற்புத படைப்பாகும். இதன் விலை 499 ரூபா (இலங்கை) மட்டுமே. இவற்றை விட சிறு பிள்ளைகளுக்கு தமிழ் புகட்டவென தமிழ் புத்தகம் 2000 எனும் ஒரு படைப்பு மலேசியாவில் வெளியிடப்பட்டுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ஒன்று உருவாக்கப்பட்டுவிட்டது. இது போன்ற படைப்புகள் எமது விழுமியங்களை பாதுகாக்கும் இந்தியா எமக்கு ஓர் ஆணி வேராக இருப்பதனால் எமக்கு சற்று ஆறுதல். இந்தியா கோவில்கள் என்றவுடன் எமது மக்கள் காசை கொடுத்தால் மூலஸ்தானம் வரை போகலாம் என்று தவறான கருத்துக்களை அலைய விடுகின்றனர். அங்கு கோவில்களில் எல்லோரும் மூலஸ்தானம் வரை செல்லலாம். ஆனால் 10 ரூபா செலுத்தினால் வேறு வரிசையில் சென்று சுலபமாகப் பார்க்கலாம். மற்றவரிசை மிகவும் நீண்டதாக இருக்கும். இவை எல்லாம் உண்மையில் சனத்தொகையின் வெளிப்பாடாகும். காசு இருந்தால் தான் வணங்கலாம் என்று இல்லை.

" தூய இந்துவாக வாழ்வோம்.
இந்து தர்மம் காப்போம் "

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

தமிழ் இணையப் பல்கலைக்கழகம்

சில இணைய முகவரிகள்

http://www.tamilvirtual.univ.org

சென்னை கவிகள் (திருக்குறள்)

http://www.chennaikavigal.com

இலங்கையில் திருக்குறள் (book) வாங்குவதற்கு
http://www.tamilcyber.com அல்லது rootlk@yahoo.com ஊடாக

இந்து தன்னை அறிய
http://www.ehindus.net

இந்து மாணவர் சங்கம்
http://www.pdn.ac.lk/socs/hsu

பக்திப் பாடல்கள்

இலங்கைப் பாவனை
http://www.pdn.ac.lk/socs/hsu/down.html

வெளியூர் பாவனை
http://hinduism1.tripod.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து இளைஞர்களுடன் ஒரு நிமிடம்

செ. ரஜனிகாந்
முதலாம் வருடம்
விஞ்ஞான பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

"ஓ சிங்கங்களே! எழுந்து வாருங்கள் நீங்கள் செம்மறியாடுகள் என்ற மயக்கத்தை உதறித் தள்ளுங்கள். நீங்கள் அமரத்துவம் பெற்ற ஆன்மாக்கள் சுதந்திர ஆன்மாக்கள் அழியாத திருவருளை பெற்றவர்கள்."

என்று எம்மை எப்போதோ அறை கூவி அழைத்தார் சுவாமி விவேகானந்தர். ஆனாலும் நாங்கள் இன்னும் விழிக்கவில்லை. சிங்கங்கள் ஆகவில்லை. ஆனாலும் விழித்தெழுந்ததாய் நடிக்கிறோம். எம்மில் விழித்தெழுந்தவர்களும் உறக்கம் கொள்வதாய் நடிக்கிறோம். இது ஏன்? எம் மதத்தைப் பற்றி நாம் பூரணமாக அறிந்து கொண்டதாலோ? அல்லது அறியவில்லை என்பதாலோ? ஆனால் ஒன்று மட்டும் தெரிகிறது. நாம் விழித்திருந்தாலும் உறக்கக் கலக்கத்துடனேயே (மாயையுடனேயே) இருக்கிறோம். ஏனெனில் இந்து மதத்தின் வீழ்ச்சி சிலவேளை இப்படிக்கூற எனக்கும் இஷ்டமில்லைத்தான். உண்மையைக் கூறினால் யாருக்குத்தான் பிடிக்கும்? மற்றைய மதங்களுடன் ஒப்பிடுகையில் இந்துமதம் அதிகளவு நோய் வாய்ப்பட்டுள்ளது என்பதை உணரக்கூடியதாக இருக்கிறது. இருந்தாலும் நாங்கள் இதனை ஏற்க மறுக்கிறோம். இதற்காக பல நொண்டிச் சாட்டுக்கள் கூறி எம்மை நாமே சமாதானப்படுத்தி எங்களை நாங்களே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம்.

இது ஏன்? எல்லாம் எங்களின் மனநிலை. நாங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறோம். இறைவன் தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார். எனவே இறைவனை வழிபட ஆலயம் அவசியமில்லை என எண்ணுகிறோம். சில இடங்களில் இக் கருத்துக்காக நாம் வாதாடவும் செய்கிறோம். இதில் என்ன விசேடம் என்றால் இவ்விவாதத்தில் நாமே வெற்றியும் பெற்று வீடுவோம். ஆனால் இளைஞர்களே! மின்காந்த அலைகள் உலகெங்கும் பரவிக் காணப்பட்டாலும் குறித்த ஒரு அலைவரிசையினூடாகவே நிகழ்ச்சிகளை கேட்டு மகிழ்கிறோம். அதே போல உலகெங்கும் நீர் பரவிக் காணப்பட்டாலும் சில நீர் முதல்கள் மூலமாகவே நீரை பெற்றுக் கொள்கிறோம். இவ்வுதாரணங்கள் போலவே ஆண்டவன் அகிலமெங்கும் பரவிக் காணப்பட்டாலும் ஆலய சந்நதியிலேயே அவன் அருள் கிடைக்கும் என்பதை மறந்து விடாதீர்கள்.

முன்னைய காலங்களில் இந்து மதச் சமுதாயத்திற்கு கோவிலே சொர்க்கம். அங்கு பூசாரியும் ஆலய தர்மகர்த்தாவும் தான் வழிகாட்டிகள். தனிமனிதன் சம்பந்தப்பட்டதோ, சமுதாயம் சம்பந்தப்பட்டதோ கோவிலை மையமாக வைத்தே இடம்பெற்றன. இந்து சமுதாயத்தின் வாழ்க்கையில் கோவிலும் இறைவழிபாடும் பின்னிக் கிடந்ததால் ஒவ்வொரு இந்துவும் இந்து மதம் என்னும் பரந்த விருட்ச நிழலிலே இளைப்பாறிக் கொள்ள முடிந்தது. ஆம் எம்மைப் போல் நிம்மதியற்று உறங்காமல் நிம்மதியாகவும் உறங்க முடிந்தது.

அன்றைய நாட்களில் இறைவனுக்கு குறிப்பிட்ட நேரங்களில் மட்டும் தீபாராதனை நடந்தது. அக்குறிப்பிட்ட நேரங்களில் ஆலயங்களில் இந்து சமுதாயம் கூடியது. ஒவ்வொரு இந்துவும் மற்றைய இந்துவை அறிந்து கொள்ளவும் சமயத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும் உதவியாக இருந்தது. அதனால் கோயில் பூசாரிக்கும் ஒவ்வொரு இந்துவுக்கும் இறுக்கமான பிணைப்பு நிலவியது. ஆனால் இன்றைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால கட்டங்களில் இம்முறைகள் மாற்றப்பட்டு விட்டது. ஆலயத்திற்கு செல்பவன் சாமியார் எனவும் ஆன்மீகம் என்றால் இறைவனை வழிபடுவதன் மூலம் சந்நியாசி ஆகி விடுதலே எனவும் இறைவனை அடைய அதுவே ஒரே வழி எனவும் எமக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ போதிக்கப்பட்டு விட்டது. இதனை நாம் தீவிர கருத்தாக ஏற்றுக் கொண்டு சாமியார் பட்டம் அல்லது சந்நியாசி பட்டம் பெற விரும்பாமல் ஆலயங்களுக்குச் செல்வதில்லை அல்லது கூட்டாக செல்லாமல் தனித்தனியே மற்றவர்களுக்குத் தெரியாமல் ஆலயத்திற்குச் சென்று வருகிறோம்.

இதனால் ஒன்றுடன் ஒன்று பின்னிக்கிடந்த இந்துவும் ஆலயமும் பிரிக்கப்படுகிறது. இதனால் இந்து சமுதாயத்திற்குரிய ஆலயங்கள் தூரதூர விலகி நார்த்திகளினதும் இறைவழிபாட்டை கிண்டல் செய்யும் பேர்வழிகளினதும் வாய்க்கு அவலாக மாறிக் கொண்டிருக்கின்றன. அத்துடன் பக்தன் பத்துரூபாய் நோட்டை தட்டில் போட்டவுடன் பூசாரியும் சூடம் காண்பித்து பக்தனின் இறைவழிபாட்டை முடிவுக்குக் கொண்டு வருகிறார். வந்த வேலை முடிந்தது என பக்தனும் கோவிலை விட்டு புறப்படுகிறான்.

இதனால் பக்தனும் கோவிலைப் பற்றியோ அல்லது மற்றைய இந்து பக்தர்களைப் பற்றியோ அறிய முற்படாமல் கோயிலுக்குச் சென்றேன் இறைவனை வழிபட்டேன் ஆண்டவன் பெயரிலேயே அர்ச்சனை செய்தேன் , எனவே நான் இந்துவாகவே வாழ்கிறேன், என தன்னைத்தானே மெச்சிக் கொள்கிறான். இளைஞர்களே! இப்பக்தன் யார்? நாங்களேதான், ஆம் சந்தேகமேயில்லை. நாங்களேதான்.

ஆனால் ஒரு சிலரோ தவறையுணர்ந்து நம்மை தலைகீழாக மாற்றிக் கொள்கிறார்கள். ஆம் நாங்கள் காலில் புண் என்றவுடன் எங்கள் கால்களையே வெட்டிக் கொள்ளத் துணிகின்றோம். நாங்கள் இலகுவாக மதம் மாறிக் கொள்கிறோம். முழுப் பூசனிக்காயை ஒரு கோப்பை சோற்றில் மறைத்து விடத்துடிக்கிறோம். ஏன்? நாங்கள் எம் அன்னையையே மாற்றிக் கொள்ளத் துணிகிறோம். ஆனால் ஒன்று எம் மதத்தையே புரிந்து கொள்ளத் தெரியாத நாம் எவ்வாறு அடுத்தவர் மதங்களைப் புரிந்து கொள்ளப் போகிறோம் என்பது தான் நமக்கு இன்னும் புரிந்ததாக இல்லை. எனவே இனியாவது நாம் விடயத்தில் சற்று விழித்திருப்போம். ஒவ்வொரு இளைஞனும் தன் மானத்தைக் காக்க போராடுவதைப் போல இந்து மதத்தையும் காப்பாற்ற வேண்டும்.

ஆகவே இந்து இளைஞனே!

நீ உறங்கியது போதும் விழித்தெழு உன் பார்வைகள் நேராகட்டும் உன் உடல் வலிமை பெறட்டும் உள்ளம் தூய்மையாகட்டும் உன் வாய் இறை புகழ் பாடட்டும் நீ இந்து என இவ்வுலகம் போற்றட்டும்.

"இந்துவாக வாழ்வோம்!
இந்து தர்மம் காப்போம்."

"ஹிந்து என்ற பெயர் தாங்கிய மனிதனுக்கு ஏற்படும் துன்பம்
உங்களது உள்ளத்தை வந்து தாக்கி உங்களது மகளே
துன்பப்படுவது போன்ற உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்
அப்போதுதான் அப்போது மட்டும் நீங்கள் ஹிந்து ஆகவில்லை"

சுவாமி விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி விட்டெழாத பரந்தாமனுக்கு

ஸ்ரீ. பிரசாந்தன்
நிறைவு வருடம்,
தமிழ்த்துறை.
பேராதனைப் பல்கலைக்கழகம்

பாற்கடலிற் பள்ளி கொள்பவன்
போற் கிடக்கின்ற பெருமாளே!
என்ன,
" பிசின்" ஒட்டிப் போயிருக்கிறதோ?
நின் புறப்பாட்டைக் காணோமே.
என்றாலும்,
கொண்டாடப்பட்டது திருநாள்.
கொடுமை வீழ்த்திட்ட தினத்தில்
பண்டாரவளைப் படையலொடு
பரந்தாமா!
தீபாவளி விருந்தை உண்டார்கள்
நரகாசுர உலுத்தர்கள்.
அதைக் கண்டாயோ?
அன்றிக் கண் வளர்ந்தாயோ?
மண் உண்டால் நன்கு உவப்பவனே!

அத்தா! கேள்.
தமிழ் ஆன்மாக்களுக்குப்
புத்தாடை தந்தார்,
பழைய உடல் கிழித்து.
அட! இத்தினத்தில் என்னே இரக்கம்!

புனர்வாழ்வு நரகாசுரற்காயிற்று
பெரிய பேர் இனமாக
மீண்டு எழுந்துள்ளான்.
கனரக ஆயுதம், கத்தி, கோடரித் துணையுடன்
தினவெடுத்துளன்.
நீ துயில் நித்தமும் சுகிக்க.

நெடு நரசிங்கமே!
" துயரினை நீ களை" என்று
சுடுதொழில் விட்டுச் சேர்ந்தவர்
ஓ... சுருண்டழிந்தார்.
கொடுமையின் கூத்தில்
குறைந்தது தமிழரின் கூட்டம்.
கடுவெறிச் செய்கையைக்
கண்டவர் விண்டிலரானார்.

"அல்லல் நீக்கி அறம் நிலை வைப்பன்" எனும்
சொல்லை நம்பிச்
சுடுகலன் முதலியவற்றை
நின் வில்லறத்துக்கு மாசென விடுத்த
பிள்ளைகளன்றோ பெருந்துயர்ப்பட்டார்
பிழைப்பது தெரிந்திலராகி...

பாற்கடற் பாம்புப் பாய் சுருட்டாமல்
நாட்கடத்தாதே,
நாமிறக்கின்றோம்"
எனும் கூக்குரல் கேட்டும்
அருள் கொடுக்காதாய்!
குளறிய யானையை அன்று
காத்திட வந்த கதையினைக் கேட்டு
கண்களில் நீர்த்துளி கண்டோம்!

தூணிலுமில்லை, துரும்பிலுமில்லை,
தொலைந்திட வந்த வானிலுமில்லை,
வதைக்குநர் ஆயுதத்தில்லை
நீ ஏன் வரவில்லை?
எங்களை விடத் துயில் பெரிதோ?

ஈரடியாலே உலகளந்தவனே!
உன் கால்களை யாரடா கட்டிப் போட்டனர்?
உலகம் யாவும் காப்பதுதான் உன் அமைச்சே.
அதிற் தவறிழைத்தாய்.
யுகந் தோறும் வருவதாய்ப் புளுகி,
யுத்தங்கள் தோறும் துயில்வாய்.

அரக்கு மாளிகை எரிந்தது.
" அதர்மம் தலைதூக்க வரக்கடவேன்"
எனும் வார்த்தைகள் பொய்த்தாய்.
வதைபட்டு
உரக்கக் கத்தினர் தோழர்.
உடன் வராத இரக்கமிலி,
நீ இறைவனோ?
நானிதை நம்பேன்.

பாஞ்சசன்னியம் முழக்கிப் படைநடத்தாமல்
ஓய்ஞ்சதேன்?
உனக்கும் ஓய்வூதியமோ?
நாம் சனம், மனுசர்
நம் துயர் களைவாய்
ஓம் என இருந்தம்
இன்றது தவறென உணர்ந்தோம்.

குறிப்பு:- தீபாவளித் திருநாளை ஒட்டிய ஒரு பொழுதில் (24. 01.2000) பண்டாரவளைப் புனர்வாழ்வு முகாமில் கொல்லப்பட்ட தமிழர்கள் நினைவாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதிக்க வா போதிசத்வா

வ. சுகந்தன்
விடுகை வருடம்
பொறியியல் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

பௌர்ணமிப் பொழுதுகளில்
மௌனமாய் மனதிற்குள்ளாவது
யௌவனம் துறந்த சித்தார்த்தா,
மெதுவாய் வலம் வர வா!

அம்பிற்கு இரையாகி
அன்னம் உயிர்துடிக்க
அப் 'புள்' மேல் கொண்ட
அன்பில்,
தேவதத்தன் உறவைக்
கத்தரித்தவனே!
என்னால் முடியவில்லை
துரோகங்கள் கண்டும்
கொண்டவர் தொடர்பைத்
துண்டிக்கவும் முடியாமல்......
மன்னிக்கவும் மனம் மசியாமல்...
எதிலே என் பலவீனம்.
சித்தார்த்தா!
ராஜா வீதிகளிலான
உன் பவனிகளில்
நீ கண்டதுவோ
ஒரே ஒரு மரண ஊர்வலமே

நாங்களோ....
நாள் தோறும்
மரணங்களால்
ரணப் பட்டு
மனங்களே மரணித்த பின்னும்...

அருகணைந்து உடன் வந்த
உடன் பிறப்பின் சிரமது
கண்முன்னே கணப்பொழுதில்
மண்வீழ்ந்து உருண்டு சென்றும்....

அது எப்படிப் புத்தா?
எங்களுக்குள் மட்டும்
நாங்கள் என்றுமே
நித்தியமானவர்கள் என்ற
நம்பிக்கை?

நேற்றிருந்தார் இன்றில்லையென்ற
பெருமை கொண்ட உலகெனும்
பொய்யாமொழிப் புலவனின்
வாக்குத் தெரிந்திருந்தும்,
நாம் மட்டும் என்றுமே
ஜீவிக்கப் போவதான
நினைவுகளுடன்....

போதிசத்வா!
வெள்ளரசு தான் வேண்டாம்
பூவரசுகளின் கீழாவது....?

95 -இடப்பெயர்வில்
தளர்ந்து போன கால்களுடன்
நுழைவாயிலப் பிள்ளையாரின்
ஒற்றைப் பனையில்
முதுகு சாய்த்து
இளைப்பாறிய பொழுதுகளிலாவது...?

அது ஏன் புத்தா?
எங்களுக்கு மட்டும்
அந்த உணர்வுகளின்
நரம்புகள் தொழிற்படாமல்...?

நீ பார்த்ததுவோ
ஒரே ஒரு பிணியாளனை
நாங்களோ வாழ்நாளில் - ஒரு
நோயற்றவனைக் கூடக்
கண்டதில்லை
ஆனாலும்...

எவ்வாறு சித்தார்த்தா
உன்னால் முடிந்தது?
உன் ஒரு பாதியாய்த்
தனை மாற்றி உன்
கரு ஏந்தி இன்னோர்
உரு உனக்குத் தந்த
யசோதரையை மறந்து...

அரச கட்டிலின் அந்த
சுக போகங்களைத் துறந்து...
எல்லாவற்றிற்கும் மேலாய்த்
தன் பிஞ்சுக் கரம் கொண்டு
உன் நெஞ்சு மயிர் பற்றியிழுக்க
கொஞ்சி நீ குலவிய உன்
பிரதி விம்பம் விட்டும்
பிரிய எப்படி மனம் துணிந்தாய்?

பரி நிர்வாணம் தான் வேண்டாம்
குறைந்த பட்சம்
டாம்பீக ஆடைகளையாவது
வேண்டாம் என வெறுக்க
பூரணை நாளின்
பால் நிலவொளி வேண்டாம்
அமாவாசை நாளொன்றின்
ஒரே ஒரு ஒற்றை
நட்சத்திரத்தின்
மின்மினிப் பிரகாசத்திலாவது...?

ஓ... போதிசத்வா!
லௌகீக ஆசைகளின்
ஆதிக்கம் அகற்ற மனம்
ஆசைப் படுகிறதே!
ஆசைகளை விட்டொழித்தால்
ஆனந்தம் பெறலாம் என்றாய்
அப்படியானால்...
எந்தன் ஆசையும்
அர்த்தமற்றதோ.?

ஆனாலும் புத்தா,
நீ கூடத்தானே
ஆசைப்பட்டாயாம்
மாந்தர்கள் யாவரும்
தம் ஆசை அகற்ற வேண்டுமென

ஏன் இந்த முரண்பாடு?
விளக்குவதற்காயினும்
விரைந்து வா சித்தார்த்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்பொழுதை நற்பொழுதாய் விதிசெய்வாய்

*கவிப்பிரியன்*
*மூன்றாம் வருடம்*
*பொறியியல் பீடம்*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*

ஓங்காரச் சொல்லுக்கு அர்த்தத்தை
ஓதி சிவகுருவாகி சிந்தை நின்றவன்
அழகு பாடிப்பல்லாயிரம் கவிதையும்
புகழ் கூறிக்கோடிக் கவிதையும்
புனைவிப்பேன்; மகிழ்வேன்; இனிமை காண்பேன்.

நற்கவியின் பொருள் போல பொதிந்தாயென்
நாவினிலே; மனத்தினிலே; எழுத்தினிலே
நல்ல தமிழ் செல்வமெலாம் உவந்தளிக்குமென்
நல்ல சிவன்மகனுன் அருட்திருவை நற்றமிழால்
பாடிடுவேன்; போற்றிடுவேன்; பரவசிப்பேன்.

காலமெல்லாம் இளமை கொஞ்சும் நின்னழகில்
களித்திடுவேன் கரைந்திடுவேன் கவிதை செய்வேன்;
நாளெல்லாம் துயருறுமெம் மாந்தரின்
நாட்பொழுதை இனிதான நற்பொழுதாய்
விதிசெய்வாய்; நனிகாப்பாய்; நலமருள்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதைந்து போன.....

சு. உமாசங்கரன்
முதலாம் வருடம்
விலங்கு மருத்துவபீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

கல்தோன்றாக் காலத்தில் கண்மிளிர்ந்த எம் சைவம்
புல் தோன்றாக் காலத்தில் விண்(ணில்) ஒளிர்ந்த நம்சமயம் - இன்று
செல் அரி(அடி)பட்டு சிதைந்து போன மாயமென்ன...?
பல் விழுந்த பாம்புகள் போல் வலுவிழுந்த கோலமென்ன.....?

பல்லவன் சிற்பிகள் அன்று பண்ணிய சிற்பங்கள் இங்கே
பார்ப்பவரற்று பரதேசியாய் கிடப்பதென்ன.......!
வள்ளுவன் எழுதிய வைர வரிகள் - ஈழத்தில்
வாழ்விழந்த விதவைகள் போல் உருக்குலைந்ததென்ன..!

சேர, சோழ, பாண்டியன் சேர்த்து வைத்த பொக்கிஷங்கள்
சுதந்திர, ஐக்கிய அம்மணி ஆட்சிகளில் ஈழத்தில்
ஆறா அமர அங்குலமாய் அழிக்கப்பட!
ஆமா போட்டு அலங்கரிக்கின்றனர் எம் (பி) பிரதிநிதிகள்

ஈழத்து ஈச்சரங்கள் என்று - நம் முன்னோர்
இன்புற வழிபட்ட கோயில் இன்று
வாயில்கள் அற்ற கோழிக்கூடுகளானதென்ன...!
விக்கிரகங்கள் அற்ற சத்திரங்கள் ஆனதென்ன..!

கோணேசர் வாயிலில் கொலைஞர் கூட்டம்
கும்பிடப் போகையில் இடஞ்சல் நோட்டம்
சாமகாணம் பாட வீணை ஏந்திய இராவணன் அன்று
சாவு மணி அடிக்க ஆயுதம் ஏந்திய இரா(ணு)வணன் இன்று!

கேதீஸ்வரத்தில் பூசை இல்லை, கேட்க யாருமில்லை
நகுலேச்சரத்தில் நந்தியைக் காணவில்லை, நாய் கூட பார்ப்பதில்லை
முன்னேச்சரத்தில் முடியவில்லை முத்தமிழர் வழிபாடு -இங்கே
முழுமையான வழிபாடு முக்கிய இனத்தவரால்!

வெருகல் முருகனுக்கு வேட்டியில்லை! வேல். இல்லை! இங்கே
வேவு பார்க்கச் சென்றோர் விளக்க மறியலில்!
மாவிட்ட கந்தனுக்கு ஜெயில் வாழ்க்கை - இங்கு
மாலையிடச் சென்றோர், மாமியார் வீட்டில்!

வற்றாப்பளையில் வருடமொருமுறை பொங்கல் அப்போ!
பெற்ற பிள்ளைக்கு வருடமொருமுறை திவசம் இப்போ!
மாமாங்கத்திருவிழாவில் மலையளவு மக்கள் கூட்டம் அப்போ!
மருந்துக்கு கூட மனிதர்கள் இல்லை இப்போ!

சரித்திரம் படைக்கின்ற செந்தமிழர் பூமி- இங்கு
தரித்திரப் படைகளினால் செங்குருதி கக்கிறதே!
உதிரம் சிந்தினாலும் சைவர் உரிமைகளை விடமாட்டோம்
சதுரங்க ஆட்டத்தில் சளைத்தவர்கள் நாமல்ல!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளே! உன்னைக் காப்பார் யார்?

*சிவப்பிரியன் சி. ஜனகன்*
*இரண்டாம் வருடம்*
*பொறியியற் பீடம்*
*. பேராதனைப் பல்கலைக்கழகம்*

பண்ணை வீதி... தென்னங்கீற்றின் சலசலத்த ஒலியை விட வேறு எந்த சத்தங்களும் கேட்காத மயான பூமி... விட்டில் பூச்சிகள் கூட வேறிடம் சென்றுவிட்டது போலும்... ஆயினும் கிட்டவாக..... பல ஜோதிப் பிளம்புகள்.... பூலோகம் வந்த சிவனுக்கு நம்ப முடியவில்லை... பக்தா... இங்கே என்னைப் போல.... ஜோதி.... வடிவாகத் தோற்றுபவர்கள்.... யாவர்? வேற்றுக்கிரக... கடவுளர்களா?.... சொல்லு. சிவனால் பொறுமையாக இருக்க முடியவில்லை கேட்டு விட்டார். அதற்கு பக்தன் இறையே... உந்தப் பக்கம் மட்டுமா ... ஜோதிப்பிளம்பு... இங்கே பாருங்கள். வடக்காக பார்த்த சிவனை கிழக்காகத் திருப்பினான் பக்தன். என்ன புதுமையப்பா... யார் பக்தா அவர்கள்... மீண்டும் கேட்டார் சிவன் பக்தனுக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை.... ஹக்... ஹக்.. சிவா... இவைகளெல்லாம்... "சென்ரிப் பொயின்டில்" போட்டிருக்கிற " போக்காஸ் " விளக்குகள்

அப்படியா.... என்ன ஆச்சரியம்... எனக்கும் ஒன்று அதுபோல் வாங்கித் தருவாயா பக்தா... சிவனின் ஆசையைப் பார்க்க பக்தனுக்கு நக்கலாக இருந்தது.... அதற்கென சிவா... வாங்கினாப் போச்சு பதில் சொன்னான் பக்தன். அப்பொழுது மயான அமைதியைக் கிழித்தபடி பெரிய சத்தங்கள் கேட்கத் தொடங்கின. பக்தா அதுவென்ன சத்தம் இடையிடையே... டக்டரில் இருந்து கல்லுகொட்டிற மாதிரி... அரச மண்டபத்தில்... டமாரம் அடிக்கிறார்களா பக்தனின் முகத்தில் பதட்டம் இல்லை...... சிவா... சீ... நீங்கள் இவ்வளவு முட்டாளா? அது கல்லு கொட்டுற சத்தமில்லை.... மல்டிபரல்ல ஷெல் அடிக்கும் சத்தம் கடவுளுக்குப் புரியவில்லை. ஷெல்லா... அப்படியாயின்... சிவனின் இக்கேள்விக்கு பக்தனால் பதில் சொல்ல முடியவில்லை...... யோசிக்கிறான்.... அதுவா... ஆ... ராமாயணத்தில் .... நாகாஸ்திரம் மாதிரி இங்க ஷெல் சிவனின் முகத்தில் சீற்றம்"அப்படியா.. அப்படி என்ன நடக்கிறது இங்கு". அதற்கு பக்தன் "ஷெல்கள் விழுமிடத்தில் அதற்கு நூற்றுக்கணக்கான சனங்கள் சாவதுடன் வீடுவாசலும் நாசமாகும் கடவுளே" ...

"ஐயோ பாவம்.... மக்கள்.... நான் மேலே போனதும் யமன் மச்சானுடன் கதைச்சு ஒரு முடிவெடுகிறேன்" என்றார் சிவன்.

